# குழந்தைவேல் சுவாமிகளும் குரு பரம்பரையும்

...ப்பட்டது.

[ விலை ரூபா: 3-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருவே துணை

# குழந்தைவேற் சுவாமிகளும் குரு பரம்பரையும்

வரலாறு எழுதியவர்:
பண்டிதர் மு. கந்தையா, B. A.

கீரிமலைக்
குழந்தைவேற் சுவாமிகள் சமாதித்
தர்ம பரிபாலன சபையினரால்
வெளியிடப்பெற்றது.

ஆனி 1965.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விஷய அட்டவணை


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| அணிந்துரை | | |
| முகவுரை | ... | 1 |
| குருநெறி | ... | 8 |
| யாழ்ப்பாணமும் குருவிலட்சியமும் | ... | 15 |
| கடையிற் சுவாமிகள் | ... | 18 |
| மண்டைதீவிற் கடையிற் சுவாமிகள் | ... | 42 |
| பரமகுரு சுவாமிகள் | ... | 59 |
| குழந்தைவேற் சுவாமிகள் | ... | 64 |
| குழந்தைவேற் சுவாமிகளின் சமாதி | ... | 105 |
| குழந்தைவேற் சுவாமிகளின் பாடல்கள் | ... | 107 |
| அருளம்பல சுவாமிகள் | ... | 114 |
| அருளம்பல சுவாமிகளின் வசனமும் பாடல்களும் | ... | 124 |
| சமுதாயத்திற் குருபரம்பரையின் செல்வாக்கு | ... | 127 |
| ஆளவந்த அண்ணல் | ... | 137 |


## அத்துவித முத்திநெறி


| | | |
|---|---|---|
| சீடாசாரம் | ... | 1 |
| வசனம் | ... | 17 |
| ஏதுசொரூபங் காரியமவதிபல லக்ஷணம் | ... | 18 |
| அஷ்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த தாஷ்டாந்த உரை | ... | 27 |
| சீவன்முத்த ரியல்பு | ... | 35 |
| ஸ்ரீ பரமகுருசுவாமிகள்பேரிற் சிஷ்யர்கள்சொல்லிய குருஸ்தோத்திரம் | | 40 |
| ஸ்ரீ கடையிற்சுவாமிகள்பேரில „ „ | ... | 46 |
| கடையிற்சுவாமிகள் குருபூசைத்தினத்தன்று மண்டைதீவு அன்பர்களால் வழக்கமாகப் படிக்கப்பட்டுவந்த பாடல்களிற் சில | | 56 |
| ஆரம்பம் கரணசுத்தி | ... | 58 |
| பரமகுருசாமி (சேர் பொன். அருணாசலம் வெளியிட்டவை) | | 60 |
| குருவணக்கம் | ... | 61 |
| அகராதிச் சரணமாலை | ... | 61 |
| இழந்த மணிகளில் எஞ்சிய தொன்று | ... | 69 |
| ஸ்ரீ அருளம்பல சுவாமிகள்பேரில் வைத்திலிங்கமவர்களின்பாடல் | | 71 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமணி

சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்

மனமுவந்தளித்த

# அணிந்துரை

திருவள்ளுவர் வாழ்க்கையை இரு தரங்களில் வைத்து ஆராய்கின்றார். ஒன்று கீழான வாழ்க்கை நிலை. வெறுமனே உண்பதும் உறங்குவதுமாய் ஒரு இலட்சியமுமின்றி நிகழும் வாழ்க்கை கீழான வாழ்க்கை எனப்படும். அங்ஙனமின்றி உயிரை மேல்நிலை அடைவிக்கும் இலட்சியத்தோடு நிகழும் வாழ்க்கைநிலை மேலான வாழ்க்கைநிலையாகும் இதனையே திருவள்ளுவர்:

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

எனக் குறிப்பிடுகின்றார்.

இம்மேலான வாழ்க்கைநிலையைப் பின்பற்றுபவன் மறுமையில் தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவான் என்பது அதன் பொருள். குறித்த இரு வாழ்க்கை நிலையும் இல்லறவாழ்க்கையின் பாற்படும். இனி, இல்லறத்தில் முறைப்படி வாழ்ந்து பற்றறுத்து அதன் பின் மேற்கொள்ளும் வாழ்க்கை துறவு வாழ்க்கையாகும். இத துறவுவாழ்க்கைப் பலனை முன் குறிப்பிட்ட மேலான வாழ்க்கைப் பலனில் வைத்து உயர்த்திக் காட்டுகின்றார் திருவள்ளுவர். அது:

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

என்னுங் குறளாற் புலப்படுத்தப்படும். வானோர் வாழ்விலும் உயர்ந்ததெனத் திருவள்ளுவர் குறிப்பிடும வாழ்வே உயிர்வாழ்வின் உயர்ந்த குறிக்கோளாகும். இதனை, 'அந்தமி லின்பத்து அழிவில் வீடு' எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

இத்தகைய உயர்ந்த குறிக்கோளுடைய வாழ்வை மேற்கொள்பவர் துறவிகள், ஞானிகள், சீவன்முத்தர் கள் எனப்படுவர். 'குழந்தைவேற் சுவாமிகளும் குரு பரம்பரையும்' என்னும் இந்நூல் அத்தகைய சீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தர்களின் வரலாறுகளை யடக்கியுள்ளது. சீவன் முத்தர் செய்திகளை உலகம் படித்தறிவது நலம். ஆனால், அவர் செய்திகள் நம் வெளியறிவினால் மதிப்பிடற்குரியனவாகா. அவற்றிற் சம்பந்தப்படும் ஒவ்வோர் நிகழ்ச்சியும் நம் பொது அறிவில் விபரீதமாகப் படக்கூடியன. ஒரு அளவு துறவுள்ளம் படைத்தவர்கள் மட்டுமே அவற்றின் உண்மையை உணர்தல் கூடும். ஆனால் அங்ஙிலை யெய்தாதவர்களும் வரலாற்றளவில் அவற்றை அறிந்து வைத்திருப்பின் அவர்க்கு அது வேண்டுங் காலத்திற் பயன் படும். இந்தப் பலனைத் தம் நோக்கமாகக் கொண்டு இந்நூலாசிரியர் இந்நூலைப் பொதுமக்கள் அறிவிற்குப் புலப்படக்கூடிய அளவில் எளிமைப்படுத்தி எழுதியுள்ளமை போற்றத் தக்கது.

துறவிகள் வரலாறு கூறுதல் மட்டிலல்லாமல் அதனோடு சம்பந்தப்பட்ட எத்தனை எத்தனையோ சிக்கலான பிரச்சினைகளை ஆங்காங்கு விளக்கிச் செல்லுதல் இந்நூலுக்குரிய ஒரு தனிப்பெருஞ் சிறப்பாகும். இதனை வாசித்ததன் மூலம் என்னளவில் இருந்த எத்தனையோ சந்தேக விஷயங்களில் எனக்குத் தெளிவு பிறந்தமையை எடுத்துக்கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். சுருங்கச் சொல்லின் இது எனக்கு ஓர் உண்மை விளக்காக உதவிற்று எனலாம்.

பொது அறிவிற்கெட்டாத விஷயங்களில் நம்பிக்கை குறைந்து வரும் இக்காலததில் இந்நூல் எம சமூதாயத்துக்கு அவசியம் தேவையானது என்றே கூறலாம். இன்னுமொரு விசேட குறிப்புடன் இவ் வணிந்துரையை முடித்துக்கொள்ளுதல் நலமாகும்.

"தமிழ்க் கலாசாரம் வேறு, சைவக்கலாசாரம் வேறு என இரண்டு படுத்திக் கொண்டு சைவக் கலாசாரமின்றியுந் தமிழ்க்கலாசாரம் பேணலாமென்றெண்ணுதல் நம்மை நாமே ஏமாற்றும் வித்தையாகும்", என இந்நூலாசிரியர் முகவுரையிற் கூறிய கருத்து உற்று நோக்கி உணரற்பாலது. இங்ஙனம் இரண்டு படுத்துவோர் கருத்து ஏதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை.

மனிதனின் அகச்சீர்திருத்தம் புறச்சீர்திருத்தம் இரண்டையும் அகப்படுத்துகிற்பது கலாசாரம். அகச் சீர்திருத்தம் அவனுடைய ஆத்மஞான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கலாசார அம் சங்களிரண்டில் மற்றையதைவிட இது முக்கியமானது மாகும். தமிழ்க் கலாசாரம் என்கின்றபோது தமி ழரின் நடையுடை பாவனையாதிய புறச் சீர்திருத்தங் களோடு அவர்தம் ஆத்மஞான தத்துவ ரீதியான அகச்சீர்திருத்தமும் அவற்றூடே பின்னிப் பிணைந் திருக்குமாற்றை யறிதல் வேண்டும். புறச் சீர்திருத்த மாகிய அவை உடலாக, அகச்சீர்திருத்தமாகிய இது உயிராகத் திகழுமாற்றையும் உணர்தல் வேண்டும். உயிர்விளக்கம் மங்கிக்கொண்டுபோகும் நிலையில் உடலின் நிலை என்னுகுமென்பது சொல்லவேண்டிய தில்லை. தமிழராகிய நமது ஆத்மஞான தத்துவ விளக்கமே சைவம். சைவம் மங்கிக்கொண்டு போகும் நிலையில் நம புறச் சீர்திருத்தமாகிய புறவாழ்வின் நிலை என்னுகும் என்பது தானேபோதரும். எனவே தமிழ்க் கலாசார வளர்ச்சிக்காகத் தவிக்கும் நாம் அதன் உயிர்த்தத்துவமாகிய சைவஒழுக்கத்துக்கு முக் கியத்துவம் அளித்தேயாதல் வேண்டும். அதனைப் புறக்கணித்து நாம் புறச்சீர்திருத்தங்களில் மட்டும் பிராணனை விடுவது அயலார் நம்மைநோக்கி நகைப் பதற்கு இடமாகும 'உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசு வது' என்னும் பழமொழியை எப்போதோ கண்டு விட்ட தமிழர்பரம்பரையில் வரும் நம் சமுதாயத்திற்கு இது தானே விளங்கவேண்டியதொன்றுகும.

இது இவ்வாருக, இந்நாள் நாமெல்லாம் தமிழ்க் கலாசாரம் சைவக்கலாசாரம் என இரண்டு பகுத்துக் கொண்டு மாய்வது விபரீதமேயாகும். சைவச் சார் பின்றியும் நாம் தமிழ்க்கலாசாரம் பேணலாம் என் றெண்ணுதல் நம்மை நாமே ஏமாற்றும் வித்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். இவ்வகையிற் கூச்சலிடுதல் வெற்றுடலைக் கட்டிக்கொண் டழுதாற்போல்வதோர் விந்தையுமாகும். சமூக வேட்டையாடுவோர் யாரோ பண்ணிவிட்ட இப்பிளவினுள்ளே தமிழினம் முற்றாக விழுங்கெழும்பாமல் ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

இவ்வளவு உறைப்பாக இந்த அம்சத்தைத் தீண்டாமல் விட முடியவில்லை. இப்பொழுது நாற்பது ஐம்பது ஆண்டுகளாக நம்மைச் சூழ்ந்த சாபக் கேடுகளை எண்ணியுணருங்கால் உள்ளத்தில் இப்படித்தான் படுகின்றது. சமயாசாரப் புறக்கணிப்பு, தத்துவ ஞானப் பிற்போக்கு, ஆலய வழிபாட்டில் வேண்டா வெறுப்பு, கடவுள், ஞானி, அடியார்பற்றிய செய்திகளில் நம்பிக்கையீனம இத்தனையும் நம் சமுதாயத்திலே சிலகாலமாக இடம்பெற்று வந்துள்ளன. உண்மையுண்மையாக இவை சாபக்கேடுகளேயன்றிப் பிறவாகா. சமயத்திற்கு மட்டுமல்ல மொழிகளுள் மொழியாம் நம் தாய் மொழி தமிழ்மொழிக்கும் இந்நிலை தான் இருந்துவந்துள்ளது. நல்லவேளையாக—அறக் கருணையோ மறக்கருணையோ—ஆண்டவன் கருணையால் அந்நிலை மாறிவருகின்றது; மனதுக்கு ஒரே ஒரு ஆறுதல்.

அதிர்ஷ்ட வசமாக மொழிபற்றிய நம்மவர் மனநிலை மாறிவருகின்றது. இனி, இவ்வாறே சமயம் பற்றிய மனநிலையிலும் மாற்ற மேற்படவேண்டுமென்பதே இப்போதைய ஆவல். நம் பரம்பரைச் சொந்தமாகிய ஆன்ம தத்துவ விளக்கம் மறுமலர்ச்சி பெறவேண்டும். நம்மிடையே தெய்வ நெறிச் சார்பும் சைவநெறியொழுக்கமுந் தலைதூக்கவேண்டும். அவற்றிற்கு ஆதாரமாயுள்ள அடியார் வழிபாடும் குரு பரமபரை வழிபாடும் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறவேண்டும். அதுவாயிலாக நம்மிடையே வரண்டு கிடக்கும் ஞான விவேகம் மறுபடியும் ஊற்றெடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொடர்பில் நம்பரம்பரையின் ஞான ஊற்றுக்களாகிய குருபரம்பரைகளைப்பற்றி அறிதல் இன்றியமையாத தாயிற்று. காலங்கடந்தவை போக மிக அண்மையிலே, ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்கு முன்னுக, நம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்த குரு பரம்பரையைப் பற்றியாயினும் விரிவாக அறியலாமோ என்ற ஆவல் இங்ஙனந் தோன்றிற்று. ஏட்டுச் சாசனங்களில் இடம்பெருத இவ்வரலாற்றை யறிவது இலகுவாக இருக்கவில்லை. வரலாறுகள் எல்லாவற்றையும் நன்குயறிந்தவராக எவரையுஞ் சந்திக்கவும் வாய்க்கவில்லை. குரங்கெறிவிளாங்காய்ப் பாங்கில், சந்தித்தவர்களிடத்திலே, இதுபற்றிய விசாரணை தன் பாட்டில் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

இவ்வகையில், கீரிமலைக்குழந்தைவேற்சுவாமிகள் சமாதித் தொண்டர் சிலருடைய சந்திப்புத் தற்செயலாகக் கிடைப்பதாயிற்று. 'பழம் நழுவிப்பாலில் விழுந்தது' போன்றதொரு சந்தர்ப்பம் இது. முதலியார் வை. மகேசன், பெரியார் வே. கார்த்திகேசு, ஆசிரியர் க. சரவணபவன், அன்பர் சிவ. கருணுநிதி, நண்பர் அ. இரத்தினராசா என்போர் சந்திக்கப்பெற்றனர். அவர்கள் மூலம் குழந்தைவேற்சுவாமிகள் வரலாறு சம்பந்தமான சிலபகுதிகள் வெளியாயின. 'சுவாமிகள் வரலாற்றையாவது முற்ற அறியாதிருக்கின்ருேமே, சமாதியின் பொன்விழா நடைபெற இருக்கின்ற இந்த ஆண்டுவரை சுவாமிகள் வரலாறு வெளியிடப்படவில்லையே' என்ற அவர்கள் உள்ளமும் அத்துடன் வெளியாயிற்று பொன் விழாவின் ஞாபகார்த்தமாகத் தாங்கள் அதை வெளியிடுவதற்காக அதனை எழுதித் தரும்படியும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். முற்ருக அறியாத விஷயத்தை எழுதுவதெப்படி? குழந்தைவேற்சுவாமிகளைப்பற்றி மட்டும அறிந்தாற் போதுமா? அவர்தம் குருவின் வரலாறுஞ் சீஷர்களின் வரலாறும் அறிவதெங்ஙனம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை யென்ருல், குழந்தைவேற் சுவாமிகள் பாடிய குருதோத்திரம் ஒன்றும், அருளம்பல சுவாமிகள் பாடிய குருதோத்திரம் ஒன்றும், குழந்தைவேற் சுவாமிகள் சமாதித் திருப்பணி விளம்பரமிரண்டும் அவர்கள் தந்துதவினுர்கள். குறித்த விளம்பரங்களிலொன்று விரோதகிருதி வருடத்தில் வெளியானது. கடையிற் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள் பற்றிய சில கருத்துக்கள் அவற்றிற் காணப்பட்டன. அவைகளைக் கொண்டும் வரலாற்று ரீதியாக எதுவும் அறிய முடியவில்லை.

17-10-57 இல் வெளியான ஆத்மஜோதிச் சஞ்சிகையும் ஓரளவில் உதவியளிப்பதாயிற்று. அதிலிருந்த இரண்டொரு குறிப்புக்கள் உற்சாக மூட்டுவனவாயிருந்தன. கடையிற் சுவாமிகள் வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய ஆரம்ப ஊக்கத்தை ஆத்மஜோதி கொடுத்தது. அதன் ஆசிரியருக்கு நன்றி!

கிடைத்த குறிப்புகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு கடையிற் சுவாமிகள் சஞ்சாரஞ் செய்த பகுதிகளில் வாழும் மக்கள் வயிலாக விபரமேதும் அறியலாமோ என்ற முயற்சி அதன்மேல் நடைபெற்றது. நவாலியூர் ஆசிரியர் திரு. க. சரவணபவன் அவர்கள் கடையிற் சுவாமிகளைப் பற்றித் தாமாக விசாரித்துச் சில செய்திகளைத் தெரிவித்தார். பெரியகடை, நீராவியடி, மண்டைதீவு போன்ற பகுதிகளிலுஞ் சிலர் பலர் விசாரிக்கப் பெற்ருர்கள்.

அருளம்பல சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள் வரலாற்றை ஓர் துண்டுப் புத்தகமாகத் தாம் வெளியிட உத்தேசித் திருப்பதாக ஓரிடத்திற் குறிப்பிட்டுள்ளார். அது பின் நடைபெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

காலத்தின் கொடுமையை என்னென்பது! இந்த ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாகவே அவர்தம் வரலாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றின் பெரும்பகுதியைக் காலப்புயல் அடித்துக் கொண்டு போய்விட்டது. கேட்பவரின் ஆவல் தீரச் சொல்லக்கூடிய அளவிற்கு மக்கள் மனதில் அவர்கள் வரலாற்றைப் பற்றிய ஞாபகம் இல்லாமற் போய் விட்டது. எந்தத் திசையில் விசாரித்த போதிலும் பொதுவாகக் கிடைத்த விடை இதுதான்:- 'நம்முடைய தகப்பனுருக்குத்தான் விபரந் தெரியும; அவர் காலமாய் விட்டார். ஒரு பத்து வருடத்துக்கு முன் வந்திருந் தால் விபரம் வடிவாய் அறிந்திருக்கலாம'.

இதற்கு ஆர் என் செய்வது? கலாசார ஊற்றங் குறைந்து கொண்டு போவதற்கு இனி வேறென்ன காரணங் கண்டுபிடிக்க இருக்கின்றது? அறிந்திருந்த தகப்பன் தன் 'வாரி'சாகிய மகனுக்கு அதைச் சொல்லி வைத்ததுமில்லை, தகப்பனுருக்குத் தெரியுமென்று தெரிந்திருந்த மகன் அவரிடத்திலே அதனைக் கேட்டு வைத்தது மில்லை. இது ஏன் இப்படி என எண்ணிக் கலங்கும்படியாயிற்று. இருந்தாலும், மண்டைதீவு யாழ்ப்பாணத்தின் மறு பிரதேசங்களைவிட இத்துறை யிற் கூடிய கரிசனையுடையதா யிருத்தல் குறிப் பிடத்தக்கது. வாழ்க மண்டைதீவு!

பரமகுரு சுவாமிகள் சேர். பொன். அருணுசலம் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாக அறிந்து திரு. சு. நடேசபிள்ளையவர்களிடம் விசாரித்தபோது, அருணுசலம் அவர்கள் பரமகுரு சுவாமிகளைப்பற்றி எழுதிய ஒரு பந்தியை எடுத்துதவியதோடு சுவாமி கள், தம் பாட்டனுர் மூலமாக, திரு. அருணுசலத்தால் விசாரிக்கப்பெற்ற ஒருசெய்தியையுந் தெரிவித்தார்கள்.

இனி, குழந்தைவேற் சுவாமிகளின் புத்திரர் இன் றுஞ் சீவந்தராயிருக்கிருர். எண்பதிற்கு மேற்பட்ட பராயத்தில் மறதிக்குட்பட்ட மனநிலையில் உள்ள அவர்தாமும் மற்றவர்கள் கூறுவதை விட்ச் சுவாமிகளைப்பற்றி அதிகங் கூறும் நிலையி லில்லை. தாம் சிறுவராயிருந்தபோது கடையிற் சுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகள் தம்மை இராசா என்றழைத்தமை, 'சபாபதி, இராசாவுக்குக் குளிக்கவார்த்துவிடு' என்று குழந்தைவேற் சுவாமிகள் தம்மைச் சுட்டிக்கூறியமை, குருபூசைக்குப் பொருள் வாங்கத் தாம் பெரியகடைக்குப் போயினமை, சாவாங்கோட்டையில் அருளம்பல சுவாமிகளுக்குக் குருதத்துவமளிக்கப்பெற்றமை என்ற தொடர்பற்ற இந்த நினைவுகளைவிட அவரிடம் தொடர்பாக எதுவும் எதிர்பார்ப்பதற்கில்லை. கொஞ்சம் ஊன்றி விசாரிக்கத் தொடங்கினால் அவர்தங் கண்ணீரே பதில் தருகின்றது. 'இப்படியென்று தெரிந்திருந்தால் எல்லா விபரமுந் தெரிந்தெழுதி வைத்திருப்பேனே' என்பதுதான்போலும் அக்கண்ணீர் சொல்லுங் கதை. எனவே, குழந்தைவேற் சுவாமிகளின் இளமை, அவர் கல்வி, உத்தியோகம் பற்றிய செய்தி அனைத்தும் விரிவாகக் குறிப்பிடுதல் முடியாதாயிற்று. நல்லவேளையாக அருளம்பல சுவாமிகள் வரலாற்றுக் குறிப்புகள் மட்டும தொடர்பாகக் கிடைத்துள்ளன அவர்தம் மைந்தர்களில் ஒருவரான கொக்குவில் இரத்தினராசாவிடமிருந்து அக்குறிப்புக்களை நவாலியூர்க் கார்த்திகேசர் என்ற பெரியார் பெற்றுத் தந்துதவினர்கள்.

என்செய்வது! இனிக் கிடைத்த அளவிலே திருப்தியடையவேண்டியது முறை. கிடைத்ததைக்கொண்டாயினும் எழுதக்கூடியதை எழுதிக் குறித்த அன்பர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவது நமது கடனாகும்.

பல்வேறு செய்திகளின் கோவையே இந்நூற் பொருளடக்கமாகும். செய்திகளிற் பல கேட்டவாய்க் கேட்ட செய்திகள். செய்திகள் என்றால் வதந்திகள் அல்ல. அவை புறக்கணிக்கற்பாலன அல்ல. ஒவ்வோர் செய்தியும் ஒவ்வோர் சமய உண்மையை உருக்கி வடித்துக் காட்டுகின்றது. இத்தன்மை ஆங்காங்கே புலப்படுத்தப்பட்டுள்ளது உண்மைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதோ முடிந்தவை; என்றுமுள்ளவை. உண்மையை உட்கொண்ட ஒவ்வொன்றும் நிச்சயமாய் நடந்தவை; இன்னும் நடக்கக்கூடியவை. எனவே இதில்வருஞ் செய்திகள் அனைத்தும் நடந்தவைகளே.

கடையிற்சுவாமிகள் வரவுபற்றி யாழ்ப்பாணத்திற் கேட்குஞ் செய்தியைவிட மண்டைதீவுச் செய்தி சற்று வேறுபட்டுள்ளது. குழந்தைவேற்சுவாமிகள் பாடலொன்றிற்காணும் அகச்சான்றின்படி கடையிற்சுவாமிகள் மண்டைதீவுக்கு வந்தபின்னரே வண்ணார்பண்ணைக்கு வந்ததாக அறியக்கிடக்கின்றது. அதனாலும், மண்டைதீவு சுவாமிகள் பேரில் விசேஷ கரிசனை கொண்டிருந்ததாக அறிய வருதலாலும மண்டைதீவுச் செய்தியைத் தனியொரு பிரிவாக எழுதியுள்ளோம்.

இவ்வளவிலாவது கிடைக்கக்கூடியனவாயிருந்த இச்செய்திகள்தாமும் முற்றாக மறக்கப்பட்டொழியுமுன் இவற்றைப் பேணி வைப்பதே இந்நூல் செய்யுஞ் சேவையாகும். பெரியோர் செய்திகளாகிய இவற்றைப் பக்திபூர்வமாகப் படிக்கின்றவர்கள் நிச்சயம் பலன்பெறுவார்கள். அவருள், தகுதியுள்ளோர் எவருக்காயினும் ஞானத்தெளிவு பிறக்கும். அவ்வகையில் இச்செய்திகள் சம்பந்தமான உண்மைகள் பல மேலும் அவர்களுக்கு வெளியாகும். ' கைப்பொருள் தான் சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்துவிடும்'' என்பதற்கிணங்க அவற்றாற் சைவஉலகம் பயன்பெறும். அப்பெரும் முடிபிற்கு ஒரு சிறு ஆரம்பமாக இந்நூல் நின்று நிலவுவதாக.

சிவ! சிவ! சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநெறி.

நல்வாழ்வு வாழும் நாட்டம் மாக்களுக்குமுண்டு; மக்களுக்குமுண்டு. இம்மைச் சுகபோக வாழ்வே நல்வாழ்வென மயங்கி அதனோடு அமைந்து விடுகின்றார்கள் மாக்கள். இம்மையொடு அம்மையினும் நல்வாழ்வு பெற விரும்பிப் பசு புண்ணியங்களில் ஈடுபடுகின்றார்கள் மக்கள். அவருள் விவேகமுடையார், இவ்விரண்டுங் கடந்த செம்மைவாழ்வில் ஆவல் கொண்டு சிவ புண்ணியங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இம்மை மறுமை யிரண்டும் இன்னல் வாழ்வுகள்; பிறப்புப் பிணி மூப்புத் துன்பம் கவலை சாக்காடுமயமானவைகள். செம்மைவாழ்வு இவ்வெல்லா வற்றினின்றும் விடுபட்ட நிலையிலுள்ள ஒன்று; பேரானந்தப் பெருவாழ்வென்று பெயர் பெறுவது; சிவனருள் பெற்றுச் சிவமேயாய்ச் சிவலோகத்தில் வாழும் வாழ்வு அதுவாகும். இம்மை நல்வாழ்வை வேண்டுகின்றோம்; பழுதில்லை. மறுமை நல்வாழ்வை விரும்புகின்றோம்; பழுதில்லை. ஆனால், இவ்விரண்டுஞ் செம்மை நல்வாழ்விற்கு அடிகோலி வைத்துவிட்டால் நல்லது. அல்லாவிடில் வாழ்வே பயனற்றுப்போய் விடுகிறது. செம்மைநல் வாழ்விற்கு அடிகோலும் பாங்கிலே இம்மையையும் மறுமையையும் பண்படுத்த முடியும். அதற்கேற்ற சாதனமொன்றுண்டு. அதுவே குருநெறி என்பது. இது ஆன்றோர் ஆணையுமாகும்.

நம்முடைய இம்மை நல்வாழ்வை நாம்மட்டும் விரும்புகின்றோம் என்பதில்லை. அதற்காக நாம்மட்டும் முயல்கின்றோம் என்பதில்லை. நம்மைவிட வேறும் பலர் நம் நல்வாழ்வை விரும்பி வருகின்றார்கள். அதற்கென்றே முயன்றும் வருகின்றார்கள். நம்மறிவுக் கெட்டக்கூடியதாகவும் இது நடந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் மறிவுக் கெட்டாக் காலத்திலும் இது நடந்து வந்திருக்கின்றது. நம்மைப் பயிற்றும் நல்லாசிரியன் நம் நல்வாழ்வை உண்மையாகவே விரும்புகின்றான். அதற்காகத் தானும் எவ்வளவோ முயல்கின்றான். இது நம் மறிவுக் கெட்டக்கூடியதாகவே நடந்து வருகின்றது. நம்மை வளர்க்கும் பெற்றோர் நமது நல்வாழ்வை விரும்புகின்றார்கள். அதற்காக முயல்கின்றார்கள். நம் நன்மையை நாம் மறந்திருந்த போதும் அவர்கள் மறப்பதில்லை. நம்மை நாம் அறியாதிருந்த நம் குழந்தை நிலையில் நாம் அறியாமலே நமது தாய் நமது நல்வாழ்வை எவ்வளவு விரும்பினாள்; அதற்காக எவ்வளவு முயன்றாள். நம்மறிவுக் கெட்டாத காலத்திலும் இது நடந்தே வந்திருக்கின்றது. இந்தத் தாயும் இந்தத் தந்தையும் இந்த ஆசிரியனுமெல்லாம் இம்மையோடு நின்று போகிறார்கள். பின் மறுமைக்கு இவர்போல்வார் எவரெவரோ இவர்தம் நிலைகளில் நின்று நின்று உதவியேயாக வேண்டும். இது சொல்லாமலே அமைய வேண்டியது. அந்த மறுமையிற்றான் எத்தனை பிறவியோ, எத்தனை அன்னையோ எத்தனை தந்தையோ எத்தனை ஆசிரியனோ ஆரறிவார்!

இந்த அன்னை தந்தை ஆசிரியன் எல்லாரும் அழிந்துபோகும் மானுடங்கள். தாய் அழியலாம்; தாய்மை அழிவதில்லை. தந்தை அழியலாம்; தந்தைமை அழிவதில்லை. ஆசிரியன் அழியலாம்; ஆசிரியத்துவம் அழிவதில்லை. அவை அமரத்துவம் பெற்றவை. மறுமையிலும் பிறவிதோறுந் துணையென நின்றுதவுபவை. அமரத்துவம் பெற்ற இந்த அழியாப் பண்புகள் மனிதப் பண்புகள் அல்ல, தெய்வப் பண்புகள். தாய்மையாயிருந்துதவியதும் தந்தைமையாயிருந் துதவியதும் ஆசிரியத்துவமாயிருந் துதவியதும் வேறு வேறல்ல; ஒரே தெய்வப்பண்பு; ஒரே தெய்வகருணை. இம்மையிலும் மறுமையிலுந் தோன்றாத் துணையாய் நின்றுதவுவது இத்தெய்வ கருணை. உண்மை உண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாக இது தெய்வ கருணையே என்பது தத்துவ மறிந்த உண்மை.

எல்லாம் இயற்கையென்று இயற்கையில் மயங்கினவன் இதை ஒத்துக்கொள்ளாமல் விடலாம். எல்லாம் புத்திக்குப் புலனுகுமென்று புத்தியை நம்பினவனும் இதை ஒத்துக்கொள்ளாமல் விடலாம். ஆனுல், இயற்கைக்கு வேருக நின்று இயற்கையினியல்பை உணரும் விவேகமுள்ளவனும்—புத்திக்குவேருய்நின்று புத்தியினியல்பை மட்டிடும் ஆற்றலுள்ளவனும் — இதை ஒத்துக்கொள்ளாமல் விடுதல் முடியாத காரியமாகும்.

அறிவற்றவனுக்கும் புத்தியில் மயங்கினவனுக்கும் பணமோகம் படைத்தவனுக்கும் பரலோக உண்மைகள் விளங்குவதில்லை என்கின்றது கடோபநிஷத்.

இங்ஙனம் இம்மைக்கும் மறுமைக்கும் ஒத்த தன்மையதாய் நின்றருளும் இறைவனருளே செம்மையிலுங் கைதந்துதவி நல்வாழ்வருளும். இது ஞானசாஸ்திரங்கள் வலியுறுத்தும் உண்மை. அடியார் செய்திகள் அம்பலப்படுத்தும் இரகசியமும் இதுவே. இம்மை மறுமைகளிலும் ஆண்டவனருளே நின்றுதவுகின்றது. செம்மையிலும் அதுவே நின்றுதவுகின்றது. ஆனுல் இரண்டு நிலைக்கும் வேறுபாடுண்டு. இம்மை மறுமைகளில் ஆன்மா மலபந்தத்தினுலே மறைப்புண்டிருக்கின்றது. அதனுல், திருவருளை அறியும் வேட்கையோ அதனைப் பற்றுந் தாகமோ அதற்கேற்படுவதில்லை. செம்மையின்பத்தைப் பெற விழைந்து நிற்கும் நிலையிலே ஆன்மா சிவபுண்ணிய வசத்தால் மலபந்தம் நீங்கித் தூய்மையுற்றிருக்கின்றது. அந்நிலையில் அருளை அறிய அது வேட்கை கொள்கின்றது. அருளைப் பருகத் தாகங்கொள்கின்றது.

மண்ணுல் மூடப்பட்ட இரும்புத் துண்டுக்குக் காந்தத்தினுற் கவரப்படுந் தன்மையில்லை. மண் நீக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுத் தூயதானபின் அதனிடத்தே அத்தகுதி இருக்கின்றது. அப்பொழுது அது காந்த சக்தியை வரவேற்கத் தயாராகிவிடுகின்றது. அதன்மேற் காந்தமும அதனைக் கவர்ந்து கொள்கின்றது. இதுபோலவே ஆன்மாவும் மலபந்தத்தினுற் கட்டுண்டிருந்த இம்மை மறுமை நிலையில் திருவருளால் ஏற்கப்படுந் தகுதியற்றிருந்தது. தான் தகுதியற்றிருத்தலையும் அறியாமலே இருந்தது. மலமறைப்பு நீங்கி அருளை அறிய உன்முகப்படும் நிலையில் அவ்வான்மா அருளை நோக்கிச் சுவரூபித்து எழுகின்றது. அருளால் ஏற்கப்படுந் தகுதியை உடையதாகின்றது. அந்நிலையில் ஆண்டவனருள் தானே எதிர்ப்பட்டு நின்று அதனை ஆட்கொண்டருளுகின்றது. முன்னெல்லாம ஆன்மாவுக்குத் தோன்ருத் துணையாயிருந்த அருள் இப்போ தோன்றுந் துணையாய்விடுகின்றது. அவ்வருள் த்ன் சங்கற்பத்தின்படி தெய்வ உருவிலோ மனித உருவிலோ தானே சுவரூபித்து நின்று ஆன்மாவை ஆண்டடிமை கொள்கின்றது. இதுவே குருமூர்த்தம் எனப்படுவது.

அருளே குருவாய் நின்று தன்னை ஆண்ட அற்புதத்தை ஆன்மா உணரும்போது முன்னைய உண்மையும் ஒருங்கு புலனுகிவிடுகின்றது. முன்னெல்லாம் தாய்மையும் தந்தைமையும் சகோதரத்துவமுமாய் நின்று தன்னை வழி வழி ஆண்டதெல்லாம் அவ்வருளே; பிறவிதோறுந் தனக்குத் தெரியாமலே தன்னலத்தை விரும்பிப் 'புறமபுறந் திரிந்த' தெல்லாம் அவ்வருளே. நேற்றும், இன்றும், நாளையும் — பண்டும், இன்றும், என்றும் — தன்னை நீங்கா திருப்பதும் அவ்வருளே என்ற பேருண்மையும் அப்பொழுதே புலனுகின்றது. முன்பு தத்துவ உண்மை மட்டில் இருந்த அந்தக் காரியம் இப்பொழுது அநுபவ உண்மையாகி விடுகின்றது.

இம்மை மறுமைகளிலே தாய்மை முதலியனவாய் நின்று லௌகீக நல்வாழ்வளித்த அவ்வருளே செம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிற் குருவாக நின்று தெய்வீக நல்வாழ்வருளு கின்றது என்னும் இவ்வுண்மையிலேயே குருவின் பெருமை கொலுவீற்றிருக்கின்றது. தாய், தந்தை, ஆசிரியன் ஆதியோரெல்லாம் குருவாய் வந்த அத் திருவருள் நின்ற நிலையங்கள் என்ற கருத்தும் அதி லேயே தழுவிக் கிடக்கின்றது. உண்மையில் அவை யெல்லாங் குருவடிவங்களே என்பது சொல்லாமலே அமையும்.

இந்த உண்மையை இந்து தர்மம் என்றுமே போற்றி வந்துள்ளது. தாய், தந்தை, தமையன், ஆசிரியன் என்னுமிவருடன் அரசனுஞ் சேர இவ் வைவரும் ஐங்குரவர் என்று போற்றப்பட்டு வந்துள் ளனர். இவர்களைத் 'தேவரைப் போலத் தொழுதெழுக' என்கின்றது நீதிநூல்.

உய்வு பெறவேண்டியதாகிய இவ்வுயிர்க்கு எந் நிலையிலும் அவ்வருளைவிட வேறு துணையுமில்லை; அதற்கு மதிப்பளிக்காதவிடத்து வாழ்வுமில்லை. அருள் நிலைக் களங்களாகிய அன்னை முதலியோரை அரு ளாக — குருவாக — ஆண்டவனாக—க் கண்டு வழி படுந் தன்மையிலேயே வாழ்வு லயங்கொள்கின்றது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என ஔவை யார் மொழிந்ததெல்லாம் பெற்றோரைப் பெருமிதப் படுத்தவோ குழந்தைகளைப் பயமுறுத்திப் பணிய வைக்கவோ அன்று. அடிப்படையான அருளுண்மையை அந்தக் குழந்தை நிலையிலேயே அழுத்தி விடுதற்கே யாம்; அருளை வழிபட்டு அருள்வழியொழுகும் அநு பவத்தை ஆக்கி வைப்பதற்கேயாம். உண்மையோடு ஒட்டிநின்று, உண்மையை உண்மையாக உணர்ந்து உலகம் உய்வடையச் செய்வது ஔவை திருவுள்ள மல்லவா!

இங்ஙனமெல்லா முணர்ந்து ஆண்டவனருள் நிலைக்களங்களாகிய எல்லா வடிவங்களையுங் கும் பிட்டு வாழும் நெறியே குருநெறி யெனப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்டவாறு ஐங்குரவர் அருள்வடிவங்கள். ஆலயங்கள் தெய்வமூர்த்தங்களெல்லாம் அருள் வடிவங்கள். அடியார்கள் அர்ச்சகர்கள் எல்லாரும் அருள் வடிவங்கள். இவைகளையெல்லாம் ஆண்டவன் திருவுரு எனக்கண்டு மனம் வாக்குக் காயங்களாற் செய்யும் வழிபாடே . உண்மையிற் குருவழிபாடெனத்தக்கது. இந்த வழிபாட்டினுல் ஏற்படக்கூடிய பேறென்றே ஞானகுருவையடையுந் தகுதியை நமக்களிக்க வல்லது. இந்துதர்மம் போற்றிய இயற்கை நெறி இது; குருநெறியும் இதுவேதான். நம் சைவநெறி முழுவதுங் குருநெறியேயாம்.

ஞானகுரு எப்போ வருவார்? எங்கு வருவார்? எதுதோற்றத்தில் வருவார்? அவர் எப்போதாயினும் வரலாம்; எவ்விடத்திலும் வரலாம்; எத்தோற்றத்திலாயினும் வரலாம். அந்த விசாரங் கிளம்பு முன்னரே நாம் அதற்குத் தகுதியெய்தியவர்களாய் விடவேண்டும். குருவைக் காண, குருவைப்பேண, குருவினுற் பயன்கொள்ள நமக்குத் தகுதி வேண்டும். அதற்கு ஏற்ற உபாயம் குருவழிபாடே. அதைத் தவிர வேறு வழி இல்லையே யில்லை.

தாய் தந்தை முதலியோர் வழிபாடு குருநெறிக்கு வித்தாகும். குருநெறி வீட்டுநெறிக்கு வித்தாகும். தோணியின்றித் துறைசேர வழியில்லை. ஞானகுருவின்றி முத்திக் கரைசேர வழியில்லை.

இம்மை தொடக்கம் செம்மைநிலையிருக இறைவனுக்கும் உயிருக்குமிடையேயுள்ள அன்யோன்யமான உறவு அத்துவித மெனப்படும். இவ்வத்துவித நிலக்கு நித்தசாட்சியாகத் திகழ்பவர் ஞானகுரு. அவ்வத்துவித முத்திப்பேற்றின் முதலும் நடுவும் முடிவும் அவரேயாவர். அவரின்றி எதுவும் ஆவதில்லை. அவர் தொட்டதெல்லாம் பொன். அவர் நோக்கிற் பட்டவரெல்லாரும் புக்குவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானகுரு சமய வாழ்வின் விடிவெள்ளி, அது தோன்றவே அஞ்ஞான இருள் அகல்கின்றது; மெய்ஞ் ஞான சூரியன் உதயமாகின்றது. அதன்மேல் எல் லாம் பட்டப்பகல் வெட்டவெளிச்சமாய் விடுகின்றன. இனி, ஒளியேயன்றி இருளில்லை; இன்பமேயன்றித் துன்பமில்லை.

ஞானகுரு சுதந்திர சீலர்; சுதந்திர ஏணியின் உச் சிப்படியிலே நிற்பவர். சுதந்திரத்தின் இலட்சியமும் அவரே. உலகில் எதனையும் அவர் பொருட்படுத்துவ தில்லை. அகிலமும் அவரடிக்கீழ் அசைவன. அரசன் தானும் அவருக்கு ஒரு துரும்பு. எந்த ஒரு சக்தியும் அவரை அசைக்க முடியாது. இயற்கையே அவர் போடுந் தாளத்திற்கு ஆடவேண்டியது. அவர் ஆட் டங்களினருமைகளை அவருக்கு ஆட்பட்டவ ரறிவர். அவர்க்கு ஆட்பட்டவர்களும் அவர்போலவே ஆவர்.

நாட்டிலே ஞானத்தைப் பெருக்கிக்கொண்டிருப் பது குருநெறி. குருநெறி குன்றினல் ஞானம் நசிக் கும். ஞானம் நசித்தால் மக்களினம் பல்வேறு விதத் தொல்லைகளுக்குட்பட்டு நசியும்; வாழ்வில் அமைதியுஞ் சாந்தமும் அற்றொழியும்; மனிதப் பண்பே மறைந்து விடுமெனினுந் தவறில்லை.

நாமெல்லாங் குருநெறி பற்றி வாழ்வாங்கு வாழ வேண்டும். அதனுல், வாழ்வு முழுவதுஞ் சிவபுண்ணி யம் பொலியவேண்டும். அதுவாயிலாக, எடுத்த பிறப்பிலேயே ஞானகுரு தரிசனம் பெறவேண் டும். பேரானந்தப் பெருவாழ்வடைநது எல்லோரும் இன்புறுதல் வேண்டும்.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

— தாயுமான சுவாமிகள்

சிவ! சிவ! சிவ!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமும் குருவிலட்சியமும்

'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு' என்பது திருவாசகம். நம் நாட்டில் ஆண்டவன் பலமுறை குரு வடிவிலே தோன்றுகின்ருன்; அன்பர்களை ஆட்கொள்கின்ருன்; வீட்டுநெறி யுதவுகின்ருன். அன்பர்களின் தன்மைக்கேற்ப, அவரவர் சூழ்நிலைக்கேற்ப, ஆண்டவன் கொள்ளும் வடிவங்களும வெவ்வேறு; ஆட்கொள்ளும வண்ணங்களும் வெவ்வேறு.

திருஞான சம்பந்த சுவாமிகளைச் சிவபெருமான் சிவபெருமாஞகவே வந்து ஆட்கொண்டருளுகின்ருர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை அந்தண முதியோனுய் வந்து ஆட்கொண்டருளுகின்ருர். மாணிக்கவாசக சுவாமிகளை மனித உருவில் வந்து ஆட்கொண்டருளுகின்ருர். திருநாவுக்கரசு சுவாமிகளைத் திலகவதியாரிடமாக நின்று ஆட்கொண்டருளுகின்ருர். அப்பூதியடிகளைத் திருநாவுக்கரசு சுவாமிகளிடமாக நின்று ஆட்கொண்டருளுகின்ருர். இங்ஙனம் அவர் ஆட்கொள்ளும் வடிவங்கள் அனந்தம்.

திருஞான சம்பந்த சுவாமிகளை ஞானப்பால் கொடுத்து ஆண்டருளுகின்ருர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை அடிமை வழக்குப்பேசி ஆண்டருளுகின்ருர். மாணிக்கவாசகசுவாமிகளை ஞானதீட்சையும ஞானேபதேசமுஞ் செய்து ஆண்டருளுகின்ருர். திருநாவுக்கரசு சுவாமிகளைச் சூலைநோய் கொடுத்து ஆண்டருளுகின்ருர். அப்பூதியடிகளை அத்திருநாவுக்கரசு சுவாமிகள்பால் அன்பூட்டி ஆண்டருளுகின்ருர். இங்ஙனம் அவர் ஆட்கொள்ளும் வண்ணங்களும் அனந்தம்.

சைவப் பெருமக்கள் இவ்வனந்த வடிவங்களிலும் அனந்த வண்ணங்களிலும் ஒவ்வொன்றை வேண்டிப் பிரார்த்தித்து வேண்டியவாறே ஆட்கொள்ளப்பெற்று விடுதலை பெறுவர். இவற்றுள், யாழ்ப்பாணச் சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைப் பெரிதுங் கவர்ந்து வந்துள்ளது மாணிக்க வாசக சுவாமிகளை இறைவன் ஆட்கொண்டருளிய வண்ணமும் வடிவுமாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் யாழ்ப்பாணச் சைவ மக்களின் இலட்சிய புருஷர். அவர்தம் பக்திஞான நெறி இவர்களுடைய சமய வாழ்வுக்கு எக்காலத்தி லும் ஊற்றமளித்து வந்துள்ளது. திருவாசகம் சாதா ரணமாக இங்கு எல்லாருக்கும் பாராயண நூலாயுள் ளது. மரணக்கிரியையின்போது கூடத் திருவாசகத் துத் திருப்பொற்சுண்ணம் பாடப்படும் நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் மட்டுமே காணக்கூடிய ஒன்று. மார்கழி மாசம் முழுவதும் யாழ்ப்பாண மக்களுக்குத் திருப்பள்ளியெழுச்சி யொலி கேளாமல் விடிவதில்லை. கிழமைக்கொருமுறை மட்டும் விளக்கேற்றுஞ் சிறு சிறு கோயில்களிற்கூடத் திருவெம்பாவைத் திருநாட் கள் பயபக்தியோடு கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்நாட்களில் எங்குந் திருவெம்பாவை யிசைப்பதில் ஒரு தனிவாழ்வு பரிமளிக்கின்றது. அந்நாட்களிலே காப்புக்கட்டி விரதமிருந்து கோயில்களிலே திருவாத வூரடிகள் புராணங் கேட்கும் வயோதிபர்களின் பரிவு சொல்லுந்தரமன்று. அப்புராணம் போதிக்குஞ் சுத் தாத்துவித சைவசித்தாந்த நெறியொழுக்கம் யாழ்ப் பாணக் கலாசாரத்தில் நன்கு சுவறிக் கிடக்கின்றது. யாழ்ப்பாண மக்களுக்குச் சிதம்பரத்தின் பேரில் ஏற் பட்ட அளவற்ற கரிசனைக்கும், அங்கு அவர்கள் பெற்று வந்துள்ள செல்வாக்குக்கும், மாணிக்கவாசக சுவாமிகளிடத்தில் அவர்கள் கொண்டிருந்த பெரும் பற்றே காரணமென்றல் மிகையாகாது. யாழ்ப்பாண மண்ணிலே கமழுஞ் சைவமணம் மாணிக்கவாசகசுவா மிகளின் பக்திஞான மணமே யென்பது முற்றிலும் பொருந்தும்.

திருப்பெருந்துறையிலே இறைவன் குருமூர்த்தி யாய் வீற்றிருந்தருளிய காட்சியும், அங்கு அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டந் திரண்டிருந்த சீரும், அக்கூட்டத்திடையே மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற சிறப்பும், அதன் அருமைப்பாட்டுணர்வும் திருவாதவூரடிகள் புராண வாயிலாக அறியவருஞ் செய்திகள். இவை யாழ்ப்பாணச் சைவ மக்களின் உள்ளங்களிலே என்றும் புதுமை மங்காது விளங்கப் பெற்று வந்துள்ளன.

வெளியிடங்களிலே மடங்கள் அமைத்தலும், அவற்றிலே அடியார்கள் சென்று கூடுதலும், தமக்குக் குருவாய் வாய்த்த ஒருவரைப் பேணி அவருக்கு எல்லோரும் அடங்கி ஒடுங்கி ஒழுகுதலும், சீஷர்கள் அடிபிரியாதிருந்து குருவுக்குப் பணிவிடை புரிந்தொழுகுதலும், சிவநாம சங்கீர்த்தனம் பண்ணுதலும், ஞான நூல்களை ஓதுதலும, ஓதுவித்தலும, அடியார்கள் தமமுள் ஆடுதலும பாடுதலும் யாழ்ப்பாணத்தில் இன்றுவரை நிலவிவருஞ் சிவநெறி யொழுக்கங்களாகும். இவையெல்லாந் திருவாதவூரடிகள் புராணத்துத் திருப்பெருந்துறைச் சருக்கம் வர்ணிக்கும் அடியார் திருக்கூட்டத்தின் பிரதிபலிப்பாகவே யமைந்திருத்தல் நாம் உணர்ந்தின்புறற்குரியது.

இங்ஙனமெல்லாம் மாணிக்கவாசகசுவாமிகளிடத்தே அபிமானங் கொண்டு அவருக்கு வாய்த்த குருநெறியில் ஆர்வமுற்று அவர்தம் அருளிச்செயல்களில் ஆராமை மிகுந்து வாழ்ந்தவர்கள் இந்நிலத்துச் சைவப் பெருமக்கள். சிவபெருமான் திருக்கயிலையில் நின்றும் எழுந்தருளி அடியார் கூட்டத்தோடு வந்து, மாணிக்கவாசகசுவாமிகளை ஆட்கொண்டவாறே, தம்மையும் ஆட்கொண்டருள வேண்டுமென்றும், மாணிக்கவாசக சுவாமிகளை அவர் இருத்தியவாறே தம்மையும அடியார் நடுவுள் இருத்தியருள வேண்டுமென்றும் இவர்கள் பத்திமையாற் பாவித்துப் பரவித் துதித்து வந்திருப்பார்களென்று கருதுவது பிழையாகாது. அங்ஙனம் பன்னாளாகப் பாவித்துப் பணிந்ததன் பேறாக அந்நெறிக்குத் தம்மைப் பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகதை யுள்ளவர்களாக ஆக்கிக் கொண்டார்கள் என்பதும் தானே அமையும்.

வேண்டுவார் வேண்டியதை யீந்தருளும் எம்பெருமான் வேண்டிய வண்ணமே குருவுருவாய்த் தோன்றியும், குருவா யமையக்கூடிய சீவன் முக்தர்களை இடமாகக் கொண்டு தோன்றியும் அன்பர்களை ஆண்டடிமை கொண்ட செய்திகள் பரம்பரையாக இங்குக் கேட்கப்பெற்று வருகின்றன.

சிவ! சிவ! சிவ!


---

## கடையிற் சுவாமிகள்.

யாழ்ப்பாணத்திலே உசன், கொழும்புத்துறை, கந்தர்மடம், நல்லூர், வண்ணார்பண்ணை போன்ற இடங்களில் அடியார் மடங்களும அவ்வம் மடங்களைச் சார்ந்த குரு பரம்பரைகளும் இருந்து வருகின்றன. அனேகமாக இன்றுள்ள குருபரமபரைகளுக்கெல்லாம் மூல முதல்வராகத் திகழ்பவர் கடையிற் சுவாமிகள். முன்பின் அறியப்படாமல் இற்றைக்கு மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகமானவர் சுவாமிகள். இவர் போல்வாரது ஊரும் பேரும் வினவவுஞ் சொல்லவும்படுவதில்லை. அது குருநெறி மாண்பைப் பேணும் வழியாகும். குரு சம்பிரதாயத்தின்படி இது தத்துவக் கிரமமாகவே உணர்த்தப்படுகின்றது. திருக்கயிலாயத்தி லிருந்து நேரே புறப்பட்டுத் திருததில்லை சேர்ந்து அங்கு நடனமாடி அங்கிருந்து மண்டைதீவுக்கு வந்து தங்கிப் பின் வண்ணார்பண்ணையில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொண்டருளினர் சுவாமிகள் என்பதே அவர்தம் சீடர்கள் வழியாக யாம் அறிவது. இறைவனருளே மனித உருவில் வந்து பக்குவமுள்ள அன்பரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையிற்சுவாமிகள்



ஒடுக்கம் : 1891 கரயாண்டு, புரட்டாதித் திங்கள், சதய நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்ளும். அல்லது அவ்வருளே அருள் பெற்றுள்ள பிறரிடமாக நின்று ஆட்கொள்ளும் என்பதே தத்துவ உண்மையாகலின், அவ்வளவில் அமைதலே அறிவாம்; அதன்மேல் விசாரணை புரிதல் பழுதாம். எனினும் வரலாற்றுப் பிரியர்கள் யாவரோ கண்டு கூறிய ஒரு செய்தியும் நம்மவரிடையே அறியப்பட்டு வந்துள்ளது.

சுவாமிகள் தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரில் ஒரு நீதவானாக இருந்தவர்கள். ஒரு கொலை வழக்கில் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனை விதிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது சுவாமிகளுக்கு மறித்துணர்வு தோன்றிவிட்டது. இவனார் நானார்? இவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க நானார்? என்று விசாரணை எழுந்து விட்டது. அவ்விசாரணையானது 'நானார் என்னுள்ளமார் ஞானங்களார்' என்ற விசாரணையைக் கிளப்பிவிடவே அவர்கள் அங்நிலையிலிருந்து விலகி மெய்யுணர்ந்து குருவருள் பெற்றுச் சீவன்முத்தராய்த் திகழ்ந்தார்கள்.

அந்நாளில் யாழ்ப்பாணத்தில் வயிரமுத்துச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்து வந்தார். அவர் இந்திய யாத்திரை செய்யும் வழக்கமுடையவர். ஒரு தடவை அவர் இந்தியாவில் இருந்தபோது தற்செயலாகச் சுவாமிகளைக் கண்டு தரிசித்தார். சுவாமிகளின் திருவருள் விலாசத்தால் ஈர்க்கப்பட்டார் தாம் சுவாமிகளுக்கு ஆட்படல் வேண்டும் என்னும் உள்ளக்கிடக்கையோடு சுவாமிகளை அணுகினார். அவரைக் கண்ட மாத்திரத்தே சுவாமிகள் 'நீ இங்கு வரவேண்டாம், நான் அங்கு வருகின்றேன்' என்று வழக்குக் கொடுக்க முன்னரே தீர்ப்புக் கூறிவிட்டார். செட்டியார் பெருந் தயக்கத்துடன் சுவாமிகள்பால் உள்ளத்தைப் பறிகொடுத்து வெற்றுடலாய் மீண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். செட்டியார் தம் தொழிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டபொழுதும் சுவாமிகள் நினைவு என்றும் அவர் உள்ளத்தில் உறுத்திக்கொண்டே யிருந்தது.

ஒருநாள் வெள்ளிக்கிழமையன்று செட்டியார் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்குச் சென்று வழிபட்டுக்கொண்டிருந்தார். தம குருநாதனைத் தமக்குத் தந்துவிடல் வேண்டும் என்பது அன்று அவருடைய உருக்கமான வேண்டுகோள். வழிபாடு முடிந்து குருவைப் பெற்றுவிட்டாற் போன்ற மனமலர்ச்சியுடன் செட்டியார் வீடு திரும்பிக்கொண்டிருக்கின்ருர்.

இதற்கிடையிலே செட்டியார் வீட்டிலே சுவாமியார் ஒருவர் புகுந்தார். சமையலும் முடியுந் தருணமாய் இருந்தது. செட்டியாரின் மனைவியார் சுவாமியாரை வணங்கி உபசரித்து நின்ருர். சுவாமியார் தாம் உடனே பசியாறவேண்டும் விருப்பத்தைத் தெரிவித்தார். அன்று நோன்புநாள்; அத்துடன் வெள்ளிக்கிழமை. சுவாமியார் ஒருவர் விருந்தாக வந்துள்ளார் என்ற அளவில் அம்மையாருக்கு ஒரே குதூகலம். இருந்தும் தம் கணவரும் வந்துவிட்டால் நல்லாயிருக்குமே என உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு அலை ஒரு தடவை தோன்றி மறைந்தது. அதற்காகச் சுணங்காமல் பரபரப்புடன் ஆசனமமைத்து எல்லாம் ஒழுங்குபண்ணிச் சுவாமியாரை அமுதுசெய்ய வேண்டினர். சுவாமியாரும் எழுந்து சென்று இலை முன் உட்கார்ந்துகொண்டு இன்னும் ஒரு இலைபோடு என்ருர். ஏன் என்ற பேச்சின்றி அம்மையாரும் அவ்வாறே செய்து இரண்டிலையும் படைத்து முடிந்ததும் முடியாததுமாக இருக்கையில், செட்டியார் வீட்டுள் நுழைந்தார். கற்புநெறியும் தெய்வநெறியும் அம்மையாருக்கு ஒருங்கே பலித்து விட்டன. செட்டியாரும் அன்று கும்பிட்ட பயனைக் கையோடே கண்டுகொண்டார். குருவருளும் சீஷர் அன்பும் ஒருங்கு கலந்துவிட்டன. அன்னஞ் சாட்சியாக இதனைக் கண்டு வாழும் பாக்கியம் அம்மையாருக்கே கிடைத்தது; இதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மண்ணிற் கடையிற் சுவாமிகள் கால் வைத்த முதற் செய்தி.

குருவருள் பெற்றுச் சீவன்முத்தராய்விட்ட செட்டியார் தம்மை ஒப்புக்கொடுத்தவாறே தம் உடைமை முழுவதையுஞ் சுவாமிகளிடம் ஒப்புக்கொடுத்து விட்டார். அத்தரும சாதனம் இன்று கந்தர்மடத்தில் அன்னசத்திரம் என்ற பெயரோடு விளக்கமுற்றுள்ளது. அங்கேதான் சுவாமிகளுடைய சீடர் சின்னச்சாமியவர்களின் சமாதியு முள்ளது. நல்லூர்த் திருவிழாக்காலங்களிலும் விசேட குருபூசைத் தினங்களிலும் இங்கு விசேட அன்னதானம் நடைபெற்று வருதல் குறிப்பிடற்பாலது. சீவன்முத்தர் செல்வஞ் சிவனடியார் செல்வம்.

இனி, சுவாமிகள் வரவுபற்றிக் குருபரம்பரைக்கிரமத்திலும் ஒரு வரலாறுண்டு. இந்திய பூமியில் நிலைத்திருந்த ஒரு குருபரம்பரையிலிருந்து மூன்று மகான்கள் ஈழத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் சுவாமி சின்மயானந்தர் சுவாமி முக்தியானந்தர். சுவாமி நிரஞ்சனானந்தர் என்று அழைக்கப்பெற்றனர். அவருள் முக்தியானந்தரே கடையிற் சுவாமிகள் எனப் பெயர் பெற்றார். சுவாமி சின்மயானந்தர் பரம்பரையில் வந்தவர்கள் சாஷன் சுவாமி பரம்பரையினர். இப்பரம்பரையில் வந்தவர்களே கந்தர்மடத்து வேதாந்த மடத்தைச் சேர்ந்தவர்கள். சுவாமி நிரஞ்சனானந்தர் கீரிமலையிற் பரமகுரு சுவாமிகள் என்ற பெயரோடிருந்து குழந்தைவேற்சுவாமிகளுக்கு உற்ற குருவாய் வாய்த்தவர். இச்செய்தி 17-10-57 இல் வெளியான ஆத்மஜோதிப் பத்திரிகையிற் காணப்படுகின்றது. எவ்வகையிலுஞ் சுவாமிகள் வடக்கிலிருந்து வந்தவர் என்பது தெளிவு.

எல்லாம் வடக்கிலிருந்துதானு வரவேண்டும் என்ற இன்றைய கோஷம் விஷமத்தனமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பிலாவது சொல்லிலாவது வடக்கிலிருந்து நம்மைப் பிரிவுபடுத்திக் கொள்ளுதல் தற்கொலைக்கொப்பதாகும். கிளை செழிக்கவேண்டும் என்பதற்காக அடிமரத்திலிருந்து அதனைத் துண்டித்தல் அறிவுடைமையாகாது; சந்ததி சந்ததியாக நம்மவர் ஆவிகள் வடக்கிலேயே போய் ஆறுதலடைந்துள்ளன. சிதம்பரத்தை நினையாமற் செத்தவரோ கயிலையை நினையாமற் கண்மூடியவரோ யாழ்ப்பாணத் தமிழர் பரம்பரையில் இல்லை என்றால் மிகையாகாது. நம் ஆத்மீக கலாசார ஊற்று என்றைக்கும் அங்கேதான் உள்ளதென்பது உண்மையில் உண்மை. இது தனியாக விஸ்தரிக்கவேண்டிய விஷயம்.

இன்று ஞான வரட்சியால் நசிந்தொழியும் நம்மினம் இன்னும் வடக்கைத்தான் பூசிக்கவேண்டும்; நேசிக்கவேண்டும். நமமினம விமோசனமடையவேண்டில் வடக்கில் ஆன்மநேயமும் அத்யந்த உறவும் நமக்கு நிரயபவும் வேண்டும்.

வயிரமுத்துச் செட்டியார் தொடர்பிலிருந்து, சுவாமிகள் சஞ்சாரம் மண்டைதீவிலும் வண்ணார்பண்ணைப் பகுதியிலுமே மிகுதியும் நடைபெற்று வந்தது. காந்தங்கண்ட இரும்புத் துண்டுகள்போல நாற்றிசையிலுமுள்ள சிவபுண்ணியப் பேறுளோர் பலர் சுவாமிகளை அடைந்து அவர்பால் தீக்ஷையும் உபதேசமும் பெற்றுப் பக்குவராய்த் திகழ்ந்தார்கள்.

சுவாமிகள் திருவுருவம் கவர்ச்சிகரமாயும், உண்மையுள்ளமுடையார்க்குப் பயபக்தி விளைப்பதாயுமிருக்கும். அளவான உயரமுள்ள பூரித்த திருமேனி, முழந்தாள் வரை நீண்ட திருக்கரங்கள், நீண்டகன்ற திருமூக்கு, விரிந்தசையுங்குஞ்சி, ஒளிவிளங்கும் எலுமிச்சம்பழ வர்ணம் இவை அவர்தம் திருவுருவப் பொலிவாகும். அரையில் வேஷ்டியும் தோளிற் சால்வையும் அவர் திருவுடையாகும். அவை பெரும்பாலும் கருநிறமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றும். வெண்சீலை வேய்ந்த குடையொன்று என்றும் அவர்வசம் இருக்கும். உலாவும்போதெல்லாம் அதனைக் கக்ஷத்தில் வைத்துக்கொள்வார்கள். நெற்றியிலே திலகம் ஒன்று பளபளக்கும். இத்திருக் கோலத்துடனே என்றும் ஆனந்த வடிவாய்க் காட்சியளிப்பார்கள். மெட்டாக அடிபெயர்த்து நடத்தல், ஓடுதல், உலாவுதல்; கொஞ்சுதல், குழைதல்; அடித்தல், அணைத்தல்; ஏசுதல், பேசுதல் இவையனைத்தும் ஆனந்தாதீத நிலையிலே சுவாமிகள் நிகழ்த்திய அருள் நடனங்களாம்.

சடைவரத சுவாமிகள் என்பவர் எட்டு வயதுச் சிறுவனாயிருந்தபோது வேறு பல பிள்ளைகளுடன் சுவாமிகளைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். கடையிற் சுவாமிகள் அவரைக் கண்ட மாத்திரத்தே ஆனந்தக் கூத்தாடி அவரைத் தனியாக அழைத்துச்சென்று கட்டிப்பிடித்துக் கொஞ்சித் தம்தலையிற் கிடந்த தொப்பியைக் கழற்றி அவர் தலையிற் சூட்டி ஆனந்தித்தார்கள். இவ்வருள் நிகழ்ச்சிக்கு உதவியாயிருந்த அத் திருத்தொப்பி இன்றும் மண்டைதீவிலுள்ளதென்று சொல்லப்படுகின்றது.

சுவாமிகள் சகல சம்பிரதாயங்களுக்குஞ் சங்கற்ப விகற்பங்களுக்கும் அப்பாற்பட்டவர். அனுசரணையிலுள்ள விதிவிலக்குகளுக்கெல்லாம் அவர் தாமே விதிவிலக்காய்த் திகழ்ந்தார்கள். மதுமாமிசம் போன்றவற்றையும் விலக்காது ஏற்றுக்கொள்வார்கள். இது அனுசாரமென்று கருதிச் சுவாமிகளை எட்டநின்று இகழ்ந்தாரும் உளர். இதனையே சாதகமாகக் கொண்டு தமது கள் வேட்கையிலும் மாமிச வேட்கையிலும் தீவிர முன்னேற்றங் கண்டாருமுளர். இதுபற்றி இன்னமும் மலைவாருமுளர். சுவாமிகள் மதுமாமிசம் உட்கொண்டமையும் ஏனையோர் மது மாமிசம் உட்கொள்ளுதலும் பேரளவில் ஒன்று; தன்மையளவில் வெவ்வேறு. பற்றற்ற நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த சுவாமிகளுக்கு மரக்கறியும் மாமிசமும் ஒன்றே. கள்ளுங் கழுநீரும் ஒன்றே. புலாற் சுவையைப் பற்றுகிற பற்ருே கழுநீர்ச்சுவையைப் பற்றுகிற பற்ருே அங்கில்லை. அவர்கள் சுவைநோக்கித் தமக்காக உண்பதில்லை. ஞானிகள் உண்ணும் உணவு யாகாக்கினியிற் பெய்யப்படும் ஆகுதியாகும். யாகாக்கினியில் எப்பொருளை இட்டாலும் அது ஏற்றுக் கொள்கிறது. அது அதற்கே உணவாவதில்லை. அவ்வாகுதி எத்தனையோ தேவர்களுக்குப் பிரீதியாகின்றது. ஞானிகொள்ளும் உணவு தனக்காகவல்ல. உலக சீவன்கள் முழுவதிலுஞ் செறிகின்றது. அவரது உண்ணுஞ் செயல் தர்மச் செயலாகும். அதனிடம் பாவம் நிகழாது; சாதாரண மக்கள் மாமிசத்தை விரும்புவதன் காரணம் அவர்களுக்குள்ள நாச்சுவைப் பற்று; மதுவை விரும்புதற்குரிய காரணம் தாகத்திற் கினியதெனும் தனியான உளப்பற்று. இங்ஙனம் ஆன்ம லாபத்திற்கு அடியோடு நாசம் விளைவிக்கும் பற்றை அடிப்படையாகக் கொண்டது பொதுவில், சாதாரண மக்கள் உணவு. அதிலும் மதுவும் மாமிசமும் காமமோகங்களை அதிகரிக்கச் செய்வனவும் கொலைப்பழியோடு கூட வருவனவுமாகும். நாமும் சுவாமிகளைப்போலப் பற்றற்ற நிலையிலேதான் உண்கிருேம் எனின் அது வித்தில்லாச் சம்பிரதாயமே அல்லாது வேறில்லை. குருவருள் பெற்று இருவினை ஒப்புச் சத்திநிபாதம் அடையாதவனுக்குப் பற்றறுதல் எவ்வாற்ருனுமில்லை. அவனுக்குப் பற்றறுதல் முயலுக்குக் கொம்பு முளைத்தவாரும். எனவே சாதாரண மக்கள் மது மாமிசம் உட்கொள்ளுவது அநுசாரப் பழியாகும். அதுவும் கடையிற்சாமி பேரால் உட்கொள்ளுவது பழிமேற் பழியாகும். சுவாமிகளின் உணவு விஷயம் நமது நியாயித்தலுக்கு அப்பாற்பட்டது. இப் பேருண்மையைச் சுவாமிகள் பொதுமக்களுக் குணர்த்தியருளிய சம்பவமும் ஒன்று அவர்தம் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள், அன்பர்கள் இல்லங்களில் அமுது செய்வது வழக்கம். அவர் செல்லுமிடமெல்லாம் அடியார்களும் பிறருமாகப் பலர் அவரைத் தொடர்ந்து செல்வார்கள். விருந்தளிப்போர் அவர் மனங்கோணுமல் வேண்டியபடியெல்லாம் ஆக்கிப் படைத்து அவர்களை மகிழ்விப்பார்கள். உணவுப் பிரியர்கள் சிலர் இதனைச் சாதகமாக்கிக்கொண்டு சிலநாள் தொடர்பாகச் சுவாமிகளைச் சூழ்ந்து கொண்டனர். ஒருநாள் சுவாமிகள் உணவு வேளைக்கு ஒரு வீட்டை நோக்கிச் செல்கையில் உணவுப் பிரியர்கள் பலர் அவரைத் தொடர்ந்து வந்தனர். வழியிலே மெழுகு உருக்கிக் கொண்டிருந்த ஒருவனிடம் சுவாமிகள் திடீரென்று கையை நீட்டினுர். அவன் தடுமாற்றமடைந்து உருக்கிக்கொண்டிருக்கும் மெழுகில் ஒரு அகப்பை அள்ளி அவர் கையில் ஊற்றிவிட்டான். பின் தொடர்ந்தவர்கள் மெல்லமெல்லப் பின்வாங்கினுர்கள். சுவாமிகள் திரும்பி நின்று எல்லாருங் காண அதனைக் குடித்து விட்டு 'வாருங்களேன்' வாங்கிக் குடியுங்களேன்' என்ருர்கள். பின்வாங்கியவர்கள் திரும்பி ஓட்டம் எடுத்தார்கள்.

கடையிற்சுவாமி உட்கொள்ளுகிருரென்று மற்றவரும் மதுமாமிசம் புசித்தால் கடையிற்சுவாமி குடித்ததுபோல உருக்கிய மெழுகையுமல்லவா உறிஞ்சிப் பருகவேண்டும். கண்ணப்பநாயனுர் கடவுளுக்குப் படைத்தார் என்று இறைச்சி உணவைப் போற்றுபவர் அவரைப்போன்று கண்ணையும் அல்லவா தோண்ட வேண்டும்.

நாம் முதலில் அடையவேண்டியது சுவாமிகள் போன்ற மகான்களின் நிலை. அதற்கு அடிப்படையான ஆன்ம வளர்ச்சி ஏற்படவேண்டும். சமய நூல்களில் விதித்தனவற்றைத் தழுவி விலக்கியனவற்றை ஒதுக்கி வாழும் ஆசாரம் அதற்கின்றியமையாதது. சாதாரணமக்கள் அதைக் கைநழுவவிட்டால் ஆன்ம முன்னேற்றத்தைப் பற்றிக் கனவுங் காணமுடியாது. குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருளும் முத்திநெறியும் 'பஸ்'வண்டியில் ஏறுவது போல இடைவழியில் நின்று தொற்றிக்கொள்ளுதலாற் கிடைத்துவிடாது. ஆசாரநெறியொழுகி அடிப்பாடாகப் பண்பட்டு வருகின்ற மகான்கள்தான் அதற்குரியோராவர். அவர்களே பயன்பெறுவர்.

உண்மையைக் காணுங்காட்சி விசேடமும், உண்மையை உணரும் உணர்ச்சி விசேடமும் இன்மையால் சுவாமிகளின் நிலையைப் புரிந்து கொள்ளாதோர் பித்தன், பேய்பிடியுண்டோன், பாலன் என்று அவர்க்கு நாமஞ் சூட்டினர். எக்கருத்தில் எவர் சொல்லும் பெயரும் இறைவன் பெயரேயாம். இறைவனடியார்களாகிய மகான்களும் அதற்குப் பெரிதும் அருகதை உடையர். சொல்வார் கருதுங் கருத்தைவிட வேருன நல்ல கருத்தும் அவற்றுக்குள்ளதுதானே. எவ்வெவர் எவ்வெப் பெயரிட்டழைத்தாலும் அவ்வப்பெயர் இறைவன் திருவிலாசங்களில் ஒன்றை உணர்த்துவதாகவே அமைந்துவிடுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், இறைவனைப் 'பித்தனே' என்றபோது 'ஆம் அதுதான் சரி; அப்படியே வைத்துப் பாடுக' என்ருர். அடியார்கள் எல்லாம் அன்புப்பித்துக் கொண்டவர்கள் என்ற பொருளில், திருநாவுக்கரசு சுவாமிகள் 'பெரும் பித்தர் கூடிப் பிதற்றும் அடி' என்று இறைவனடிகளைப் போற்றுகின்ருர். மாணிக்கவாசக சுவாமிகள் தம்மைப் பித்தன் என்று பிறர் கூறுவது ஏன் தெரியுமா என்று கேட்டுக் காரணம் விளக்குகிருர். சர்வ சங்கார மயானத்தில் அங்குள்ள பேய்களோடாடுவான் இறைவன். எனவே பேய் பிடியுண்டான் என்பதூஉம் பொருந்துவதே. நரை திரை மூப்பு முதலாகிய விகாரங்களின்றி எல்லோரையுங் கவருந்தோற்றத்துடன் விளங்குவது குழந்தை - பாலன் - ஆகலின் அப்பெயர் இறைவனுக்கும் அவனடியாருக்கும் பொருத்தமான பெயரேயாம்.

சுவாமிகளிடத்திலே பயபக்தி பூண்டவர்கள் கடையிற் சுவாமிகள், கடையிற் குருநாதன், கடையிற்பெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர், கடையான் என்ற பெயர்களாலும், ஆராமை அன்பு காரணமாகப் பித்தன் பாலன் என்ற பெயர்களாலும் வழங்குவர். எனினும் கடையோடு சார்ந்து வரும் பெயரே பலரும் அறிந்த பெயராகும். வண்ணார்பண்ணையில் என்றுஞ் சனப்புழக்கம் மிகுந்துள்ள சந்தை நிலையமாகிய பெரியகடையிலே சுவாமிகளைப் பெரும்பாலும் பலருங்கண்டு வழிபடக்கூடியதாக இருந்தது. அதுபற்றியே கடையிற்சுவாமிகள் என்றபெயர் அவர்க்கு வழங்கலாயிற்று. அறம் பொருள் இன்பம் வீடு என உறுதிப்பொருள்கள் நான்கு. இவற்றிற் கடைசியில் உள்ளது வீடு. கடையென்ற சொல்லுக்கு இறுதி, அந்தம் என்ற பொருளுமுண்டு. எனவே கடையான் என்பதற்கு உறுதிப்பொருள் நான்கின் இறுதிக்கண்ணதாகிய மோக்ஷத்தைத் தருபவன் என விவேகிகள் பொருள் கொள்வர். ‘கடையோ மொழிவீடு கருதுங் கழலுடையான்’ —குழந்தைவேற் சுவாமிகள்.

கடையிற் சுவாமிகள் பெரிய கடைக்குள் அருள் நடனஞ்செய்யும் வேளையில் சிலவேளை சிலர்கடைக்குட் சென்று அங்குள்ள காசிற் கையிடுவார். சுவாமிகளின் கைபட்டதிலிருந்து அக்கடைக்காரருக்குக் குரு சந்திரயோகமாகிவிடும். இதுகண்டு சுவாமிகள் தம் ஒவ்வொருவருடைய காசிலுங் கையிடுதல் வேண்டுமென்று கடைக்காரர் தவங்கிடப்பர். ஆனால் எல்லார்க்கும் அவ்வருள் நிகழ்வதில்லை. சிலவேளைகளிற் கை நிறையக் காசுகொண்டு சுவாமிகள் பெரியகடைத் தெருவழியே விசரன்போக்கில் ஓடுவார்கள். பிள்ளைகள் பலர் அவரைத் தொடர்ந்தோடுவார்கள். திடீரென்று சுவாமிகள் திரும்பி நின்று கையிலுள்ள காசை வீசுவார்கள். சிறுவர்கள் விழுந்தடித்து அவற்றைப் பொறுக்குவதைப் பார்த்து நின்று ஆனந்த நடனஞ் செய்வார்கள். சுவாமிகளுடைய திருவடிப் டரிசம் பெற்று அவர்தம் நடன சுகத்தையும் அனுபவித்த பெரியகடை வீதியும் பெருந் தவப்பேறுடைத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் அருளுருவங்களாகிய மகான்களும் ஆண்டவனைப்போலவே முற்றுமுணர்வோர்—எல்லாம் அறிபவர்கள். 'நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலை ஞானங் கற்குஞ் சரக்கன்று காண்' என்பது திருவருட் பயன். அருளின் விளைவாகவே எங்குமுள்ள எல்லாம் மகான்களிடம் விளங்கித் தோன்றுவன.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் இணுவிலில் அம் பிகைபாகர் என்ற தமிழ்ப் பேரறிஞர் வசித்துவந்தார். பிற்காலத் தமிழ்ப்புராணங்களிற் சொற்செட்டுக்கும் பொருட்சிறப்புக்கும் பேர்போனது தணிகைப்புராணம் எனப்படுவது. அது மாதவச் சிவஞான சுவாமிகளின் சீடர்களில் ஒருவரால் இயற்றப்பட்டது. அதற்குத் தகுந்த உரைகாண்பதில் பண்டிதர்மார் படுஞ் சிரமம் அளவற்றது. இணுவில் அம்பிகைபாகர் என்பார் தமது அறிவுத்திறமையினுலே அந்நூலுக்குப்பொருளெழுதும் முயற்சியி லீடுபட்டிருந்தார். ஒருபகுதியிற் சில பாடல் களுக்கு உரைகாண்பதில் அவருக்குக் கஷ்டமுண்டா யிற்று. ஒருநாள் அதுபற்றிய சிந்தனையோடு அம் பிகைபாகர் பெரியகடை நோக்கிப் பெருந்தெருவழியே போய்க்கொண்டிருந்தார். வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் வாசலையடைந்ததும் அப்படியே நின்றுவிட் டார். தம் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை; திரும்பிப் பார்த்தார். ஒரு மக்கட்கூட்டத்தின் நடுவே சுவாமிகள் பாடிக்கொண்டிருக்கக் கண்டார். அம் பிகைபாகருக்கு எந்தெந்தப்பாடல்கள் விளங்காதிருந்த னவோ அந்தந்தப் பாடல்களை ஒவ்வொன்ருகப் படித துப் பொருள் விளக்கிக்கொண்டிருந்தார்கள் சுவாமி கள். பிறகு பேசுவானேன்?

சீவன்முத்தர்களாகிய சீவன்களின் திருவுருவே சிவரூபம். அவர் கரணங்கள் அனைத்துஞ் சிவகரணங் கள். அவர்கள் உச்சிட்டமும் அருளேதான்.

திருநெல்வேலியில் ஒரு பெண்மணிக்கு ஒருகை நோயுற்று வழங்காநிலையிலிருந்தது. எந்தப் பரிகாரத் தினுலும் அது தீரவில்லை. கடையிற் சுவாமிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாலாவது இது மாருதா என்பது அப்பெண்மணி யின் ஏக்கம். நல்லவேளையாக ஒரு வெள்ளிக்கிழமை அவர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போயிருந் தார்; வழிபாடு முடிந்து வாசலில் நின்றுகொண்டிருந் தார். யாரோ ஒருவர் கோவிலின் வாசலை நோக்கி ஓடி வரக் கண்டார். அங்கு நின்ற மற்றவர்கள் கடையிற் சாமீ! கடையிற் சாமீ!! என்றனர் கேட்டுப் பரபரப் புடனே அப்பெண்மணியும் சுவாமிகள் பின்னே ஓடினர். சுவாமிகள் கோயில் உள்வீதி சுற்றியோடி மறுபடியும் வாசலில் வரும்போது கோயில்ஐயர் பூத்தட்டதுடன் அங்கு நின்றார். சுவாமிகள் ஐயரிடம் திடீரென்று கை யை நீட்டவே ஐயர் தட்டத்திலிருந்த செவ்வரத்தம்பூக் களிற் சிலவற்றை அள்ளிச் சுவாமிகள் கையிலிட்டார். சுவாமிகள் அவ்வளவையும் தம் வாயிலிட்டுக் குதப் பிக்கொண்டோடவே அப்பெண்மணியும் தொடர்ந் தோடிக்கொண்டிருந்தார். சுவாமிகள் கோயிற் புற வீதியில் ஓரிடத்தில் திரும்பி நின்று கைநீட்டும்படி பெண்மணிக்குச் சைகைகாட்ட அவரும் அவ்வாறே கைநீட்டிப் பரிந்து நின்றனர். சுவாமிகள் திரு வாய் திறந்து நன்கு மெல்லப்பட்ட செவ்வரத்தம்பூக் குதப்பலை உமிழ்ந்துவிடவே 'தனம் பெரிதும் பெற்று வந்த வறியவன்போல' மகிழ்ச்சியில் மலர்ந்துநின்றார். சுவாமிகள் பின்பு நிற்கவில்லை, ஓடிவிட்டார். அம்மை யார் அதனைத் தங்கையிற் றடவிய மாத்திரத்தே கை நோயும் தீர்ந்து மெய்நெறிக்கும் அருகதை உடை யவராயினர். சீவன்முத்தர்களின் உச்சிட்டம் அருள் அமிழ்தம். அதுவே மருந்து; தீராநோய் தீர்த்தருள வல்லது. மெய்யடியார் அதனைப் பெறத் தவங்கிடப் பார்கள்.

குறித்த நிகழ்ச்சிபோன்ற எத்தனை எத்தனையோ அருள் நடனங்கள் சுவாமிகளின் அருட்செயல்கள். சுவாமிகளின் சீடர்திலகமாகிய குழந்தைவேற் சுவாமி கள் செய்தருளிய பாடல் ஒன்று இச்சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டோள்களும்வீசி எழில்சேர் நட்மாடிக்
கண்டோர் கலிநீக்குங் கடையிற் குருதாளை
வண்டோ லிடுஞ்சோலை வண்ணைப் பதிமேவித்
தொண்டாம் புணையேறித் தொடர்ந்தாட் படுவீரே.

[கண்டோர் - பயபக்தியுடன் சந்தித்தோர். கலி - நோய், பிணி, வறுமை, மனத்துயர் முதலியன].

குழந்தைவேற் சுவாமிகள் பாடிய துதிப் பாடல்களில் இதுவே முதற்பாடலுமாகும். கடையிற் சுவாமிகளைப்பற்றிச் சிந்திக்கையில் அவர்தம் நடனவியல்பை முற்கொண்டு, கலிநீக்கும் அதிசயத்தை வியந்து அவர் சீடர்கள் சிந்தித்தவாற்றை இச்செய்யுள் நன்கு புலப்படுத்துகின்றது. இச்செய்யுளிலுள்ள கண்டோர் குறித்த பெண்மணியாகவும் கலி அவர்க்குற்ற கைநோயாகவும் சிறப்பாகப் பொருள்காணும்போது இந்நிகழ்ச்சியை முன்னிட்டுத்தான் இச்செய்யுள் எழுந்ததுபோலும் என எண்ணி இன்புறத்தக்கதா யிருக்கின்றது.

இவ்வகையாகக் கடையிற் சுவாமிகள் பலதடவைகளில் நல்லூர்ப்பக்கத்தில் உலாவியதுண்டு. அக்காலத்தில் நல்லூர்க் கோயில் வீதியில் செல்லப்பர் என்ற ஒரு பக்குவசீலர் வாழ்ந்துவந்தார். அவர் அவ்விடஞ்சென் றுலாவிவரும் கடையிற் சுவாமிகளைப் பலமுறை உற்று நோக்கிவந்தார்; ஒருநாள் அவரையணுகி எலுமிச்சம்பழ மொன்றைக் கொடுக்கச் சுவாமிகள் அதனை ஏற்றருளினர்கள். பின் ஒருதடவை சுவாமிகளுக்குக் கொடுக்க என்று ஒருபோத்தல் சாராயமும் முழுரூபா ஒன்றுஞ் சம்பாதித்துச் சேமமாக வைத்துக்கொண்டு சுவாமிகள் வரவை எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் சுவாமிகள் திடீரெனத் தம்முன் தோன்றக் கண்டு சாராயப்போத்தலை எடுக்க ஓடிப்போனர். போத்தல் வெறுமையாயிருக்கக் கண்டு அதிசயித்தார். பின்னொருநாள், சுவாமிகளை அவ ரிருக்குமிடத்திற் சென்று காணவேண்டுமென விரும்பி, செல்லப்பர் பெரியகடைக்குச் சென்றார். செல்லப்பரைக் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் கடையிற் சுவாமிகள் பக்கத்திலே யிருந்த கடலைக் காரி ஒருத்தியிடம் முழுரூபா ஒன்று வாங்கி அதனை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து அவர் கையிற் கொடுத்தார். அவர் தலைமேல் ஒரு குடையையும் அசைத்துத் தம் கைகளைத் தட்டி 'ஓடெடா' என்று சொல்லிவிட்டார். அந்த க்ஷணமே பூமி பூலோகந் தெரியாத நிலை செல்லப்பருக் குண்டாயிற்று. அந் நிலை பதினைந்து நாட்கள் வரை நீடித்தது அதன்மேல் அவர் உலகம் போற்றும் உத்தம ஞானியாகத் திகழ்ந் தார். தற்போது கொழும்புத்துறையில் விளங்கும் யோகர் சுவாமிகளின் குருவே குறித்த செல்லப்பாச் சாமி ஆவர்.

சுவாமிகளை மெய்ம்மெய்யாக விசரனே என்று கருதிவிட்டவருள் ஒரு பகுதியினர் வண்ணார்பண்ணைப் பொலிசார். உண்மையில் பைத்தியத்தினாலே உழன்று திரிகிறார் என்ற எண்ணத்தினால் அவர்கள் ஒருநாள் சுவாமிகளைத் தம்பால் வரும்படி அழைத்தார்கள். அவர்களும் ஏதோ பயந்தவர்போலப் பொலிசாருடன் சென்றருளினார்கள். அடுத்தநாள் கோட்டுக்கு அவ ரைக் கொண்டுபோய் உத்தரவெடுத்துக் கொழும்பு பைத்திய ஆஸ்பத்திரிக் கனுப்பி வைத்தியஞ்செய்து அவருக்கு நல்வாழ்வளிக்க அவர்கள் எண்ணியிருக்க வேண்டும். அவர்கள் சுவாமிகளைக் கோட்டைப் பொலிஸ்நிலையத்தில் ஒரு அறையில் விட்டுக் கதவை நன்றாகத் தாளிட்டுப் பூட்டிச் சென்றுவிட்டனர். மறு படி வந்து பார்த்தபோது பூட்டுப் பூட்டாகவே யிருந் தது; திறந்து பார்த்தார்கள்; ஏமாற்றந்தான் அவர் களை வரவேற்றது. சுவாமிகள் அங்கில்லை.

பிறவியே பெரியதோர் சிறைச்சாலை. இதனை விட்டு விலகித் தப்பிக்கொள்ளமாட்டாது உயிரான உயிர்களெல்லாங் காலமான காலமெல்லாம் பிணி மூப் புச் சாக்காடுகளின் வாய்ப்பட்டு வருந்துகின்றன. இந்தப் பொல்லாத சிறையினின்று நீங்குதற்கு வழி கண்டுவிட்டவர் சுவாமிகள். பிறவா நெறி கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட பெரியார் அவர். இந்தப் பிறவிச் சிறையோ பிரமனுன பிரமனால் வகுக்கப்பட்டது. அப்பிரமனுக்கும் பிரமனுன சிவபெருமானின் திருவருள்வடிவாய் நின்று பிறர் பிறவிச்சிறையையும் விடுவிக்குந் தகைமையுள்ளவர் சுவாமிகள். பிரமனிட்ட சிறையிலிருந்து பிறரையும் விடுவிக்கும் பெருமகனுரைப் பொலிஸ் சிறையா தடுத்துவைததிருக்கப்போகின்றது. பொலிசோடு போய்ச் சிறைபுகுந்ததே சுவாமிகளின் அருள் நடனத்தில் ஒரு கட்டம்.

தீபாவளித் திருநாளிற் சுவாமிகளுக்குத் தத்தம் கையாற் பொன்னுடை போர்த்தி வணங்கவேண்டுமென்பது பெரியகடைப் புடவை வியாபாரிமார் தனித்தனி புரிந்துகொள்ளும் பிரார்த்தனையாகும். இது வாயிலாகத் தமக்கு வியாபாரம் பெருகிச் சிறக்கவேண்டுமென்றோ என்னவோ இவர்கள் இவ்வகையிற் பெருஞ் சிரத்தைபூண் டிருந்தார்கள். எத்தனையோபேர் எத்தனையோ பொன்னுடைகளோடு காத்திருப்பார்கள். ஆனால் சுவாமிகள் அவர்களுக் ககப்படுவது கஷ்டம். சிலதடவைகளில் எல்லாருமே ஏமாந்துவிடுவர். சில தடவைகளில் சிலருக்கு அவ்வாய்ப்புக் கிட்டும். அதிர்ஷ்டசாலியான ஒரு வியாபாரிக்கு ஒருதடவை அந்த வாய்ப்புக் கிடைததுவிட்டது. அவர் சந்தனம், குங்குமம், கஸ்தூரி, புனுகு, சவ்வாது, மலர்மாலை முதலிய மங்கலத் திரவியங்களுடன் சென்று சுவாமிகளை வணங்கி, விலையுயர்ந்த பட்டாடையொன்றைச் சால்வையிடுவதுபோல அவர் திருக்கழுத்திற் சாத்திக் கண்குளிரக் கண்டு மனங்குளிர வணங்கிநின்றார். சுவாமிகள் அதற்கு மகிழ்ந்தவர்போலக் காட்டி ஆனந்தநடன மிட்டுக்கொண்டு வீதிவழியே புறப்பட்டருளினார். பொன்னுடை சூட்டிய வியாபாரியாருக்கிருந்த அக்களிப்புச் சுவாமிகள்பின்னே செல்லும்படி அவரைச் செலுத்திக்கொண் டிருந்தது. வீதியிலே சுவாமிகள் வரக்கண்டு தீண்டாச்சாதியார் ஒருவர் அஞ்சி யொதுங்கி வீதியோரத்திலே நின்றுகொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தார். சுவாமிகள் அவரைத் தமக்குக் கிட்டவரும்படி சைகை காட்டினுர். அவர் கிட்டச் செல்லக் காலெழாது தயங்கித் தவிப்புற்ருர். அங்கிலேயில் சுவாமிகள் மெல்ல அவரைப்பற்றியிழுக்க அவர் உடல்பதறிக் குனிந்தார். குனியுமுன்னரே சுவாமிகள் தம் திருத்தோளிற் கிடந்த அப்பொன்னுடையைத் தூக்கி அவர் தோளிற்போட்டுவிட்டார். "இதற்கு நானுர்! என்ற எண்ணத்தில் ஏங்கிப்போய்விட்டார் அவர். பின்னே பார்த்துக்கொண்டிருந்த வியாபாரியாருக்குத் தூக்கி வாரிப்போட்டது போலாயிற்று. சுற்றி ஓடிப்போய்ச் சுவாமிகள்முன் கும்பிட்டு, 'இந்தப் பீதாம்பரத்தை இவனுக்கு ... ... ...' என்று இழுத்தார். அவர் குரல் தழுதழுத்தது. அவர் அந்த நிலேயில் நிற்கவே சுவாமிகள் 'முந்திக்கு முந்தி நேபாள இராசா' (முந்திய பிறப்புக்கு முந்திய பிறப்பிலே அவர் நேபாள நாட்டுக்கு இராசா) என்று சொல்லிக் கொண்டே ஓடி மறைந்தருளினுர். பொன்னுடை பெற்ற அன்பரோ வியாபாரியாரோ வெகு நேரமாக அவ்விடத்தைவிட்டு அசையவேயில்லே.

மகான்களின் அறிவில் ஏகதேசத்தில் முக்கால நிகழ்ச்சிகளும் ஒருங்கே பிரதிபலித்துக்கொண்டிருப்பன. காலத்தை வென்றவர்கள் அவர்கள். எந்தஉயிர் எந்தப் பிறப்பிலே என்னவாயிருந்தது என்பதை அவர்கள் அறிவார்கள். நம்மறிவு இதற்கு நேர்விரோதமானது. காலத்தின் மறைப்புத் திரைக்குள் மயங்கிக் கிடப்பவர் நாங்கள். காலத்தின் ஏகதேசத்தில் ஏகதேசத்தைத்தானும் உள்ளபடி காணும் அறிவு நமக்கில்லே. அந்த அற்ப காட்சியைத்தானும் ஆண்டவனருள் காட்டவே காண்கிருேம் என்ற விவேகமும் நமக்கில்லேயானுல் நம்மை நாம் என்ன செய்ய!

கடையிற் சுவாமிகளின் அருட்பெரு விளேயாடல்களும் அற்புதச் செயல்களும் இவ்வாருக, அவர்கள் புரிந்த சித்துக்களும் பல. அவற்றுள் ஒருசில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டில் இங்குமங்குமுள்ள அன்பர்கள்வாய்க் கேட்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் இரண் டொன்றை இங்கு குறிப்பிடுதல் தகும்.

இப்போ ஒரு தலைமுறைக்கு முன் வண்ணார்பண் ணையிற் பிரபல வர்த்தகராயிருந்தவர் செட்டியார் கந் தையா என்பவர். அவரின் தாயார் பொன்னம்மா என்பவர். வண்ணார்பண்ணையில் இன்றுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனங்களுட் பேர்போனது 'பொன் னம்மா மில்' என்பது. இம்மில்அவ்வம்மையார் பெய ராலேயே அமைந்துள்ளது. அவ்வம்மையார் ஆரம் பத்திற் செல்வ வாழ்வில் அமைந்தவரல்லர். மணமா கிச் சாமானிய வாழ்வு வாழ்ந்தவர். அவ்வம்மையார் அந்நாளில் வண்ணார்பண்ணைப் பகுதியிற் பெரிதுஞ் சஞ்சரித்து வந்த கடையிற் சுவாமிகளுக்கு அடிமைத் திறம் பூண்டொழுகி வந்தனர். சுவாமிகள் சில தட வைகளில் அவர் வீட்டுக்கு எழுந்தருளுவதுமுண்டு. அவ்வேளையில் அம்மையார் சுவாமிகளுக்கு அன்பாசா ரமாக அமுதூட்டி வருவார். சிலவேளைகளிற் சுவாமி கள் அடியார் பலருடன் அவர்வீட்டுக்கு எழுந்தருளு வார். அவ்வேளைகளிலும் அம்மையார் மனங்கோணுது தம்மால் ஆனமட்டும் முயன்று பக்தி சிரத்தையுடன் எல்லோருக்கும் அமுதூட்டி மகிழ்வர்.

ஒருதடவை அம்மையார் குடும்பத்திற் பெரும் பொருள்முடை யேற்பட்டிருந்தது. கணவரும் அவரு மாகக் கஷ்டஜீவனஞ் செய்துகொண்டிருந்தனர். கழுத் துத் தாலியைத் தவிர ஏனைய சொத்துக்களெல்லாம அடைவிற் போய்விட்டன. இந்நிலையில் அம்மையா ரைச் சோதிக்க வந்ததுபோல ஒருநாள் கடையிற் சுவாமிகள் அடியார் பலருடன் அவ்வீட்டுக்கு எழுந் தருளியிருந்தார். அடியார் கூட்டமும் வழமையிற் பார்க்க அதிகமாகவே யிருந்தது.

சுவாமிகளையும் அடியார்களையுங் கண்டவுடன் அம்மையார் பெருங் குதூகலத்துடன் வரவேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கினூர்கள். கணவனூரனுமதி பெற்றுக் கழுத்தி லிருந்த தாலியைக் கழற்றி அடகு வைப்பித்து அன்று அடியார்களுக்கு அமுதூட்டுதற்கு வேண்டிய ஏற் பாடுகளெல்லாஞ் செய்தார்கள். வழமையிலும் பார்க் கப் பன்மடங்கு சிறப்புடனே அன்றைய அமுதூட்டு வைபவம் நடந்தேறியது. என்றையிலும் பார்க்க அன்றுதான் அம்மையாருக்கு மிகுந்த திருப்தி ஏற்பட் டிருந்தது.

பொருள்முடையைப் பற்றிக் கவலை கொள்ளாது தம் தாலியையே அர்ப்பணித்து அடியார் பூசையை நிறைவேற்றுவதில் அன்று அம்மையார் கொண்ட சிரத்தை மேலானது; அபாரமானது. அச்சிரத்தை யன்பின் திறம் சுவாமிகளது திருவுள்ளத்திற்குப் பெரிதும் ஏற்புடைத்தாயிற்று.

திருவமுது முடித்து ஆறியிருக்கையில் சுவாமி கள் அம்மையாரை அழைத்தார்கள். ஒருதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு 'ஒரு இரும்புத் துண்டு கொண்டுவாடி' என்ரூர். பணி மறுக்காத அம்மையார் இரும்புத் துண்டுக்காக வளவெங்குந் தேடினூர், எங்கேயோ ஒரு மூலையிற் கறள்பிடித்த ஓர் இரும்புத் துண்டு கிடைத்தது. அது வெகுகாலத்திற்கு முன் கழித்தெறியப்பட்ட ஒரு நாகபடம். அம்மையார் அன் பாதரவாக அதை எடுத்துக்கொண்டு வந்து சுவாமி கள் கையிற் கொடுத்து நின்ரூர். 'போடி, போய் உன் வேலையைப் பார்' என்ற ஆணை பிறந்தது. அம் மையார் போய்விட்டார். சிறிதுநேரஞ் செல்லச் சுவா மிகள் அம்மையாரை அழைத்தார்கள். 'இந்தாடி 'இதைக் கொண்டுபோய் உன் பெட்டகத்துட் பூட்டி வை' என்று சொல்லி அதே நாகபட இரும்பை அவர் கையிற் கொடுத்தார்கள். பின்பு சுவாமிகள் அவ் விடம் விட்டகன்றுவிட்டார்கள். அம்மையார் சுவாமி கள் பணித்தவாறே செய்துமுடித்தார். நாலாவது நாள் ஏதோ தேவைக்காகப் பெட்டகத்தைத் திறந்த போது அங்கொரு அதிசயம் அவரை வரவேற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பழைய இரும்புத்துண்டு பத்தரைமாற்றுத் தங்கமாகக் காட்சியளித்தது. எத்தனை வகையிற் பரீட்சித்த போதும் அது சுத்தத் தங்கமாகவே யிருந்தது. அம்மையாருங் கணவரும் சுவாமிகளின் திருவருளை வியந்து மகிழ்ந்தனர். சுவாமிகள் அருட்செல்வத் திற்றிளைத்த அம்மையார் குடும்பம் அன்றுதொட்டுப் பொருட் செல்வத்திலுந் திளைப்பதாயிற்று. அவர் சந்ததி இன்றும் பொருட்செல்வத்தில் மேலோங்கி நல் வாழ்வெய்திச் சிறத்தல் கண்கூடு.

இத்தொடர்பில் யாம் ஒருண்மையைக் கருத்திற் கொள்வதவசியம். பெரியோர்க்குத் தொண்டு பூண்டொழுகுதல் செல்வம் பெறச் சிறந்த சாதனம் என்றெண்ணுதல் தவறு. அடிமைத் தொண்டிற்குக் கைம்மாறு செல்வப்பேறுகாது. அது திருவருட் குறிப்புமன்றும். எப்பற்றினும் முனைப்பின்றிச் சேவை இன்பம் வேண்டிச் செய்யும் சேவையே உண்மையில் தொண்டெனற்பாலது. பன்னாளாகப் பண்பட்டுவரும் அத்தகைய தொண்டானது தன்னிலே வலுவுற்றுக் காலகதியில் தன் உண்மை இயல்பைத் தோற்றுவிக்கும். அந்நிலையில் அது எத்தகைய தடையேற்படினும் அவற்றையெல்லாம் அடித்தடக்கித் தானே முனைப்புற்றெழுந்து நிற்கும். அந்நிலையிலேயே அடிமைத்தொண்டு விசேடம் பெறுகின்றது. எவ்வெவர்க்கு எவ்வெக் கணத்தில் அப்படியொரு நிலை ஏற்படுகின்றதோ அவ்வக் கணத்தில் அணுப்பிசகாது அவ்வவரை ரக்ஷிக்கக் காத்துநிற்கும் ஆண்டவனருள் அப்படியான ஒருநிலையில் தானே வெளிப்பட்டு நின்றருளும். அத்தகையதோர் அருள் வெளிப்பாட்டின் அறிகுறியே இத்தகைய பேறென்றறிதல் வேண்டும்.

இரும்பு பொன்னாக்கிக் கொடுக்கப்பட்டது பொன்னம்மையார் தொண்டுக்குக் கைம்மாறன்று. கைப்பொருளெல்லாமிழந்து கட்டிய தாலியுமிழந்த நிலையிலும் அடியார்க்கு அமுதூட்டுந் தொண்டிலே ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் கண்டு மலர்ந்து நிற்கும் அவர்தம் அடிமை விசேடத்தில் தோன்றிய அருள் வெளிப்பாடே அது.

அன்பர் செய்திகளும் ஆண்டவன் அருளிப்பாடுகளும் எங்கும் என்றும் இவ்வாறே நடைபெற்று வந்திருப்பதைக் காண்கிறோம். அப்பூதியடிகள் திருநாவுக்கரசு சுவாமிகளிடத்து அடிமைத்தொண்டு பூண்டொழுகியவர். ஒருநாள் திருநாவுக்கரசு சுவாமிகள் அப்பூதியடிகள்பால் எழுந்தருளியிருந்தார்கள். சுவாமிகளுக்கு அமுதூட்டுதலுக்கான விசேட ஏற்பாடுகள் அங்கு நடைபெற்றன. வாழையிலை கொண்டு வருவதற்காக அப்பூதியடிகள் தம் மூத்த மகனைத் தோட்டத்துக்கனுப்பியிருந்தார். வாழையிலை வெட்டும் போது அவனைச் சர்ப்பமொன்று தீண்டிவிட்டது. விஷவேகத்துடன் வெகுவேகமாக ஓடிவந்த அச்சிறுவன் வாழையிலையைத் தாய்கையிற்கொடுத்துத் தனக்கு விஷந்தீண்டிய செய்தியையுங் கூறி விழுந்திறக்கின்றான். மிக அசாதாரணமானதொரு சந்தர்ப்பம். அப்பூதியார் மகனுடைய காரியம் பார்ப்பதா? அப்பர் சுவாமிகளுக்கு அமுதூட்டுவதா?

அப்பூதியடிகளும் அவர்தொண்டில் ஆதரவுபட்ட அவர் மனைவியாருமாக ஒரு கணமுந் தாமதியாது இறந்த மகனை மூடிமறைத்தனர். சுவாமிகளை அமுதுண்ண அழைத்தார்கள். செத்த மகனையும் மறைத்துப் பிள்ளைப் பாசத்தையும் அடித்தொதுக்கி அடிமைத் தொண்டிலேயே முனைந்து நிற்கிறது அவர்கள் சிரத்தையன்பு. அருள் வெளிப்பாட்டிற்கு இது உகந்ததோர் தருணமாகின்றது.

அமுது படைக்கப்பட்டு உண்ண அமருந் தருணம், மகன் எங்கே என்று அப்பர் சுவாமிகள் வினவுகின்றார்கள். 'அவன் இப்போதைக்குதவான்' என்று அப்பூதியார் பதிலளிக்கின்றார். மகன் இறந்ததற்காகவன்று, தம் அடிமைத்தொண்டு தடைபடுகிறதற்காகவே இரங்குகின்றார் அவர். இந்நிலையில் சுவாமிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை முகிழ்த்தெழுகின்றது. இறந்த மகன் விரைவில் உயிர்த்தெழுகின்றான். பாவம்! இளம்பையன் இறந்தொழிந்தானே என்பதற்காகவுமன்று; அன்பராகிய அப்பூதியார் தம் அருமை மகனை இழந்துவிட்டாரே என்பதற்காகவுமன்று; பிள்ளை இறந்ததற்காகத் துடிக்கவேண்டிய பிள்ளைப் பாசத்தையுங் கீழ்ப்படுத்தி அடியார்க்கு அமுதூட்ட முனைப்புற்றெழுந்து நிற்கும் அவர்தம் அடிமை விசேடங் கண்டே அது நிகழ்வதாயிற்று. சுவாமிகள் தேவாரம்பாடி இறந்த பிள்ளையை உயிர்ப்பிக்கின்றனர். இங்ஙனமே பிறவும்.

வல்வெட்டித்துறை வாசியான தண்டேல் ஒருவர் சுவாமிகளின் சீடர்களில் ஒருவராயிருந்தார். ஒருநாள் சுவாமிகளை வெள்ளெனவே கண்டு கும்பிடும் விருப்புடன் அதிகாலையிலே புறப்பட்டு வண்ணார்பண்ணைக்கு வந்து சேர்ந்தார். தற்செயலாக அன்று சுவாமிகள் வண்ணார்பண்ணையிலில்லை. மண்டைதீவிலிருக்கிறார் என்பதறிந்து அங்கு சென்று காணப் புறப்பட்டார். வழிச்சென்றுகொண்டிருக்கையில் வெயிலேறிவிட்டது. நீண்டதொரு மணல் வெளியைக் தாண்டவேண்டியிருந்தது. மணல் வெம்மையினாற் பாதங்கள் வெம்பிப் போயின. வியர்த்துக் களைத்துத் தலை சுழல்வதாயிற்று. வெயிலை நோவதுமின்றி மணலை நோவதுமின்றித் தம்மை மறந்த நிலையில் 'குருநாதா' என்றார் அவர்.

இவரிவ்வாறாகச் சுவாமிகள் தாம் வழமையாகத் தங்கும் நன்னியர் வீட்டிலேயே தங்கியிருந்தார். அடியார் பலர் சூழ்ந்திருந்தனர். சுவாமிகள் பலகைக் கட்டிலொன்றிற் சாய்ந்து படுத்திருந்தார்கள்; திடீரெனத் துடித்தெழுந்தார்கள். ஆகா! அகோரம்! அகோரம்!! என்று உரக்கச் சப்தமிட்டுத் துள்ளித் துள்ளியசைந்தார்கள். தலைமாட்டிற் கிடந்த தம் குடையை எடுத்துத் தாமே விரித்து அங்கிருந்த ஒருவரிடங் கொடுத்தார்கள். 'இதை என் கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் கவித்துப் பிடித்துக்கொள்' என்று பணித்து விட்டு முன்போற் சாய்ந்து படுத்திருந்தார்கள்.

வெகுநேரமாயிற்று. யாரோ வீட்டு வாசலுக்குக் கிட்ட வந்துகொண் டிருக்கும் அசுகை தோன்றிற்று, 'சரி, இனிக் குடையைச் சுருக்கலாம்' என்றார் சுவாமிகள்.

திடீரென ஒருவர் உட்புகுந்தார். சுவாமிகளின் பாதங்களில் விழுந்து விழுந்து வணங்கியெழுந்தார். வாயாரப் போற்றி மகிழ்ந்திருந்தார். அவர் அந்தத் தண்டேலேதான். குருநாதா என்றதன்மேல் அவருக்கு வெப்பமுமிருந்ததில்லை; களைப்புமிருந்ததில்லை. வெய்யில் வெய்யிலாகவே யிருந்தது. அங்கே குடை கவிக்க இங்கே வெப்பந் தணிந்துபோயிற்று.

தண்டேல் அவர்கள் ஆறியமர்ந்து அடியார்களுடன் உரையாடிக்கொண் டிருக்கும்போது தாம் வழி வந்த செய்தியைக் கூறினார்கள். அன்று குடை கவிப்பித்த அருளின் அர்த்தம் இன்னதென்பதை அப்போது தான் அங்குள்ளோர் புரிந்துகொள்ளக்கூடியதா யிருந்தது. இச்செய்திகளெல்லாம் அடியார் வாயிலா யறிய வந்தபோது தண்டேல் அவர்கள் ஆனந்த பரவசமுற்றார்கள்.

உண்மையான குருவும் உண்மையான சீஷனும் உருவினால் வேறேயாயினும் கலப்பினால் ஒருவரே யாவர். இருவருந் தம்முள் மாறிப்புகுந்து ஒருவருணர்விலே மற்றவர் கலந்து கொள்கின்றார்கள். ஆயினும் குரு விகாரமற்றவர். அவருக்கு இன்பதுன்ப அவஸ்தைகளில்லை. சீஷனோ விகாரமின்மையை அடையும் நிலையில் உள்ளவனே அன்றி முற்றிலும் விகாரமற்றவனாதல் அமையாது. அவன் மலம் முற்றாகக் கெடுக்கப்பட்டபோதிலும் அவன் உடலுள்ள வரையிலும் அதன் சார்பான பிராரத்தம் இருந்தேயாகவேண்டும். அதன் விளைவாக அவன்பால் இன்ப துன்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவஸ்தைகள் தோன்றும். அவ்வேளைகளிற் குருவைத் தியானித்தல் மூலமாக அவ்வவஸ்தைகளிலிருந்து விலகவேண்டியது சீஷன் கடமையாகும்.

குரு சீஷர்கள் கலப்பினால் ஒருவரேயாயினும் சீஷனுடைய இன்பதுன்பங்களினாற் குரு பாதிக்கப்படுபவரல்லர். அங்ஙனமாயின் அவர் அவனுடைய இன்ப அவஸ்தைகளை நீக்கமுடியாது போய்விடும். ஆயினுஞ் சீஷனுடைய இன்ப துன்பங்களினாற் குரு தானும் பாதிக்கப்படுபவராகக் காட்டிக்கொள்ளாதிருக்கக் கூடியவருமல்லர். சீஷர்களின் நன்மைகருதி அவனுக் கருளுதல் வேண்டிக் குருவிடத்தே நிகழும் கருணையின் துடிப்பு இதுவாகும்.

சீஷன் குருவிடத்தே பெறற்பாலனவாகிய அருளிச் செயல்கள் எல்லாவற்றுள்ளும் தான் துயரப்படும் வேளையில் குரு அதற்காகத் துடிதுடித்துக் கருணை புரியும் அருளிப்பாட்டிலேயே பெரிதும் ஆராமையுறுபவனாதல் வேண்டும்.

'காவாய் கனகக் குன்றே போற்றி' என்று வேண்டிக்கொண்ட மாணிக்கவாசகசுவாமிகள் 'அ—ஆ' என்றெனக் கருளாய் போன்றி என்று அடுதது வேண்டிக் கொள்வதும் பின்னொருகால் .... ... .... 'என்முகம் நோக்கி 'ஆ—ஆ' என்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே' என்றிங்ஙனம் தான் அவ்வருளிச்செயல்களைப் பெறுதற்கே ஆசைப்படுவதாகக் கூறுவதும் திருவாசகந்தரும் உண்மைகளாகும்.

இறைவனுக்கு இன்பமுமில்லை துன்பமுமில்லை. ஆயினுந் தன் அன்பர்க்காக இன்பமுந் துன்பமும் உறுபவனாக இறைவன் தன்னைக் காட்டியருளுகின்றான். சிவபுராணத்தில் இறைவனின் கல்யாண குணங்களைப் பலபடப் போற்றிப்புகழும் மாணிக்கவாசக சுவாமிகள் 'இன்பமுந் துன்பமும் இல்லானே' என்பதன்மேல் 'உள்ளானே' என்றுங் கூறியருளுகின்றார். ஞானகுருவும் ஆண்டவனேயாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் அருட்பெரு விளையாடல்கள் புரிந்து அன்பர்களை ஆட்கொண்டிருந்த கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியிலும் மண்டைதீவிலும் மாறிமாறி உலாவிவரலாயினர். மண்டைதீவு சம்பந்தப்பட்ட வரையில் சுவாமிகளின் செய்தி பிறிதோரத்தியாயமாக எழுதப்படுகிறது. தம் பிற்காலத்திற் சில ஆண்டுகளாகச் சுவாமிகள் மண்டைதீவுப்பக்கம் திரும்பவில்லை; வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நீராவியடி என்னும் இடத்திலே தங்கிவிட்டார்கள். இவ்விடம் நீராவியடிப் பிள்ளையார் கோயிலின் தென்மேற்குத் திசையாகக் கோயிலெல்லையில் இருந்து சுமார் ஐம்பது யாருக்கப்பாலுள்ளது. கோவிலின் மேற்கு வீதிவழியாகத் தெற்கே செல்லும் பாதையின் ஓரத்திலே உள்ள அந்த இடத்திற் சுவாமிகள் சமாதி கூடினர்கள். அந்தியகாலத்திற் சுவாமிகளுடனிருந்து சமாதி வைபவத்தை நிறைவேற்றி வைத்த அன்பர்களின் அருமுயற்சியால் சமாதிக் கோயிலொன்றெழுப்பப்பட்டுள்ளது. கோயில் மிகவும் அமைவாக அமைநதுள்ளது. எனினும், இப்போது கோயில் பார்க்கக்கூடிய நிலையிலில்லை. கோயிற்சுவர்கள் பூச்சு மெழுக்கற்று உதிரும் நிலையிலுள்ளன. அர்த்தமண்டபம் அழுக்கேறிய நிலையிற் காட்சி தருகிறது. வசந்த மண்டபம் கூரையற்றுப் பரவெளியாகக் காட்சியளிக்கின்றது. நந்தி பலிபீடம் மட்டும் புதிதாகச் சாந்தகப்பை பட்ட அடையாளத்துடனிருக்கின்றன. வாயிலிற் கற்றிருப்பணி நிகழ்ந்து குறையாய்க் கிடக்கின்றது. நித்திய பூசைக்கு வேண்டப்படும் பொருட்களின் தட்டுப்பாட்டைப் பற்றிப் பூசகர் சொல்லும் செய்தியைக் கேட்பதில் தோன்றும் துன்பம் தனியானது. வெறிச்சென்ற நிலையிற் காட்சியளிக்கும் இச்சமாதிக்கோயிலின் தோற்றம் ஞானமூலத்தைப் பேணுவதில் நம்மவர் கொண்டுள்ள அலட்சிய மனப்பான்மையை அப்படியே பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. இரண்டு தலைமுறைக்குள்ளாக இச்சமாதிக் கோயில் விஷயத்தில் இவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிரத்தை காட்டும் நம் நாட்டிற் கலாசாரம் வளர்ச்சியடைகிறது என்று, நாக்கூசாது எப்படிச் சொல்ல முடியும்? சிவன்கோயிலைக் காண்கிறபோது சிவபெருமானைக்கண்டாலன்ன திருப்தி யேற்படவேண்டும். கடையிற் சுவாமிகளது சமாதியைக் காணும்போது அவரையே கண்டாலன்ன திருப்தி ஏற்படக்கூடிய அளவுக்குச் சமாதி விளங்கினாலல்லவோ நம் கலாசாரம் விளங்குகிறதென்று கூறலாம். யாழ்ப்பாணம் உள்ள வரையும் சந்ததிசந்ததியாகக் கடையிற் சுவாமிகள் வழிபாடு விளக்கமுற்று வரவேண்டியதொன்று. இச்சமாதிக்கோயில் இங்ஙனம் மங்கிக்கொண்டு போகையில் அது எங்கே கைகூடப்போகின்றது? சைவ உலகம் இதனைத் தீரஉணர்ந்து தீவிரமாகச் செயலாற்றி உய்வதாக.

**குறிப்பு:**—குழந்தைவேற் சுவாமிகள் ஆட்கொள்ளப்பெற்ற செய்தி கடையிற்சுவாமிகள் வரலாற்றில முக்கியமான அம்சமாகும் அதன் விபரம் பின்வருங் குழந்தைவேற்சுவாமிகள் வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாகும்.

சிவ! சிவ! சிவ!

---

## மண்டைதீவிற் கடையிற் சுவாமிகள்.

கடையிற் சுவாமிகளைப்பற்றி யறிய ஆவல் கொள்வோர்க்கு மிகவும் உகப்பான இடம் மண்டைதீவு. சுவாமிகளைப் பற்றிய அன்பும் அபிமானமும் இப்பகுதியில் இன்றும் மங்காது சுடர்விட்டுக்கொண்டிருக்கின்றன. சுவாமிகள் தங்கியிருந்து உண்டுறங்கிப்போன பழைய இல்லமொன்று அங்குள்ளது. சுவாமிகள் பேணி வைத்திருந்த பொருள்களுட் சில இன்றும் அங்குள்ளன. சுவாமிகளின் வரலாற்றையும் அவர்தம் வியத்தகு திருவிளையாடல்களையும் உள்ளமுருகி உணர்ச்சியோடு எடுத்துக் கூறும் அன்பர்கள் பலரை இன்றும் அங்கே சந்திக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பண்ணைக்கடல் கடந்து அக்கரைக்குச் செல்வதற்கு இப்போது தெருப்பாலமிடப்பட்டிருக்கின்றது. அக்கரையடைந்ததும் அத்தெரு இரு கிளைகளாகப் பிரிந்து செல்கின்றது. அவ்விரண்டில் கிழக்குப் பக்கமாகச் செல்லுந்தெரு பரந்த ஒரு தரவை வெளியினூடாகச் சென்றுகொண்டிருக்கின்றது. அத்தெருவில் ஏறக்குறைய இரண்டுமைல் தூரஞ் சென்றால் குடிமனைப் பிரதேசம் ஒன்று எதிர்ப்படுகின்றது. செழித்து வளர்ந்துள்ள குளிர்ந்த பனந்தோப்புகளோடு விளங்கும் இப்பகுதி அவ்விடத்துச் சைவப் பெருமையை எடுத்துரைக்குந் தகுந்த சான்றுகளோடு விளங்குகின்றது. அச்சூழலில் திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் கோயிலொன்றும், திருப்புலம் முத்துக்குமாரசுவாமி கோயிலொன்றும் இடம்பெற்றுள்ளன. இவை யமைந்திருக்கும் அவ்விடத்தின் குறிச்சிப்பெயர் 'திருப்புலம்' என்பது. அக்குறிச்சியில் செம்மனத்தியம்புலச்சந்தி யென்பது சிறிய ஒரு முச்சந்தியாகும். அம்முச்சந்தியிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லுந் தெருவழியே சென்றால் ஒரு பனந்தோப்பை அடையலாம். அத்தோப்பின் ஓர் ஓரத்தில் ஒரு வளவுண்டு. அவ்வளவில் மூன்று கொட்டில்கள் உள்ளன. முதலிலே தென்படுங் கொட்டில் கிழக்கு நோக்கி யுள்ளது. அக்கொட்டில் திறந்த வெளியாக்வேயுள்ளது. கொட்டிலின் உட்பாகத்தில் அரைவாசிப்பகுதி ஒரு அறைபோல் வகுக்கப்பட்டு இருமுழ உயரமுள்ள மண்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இவ்வறைப் பகுதிதான் கடையிற் சுவாமிகளை ஞாபகப் படுத்தி வைக்கின்றது.

அவ்வறையினுள் வடக்குத் தெற்காகப் பழைய பலகைக் கட்டிலொன்றுள்ளது. அறுபது வருடங்கட்கு மேலாக அக்கட்டில் அவ்விடத்திலேயே இருந்து வருவதாக அறியப்பட்டுவருகின்றது. கட்டில் சிதைவடைந்திருப்பதற்கான அறிகுறிகள் எதுவுந் தோன்றவில்லை. கட்டிலிருக்கும் நிலப்பகுதியிற் கறையான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றுக்கள் கிளம்பிக்கொண் டிருக்கின்றன. எப்போதாவது அக்கட்டிலிற் கறையான் தீண்டியதாகத் தாம் அறிந்ததில்லையென அவ்வயல் முழுவதுமெடுத்துக்கூறி ஆச்சரியமடைகின்றது. கட்டிலின் நடுப்பாகத்திற் சுவாமிகளின் பழைய நிழற்படமொன்று வைக்கப்பட்டுள்ளது. அப்படத்தின் முன்னே விபூதித் தட்டொன்றும், கற்பூரங் கொழுத்துதற்கான சப்பைக் கல்லொன்றுங் காணப்படுகின்றன. படத்தின் வலது புறத்திற் பழம் பாய் ஒன்றும் பழைய தலையணையொன்றும் இருக்கின்றன. படத்தின் பின்புறமாக அதற்கு அணையிட்டுக்கொண்டு நீளமான இரு தலையணை மூடைகள் காட்சியளிக்கின்றன. கட்டிலுக்கு மேலே கைம்மரமொன்றில் கருந்துணிப் பொதி ஒன்று தொங்குகின்றது. கடையிற் சுவாமிகளைப் பற்றிக் குழந்தைவேற் சுவாமிகள் பாடிய தியானப் பாடலொன்றில்,

"பெரிய கடைநாதன் பித்தன் திருக்கோலம்
கரிய வர்ணச்சீலை கருந்தோலனசால்வை"

என்ற பகுதி காணப்படுகின்றது. அப்பகுதியின் உண்மைப் பொருளை இன்றுங் கண்கூடாகக் காட்டிக் கொண்டிருக்கின்றது அத்துணிப்பொதி. அது உண்மையிற் கருநிறப்புடவை யன்று; வெண்ணிறப் புடவையே அவ்வளவுக்குக் கருமையேறிப்போ யிருக்கின்றது. தீண்டிய கையுங் கருமையடையக்கூடிய அளவுக்கு அது கரிதாய்க் காட்சிதருகின்றது. அத்துணிப் பொதியை அவிழ்த்துப் பார்க்கும்போது சிறியனவும் பெரியனவுமாகிய கருந்துணித் துண்டுகள் பல அதனுட் காணப்படுகின்றன. கையிலெடுத்தால் இற்றுவிடக்கூடிய அளவுக்கு அவை நைந்துபோயிருக்கின்றன. அவற்றொடுகூட அப்பொதியினுள் ளிருக்குஞ் சில பொருட்கள் இன்னும் வியப்பானவை.

பழைய கொன்றைக்காய்கள் சில, பன்னீர்க்காய்கள் சில, காய்ந்து வற்றிய எலுமிச்சம்பழமொன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நெருப்புப்பெட்டித் துண்டுகள், குடை முகிழ் கள், கந்தை முடிச்சுக்கள், பழைய வாழைமடல் துண் டொன்று, இத்தனையும் அப்பொதியினுட் காணப்படு கின்றன. அவ்வாழை மடலில் மிதக்கும் நார்கள் பட்டுநூல்கள்போல் மினுமினுக்கின்றன. இன்னும் எத்தனை எத்தனையோ பொருள்கள் அப்பொதியிலிருந் தன எனவும் காலாகாலங்களில் அவ்விடத்தைத் தரி சிக்கச் சென்றவர்கள் அவற்றைக் கையாடிச் சென்று விட்டனரெனவும் அங்குள்ளார் புகார் கூறுகின்ற னர். அக்கொட்டிலிருக்குமிடமே சுவாமிகள் உண் டுறங்கித் தங்கிவந்த இடமென்றும், அக்கட்டில் சுவா மிகள் உபயோகித்த கட்டிலேயென்றும். அங்குள்ள மற்றும் பொருள்களுமெல்லாஞ் சுவாமிகள் சொந்த மாக வைத்திருந்த பொருள்களே யென்றும் அங்குள் ளார் தெரிவிக்கின்றனர்.

கட்டிலிலுள்ள நீளத் தலையணை மூடைகள் ஒரு வரலாற்றேடு தொடர்புடையவை என்று அங்குள் ளார் கூறக்கேட்கலாம். சுவாமிகள் வாழ்ந்த காலத் தில் கொழும்புத்துறை வாசியொருவர் ஆசாரசீலராய் ஆத்மவிசாரமுற்றவராய் வாழ்ந்து வந்தார். எடுத்த பிறப்பிலேயே ஒரு ஞானகுருவை அடையும் வாய்ப்புக் கிடைத்துவிடவேண்டும் என்ற தவிப்பு அவருக்கு ஏற் பட்டிருந்தது அவர் நீளத் தலையணைகள் இரண்டைப் புதியனவாகத் தயாரித்துத் தமக்கு எவர் ஞானகுரு வாய் வந்து வாய்ப்பாரோ அவருக்கே அவையுரியன என்று நேர்த்திக்கடன் செய்து தம் வீட்டு மஞ்சத்தில் அவற்றைப் பேணி வைத்துக்கொண்டிருந்தார்.

திடீரென ஒருநாள் கடையிற்சுவாமிகள் அவரு டைய வீட்டு முற்றத்திலே தோன்றி வாயிலுக்குக் கிட்ட நின்றுகொண்டு, 'கொண்டுவாடா அந்தத் தலை யணை யிரண்டையும்' என்று உரக்கச் சத்தமிட்டார். உள்ளே யாதோ அலுவலா யிருந்துகொண் டிருந்த அவ்வன்பர் அதுகேட்டு விரைவாக வெளியே வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொண்டுவாடா தலையணையிரண்டையும்' என்று மீண்டுமொருமுறை கூறிவிட்டுச் சுவாமிகள் விறுக்கெனத் திரும்பி விசையாக நடந்துகொண்டிருந்தார். தம்மை மறந்த நிலையில் தலையணைகளை எடுத்தேந்திக் கொண்டு அவ்வன்பர் பின்தொடரலாயினர். இவ்வகையில், ஆன்மதாகமுற்றிருந்த அன்பரொருவரைச் சுவாமிகளுக்கு ஆட்படுத்தி வைத்த பெருமை வாய்ந்தவை அத்தலையணையிரண்டும் என அறியவருகின்றது.

கடையிற் சுவாமிகளின் ஞாபகமாக அமைந்துள்ள குறித்த கொட்டிலிருக்கும் அவ்விடம் முன்பு பெரிய கூடம் வீடாய் இருந்ததென்றும் அதில் ஓரறையிற் சுவாமிகள் தங்கியிருந்து வந்தாரென்றும் அவ்வீட்டுச் சொந்தக்காரராயிருந்த குடும்பமே சிதைவுற்று விட்டமையால் நாளடைவில் அம்மனையுஞ் சிதைவுற அயலவர் அதுகண்டு அவ்விடத்திற் சுவாமிகள் தங்கியிருந்த அறைப்பகுதியை உள்ளடக்கி அக்கொட்டிலை நிர்மாணித்துள்ளனரென்றும் அறியவருகின்றது.

குறித்த வீட்டுச் சொந்தக்காரராயிருந்தவர் திரு. நன்னியர் என்பவர். விநாயகர் என்னும் பெயராலும் அவர் அழைக்கப்பட்டார். அவரும ஒரு சீவன்முக்தராகவே யிருந்தார். மண்டைதீவு ஆஸ்பத்திரிக்கப்பால் அவருடைய சமாதியுண்டு. நன்னிச்சாமி சமாதி என்று அதன்பெயர் வழங்குகின்றது. நன்னிச்சாமி கடையிற் சுவாமிகளோடு இணைபிரியா நண்பராக வாழ்ந்து வந்துள்ளவர். கடையிற் சுவாமிகள் இந்தியாவிலிருந்து வந்து சேர்ந்த செய்தியும் நன்னிச் சாமியாரோடு தொடர்புபட்ட செய்தியாக மண்டைதீவிற் கேட்கக்கூடியதாயிருக்கின்றது.

மேற்குறித்த நன்னியர் என்பார் சைவாசார சிலராய் ஒழுகிவந்த ஒருவர். அடிக்கடி இந்திய யாத்திரை செய்யும் வழக்கமுடையவர் அவர். ஒரு தடவை அவர் சிதம்பரத்துக்குச் சென்றிருந்தபோது பெரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அப்பெரியவர் இவரை உற்று நோக்கிவிட்டுத் தமது கந்தைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த பொட்டலத்தையவிழ்த்து அதி லிருந்த தயிர்ச்சோற்றில் மூன்றே மூன்றவிழ் எடுத்து இவரிடங் கொடுத்தார். இவற்றைப் பெற்ற நன்னி யர் அவர்பால் ஈடுபாடுற்றுச் சிலநாளாக அவரைத் தொடர்ந்து திரிவாராயினர். இந்நிலையை நோக்கி அப்பெரியவர், 'நீ உன்னூருக்குப் போய்ச்சேர். என் னுடைய ஆயிரத்தெட்டுக் கலைகளில் ஒன்று அங்கே வரும்' என்று கூறிவிட்டார்.

ஒருவாறு அவரைப் பிரிந்துசென்ற நன்னியர் தம் மூருக்குச் செல்வதற்காகக் கப்பலேறிவிட்டார். கப் பல் காங்கேசன்துறையை யடைந்தது. கப்பலைவிட் டிறங்கி வந்த நன்னியர், சிதம்பரத்தில் தமக்கு மூன் றவிழ் கொடுத்த பெரியவரை எதிரே கண்டார். 'இவர் அவர்தானோ' என்ற ஐயுறவு நன்னியருக்கு அப் பொழுது ஏற்படாதிருந்திருக்க முடியாது. அதனை யறிந்தோ என்னவோ அப்பெரியவர் தம் கந்தைத் தலைப்பிலிருந்த பொட்டலத்தை மெல்ல அவிழ்த்து மூன்று தயிர்ச்சோற்றவிழை யெடுத்து நன்னியர் கையிற் கொடுததார். கொடுத்தலுமே, நன்னியர் உள்ளத்திற் றோன்றிய ஐயுறவு நடுங்கி யொடுங்கி விடைபெற்றுக்கொண்டது. நன்னியரும் நடுங்கிக் கொண்டு அவர்முன் கும்பிட்டு நின்றார். பெரியவரும் 'போவோம் வா' என்று சொல்லிக்கொண்டு முன்னே நடந்தார். இருவரும் காலந்தாழாது வீடுவந்து சேர்ந் தனர்; மண்டைதீவிலிருந்த நன்னியர் வீடென்ற அவ்வீட்டிற்கே வந்து சேர்ந்தனர். சிலநாளாக நன் னியர் உள்ளத்திற் குடிபுகுந்திருந்த அப்பெரியவர் இப்பொழுது அவர் வீட்டிலுங் குடிபுகுந்துகொண்டார். வீட்டிலே பெரியவர்க்கென ஒரு அறை; உள்ளத்திலே முழு இடமும்; அவ்வளவே வேறுபாடு. அப்பெரிய வரே கடையிற் சுவாமிகள் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னியர்க்குங் கடையிற் சுவாமிகளுக்கு மிடை யில் உண்டான நல்லுறவு நாளுக்குநாள் முறுகி வளர லாயிற்று. பல தன்மைகளில் இருவ்ரும் ஒருவராயினர். நன்னியரைக் கண்டவிடத்துக் கடையிற் சுவாமிக ளையே கண்டதாகவும், கடையிற்சுவாமிகளைக் கண்ட விடத்து நன்னியரையே கண்டதாகவும் மக்கள் உண ரக்கூடிய அளவுக்கு ஒருவரிலொருவர் கலந்துகொண் டார்கள் இருவரும். இருவருக்கு மிடையில் விளங்கிய நட்புறவின் பிரபாவம் அச்சுற்றுடலிற் பக்குவமுடை யோர் சிலரை அவர்பால் இழுக்கத் தொடங்கிற்று. இவ்வகையில் இழுக்கப்பட்டோருள் முக்கியமானவர் சின்னச்சாமி என்பவர். இவரே கந்தர்மடத்திற சமாதி கூடிஞர் என்று சொல்லப்படுஞ் சின்னச்சாமி ஆவர்.

கடையிற்சாமி, நன்னியர்சாமி, சின்னச்சாமி என் னுமிவர்கள் உருவத்தால் மூவராயினும் உள்ளத்தால் ஒருவராகவே வாழ்ந்த காட்சி மண்டைதீவு மக்களுக் குப் பெருவிருந்தாயிற்று. மூவரும் பெரும்பாலும் ஒருங்கே தங்கி ஒருங்கே சமைத்து ஒருங்கே உண் டுறங்கி ஒருங்கே கும்பிட்டு மகிழ்ந்து வந்தனர். கடை யிற்சுவாமிகள் யாழ்ப்பாணஞ் செல்லும் வேளைகள் தவிர மறுவேளைகளிலெல்லாம் மூவரும் ஓரிடத்திருப் பக் காணப்பட்டனர்.

நன்னியர் சாமிக்கு மனைவி மக்களு மிருந்தனர். அவர்களும் அவ்வீட்டிலேயே வசித்து வந்தனர். அவர்களுந் தெய்வநெறிச் சார்புள்ளவர்கள். நன்னி யர்சாமி யாத்திரை செய்யாத வேளைகளிலும் அவரு டைய மனைவி மக்கள் யாத்திரை செய்வதுண்டு. ஒரு முறை அவருடைய மகனொருவர் யாத்திரை செய்வ தற்கு ஒழுங்குகள் செய்திருந்தார். புறப்படுதற்குரிய நாளிற் காலையில் தந்தையாரை வணங்கி அவர் கையாற் பணமும் பெற்றுக்கொண்டார். இது நிகழ்ந்தபோது கடையிற சுவாமிகள் அவ்விடத்தி லில்லை. எங்கேயோ வெளிச்சென்றிருந்த அவர் சிறிது நேரத்தின்பின் திரும்பி வந்தார். சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்ததும், நன்னியரின்மனைவியாரை நோக்கிக் 'காசை வாங்கித்தா அல்லது காயம் மாத்தப்படும்' என்று இரண்டு மூன்றுமுறை கூறினார்.

பொதுவில் சுவாமிகளின் பேச்சு விளங்கா மழலை போலவே யிருக்கும். அவர் பேச்சின் சொல்லுருவம் எப்போதும் எல்லோருக்கும் எளிதிற் புலனாவதில்லை. சிலநேரங்களில் அவர் பேசுவது தெலுங்குபோலவுமிருக்கும். அவரோடுநெருங்கிப் பழகினவர்கள் மட்டும் முன்பின் நிகழ்ச்சித் தொடர்புகளினால், அவர் இன்னதுதான் சொல்கிறாரென்று மட்டிட்டுக் கொள்வார்கள். ஒன்றில், இவ்வகையில் அப்பெண்மணியார் அன்று அவர் சொல்லியதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலிருந்திருக்கலாம். அல்லது விதி அவர்தம் மதியைத் தடைசெய்திருக்கலாம்.

மார்கழித் திருவாதிரைத் திருமஞ்சன தரிசனத்திற்காக நன்னியர் மகன் தாம் கருதியபடியே யாத்திரை போய்விட்டார். அவர் புறப்பட்டுப் பத்துநாளாயின. பதினோராவது நாள் நன்னியர் மனையில் மற்றொரு சம்பவம் நிகழலாயிற்று.

அன்று அம்மனையிற் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் இருந்தனர். கடையிற் சுவாமிகள் தம்பாட்டில் வெகுநேரமாக ஏதேதோ செய்துகொண்டிருந்தார். இருந்தாற்போல சுவாமிகள் திடீரென்று வீட்டு முற்றத்திற்கு இறங்கினார். வேலியோரங்களிற் சென்று அங்கிருந்த காய்ந்த தடிச்சுள்ளிகள் சிலவற்றைப் பொறுக்கி யெடுத்துக்கொண்டு வந்தார். சிதை அடுக்குவதுபோல நேர்சீராக அச்சுள்ளிகளை அடுக்கினார் உடைந்த பானையோடொன்றை எடுத்துத் தமது வலத்தோளின்மேல் வைதது வலது கையால் இறுகப் பிடித்துக்கொண்டார். எரிந்த வைக்கோற் கொள்ளியொன்றைத் தமது இடக்கையிற் பின்புறமாகப் பிடித்துக்கொண்டு சிதையை மும்முறை வலம் வந்தார் தோளிலிருந்த ஓட்டையும் வைக்கோற் கொள்ளியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மெத்தெனக் கீழே நழுவ விட்டுச் சிறிது தூரம் ஓடினர்; கூத்தாடினர். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள் பலர்; அவரவர் உள்ளங்களில் எழுந்துவிட்ட எண்ணங்களும் பல.

'இது சுவாமிகள் திருவிளையாடலாகும்' என எண்ணினர் சிலர். 'ஏதோ அனர்த்தம் நிகழப்போவதை இந்நிகழ்ச்சி குறிப்பிடுகின்ற'தென நினைத்தனர் சிலர். 'சுவாமிகளுக்குச் சமாதி காலஞ் சமீபிக்கின்றது போலும். அதனையே அவர் இச்செயலாற் குறிப்பிடுகின்றனர்' என ஊகித்தனர் சிலர். அவர் கருதியதை யாரறிவார்? உள்ளக் கருத்தை வள்ளலறியும்' என ஆறுதலுற்றனர் சிலர்.

குறித்த செயல் நடைபெற்று ஒரு பத்துநாளின் பின் சிதம்பரத்திலிருந்து கடிதமொன்று வந்து சேர்ந்தது. பரபரப்பாகக் கடிதத்தைத் திறந்தவர்கள் அதன் மேல்மூலையில் கரி பூசப்பெற்றிருந்ததனை ஏன்தான் கவனித்திருக்கவேண்டும்? கடிதத்தில் எழுதப் பட்டிருந்ததனை முற்றுக வாசித்தார்கள். பத்து நாளுக்குமுன் வீட்டு முற்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் அர்த்தம் கடிதச் செய்தியிலிருந்தே எல்லோருக்கும் புலனாயிற்று. சிதம்பரஞ் சென்றிருந்த நன்னியர் மகன் கொள்ளிட நதியில் நீராட இறங்கியபோது நீரோட்டத்தாலிழுபட்டுக் காலமாயினர் என்றிருந்தது அக்கடிதச் செயதி. தற்செயலாக அன்று அவ்விடத்தில் நின்று அவரைக் காப்பாற்ற முயன்று முயற்சிப் பலன் கைகூடப்பெறாத அன்பரொருவர் நன்னியர் வீட்டுக்கு அறிவித்த செய்தி அது. 'காசை வாங்கித்தா அல்லது காயம் மாற்றப்படும்' என்று அன்று சுவாமிகள் அருளிய வார்த்தையின் அர்த்தத்தினையும் இப்பொழுதுதான் எல்லாரும் புரிந்துகொண்டனர்.

இங்ஙனம் மண்டைதீவிற் சுவாமிகளின் வாழ்வு பல்வேறு அற்புத நிகழ்ச்சிகளும் அதிசய சம்பவங்களும் நிறைந்ததாக அமைந்துள்ளது. இப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னியரின் சந்ததி அற்றுப்போயிற்று; அவருடைய சகோதரங்களின் சந்ததியார் வாழ்ந்து வருகின்றனர். கடையிற் சுவாமிகளைப்பற்றி அவரிடம் விசாரிக்கும்போது அவர் தஞ்சாவூரிலிருந்து வந்த தச்சப்பிள்ளை என்கின்றனர். மேலே காட்டிய அற்புதத்தைவிடச் சுவாமிகள் பேரால் அவர்கள் கூறும் அற்புதங்கள் இன்னும் பல. அவற்றிற் சிலவற்றைக் கவனிப்பாம்.

நன்னியர் வீட்டில் ஒருநாள் கடையிற்சாமி, நன்னியர்சாமி, சின்னச்சாமி என்னும் மூவருங் கூடிச் சமையல் செய்துகொண்டிருந்தனர். சமையல் ஏறக்குறைய முடியுந் தருணமாயிற்று. கடையிற் சுவாமிகள் திடீரென எழுந்து, 'சீ! சீ! தீராநோய்! கருமி! எல்லாவற்றையும் விட்டு எழுந்து வாருங்கடா' என்றார்கள். மற்றைய இருவரும் வெந்தும் வேகாமலுமிருக்கும் உணவுகளை ஏதனங்களோடெடுத்துப் 'பத்தாயத்தில்' வைத்துப் பூட்டிவிட்டுச் சுவாமிகளைப் பின்தொடர்ந்தனர். [பத்தாயம் - பொருள்கள் இட்டு வைப்பதற்கு உபயோகிக்கும் மரப்பெட்டி] மின்னி மறையும் நேரத்தில் மூவரும் வீட்டிலிருந்து மேற்குத் திசையாக வெகுதூரஞ் சென்று மறைந்துவிட்டனர். இவர்கள் வீட்டை விட்டுக் கிளம்பிச் சிறிது நேரத்தில் அவ்வீட்டின் தெற்குப்புறமாக உள்ள பாதை வழியாகத் தீராநோயாளர் ஒருவர் வந்து வீட்டையடைந்தார்.

அந்நோயாளர் எங்கேயோ நெடுந் தொலைவிலிருந்து கடையிற் சுவாமிகளைக் காண ஆவல்கொண்டு வந்தவர். சுவாமிகளைக் கண்டால் தம் நோய் தீர்ந்துவிடும் என்பது அவர் எண்ணம். தாம் வந்தபோது சுவாமிகள் அங்கில்லாமை அவர்க்குப் பெரும் ஏமாற்றத்தை விளைத்தது. 'இப்போதான் புறப்பட்டுப் போகிறார் சுவாமிகள்' என்று அங்குள்ளார் கூறிய செய்தி அவரைச் சிந்திக்க வைத்தது. 'எப்படியாகிலும் போனவர் திரும்பி வருவார் சந்திக்கலாம்' என்ற எண்ணத்துடன் மூன்று நாளாக அவ்விடத்திலேயே அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளுக்காகக் காத்திருந்தார். மூன்று நாளாகி யும் சுவாமிகள் திரும்பாமையால் மனம் அலுத்துப் போன அவர் தம் விதியை நொந்துகொண்டு தம் வீட் டுக்குத் திரும்பிவிட்டார் அவர் புறப்பட்டுச் சென்று சில மணித்தியாலங்கள் கழிந்தபின் சாமிகள் மூவரும வீடுவந்து சேர்ந்தனர். வீட்டினுள் நுழைந்து பத் தாயத்தைத் திறந்தனர். 'என்ன நடக்கிறது பார்ப் போம்' என்ற எண்ணத்தால் அவ்வீட்டிலிருந்த சிலர் எட்டிப் பார்த்தார்கள். அவ்வேளையில் சுவாமிகள் மூவரும் உண்ணத் தொடங்குகிறார்கள். சோற்றுப் பானையிலிருந்து ஆவி வந்துகொண் டிருக்கின்றது. கறிப்பாத்திரங்களிலிருந்தும் அவ்வாறே. இது எட் டிப் பார்த்தவர்கள் கண்ட காட்சி. அவர்கள் வாயி லாகப் பிறரும் இதனையறிந்து ஆச்சரியமுற்றனர்.

நன்னியர்சாமி விட்டிலே இடைக்கிடை குருபூசை யும் நிகழ்ந்து வந்தது. அன்பர்கள் அடியார்கள் தாம் தாமாகவே வேண்டும் பொருள்களைக் கொண்டுவந்து குருபூசையைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். ஒருநாள் குருபூசைக்குச் சமையல் ஆரம்பிதது விட்டது. எதிர்பார்த்தபடி அன்று ஒருவராவது ஆட் டுக்கடா கொண்டுவந்ததில்லை. அது அன்றைய நிகழ்ச்சிக்கு ஒரு பெருங் குறையாக உணரப்பட்டது. அதனுற் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் மனக்கலக்கமுற் றிருந்தனர். திடீரென்று கடையிற்சுவாமிகள் அவர் கள் நடுவில்வந்து 'ஏனடா வெள்ளக்கடலில் கடா மேய்ந்துகொண்டு நிற்கிறதே; பிடித்து வாருங் களடா' என்றுர்கள்; [வெள்ளக்கடல் என்பது மண்டைதீவிற் கடற்கரையைச் சார்ந்த ஒரு காணி யின் பெயர்] சுவாமிகளின் சொற்படி சிலர் வெள்ளக் கடலைநோக்கி விரைந்து சென்றுர்கள். அது யாரு டைய கடாவென அயலில் நின்றோரை வினவினர். அவ்வகையில் அது கார்த்திகேயருடைய கடாவென் பது தெரிய வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய குருபூசைக்குக் கார்த்திகேயரும் போவ தற்கென்றே யிருந்தார். ஏதோ கையலுவல் காரண மாக அவர் சுணங்கிப் போகவேண்டியதாயிற்று. அந்தக் குட்டி பிறக்கும்போதே கார்த்திகேயர் மனதில் ஒரு சங்கற்பம் பிறந்திருந்தது. அந்தக் குட்டியை வளர்த்துக் கடையிற் சுவாமிகளின் குருபூசைக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் அச்சங்கற்பம். அவருடைய சங்கற்பம் இவ்வாறாக, அவர்தம் மனைவி யார் மனதில் இன்னொரு சங்கற்பந் தோற்றியிருந் தது. குட்டியை நன்கு வளர்த்து விற்றுப் பிள்ளைக் குத் தோடு செய்விக்கவேண்டும் என்பது அவர் சங் கற்பம். ஆரம்பத்திற் சிலகாலம் ஒருவர் சங்கற்பம் மற்றவருக்குத் தெரியாமலே யிருந்தது. தற்செய லாக ஒருநாட் கலந்துரையாடலின்போது இருவர் சங் கற்பமும் வெளியாயின. இதில் யார்விட்டுக்கொடுப்ப தென்பது கேள்வி. தம்முடைய சங்கற்பத்தைத் தளர்த்திக்கொள்ளக் கார்த்திகேயர் தயாராகவில்லை. அவர் மனம் எவ்வகையிலும் குருவழிபாட்டிற்கே கடாவை அர்ப்பணித்துவிட்டது. தம்முடைய சங்கற் பத்தை விட்டுக்கொடுக்க மனைவியாரும் இசைய வில்லை. இவ்வகையிலிருந்த இவ்வேறுபாடு அவ்விரு வருக்குமிடையிற் சிற்சில வேளைகளிற் சச்சரவையும் உண்டுபண்ணி வந்தது. இத்தகராறு ஆட்டுக்கடா விற்குத் தாயமாயிற்று. அது குருபூசைக்குக் கொடுக் கப்பட்டதுமில்லை; விலைப்பட்டதுமில்லை. நன்கு மேய்ந்து கொழுத்துக்கொண்டிருந்தது அது. அன்று குருபூசைக்குக் கடாவில்லையே என்ற குறை ஏற்பட்ட போது கார்த்திகேயரும் அவ்விடத்தில் நின்றிருந்தால் நிச்சயமாகக் கலக்கமுற்றிருப்பார். தம்மைத் தாம திக்க வைத்துக்கொண்டிருந்த அக்கையலுவலை ஒரு வாறு முடித்துக்கொண்டு கார்த்திகேயர் குருபூசை நிகழுமிடத்திற்கு வந்து சேர்ந்தார். தம் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. அங்கு நின்ற ஆட்டுக் கடாவைக் கூர்ந்து கூர்ந்து பார்த்தார். ஆனந்தம் மேலிட்டது. அவர் கண்களிரண்டும் வெள்ளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலாய்த் திகழ்ந்தன. தம்மையறியாமலே தம்நினைவு வெற்றி பெற்றதை எண்ணுந்தோறும் அவர் உச்சி குளிர்ந்தது. இதன் தொடர்பாக, அவ்விடத்தில் நின்றவர்களிடையே ஒரு குதூகலம் நிலவியது. இது சம்பந்தமாக அவர்கள் ஒருவரையொருவர் விசாரித்தும், விபரஞ் சொல்லியும், வியந்தும் நயந்தும் கார்த்திகேயருடைய மகிழ்ச்சியில் தாமும் பங்குகொண்டனர்.

இங்கே இஃது இவ்வாருக, அங்கே கார்த்திகேயருடைய வீட்டில் ஒரு சம்பவம் நிகழலாயிற்று. வெகுநாள் அவர்வீட்டுக்கு வராதிருந்தவரும் மிகத் தொலைவில் வசிப்பவருமாகிய உறவினர் ஒருவர் அன்று அதே நேரத்தில் அங்கு வந்திருந்தார். வந்தவர் கார்த்திகேயரின் மனைவியாரால் உபசரிக்கப்பெற்று அளவளாவிக்கொண்டிருக்கையில் நல்ல வைரக்கல் பதித்த ஒரு சோடி தோட்டைப் பிள்ளைக்கென்று உதவிஞர். மனைவியாருக்கும் உச்சி குளிர்ந்தது. கணவனுர் சங்கற்பம் வென்றது. மனைவியார் எண்ணமும் இன்ருேராற்ருல் நிறைவேறிற்று.

நம் மனத்திலே நிகழக்கூடிய சங்கற்பங்கள் இருவகையானவை. அறச்சார்பான சங்கற்பங்கள் ஒருவகையன. சுயதேவைச் சார்பான சங்கற்பங்கள் மறுவகையன. பொதுவில் எச்சங்கற்பமாயினும் உறுதியாக உணர்ந்து சங்கற்பிக்கப்பட்டிருந்தால் மட்டுமே நிறைவேறுவதாயிருக்கும். அத்தகைய சங்கற்பம் ஒருவன் சங்கற்பித்த வகையிலும் நிறைவேறலாம், வேறு வகையிலும் நிறைவேறலாம். ஒரு சங்கற்பம் சங்கற்பிக்கப்பட்டமாதிரியே நிறைவேறுதல் என்ற விஷயம் சங்கற்பிப்பவரது உள்ளத்தின் திண்மையைப் பொறுத்தது. எண்ணியவர் திண்ணியராகப் பெற்ருல் மட்டுமே எண்ணியவற்றை எண்ணியமாதிரிப் பெறமுடியும் என்கிருர் வள்ளுவர்.

> "எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்". — திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும், அறச்சார்பாக நிகழுஞ் சங்கற்பங்கள் சுயதேவைச் சார்பாக நிகழுஞ் சங்கற்பங்களைவிட ஆற்றல் மிக்கவை. முன்னையனவற்றிற்கு எதிரிடையாகப் பின்னையன எழுந்து நிற்குமாயின் முன்னையனவே வெற்றிபெறும்.

தெய்வம், குரு, கோயில் ஆதியன சம்பந்தமாக நிகழுஞ் சங்கற்பங்கள் என்றும் அறச்சார்பானவை. மனைவி மக்கள் தான் என்னும் விஷயங்கள் சம்பந்தமாக நிகழுஞ் சங்கற்பங்கள் சுயதேவைச் சார்பானவை. சமூகம் நாடு என்பன சம்பந்தமாக நாம் புரியுஞ் சங்கற்பங்களில் இவ்விரு தன்மையுந் தனித் தனி இடம் பெறுதல் கூடும். அவை முற்றுமுழுதாக அறச்சார்பாக அமைதலுங் கூடும்; சுயதேவைக் கலப்புள்ளவையாக அமைதலுங் கூடும். முன்னையது நிறைவேறுதல் மட்டிலன்றி வெற்றியும் பெறும். பின்னையது ஒன்றில் நிறைவேறும் அல்லது தோற்கும். அது வெற்றிபெறுதல் என்றுமில்லை.

உலகெல்லாம் தர்மம் நிலவச் செய்யவேண்டும் என்பது இராமபிரான் கொண்ட சங்கற்பம். உலகெல்லாம் தன் அரக்க ஆதிக்கம் நின்று நிலவச் செய்ய வேண்டும் என்பது இராவணன் கொண்ட சங்கற்பம். முன்னையது அறச்சார்பானது. பின்னையது சுயதேவைச் சார்பானது. இராவணன் அரக்கனுயினுந் திண்ணியனுகலின் அவனுடைய சங்கற்பம் சிலகாலமாக நிறைவேறிற்று. ஆனுல் இராமனது அறச்சார்பான சங்கற்பத்தின் முன்னே அது தோற்றொழிந்து போயிற்று. அவனுக்கு அகங்காரந் தலைக் கொண்டமையினுலே அவன் தானும் அழிந்தொழிய வேண்டியாயிற்று.

நாம் சிந்திக்கும் வேளையெல்லாம் அறச் சார்பானவற்றையே சிந்திக்கப் பயிலல் வேண்டும். திருத்தமாகச் சிந்தித்து உறுதியாக உணர்ந்து அவற்றிலொன்றைச் சங்கற்பிக்கப் பழகவேண்டும். ஆண்டவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னருளால் அது வெற்றியுறுதல் கண்டு மகிழவேண்டும். அதிலேதான் வாழ்க்கைப்பயன் தங்கியுள்ளது. அறச் சார்பான அச்சங்கற்பத்தை வெல்விக்க முன்னிற்கும் ஆண்டவனருளின் சந்நிதியில் நமது சுயதேவைகள் தாமாகவே நிறைவேறிப்போகும். குறித்த கார்த்தி கேயர் விஷயத்திலிருந்து நாம் பெறக்கூடிய படிப்பனை இதுவாகும்.

நன்னியர் சாமியின் கிட்டிய சொந்தக்காரக் குடும்பமொன்று நெடுங்காலம் பிள்ளைப் பேறின்றி யிருந்தது. கடையிற் சுவாமிகள் ஒருநாள் அவ்வீட்டு முற்றத்திலே தோன்றி அவ்வீட்டுப் பெண்ணைப் பெயர்சொல்லி அழைத்தார். அவர் வந்து கும்பிட் டெழுந்து நின்றபோது 'மூன்று கோழிமுட்டை கொண்டுவா' என்றார். அவர் விரைந்துபோய் மூன்று முட்டைகளைக் கொண்டு வந்து கொடுத்துக் கும்பிட்டு நின்றார். சுவாமிகள் அவற்றைத் தம் கையிலேயேற் றுப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். சிறிது நேரத்தின் பின் முட்டைகள் மூன்றையும் மறுபடி அப்பெண் மணியின் கையிற் கொடுதது 'இந்தா மூன்றும் மூன்று இராசாக்கள்' என்று சொல்லிப் போய்விட்டார். அவ் வாக்கின்படியே அப்பெண்மணி ஆண்மக்கள் மூவ ரைப் பெற்றுச் சிறப்படைந்தார். இங்ஙனம் பலவேறு சித்துக்கள் கடையிற்சுவாமிகளால் நிகழ்ந்துள்ளன வாக அறியப்பட்டு வருகின்றன.

கடையிற் சுவாமிகள் சமாதிகூடுங் காலத்திற்கு இரண்டு வருடம் முந்தியே மண்டைதீவை விட்டுப் புறப்பட்டுவிட்டார். புறப்படும்போது மண்டைதீவு மக்களுக்கு அவர் கூறிய வார்த்தை யொன்றை இன் றும் அங்குள்ளார் சொல்லிக் கொள்கின்றார்கள். 'உங்களுக்கென்னடி பனைதானே சீலம்பாய் இராசாத் திகள்' என்பது அவ்வார்த்தை. இதைப்பற்றிக் குறிப் பிடும்போது அங்குள்ள மூதாட்டியார் ஒருவர் கண் கலங்கிக் கூறியதாவது:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுவாமி சொன்னது சரிதானே! இங்கே எங்களுக்கு என்னகுறை! பிழைப்புக்காக நாங்கள் வெளியே செல்லத் தேவையில்லை. எங்களுடைய ஆண்கள் கூலித் தொழிலுக்கென்று போவதில்லை. எங்களுக்குப் போதிய அளவு பனையுண்டு. குருத்தை வெட்டிப் பாயிழைத்து வைக்கின்றோம். தேவையானவர்கள் தேடிவந்து காசுதந்து வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

இந்த அவர் கூற்றிலே திருப்தியும் ஆறுதலும் ஒருங்கே தொனித்தன.

கடையிற்சுவாமிகள் தம்மூரில் வசித்தமைபற்றிய எண்ணங்கள் மண்டைதீவிலுள்ள முதியோரின் உள்ளங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன. அவர் பெயரைக் கேட்டமாத்திரத்தே கைகூப்பிக் கண்ணீர் சொரிந்து நிற்போரை அங்கு காணலாம். ஏறக்குறைய எழுபது வயசுப் பராயத்தினரான நடராசா என்னும் முதியவரிடம் சுவாமிகளைப்பற்றி விசாரிக்க நேர்ந்தது. சுவாமிகளின் பெயரைக் கேட்ட அளவிலேயே அவர் கைகள் குவிந்தன; கண்ணீர் துளித்தது.

"பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை யறுசெம் பொன்னுமே
குரிபரிசித்த குவலய மெல்லாம்
திரிமல நீங்கிச் சிவமாமே"

என்ற திருமந்திரப் பாடல் அவர் வாயினின்று பொள்ளெனக் குதித்தது. குரல் தழுதழுக்கப் பின்வருமாறு கூறினார்.

'நாம் என்னத்தை யறிவோம் கடவுளருள் தானே எப்போதும் நம்மை வழிநடத்துகின்றது. கடையிற் சுவாமிகள் என்ன சிவந்தானே! தன்னைக் கும்பிடவும் ஒருவருக்குந் தீங்கு செய்யாதிருக்கவுந் தக்கவகையில் நம்மைப் பயன்படுத்திப்போயிருக்கின்றார் அவர் ... ...' அதன்மேற் பேச அவரால் முடியவில்லை. பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் ஆறவிட்டுக் கேட்டபோது சுவாமிகளைப் பற்றி ஏதேதோ கூற எத்தனித்தார். வயது முதிர்ச்சியால் ஏற்பட்ட இளைப்பினுல் ஒன்றையுந் தொடர்பாகச் சொல்ல அவருக்கியலாமற்போயிற்று. கடையிற் சுவாமிகள் வரவு தம் சூழலைச் சீர்ப்படுத்தியுள்ளது என்னும் நம்பிக்கை அவர் பேச்சிலும் பார்க்க உணர்ச்சியிலிருந்து அதிகமாகப் பிரதிபலிப்பதாயிற்று.

நன்னியர் வீடென்று குறிக்கப்பட்ட அவ்விடத்திற் கடையிற் சுவாமிகளின் ஞாபகச் சின்னங்களோடு விளங்குங் கொட்டிலில், அவ்வூர் அன்பர்களின் முயற்சியால் வருடாவருடம் புரட்டாசி மாசத்துப் பூரட்டாதி நக்ஷத்திரத் தினத்திலே சுவாமிகளின் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. அவ்வூர் அமிர்தலிங்கம் என்பவர் சுவாமிகள் பேரில் இருபத்தைந்து பாடல்கள் தம் பாணியில் இயற்றிக் குருபூசையின்போது படித்து வருகின்ருர். அந்த அமிர்தலிங்கம் என்பவர் அவ்வூர்க் கந்தசாமி உபாத்தியாயரின் மாணவர். இந்தக் கந்தசாமி என்பவர் தம் குழந்தைப்பருவத்திலே நாலு ஐந்து வயதாகியும் எழுந்து நடக்க முடியாது சப்பாணியா யிருந்தார். கடையிற் சுவாமிகள் ஒருநாள் அவர் வீட்டுப் பக்கமாகப் போகும்போது முற்றத்திலிருந்த குழந்தையாகிய அவரைக் கையிற் பிடித்து 'எழும்படா எழும்பி நட' என்று சொல்லித் தூக்கிவிட்டார். அவ்வளவில் சூம்பலாயிருந்த தமது கால்கள் வலுப்பெற்று அவர் எழுந்து நடக்கத் தொடங்கிப் படிப்பிலும் விவேகியாய் வளர்ந்து வந்தார்.

குறித்த அமிர்தலிங்கத்தின் பாடல்களிற் கந்தரலங்கார திருவாசகப் பாடல்களின் ஓசை தழுவப் பெற்றுள்ளது. அவற்றிற் சில இந்நூலில் அநுபந்தமாகச் சேர்க்கப்பெறும்.

*சிவ! சிவ! சிவ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமகுரு சுவாமிகள்

கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணத்திற் சஞ்சரித்த காலத்திற் கீரிமலையிலிருந்த மகான்களிலொருவர் பரமகுரு சுவாமிகள். முன், கடையிற் சுவாமிகள் வரலாற்றிற் குறித்துள்ளபடி ஒருகாலத்தில் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மகான்கள் மூவரில் ஒருவரான நிரஞ்சனானந்தா என்பவரே இங்கு இப்பெயரால் வழங்கப்பெற்றார் என்பது ஒரு செய்தி.

பரமகுரு சுவாமிகளைப்பற்றி யறிவதற்கு இன்னும் இருவகையான ஆதாரங்கள் உண்டு. குழந்தைவேற் சுவாமிகள் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட சில குறிப்புக்கள் ஒருவகையாதாரம். சேர். பொன். அருணாசலமவர்கள் எழுதி வெளியிட்ட ஆங்கில நூலொன்றில் (Stindies in Tamil) பரமகுரு சுவாமிகளைப்பற்றிக் காணப்படும் பந்தியொன்று மறுவகை யாதாரம்.

கடையிற் சுவாமிகளைத் தீக்ஷா குருவாகப் பெற்ற குழந்தைவேற் சுவாமிகள் அவராணையின்படியே கீரிமலைக்குச் சென்று பரமகுரு சுவாமிகளைத் தமக்கு உபதேச குருவாகப் பெற்றார். குழந்தைவேற் சுவாமிகளுக்கு உபதேசஞ் செய்விப்பதற்காகவே கடையிற் சுவாமிகள் தம்மருளால் பரமகுரு சுவாமிகளைக் கீரிமலைக்கு எழுந்தருளச் செய்திருந்தார். குழந்தைவேற் சுவாமிகள் ஒரேகாலத்திற் கடையிற் சுவாமிகளுக்கும் பரமகுரு சுவாமிகளுக்கும் பணிவிடை புரிந்து வந்தார். குழந்தைவேற் சுவாமிகள் ஒருதடவை இங்கிருந்து பன்னிரண்டு சிஷர்களுடன் மாத்தளைக்குச் சென்று நாற்பதுநாள் தங்கியிருந்து பரமகுரு சுவாமிகளின் சமாதி வைபவத்திற் பங்குபற்றியுள்ளார். குழந்தைவேற்சுவாமிகள் தாம்பாடிய குருதோத்திரப் பாடல்களில், 'கிடாரிப்—பருப்பதம் மேயபிரானே' என்று பரமகுரு சுவாமிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமகுரு சுவாமிகளைப்பற்றி அறிவதற்காதாரமாகக் குழந்தைவேற்சுவாமிகள் வரலாற்றோடு சம்பந்தப் பட்ட குறிப்புகள் இவை.

பரமகுரு சுவாமிகள் இலங்கையின் மத்திய மலை நாட்டுப் பகுதியில் உள்ள ஒரு தோட்டத் தொழிலாளி யின் மகனாக அவதரித்தார். தம் இளமையிலேயே துறவு பூண்டு மாத்தளைக்கும் திரிகோணமலைக்கு மிடையேயுள்ள காட்டுப் பிரதேசத்தில் மூன்றாண்டுக ளாக ஏகாந்தமாக வாழ்ந்து வந்தார். பிறகு யாரோ சிலரின் நிர்ப்பந்தத்தினால் மீளவும் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டார். எனினும் அவருக்கிருந்த ஏகாந்த வாழ்க்கைப்பற்றும் தியான உணர்வும் நாளுக்குநாள் வளர்ச்சியுற்றுக்கொண்டே வந்தன. இதனால் அவர் தோட்டக்காட்டு வாழ்விற் கட்டுப் பட்டுவிடாது மீளவும் புறப்பட்டுத் தமது துறவு வாழ்க்கையிலேயே ஒருமுகப்பட்டுத் தாம விரும்பிய வாறு சஞ்சாரஞ் செய்துவந்தார். சுவாமிகள் கவர்ச்சி கரமான இனிய தோற்றமுடையவர். வறியவர், செல் வர்; ஆடவர், பெண்டிர்; பாலர், விருத்தர்; பாமரர், பண்டிதர் என்ற வேறுபாடின்றி எவரும் எளிதில் அணுகித் தரிசிக்கக்கூடிய தன்மையுள்ளவர். அவர் கோவணந் தரித்துப் பச்சைநிறப் போர்வையொன்று மேலுடலிற் போர்த்துக்கொள்வார். படிப்பறிவற்ற தோட்டக்காட்டுச் சூழ்நிலையிற் பிறந்திருந்தும், தம் இளமை வாழ்வெல்லாம் வனவாசத்திற் போக்கியிருந் தும், அறிவாராய்ச்சியில் தேர்ந்த எந்த ஒரு வித்து வானும் கேட்கக்கூடிய எந்த ஒரு கேள்விக்குந் தயங் காமற் பதிலளிக்கக்கூடிய அபாரமான ஞானத்திறமை சுவாமிகள்பால் அமைந்திருந்தது. சேர். அருணாசல மவர்கள் எழுதிய பந்தியிலிருந்து சுவாமிகளைப்பற்றி நாம் அறியக்கூடிய குறிப்புக்கள் இவை.

மேற்குறித்த ஆதாரங்களுடன் சுவாமிகளைப்பற்றி யறிதற்குரிய ஆதாரங்கள் இன்னும் இரண்டு உள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதனுமடத்தில் இப்பொழுது இராமநாதன் கல்லூரியிருக்குங் காணி அக்காலத்தில் வெறும் பனங்காடாக இருந்தது. சுவாமிகள் கௌபீனமும் பச்சைப்போர்வையுந் தரித்த கோலத்துடன் சிலகாலம் அப்பனங்காட்டிற் தனிமையாக இருந்துவந்தார். பாசிப்பயற்றை அவித்துக் கஞ்சியாகப் பருகிவந்தார். இவ்வளவும் தாம் நேரிற் கண்டறிந்ததாகத் திருநெல்வேலிச் சோமசுந்தரஉபாத்தியாயர் அவர்கள் திரு. சு. நடேசபிள்ளை அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவில் தஞ்சாவூரிற் சிவஞானியாகத் திகழ்ந்த இலக்கணம் இராமசாமிப்பிள்ளை அவர்கள் சேர். அருணாசலத்தின் குரு ஆவர். சேர். அருணாசலமவர்கள் ஒருமுறை தமது குருவுக்குக் கடிதமெழுதிய போது, அக்கடிதத்தில், அப்போது கிடாரிப்பட்டியிலிருந்த பரமகுருசுவாமிகளின் சுகம் எப்படியென்று விசாரித்துத் தெரிவிக்குமாறுங் குறிப்பிட்டுள்ளார். மேற்குறித்த செய்தியும் இதுவும் திரு. சு. நடேசபிள்ளை அவர்களிடம் நேரில் கேட்டறிந்த செய்திகள்.

காங்கேசன்துறையிலொன்றும் கீரிமலையில் ஒன்றுமாக இரண்டு மடங்கள் பரமகுரு சுவாமிகள் பேரால் அமைந்துள்ளன. சேணியதெருச் சின்னத்தம்பியென்ற அன்பர் ஒருவர் சுவாமிகள்பால் ஈடுபாடுற்றுத் தமது அர்ப்பணமாகச் சுவாமிகள் பேரில் இவற்றை நிர்மாணித்துள்ளார். குறித்த மடங்களிரண்டில் ஒன்ருகிய கீரிமலை மடத்தில் வாழும் திரு. ஐயம்பிள்ளைக் குருக்கள் வாயிலாக அறிந்த செய்தி இது.

பரமகுரு சுவாமிகள் மாத்தளை, கீரிமலை, கிடாரிப்பட்டி, மருதனுமடம் என்ற நான்கு பகுதிகளிலுஞ் சஞ்சாரஞ் செய்துள்ளார். குழந்தைவேற் சுவாமிகளுக்கு உபதேச குருவாகவும், சேர். பொன். அருணாசலமவர்களின் அபிமானத்திற்குரிய ஒரு மகா ஞானியாகவும் விளங்கியுள்ளார். மாத்தளையில் அவர் சமாதிகூடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யுள்ளார். இவ்வளவும் மேற்கண்ட ஆதாரங்களி லிருந்து நாம் பெறும் பொது உண்மைகள். இவ்வுண் மைகளுக்கேற்பச் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற் றைப் பின்வரும் ஒழுங்கில் வைத்து அவதானித்தல் பொருந்தும்.

சுவாமிகள் மாத்தளைப் பகுதியிற் பிறந்து துறவியாகி அப்பகுதியை விட்டுப் புறப்பட்டபின் எங்கெங்கோ வெல்லாஞ் சஞ்சாரஞ்செய்து கிடாரிப் பட்டியை அடைந்து அங்கு தமது ஏகாந்தவாழ்வை நடத்தி வந்தார். பிறகு ஏதோ ஒருவகையிற் கீரி மலைக்கு வந்து அங்கு ஞானசாதனை புரிந்துள்ளார். இக்காலமே குழந்தைவேற் சுவாமிகள், சேணிய தெருச் சின்னத்தம்பி போன்றோர் சுவாமிகளுக்குப் பணிபூண்டொழுகிய காலமாகும். கீரிமலையில் தங்கி யிருந்த இக்காலத்தில் சுவாமிகள் மருதனுமடத்துப் பனங்காட்டிலும் இடைக்கிடை வந்து தங்கிப் போயுள் ளார். திரும்ப, கீரிமலையை விட்டுப் புறப்பட்டுத் தேச சஞ்சாரஞ்செய்து மறுபடியும் கிடாரிப்பட்டியை அடைந்து அங்குத் தங்கியுள்ளார். சேர். அருணாசல மவர்கள் தம் குருவின்மூலம் சுவாமிகளின் சுகம் விசா ரித்த காலம் இக்காலமாகலாம். மீளவும் சுவாமிகள் கிடாரிப்பட்டியை விட்டுநீங்கி இலங்கைக்கு வந்து மாத்தளையிற் சமாதி கூடியுள்ளார்.

கீரிமலையிலுள்ள பரமகுரு சுவாமிகள் மடம் சுவா மிகள் சமாதிகூடும் இடமாக அமைதல் வேண்டு மென்ற சங்கற்பத்தின் பேரிலேயே குறித்த சின்னத் தம்பி என்பவராற் கட்டப்பட்டதென்றும் சமாதி மாத் தளையிலே நிகழ்ந்துவிட்டமையாற் பிறகு ஒன்றுஞ் செய்யமுடியாது போயிற்றென்றும் திரு. ஐயம்பிள் ளைக் குருக்கள் வாயிலாக அறிகின்றோம். சுவாமிகள் தம் சமாதிக்காலம்வரை நெடுநாட்களுக்கு ஓரிடத்தில் தங்கியிருந்துவிடாமல் அங்குமிங்கும் மாறிமாறிச் சஞ் சாரஞ் செய்து வந்துள்ளார் என்பது குறித்த இச் செய்தியினாலும் அனுமானிக்கத் தக்கதாயிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமகுரு அடிகள்



ஒடுக்கம் : 1904-ம் யாண்டு மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் இருந்த இடங்களுளொன்ருகக் கூறப் பட்ட கிடாரிப்பட்டி என்பது தென்னிந்தியாவில் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஒரு இடப்பகுதி. கற் பாறைச் செறிவுள்ள அவ்விடம் ஏகாந்த வாழ்வை விரும்புபவர்களுக்கு மிகவும் உகந்த இடமாயிருந்து வந்துள்ளது. மகான்கள் பலர் அவ்விடத்தில் இருந் துள்ளதாகவும் அதற்கான அத்தாட்சிகள் அங்குள் ளனவென்றும் அறிகின்ருேம். அவ்விடத்தின் பிரபா வமே சுவாமிகளை அங்குச் சென்று தங்கச் செய்துள் ளது. இக்கிடாரிப்பட்டியே குழந்தைவேற்சுவாமிகள் பாடலிற் கிடாரிப் பருப்பதம் என வந்துள்ளது.

சுவாமிகள் கவர்ச்சிகரமான இனிய தோற்ற முடையவர் எனமுன்னே கண்டோம். அவர் பாலசந்நி யாசியாதலின் என்றும் இளமை பொலியுந் திருவுடை யவராயிருந்திருப்பார். அவருடைய உடையும் பச் சைக் கம்பளப் போர்வையாயிருந்தது. இத்தன்மை களால் சுவாமிகளை அன்பர்கள் சுப்பிரமணியக் கடவு ளின் தோற்றமாகப் பாவித்து வந்துள்ளனர். குழந்தைவேற் சுவாமிகளின் குருதோத்திரப் பாடல் கள் சில அவரைச் சுப்பிரமணியப்பெருமாஞகவே வர்ணிக்கின்றன.

பரமகுரு சுவாமிகளின் சமாதி வைபவம் 1904-ம் ஆண்டில் நடைபெற்றது. குழந்தைவேற் சுவாமிகள் அவ்வைபவத்திற் பங்குபற்றிய விபரம் அவர் வர லாற்றிற் கூறப்படும். சேர். அருணசலம் அவர்களே சுவாமிகளின் சமாதித் திருப்பணியை நிறைவேற்றி யுள்ளார்கள். அதன் சார்பாக அவர் அருளம்பலசுவா மிகளுக்கெழுதிய கடிதமுமொன்றுண்டு. அது இந்நூ லிறுதியிற் பிரசுரிக்கப்படும். சேர். அருணசலமும் அருளம்பலசுவாமிகளும் சம்பந்தப்பட்ட விபரம் அரு ளம்பல சுவாமிகள் வரலாற்றிற் கூறப்படும்.

சிவ! சிவ! சிவ!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைவேற் சுவாமிகள்

செழுந்திருமாலும் நான்முகத் தேவும்
    தெளிகிலா வொருபரம் பொருளே
பொழிந்திடு கிருபா மூர்த்தியா யிங்குப்
    புண்ணிய வடிவெடுத் தடியார்க்
குழுந்துருள்போதி லொருமொழி யதனை
    யுணர்த்திட வெழுந்ததென் றுரைக்குங்
குழந்தைவே லவன்றுள் மலர்முடிக் கணியாக்
    கொண்டுவெம் பிறவிநோய் தணிப்பாம்.

— உபதேசவுண்மை. அருளிறை வணக்கம்.

'மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'.

— தாயுமான சுவாமிகள்.

சங்கற்பம் வழுவாது ஆசாரசீலராய் முறைப்படி யாத்திரைசெய்து ஆங்காங்குள்ள மூர்த்திகளையாவது புண்ணிய தலங்களையாவது புண்ணிய தீர்த்தங்களை யாவது தரிசிக்க ஆரம்பித்து வருபவர்களுக்கு ஒப்பற்ற சித்தாந்த மகா வாக்கியத்தை உபதேசிப்பதற்கு ஞானகுருவும் வந்து வாய்ப்பார். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றுக்குத் தனித்தனியுள்ள மகிமை இதுவாகும். அங்ஙனமாயின் இம்மூன்றும் ஒருங்கு சேர்ந்துள்ள இடங்களின் மகிமை சொல்லுந் தரமன்று. இம்மூன்றில் ஒவ்வொன்றே ஞானகுருவைத் தலைப் படும் வாய்ப்பை யளிக்க வல்லதெனின் இம் மூன்றுஞ் சேர்ந்துள்ள பிரதேச மொன்றின் மகிமையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்துக் கீரிமலைப் பிரதேசம் இத்தகையதாகும்.

ஆதிசேடனோடு போட்டியிட்டுக் கொண்டு வாயு பகவான் பிடுங்கி வீசிவிட்ட மேருமலைச் சிகரங்கள் மூன்றில் ஒன்று இந்து சமுத்திரத்தில் விழுந்தது. அச் சிகரத்தின் ஒருபாகம் கடல்மேல் தோன்றிக் கீரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேலடிகள்



தோற்றம் : கேட்டைநாள்
ஒடுக்கம் ; 1909 கீலக, பங்குனித் திங்கள், அஉ உத்தரட்டாதி நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை யாயிற்று. இங்குள்ளார் குறை தீர்த்தருளும் பொருட்டுச் சிவபெருமான் தேவியாரோடும் திருக்கயிலாயத்திலிருந்து எழுந்தருளி இங்கும் வீற்றிருந்தருளுகின்றார். இங்ஙனம் இதன் தலவிசேடங் கூறப்படுகின்றது. கீரிமுகத்தை மனித முகமாக்கியும், குதிரை முகத்தை மனிதமுகமாக்கியும் இங்ஙனம் அனைத்து முகத்தையும் ஒரேமுகமாக்க வல்ல நகுலேஸ்வரப்பெருமான் நகுலேஸ்வரிப் பெருமாட்டியோடும் கருணைமுகமாக இங்கு என்றும் வீற்றிருந்தருளுகின்றார். இது இவ்விடத்தின் மூர்த்திவிசேடமென்பர். தன்பால் மூழ்கினவருடைய மாசுமறுவெல்லாவற்றையும் உடனடியாகவே கழுவித் தூய்மைப்படுத்தவல்ல தன் பேராற்றலை நகுல முனி மாருதப்புரவல்லி என்போர் விஷயத்திற் கையும் மெய்யுமாய்க் காட்டியுள்ள தீர்த்தஅருவி இங்கு என்றுமுள்ளது. சாந்த சக்தி வடிவாகிய அரபிக் கடலும் தூய சிவவடிவாகிய வங்காளக்குடாக்கடலும் ஒன்றுகலக்கும் சங்கம தீர்த்தமும் இங்குண்டு. இங்ஙனம் இப்பகுதியின் தீர்த்தவிசேடம் சிறப்பின் மேற் சிறப்புடையதாகும்.

நகுல முனிவருக்குப் பாவந் தொலைத்த அத்தீர்த்தம் முன்பெல்லாம் ஒரு பற்றையடியினின்று சிற்றருவியாய் ஓடி அணித்தாகிய கடலிற் சங்கமமாயிற்று. தற்போது அத்தீர்த்தம் நவீன வசதிக்கேற்ற நல்லதொரு சுனைக்கேணியாய் நாற்புறமும் படிக்கட்டுக்களுடன் விளங்குகின்றது. நாற்றிசையிலுள்ளார்க்கும் நல்லதொரு கவர்ச்சி மையமாகவும் அது திகழ்கின்றது. இதன் அருமை பெருமைகள் எல்லாவற்றிற்கும் ஆதர்ஷ புருஷர் நாமே யென்பார்போல் அக்கேணியின் மேற்படிக்கட்டில் கிழக்கு நோக்கி நகுலமுனிவர் நின்றுகொண்டிருக்கின்றார். அழகொழுகுஞ் சுதையாலியன்ற ரம்மியமான இரு உருவங்களில் அவர் காட்சியளிக்கின்றார். நகுலமுகமும நன்முகமுந் தனித்தனி தோன்றத் தாடியுஞ் சடையும் உருத்திராக்கமுந் திரிபுண்டரமுந் தரித்த சைவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலத்துடன் தமக்கருள் புரிந்த சிவலிங்கப்பெருமானின் இருமருங்கும் நித்த சாக்ஷியாய் நின்றருளுகின்றார் அவர்.

இவ்வூற்றிற்குக் கிழக்காகச் சற்றேறக் குறைய அரைமைல் தூரத்திற் கற்குன்றென்றுண்டு. கீரிமலைத் தொடரிற் காலமாற்றத்தாற் சிதைந்தவையெல்லாம் போக இன்று அப்பெயரால் எஞ்சி நிற்கும் பகுதியே அக்குன்றாகும். அதுவும் கடல் விளிம்போடே காட்சியளிக்கின்றது. அப்பகுதியி லிருந்து சில சிற்றருவிகள் சுரந்தோடிக் கடலுட் கலக்கின்றன. முற்சொன்ன கேணிக்கும் இக்குன்றுப் பிரதேசத்திற்குமிடையே இன்னுமோர் நீரூற்றுண்டு. எங்குங் கடல் மேவிவிட்டமையால் தற்போதைய கரையிலிருந்து சுமார் பத்தடி தூரம் உள்ளே புகுந்துதான் அதனைக் காணலாகும். அவ்வூற்றுக் கிழக்குத் தீர்த்தச் சுனை என்ற பெயரால் வழங்கிவருகின்றது. இச்சுனைக்கெதிராகத் தெற்குநோக்கிச் செல்லும் அகன்ற சாலையொன்றுள்ளது. இருமருங்குஞ் செழித்தோங்கி நிற்குந் தென்னைமரங்களினூடே செல்லும் அச்சாலையின் முடிவில் வடக்குநோக்கிப் பிரமாண்டமான சமாதிக் கோயிலொன்றுண்டு. மந்திரி சேனாதிபதி முதலானோர் தன் பக்கத்திலே தத்தமக்குரிய ஸ்தானங்களி லமர்ந்திருக்கத் தான் கெம்பீரமாக வீற்றிருந்து விளங்கும் வேந்தன்போல வலக்கைப்புறமாகச் சற்று அண்மையில் இன்னுமோர் சிறு சமாதிக் கோயிலும் அப்பால் வெவ்வேறு அமைப்பிற் சிற்சில சமாதிகளும் அமைந்திருக்கத் தான் உயர்ந்தும் நீண்டும் தோற்றமளிக்கின்றது அச்சமாதிக் கோயில். இக்கோயிலின் மூலக்கருவாய் அமைந்துள்ளவர் குழந்தைவேற் சுவாமிகள்.

யாழ்ப்பாணக் குருபரம்பரையின் முதல்வராகிய கடையிற்சுவாமிகளின் ஞானவாரிசாகவும் சீடர்திலகமாகவும் விளங்கியவர் குழந்தைவேற் சுவாமிகள். சிவபுண்ணியப் பேறுடைய பக்குவசீலர்கள் பலரையாட்கொண்டு பெருங் குருமூர்த்தியாய்த் திகழ்ந்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர். தற்போது சுவாமிகளின் சமாதிக் கோயிலை அணுகி அடிபிரியாது, அவருடைய சீடர்களா யிருந்த வர்கள் சமாதிக் கோயிலுஞ் சமாதிகளுங் கொண்டிருக் குந் தோற்றமானது, சுவாமிகள் சமாதிகூடுவதற்கு முன் அச்சீடர்கள் அடிபிரியாதிருந்து ஆணைவழுவா தொழுகிப் பணிபுரிந்தவாற்றையும் சுவாமிகளை நடுநா யகமாக வைத்துச் சீடர்கள் குருபூசைசெய்து வழிபட்ட வாற்றையும் எஞ்ஞான்றும் நிதர்சனமாக அறிவித்துக் கொண்டிருப்பதாகும்.

இக்குழந்தைவேற் சுவாமிகளின் ஜன்மபூமி வேல ணைப் பதியின் மேற்கூர்ப் பிரதேசமாகும். சைவ வேளாண் மரபொழுக்கத்துக்கும், சைவாசார அனுஷ் டானச் சிறப்புக்கும், கல்வி கேள்விச் செழிப்புக்கும், பக்தி ஞான வைராக்கியப் பேற்றுக்கும் என்றென் றைக்கும் பெயர்பெற்ற பதி வேலணைப் பதி. இதனோ டொத்துப் பேசத்தகுந்த மகிமையுள்ள மற்றோர் பதி வண்ணார்பண்ணைப் பதி. சுவாமிகளின் தவத் தந்தை யாருந் தவத் தாயாரும் முறையே அவ்விரண்டு பதி களையுஞ் சார்ந்தவர்கள். தந்தையார் சண்முகநாதன் என்றும் தாயார் தெய்வானைப்பிள்ளை என்றும் பெயர் பெற்றுள்ளனர். தவச்செல்வர்களாகிய அப்பெற் றோர்க்குத் தவப்புதல்வரா யவதரித்தார் சுவாமிகள். 'தவமுந் தவமுடையார்க் காகும்' என்பது இதற்கும் பொருந்தும் போலும்.

தம் மகன் பிற்காலத்திற் சுவாமிகளாய்த் திகழ் வார் என்பது அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கக் கூடும்? எத்துணைப் பெரியவராயினும் பெற்றோர் பாவனையில் பிள்ளை பிள்ளைதான். சாதாரணமாக குழந்தைவேல் என்றே பெற்றோர் அவர்க்குப் பெயரிட் டழைத்துவந்தனர். குழந்தை எக்காலத்திலும் எல்லா ருடைய பாராட்டுக்கு முரியதொன்று. அதுபோலவே இவரும் எக்காலத்திலும் எல்லாருடைய பாராட்டுதலுக் கும் உரியவராய் இருப்பார் என்ற அருட்குறிப்பினுற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலும் பெற்றோர் நாவில் இப்பெயர் உதயமாயிற்று. எனினும், குழந்தை கருவிலே திருவுடையதாய்ப் பிறந்திருக்கிறதென்பதை விவேகமுடையோர் அநுமானிக்கத் தவறியிருக்கமாட்டார்கள்.

சிறுவராயிருந்த காலத்திலேயே எல்லாருடைய பாராட்டும் எல்லாருடைய சீராட்டும் பெற்றவராய்க் குழந்தைவேல் வளர்ந்துவருவாராயினர். கண்டோரைக் கவரக்கூடிய திருவுருப் பொலிவும், கேட்டார் வியப்படையக்கூடிய விவேகத் திறனும் அவர்பால் விளக்கமுற் றிருந்தன. சிறுவராயிருந்து அவர் விளையாடிவிட்ட பால்ய விளையாட்டுக்களெல்லாம், பிற்காலத்தில் கடையிற்சுவாமிகளின் திருவாக்கால் 'விளையாட்டா' என்ற அருண்மொழி பெற்று அவர் விளையாடப் போகும் ஞானத் திருவிளையாடல்களின் ஒத்திகையாயிருந்தன. 'வாழும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும்' என்பது பழமொழி. உறவினர்களும தோழர்களுமாகிய சிறுவர்களெல்லாம் ஆசையோடு அவரைச் சூழ்ந்துகொள்வார்கள். அவரே தமக்குத் தலைவரென்று கொண்டு அவர் குறிப்பின்படி நடந்து விளையாடி இன்புற்ற பாலர் திருக்கூட்டக் காட்சியானது பிற்காலத்தில் அவரைத் தலைவராகக் கொண்டு சுற்றிச் சூழ்ந்து விளங்கவிருக்கும் அடியார் திருக்கூட்டக் காட்சியே நிழலிட்டுக்கொண் டிருப்பதுபோ லாயிற்று. வாழ்க்கை முழுவதும் மண்வீடுமல்ல, மணல்வீடே என்று காட்டுவார்போலத் தம் தோழர்களுடன் மணல் வீடுங் கட்டி விளையாடுவார். வாழ்க்கையாகிய மணல் வீட்டை இன்னும் ஏன்தான் வைத்திருக்கவேண்டும்! என்பார்போலக் கட்டின வீட்டைத் தட்டி யழித்தும் விடுவார். தம்முடைய இந்த முன்மாதிரியை உணராது வேறு சிலர் இன்னும் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண் டிருக்கக் காணின் விரைந்தோடிப்போய்த் தட்டிச் சிதைத்தும் விடுவார். ஆக்குதற்கும் அவரே முதலாய் நிற்பர்; அழிப்பதற்கும் அவரே முதலாய் நிற்பர். புலிக்குட்டிகளாற் சூழப்பெற்ற இளஞ் சிங்கக் குருளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலச் சிறுவர் குழாத்தின் மத்தியிலே குழந்தைவேல் திகழ்ந்துவருங் காட்சிப் பொலிவைக் கண்டுகளிக்கத் தவஞ்செய்திருந்தனர் வேலணை மேற்கூரார். யாரொடு கூடி விளையாடுகின்றோ மென்பதை அறியாமலே அவ ரொடு கூடி விளையாடிய சிறுவர்கள் அத்தனைபேரும் பாக்கியவான்கள்.

இன்னுஞ் சில வருடங்களிலே சிவத்துவ விவேகம் பெறவிருந்த குழந்தைவேலுக்கு வித்தியா விவேகஞ் சொந்தமே சொந்தம். எனினும், கால தேச வர்த்தமா னப்படி பெற்றோர் உரியகாலத்தில் அவருக்கு வித்தியா ரம்பஞ் செய்வித்து வைத்தனர். அவர் எண்ணும் எழுத்தும் விரைவில் நிரம்பி இலக்கணம் இலக்கியம் ஆங்கிலம் அனைத்திலும் முதன்மையாகத் தேறிவந் தார். எந்தப் பாடமும் அவர் வருந்திக் கற்கவேண் டுஞ் சரக்கா யிருக்கவில்லை ஏதோ குறையாயிருக்கும் பிராரப்தத்தை விரைவிற் கழித்து முடித்துவிடுபவர் போல அடுத்தடுத்துத் தொடர்ந்து வகுப்பேறிக் கொண்டுவந்தார். எதனைக் கற்றபோதிலும், 'அலகில் கலையின் பொருட்கெல்லை ஆடுங் கழலே' என்ற உண்மை அவர்தம் உள்ளுணர்விலே ஓடிப் பரவிக் கொண் டிருப்பதாயிற்று.

அக்காலத்திலே இலங்கையில் ஆங்கில ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆங்கிலத் தேர்ச்சி யும், இயற்கை விவேகமும், உயர்குலப்பண்பு மொருங் குடையோரா யிருந்தவர்களை அரசாங்க சேவையில் மதிப்புக்குரிய பதவிகள் காத்திருந்தன. டச்சுக்காரர் காலத்தில் அரசாங்க சேவையி லீடுபட்டிருந்தோரின் சந்ததியினர் உயர்ந்த பதவிகளுக்கு அழைக்கப்பட் டனர். டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் தீவெழு கோயிற் பற்றுக்கும் ஏக முதலியாராய்த் திகழ்ந்தவர் வேலணையைச் சேர்ந்த இராசசேகர முதலியார் என்ப வர். அவருடைய சந்ததியில் நான்காந் தலைமுறை யில் உள்ளவர் குழந்தைவேலர். அத்தொடர்பில் உத்தியோகமுமொன்று உரிய காலத்தில் அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்த்துவிட்டது. உத்தியோகமும் அவர்தம் மூதன்மைக்குத் தக்கபடி முதலியார் உத்தியோகமேதான்.

குழந்தை வேலரிடத்தில் இயல்பாகவே சுடர்விட்டுக் கொண்டிருந்த தன்மானமும் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த விடுதலை வேட்கையும் எத்தகையன வென்பதைப் பிறரும் உணரச் செய்வதற்கு முனைந்து நின்ற திருவருளே அவரை இவ்வுத்தியோகத்திற் பொருத்தி வைத்திருந்த தென்னும் உண்மை பின் நிகழ்ச்சியால் துணியப்படும்.

உத்தியோகப் பொறுப்பேற்று முதலியாராகி குழந்தைவேலர் இலங்கையின் பல பாகங்களிலுங் கடமையாற்றி வந்தார். எங்கிருந்த போதிலும் எவருடன் பழகிய போதிலும் தன்மானத்துக்குஞ் சுதந்திரத்திற்கும் பங்கமேற்படாத ஒரு வகையிலேயே அவர் ஒழுகிவந்தார். உத்தியோகத்தோடு இறுக ஒட்டிக் கொள்வதற்காகத் தன்மானத்தையுஞ் சுதந்திரத்தையும் உதிர்த்துக் கொட்டிவிடுவது பொதுவில் உத்தியோகத்தரியல்பு. உலகோடும் ஒட்டிக்கொள்ளாது, உடலோடும் ஒட்டிக்கொள்ளாது தட்டிக் கழித்து விட்டுச் சீவன் முத்தராய்த் திகழவிருக்குங் குழந்தைவேலருக்கு உத்தியோகத்தோடு ஒட்டிக் கொள்ளுந் தன்மை ஏன் அமையப்போகின்றது? ஓடும் புளியம்பழமும் போலவும் தாமரையிலையுந் தண்ணீரும் போலவும் உத்தியோகத்தோடு ஒட்டாமலே உத்தியோகம் பார்த்துவந்தார் குழந்தைவேலர். அவரது தன்மானப் போக்கைக் கண்ட அக்கால மேலதிகாரிகளாகிய ஆங்கிலேயர்கள் பலதடவைகளில் அவரோடு முட்டி மோதிக்கொண்டதுண்டு. அவரின் தன்மானத்துக் கெதிர்நிற்க லாற்றாது அவர்கள் தாமே தலை குனிந்ததுமுண்டு.

'எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பது ஆன்றோர் வாக்கு. உள்ளுக் குள்ளாகத் தமக்குக் காட்சிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுக்கொண் டிருக்குந் தெய்வ ஒளியை நாடும் நாட்டம் அவருக்கு நாளுக்குநாள் அதிகரித்து வரலாயிற்று. அநுராசபுரத்தில் உத்தியோகம் பார்த்த காலத்தில் அங்கு தம் முயற்சியாற் சிறு அளவிற் கோயிலொன்றமைத்து அக்கோயிலில் வேலொன்று தாபித்துப் பூசித்துவநதார். குழந்தைவேலரின் உள்ளொளியால் ஆவாகிக்கப்பெற்ற அச்சிறு வேல் இடம்பெற்ற அச்சிறு கோயிலே இன்று கதிரேசன்கோயில் என்ற பெயரிற் கட்டிட வனப்புடன் காட்சிதருகின்றதென்று அறியப்படுகின்றது.

இங்ஙனம் அநுராசபுரத்திற் கோட்டில் முதலியாராகவும் ஆலயத்தில் அடியாராகவும் குழந்தைவேலர் வாழ்ந்துவரும் நாளில் ஒருநாள் நடந்த நிகழ்ச்சியொன்று அவர்தம் வாழ்க்கையின் திருப்பு முனையாயிற்று. அவரவர்தம்மை அவரவர் வாழ்க்கையிற் செல்லவேண்டிய அளவிற் சுணியமாய்ச் செல்லவிட்டு வேண்டியபொழுது வேண்டியபடியே மீட்டருளுந் திருவருளின் புதுமையை அறிவார் யார்?

ஒருநாள் வழக்கப்படியே கோட்டில் அலுவல் நிகழ்ந்துகொண் டிருந்தது. அன்று நீதவானாயிருந்த வெள்ளையர் திருவருட்செயலாய் ஏதோ ஒரு விஷயத்தில் இவர்மேற் சீற்றங்கொண்டார். அது காரணமாக இருவருக்கு மிடையிற் பெரும் வாக்குவாதம் நிகழ்வதாயிற்று. அவ்வெள்ளையர் புத்தியும் வெள்ளையாயினமையாற்போலும் பொதுவில் யாழ்ப்பாணத்தவர் அனைவரையுஞ் சுட்டி இழிவாகப் பேசினர். அதன் சார்பாக, குழந்தைவேலருடைய தன்மான உணர்வும் சுதந்திர வேட்கையுந் தமது சுயரூபத்தைக் காட்டிவிட்டன. அதன் விளைவாக இவரும் வெள்ளையரெல்லாரையுஞ் சுட்டி அவர்களின் ஆதிக்கவெறியையும் குடியேற்றநாட்டுச் சுதேசிகள் விஷயத்தில் அவர்கள் கொண்டிருக்கும் அலட்சிய மனப்பான்மையையும் நிர்த்தாக்ஷண்யமாகக் கண்டித்துப் பேசிவிட்டார். அத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞூற் கிளம்பிய உத்வேகத்தினுல் அக்கணமே புறப்பட்டுக் குழந்தைவேலர் வேலணைக்கு வந்து சேர்ந்துவிட்டார். பெரிய நீதவாளுகிய பெங்களுர் நீதவான் இங்கே காத்துக்கொண் டிருக்கையில் அநுராதபுர நீதவாஞேடு அவருக்கு அங்கே அலுவல் என்ன?

வேலணைக்கு வந்துசேர்ந்த குழந்தைவேலர் மனைவி வள்ளியம்மையோ டிருந்துவருவா ராயினர். அந்நாளில் அவருடைய உறவினர்கள் சிலர் ஊர்காவற்றுறைச் சுங்க இலாகாவில் வேலைபார்த்து வந்தார்கள். தம்மினும்பார்க்கத் தகைமை மிக்க தம்மவ ரொருவர் உத்தியோகமின்றி யிருப்பத் தாம் உத்தியோகம் வகிப்பதில் அவர்களுக்குத் திருப்தி யேற்படவில்லை. அதனுல் அவரையுஞ் சுங்க இலாகாவில் வேலையேற்குமாறு வலிந் திழுத்தனர். அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் குழந்தைவேலர் ஒருவாறு அதற்கிசைந்து அச்சுங்க இலாகாவில் வேலை யேற்ருர். உத்தியோக மளவில் உத்தியோகம் நடைபெறுகின்றதே தவிர அவர் உள்ளமெல்லாம் வேறெங்கேயோ சஞ்சரிப்பதாயிற்று.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஞானகுருவாய்த் திகழ்ந்தவர் கடையிற்சுவாமி அவர்கள். கடையிற் சுவாமி மண்டைதீவில்தான் இருப்பார், பெரியகடையில்தான் நிற்பார் என்று பேசுகிறவர்கள் உண்மை பேசுகிறவர் ஆகமாட்டார்கள். ஆண்டவன் எங்கும் வியாபகம்; அவரும் எங்கும் வியாபகம். எங்கெங்கு பக்குவான்மாக்கள் உளரோ அங்கங்கெல்லாம் வெளிப்பட்டு நின்றுகொண்டு எந்த எந்தக் கணத்தில் அவரவர்க்கு மலபரிபாக மேற்படுகின்றதோ அந்த அந்தக் கணத்தில் அணுப்பிசகாது அவரவர்க்கு அருள்புரியும் ஆண்டவனே அவராவர். அத்தகைய கடையிற்சுவாமிகள் வரையறுக்கப்பட்டஓரிடத்திற்றுன் நிற்பாரெனில் அது எப்படிப் பொருந்தும்? ஆன்மா அருளைத் தேடுதல் அல்ல பெருங் காரியம்; அருளைத் தேடும் ஆன்மாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் நாடி யணைதல்தான் ரசமான கட்டம். இங்கு நிற்பார்போல எங்கும் நிற்கும் கடையிற்சுவாமிகள் அன்று ஊர்காவற்றுறைச் சுங்க இலாகாக் கந்தோரின் முன்னும் நின்றுகொண்டிருந்தார். முன்னெல்லாம் கண்ணால் வேலையைப் பார்த்துக்கொண்டு கருத்தால் வேறெதையோ காண முயன்றுகொண்டிருந்த குழந்தை வேலர் அன்று கண்ணாலுங் கருத்தாலும் ஒன்றையே கண்டார். தாம் எதனைக் காண முயன்றுகொண்டிருந் தாரோ அதனைக் கண்டார். 'நீ காணக் கருதியது இதுதான்' என்று சொல்லாமற் சொல்லிக்கொண்டு நிற்பதுபோன்ற கடையிற் சுவாமிகள் திருவுருவைக் கண்டார். கண் களிக்கின்றது. கருத்தினிக்கின்றது. கண்ணையோ கருத்தையோ அவரால் நம்பவும்முடிய வில்லை. காந்தத்தின் முன்னே தானாக இழுபடுகின் றது இரும்பு — சுத்த இரும்பு. கையிலிருந்த பேனை யோடு தானாக வெளிவந்தார் குழந்தைவேலர். சுவா மிகள் முன்னிலையில் அசைவின்றிச் சும்மா நின்று கொண்டிருந்தார். ஐம்புலன்களும் ஒருங்கே அயர்ந்து போயின. கண்டகண் கண்டபடியே கண்டுகொண்டு நிற்கின்றார். அரியதொரு சந்திப்பு! தேடிக்கொண் டிருந்தவரும் நாடிக்கொண்டு வந்தவருஞ் சந்தித்த சந்திப்பு!

தம் கையிலிருந்த பேனையைக் கடையிற் சுவாமி கள் பற்றியிழுக்கும் வரையிற் குழந்தைவேலர் தெளிவு பெறவில்லை. சுவாமிகளும் பேனையைப் பற்றியிழுத் ததேயன்றிப் பிறிதொன்றும் பேசவில்லை; பேசவில்லை யென்பதும் பொருத்தமில்லை. அதுதான் அவர் பேச்சு. குருவின் பேச்சுப் பேசாத பேச்சு எனப்படும். பேனையை இழுத்த இழுவையே பெரும் பேச்சாயிற்று. 'நானாகிய நானிருக்க நீயாகிய உனக்கு உங்கே என்ன அலுவல்?, பேனையை விட்டெறி, பின்னே தொடர்ந்து வா' என்ற இந்தத் தொனியிலே அந்தப் பேச்சுக் குழந்தைவேற் சுவாமிகளின் உள்ளத்திலே குமுறி முழங்கிற்று. அவ்வளவுதான்; கடையிற் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி நடக்கின்றூர். குழந்தைவேலர் பின்னே தொடர்கின்றூர். கந்தோரி லிருந்தவர்கள் நடந்ததெல்லாங் கண்டனரோ கண்டிலரோ தெரியாது. குழந்தைவேலர் யாரையோ தொடர்ந்து செல்வதை மட்டும் சற்றுத் தூரத்திற் கண்டார்கள். சென்றவர் கந்தோருக்குத் திரும்ப வருவார்தானே என எதிர்பார்த்திருந்தார்கள். ஏமாற்றமே பதிலளித்தது. காண வேண்டியவரைக் கண்டுவிட்டவர் கந்தோருக்கு இனி ஏன் திரும்பவேண்டும்?

திருப்பெருந்துறையிலே குருமூர்த்திகளை யடைந்த திருவாதவூரடிகள் பிறகு தாமாகவே மதுரைக்குத் திரும்பவில்லை. 'நீ போகலாம்' என்று குருநாதன் விடை கொடுத்த பின்னரே அரிதிற் பிரிந்தகன்றூர். குருநாதனைத் தரிசிக்கப்பெற்றவர்கள் எவரேனும் அவருக்கே அர்ப்பணமானவர்கள். அதன்மேல் குருவின் அருள் செலுத்தும் வாழ்வே அவர்கள் வாழ்வு. அவ்வருள் வெளிவெளியாக நின்றே அவர்களைப் பணித்துக் கொண்டிருக்கும். அவர்களை மீளக் குடும்ப வாழ்விற் பணிக்கினும் அவ்வருளே பணிக்கவேண்டும். துறவு வாழவிற் பணிக்கினும் அவ்வருளே பணிக்க வேண்டும். 'குருவாக்கிற் கெதிர்வாக்கில்லை'. 'ஆயக் கடவேன் நானுந்தான் எனனதோ இங்கதிகாரம்' என்றிருப்பது சீஷன் கடமை.

சுவாமிகள்பின் சென்ற குழந்தைவேலர்க்கு இனிக் குருவின்பணியே பணி. குருநாதன் காட்டும் வழியே வழி. அவர் திரும்ப வீட்டுக்குச் செல்லும் விஷயமும் குரு பணித்தால் உண்டு; இன்றேல் இல்லை.

குருநாதனுக் காட்பட்டுவிட்ட குழந்தைவேற் சுவாமிகள் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவருக்கே அர்ப்பணித்துவிட்டார்.

'அன்றே ஆவியும் பொருளு மாக்கையும்
ஐய யாவுங்கொண் டடிமை யாக்கினுய்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அவர்பாடிய குருதோத்திரப் பாடலொன்றில் ஒரு பகுதி.

தாயின் அரவணைப்பிற் சொகுசாயிருக்குங் குழந்தைபோல குருநாதனின் அரவணைப்பிற் சொகுசாக வாழ்ந்து வருகின்றார். குழந்தைவேலர் குருநாதனின் திருவுருவினையே உள்ளும் புறமும் கண்டு கொண்டிருப்பதும் அவர்தம் கல்யாண குணங்களைக் கண்டு கண்டு வியப்பும் நயப்பும் அடைதலும், அல்லும் பகலும் அவரடிகளைப் பிரியாதிருந்து பணிவிடை புரிதலுமாக அவர் வாழ்வு ஆனந்தமாகக் கழிகின்றது.

இங்ஙனமிருந்துவரும் நாட்களில் குழந்தைவேற் சுவாமிகளுக்குத் தீக்ஷையும் உபதேசமுந் திருவருட் சிறப்பினுல் நடந்தேறிவிட்டன. எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த வகையில் இது நடைபெற்றதென்பது அறிதற்கரிய காரியம். கோழி தன் முட்டையைச் சிறகினுள் அடக்கிப் பலநாட்களுக்கு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கின்றது. ஆமை தன் முட்டைகளைப் பார்த்தல் மாத்திரத்தால் அவற்றிலிருந்து பார்ப்புகள் வெளியேறச் செய்கின்றது. ஞானகுரு சீஷருக்குத் தீக்ஷை செய்யும் வகையும் அவரவர் நிலைக்கேற்ப வெவ்வேறும். சிலர்க்குப் பல்வேறு கிரியா பாகங்களுடன் பலர் மத்தியில் தீக்ஷை நிகழ்வதுண்டு. சிலர்க்கு ஆருமறியாமலே அந்தரங்கத்தில் நிகழ்வதுண்டு. 'எல்லாம் அவரவர்க்கு அருள்விட்டவழி' என்பார்கள்.

கடையிற் சுவாமிகளின் பரிச தீக்ஷையினுலே பொன்னிறமும் வாசக தீக்ஷையினுலே மெய்ஞ்ஞான விளக்கமும் பெற்று, உடலொளியும் உள்ளொளியும் ஒருங்கே துளும்பக் காட்சியளித்திருக்கின்றார் குழந்தைவேற் சுவாமிகள். வெளியே உலாவுங் காலங்களிற் பகலிற் பின்னும் இரவில் முன்னுமாக அவர் கடையிற் சுவாமிகளை அணுகிச் சென்றுகொண்டிருப்பார். தெருவில் இவர்கள் சென்றுகொண்டிருக்கக் காணப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் சிவபிரானும் அவர்தம் மூத்த திருக்குமாரராகிய விநாயகப் பெருமானும் ஒருங்கே எழுந்தருளுங் காட்சியாகவே கண்டு வியந்துகொண்டார்கள். அதனுல், கடையிற் சுவாமிகள் சிவன் அம்சமென்றும் குழந்தைவேற்சுவாமிகள் விநாயகர் அம்சமென்றுந் தமக்குட் கூறிக் குதுகலிப்பார்கள். "அண்டர் போற்றவே கயிலைநின்றெழுந் தாடித் தாண்டவம் ... ..." என்பது கடையிற் சுவாமிகள் பேரிற் குழந்தைவேற் சுவாமிகள் பாடிய ஒரு பாடற் பகுதி.

"அந்தி வண்ணன் தந்தமுதற் பிள்ளையான
ஆனைமுக னம்சமெலா மமையப்பெற்ற
சுந்தரனே ஓங்கார சொரூபத்தானே" என்பது

குழந்தைவேற் சுவாமிகள் பேரில் அருளம்பலசுவாமிகள் பாடிய ஒருபாடற் பகுதி.

குழந்தைவேற் சுவாமிகள் கடையிற் சுவாமிகளுக்குக் குருபாதசேவை புரிந்துகொண்டிருக்கும் நாட்களில் ஒருநாள் அநுராசபுரத்திலிருந்து கோட்டுக் கட்டளையொன்று வந்து சேர்ந்தது. குழந்தைவேற்சுவாமிகள் அநுராசபுர நீதவானேடு தகராறுபட்டு வந்த செய்தியை ஏலவே கண்டோம். அத்தொடர்பிலே தான் இப்போது கட்டளை வந்திருக்கிறது. கட்டளை வந்திருப்பது பற்றிக் குழந்தைவேற்சுவாமிகள் யாருடனும் பேசியதில்லை. வழக்குத் தவணைக்கு இருதினங்களுக்கு முன் அவர் வழக்கம்போலக் குருநாதனுக்குப் புரியுந் தொண்டுகளை முடித்துவிட்டு அவருடைய சந்நிதியில் நிம்மதியாக அமர்ந்திருந்தார். 'என்னடா குழந்தைவேல் என்ன வியாச்சியம்' என்ற வினு குருநாதனிடமிருந்து தோன்றியது. குழந்தைவேற் சுவாமிகள் நடுநடுங்கி வணங்கியெழுந்து வழக்குச் செய்தியைத் தெரிவித்தார். கேட்ட சுவாமிகள் வெடிபடச் சிரித்துவிட்டு, 'போகத்தானே வேண்டும்' என்ருர். குழந்தைவேற் சுவாமிகள் தாமாக எதையுஞ் சங்கற்பிக்கும் நிலையற்றவராதலின் ஒன்றும் பேசாது சும்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார். கடையிற்சுவாமிகள் அவரைப் பார்த்து, 'நீ அநுராசபுரம் போ. நான் அங்கு வருகின்றேன்' என்றார். குருநாதனின் பிரேரகத்தையே தாரகமாகக் கொண்டு குழந்தைவேற் சுவாமிகள் அநுராசபுரம் நோக்கிப் புறப்பட்டார்.

திருப்பெருந்துறையிலே குருநாதனுக்கு ஆட்பட்ட மாணிக்கவாசக சுவாமிகள் அவர் சந்நிதியை விட்டகன்றிலர். வெகுநாளாகியும் அவர் தன்னிடந் திரும்பிவராமையாற் சினங்கொண்ட பாண்டிய மன்னன் உடனே திரும்புமாறு வன்மையாக அவருக்கு ஒரு ஓலையெழுதி அனுப்பியிருந்தான். சுவாமிகள் கிடைத்த ஓலையைக் குருபரன் முன் வைத்து நின்றார்கள். அப்பொழுது குருநாதன் 'நீ மதுரைக்குப் போ நாம் குதிரைகொண்டு அவ்விடம் வருவோம்' என்று திருவாய் மலர்ந்தார்.

இறைவனருள் பண்டும் உள்ளது; இன்றும் உள்ளது; என்றும் உள்ளது. எங்கும் ஒரு தன்மைத்தாகவே உயிர்களை அளித்து வருவது. அன்று திருப்பெருந்துறையில் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உதவ முன்னின்றது. இன்று வண்ணார்பண்ணையில் குழந்தைவேற் சுவாமிகளுக்கு உதவ முன்னிற்கின்றது.

அநுராசபுரக் கோட்டில் குறிக்கப்பட்ட தினத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டது. குருநாதன் திருவருளை முன்னிட்டுக் குழந்தைவேற் சுவாமிகள் எதிரிக்குரிய பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். கோட்டுச் சம்பிரதாய முறைப்படி முதலில், 'குற்றவாளியோ சுற்றவாளியோ' என்று கேட்கப்பட்டபோது 'சுற்றவாளி' யென்றே பதிலளித்தார். வழக்காளியாகிய நீதவானின் சாட்சிகள் எல்லாம் விசாரிக்கப்பப்பட்டன. அவர் பக்கத்து நியாயவாதி வழக்கை உற்சாகமாகவே நடத்திக்கொண்டிருந்தார். விசாரணை போய்க்கொண்டிருந்த போக்கில் எதிரி குற்றவாளியாகக் காணப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார் என்றே எல்லோர் உள்ளத்திலும் பட்டது. வழக்காளி பக்கத்து விசாரணையெல்லாம் முடிவுற்றதும் நீதவான் எதிரியைப் பார்த்து 'உமது கட்சியை வாதிக்க வழக்கறிஞர் யாரேனுமுண்டோ' என வினவினர். அவர் 'இல்லை' என்று பதிலிறுத்தார். 'வழக்காளியின் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் முறையில் நீர் ஏதேனும் கேள்வி கேட்க விரும்புகின்றீரா' என்று நீதவான் அடுத்தபடியாக வினவினர். குழந்தைவேற்சுவாமிகள் ஒருநொடிப்பொழுது மேலே பார்த்தார். கோட்டுக் கட்டிடக் கூரையில் மயிலொன்று உலாவியது அவர்கண்ணிற் பட்டது. 'நான் அங்கு வருவேன்' என அன்று ஒலித்த குருவாக்கு அவர் செவிகளிலே இப்பொழுதும் ஒருகால் ஒலித்து ஓய்ந்தது. நீதவான் கேட்டகேள்வியை இரண்டாவது முறை கேட்குமுன்னரே குழந்தைவேற் சுவாமிகள் 'ஆம்' என்று பதிலளித்தார்.

கோட்டில் ஒருவகையான பரபரப்பு எழுவதுபோன்றிருந்தது. சிலர் ஆச்சரியத்துடன் குழந்தைவேற் சுவாமிகளின் முகத்தை உற்று நோக்கினர். பலர் ஏளனக் குறிப்புடன் அவரைப் பார்த்தனர். 'அற்ப மனிதர்' இவர் என்னத்தைச் செய்யப்போகின்றார்? பாவம்' என்ற அலட்சிய மனப்பான்மையுடன் வழக்காளியின் நியாயவாதி முதுகையசைத்து ஒருபக்கஞ் சாய்ந்துகொண்டு சற்றுத் திரும்பியிருந்தார்.

அங்கிலையிற் குழந்தைவேற் சுவாமிகள் கேட்ட கேள்விகள் வழக்காளி பக்கத்தைத் திணறடித்துவிட்டன. ஸ்ரீ இராமன் விட்ட அம்புகள் இராவணனிடத்தில் சீதையின் பற்று இருந்தவிடமெல்லாம் ஒன்றுமொழியாமற் தடவின என்றார் கம்பர். குழநதைவேற் சுவாமிகள் கேட்ட கேள்வகள் வழக்காளி பக்கத்தார் பொதிந்து மூடியுரைத்துவிட்ட பொய்யின் புரையிருந்த இடமெல்லாம் ஒன்றுமொழியாமற் சென்று தடவலாயின. வழக்காளியின் சாட்சிகள் தடுக்கித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுமாறித் தாமுரைத்த பொய்யைத் தாமேயொத்துக் கொள்ளுமளவுக்கு அவர்களை அக்கேள்விகள் கலக்கியடித்துவிட்டன. குழந்தைவேற்சுவாமிகள் வினவிய வினாக்களின் திட்பமும் நுட்பமும் நீதவானைப் பெரிதுங் கவர்ந்துவிட்டன. சாட்சிகள் முன்னுரைத்துள்ள வாக்குமூலங்களுக்கும் இப்போது கூறுகின்றவற்றுக்குமிடையிலுள்ள முரண்பாடுகளைக் கணித்துக் கொள்ளும் விரைவில் நீதவானின் கைவிரல்கள் வழக்குக் கொப்பியின் ஒற்றைகளைப் புரட்டுவதிற் சுறுசுறுப்பாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. வழக்குப் போய்க் கொண்டிருந்த போக்கு எல்லோருக்கும் புதுமையாகவே யிருந்தது. வழக்காளி பக்கத்து நியாயவாதி 'கலங்கவிழ்த்த நாயகன்'போற் கலங்கினார். வழக்காளிக்குத் தலைசுழன்றது. அவர் முகத்தில் அசடு வழிந்தது. அவரிடந் தோன்றிய ஏமாற்றத்தின் சாயல் அவர்பக்கமாகிய எல்லோர் முகத்திலும் பிரதிவிம்பித்தது. அவர் கவலையோடு தம் வழக்கறிஞரைப் பார்த்தார். அவர் முகத்தை நேரே பார்க்கக் கூசியோ என்னவோ வழக்கறிஞர் தலையை நிமிர்ந்து மேலே பார்த்தார். அந்த மயில் அங்கேதான் இன்னும் உலாவிக் கொண்டிருக்கின்றது. அவரும் அதனைக் கண்டிருப்பார். நிச்சயமாக அவர் காட்டுமயில் என்றே நினைத்திருப்பார். அவரில்தான் என்ன பிழை? காட்டுகின்றவர் காட்டுவித்தால் தானே காண்பவர் காணமுடியும். ஆண்டவனருள் தானாகவே உண்ணின்று உணர்த்தாவிடில் யாருமே உண்மையை உணர முடியாது. அது காட்டாவிடிற் காண முடியாது. ஆலயங்களிலே கல்லைக் காண்கின்றவனுக்கும் கடவுளைக் காண்கின்றவனுக்கு மிடையே யுள்ள வேறுபாடும் இதிலேதான் தங்கியுள்ளது.

'காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே' என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

குறுக்கு விசாரணை முடிவில் குழந்தைவேற் சுவாமிகள் தாம் நிரபராதியென்பதற் காதாரமாகவுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயங்களைத் தொகுத்துக் கூறிவிட்டு அமைதியாக நின்றுகொண்டிருந்தார். கோடு முழுவதும் அமைதியே நிலவியது. சுவாமிகளது திருமுக மண்டலத்திற் பிரகாசித்த சாந்த ஒளியில் எல்லோர்க்கும் ஓர் ஆறுதல் ஏற்பட்டது.

அவ்வமைதியான சூழ்நிலையில் நீதிபதி ஆராய்வாகத் தமது தீர்ப்பை எழுதி முடித்தார். அவ்வழக்குச் சம்பந்தமான தமது தொகுப்புரையை வாசிததபின் 'இவ்வழக்கில் எதிரியாகக் கொணரப்பெற்ற திரு. குழந்தைவேல் நிரபராதியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்' என்று தீர்ப்பளிததார். விருப்பு வெறுப்பற்ற ஒரு சூழ்நிலையில் அத்தீர்ப்பு எழுந்திருப்பதாக ஒவ்வொருவருடைய மனச்சாட்சியும் அவரவர்க்குக் கூறிற்று. சித்த விகாரமற்ற நிலையில் அத்தீர்ப்பைக் கேட்டுக்கொண்டு சிங்கம்போல் வெளியேறினார் குழந்தைவேற்சுவாமிகள்.

ஆண்டவனே நீதி வடிவானவன். 'பங்கயத்தயனும் மாலறியா நீதியே' என்று ஆண்டவனைப் போற்றுகின்றார் மாணிக்கவாசகர். ஆண்டவனருளுக்கு முழுவதும் பாத்திரமாகிய அன்பர்களும் அங்ஙனமே. அவர்களிடத்தில் என்றென்றைக்கும் நீதி சாந்நித்தியமாயிருந்துகொண் டிருக்கும். மற்றவர்கள் அவர்கள் மேல் வலிந்து தொடரும் வியாச்சியங்களுஞ் சட்டப் புரட்டுக்களும் அவர்களளவிற் கட்டாயமாகத் தோல்வியடையும் அவர்தம் அருட்பிரபாவத்தின் முன் அவையனைத்துந் தூசுகளாய்ப் பறந்து மறையும்.

'போய வினையும் புகுதருவான் நின்றதுவும்
தீயினில் தூசாகும் திகழ்தேல் ஓர் எம்பாவாய்'

— திருப்பாவை

அநுராசபுரத்திலிருந்து திரும்பிய குழந்தைவேற் சுவாமிகள் முன்போற் குருபாத சேவை புரிந்து கொண்டிருந்தார். ஒருநாள் வழக்கம்போலப் பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. பூசை முடிவிற் கடையிற் சுவாமிகள் எழுந்துநின்று ஆனந்தக்கூத்தாடி 'அடே கிரியிலே துரையன் வந்திருக்கின்முன் வெள்ளித்தட்டு வைத்துக் கண்டுகொண்டு வாருங்களடா' என்றார். அவர் கிரியென்றது இன்னதென்பதை ஒருவாறு ஊகித்தறிந்துகொண்டு குழந்தைவேற் சுவாமிகள் அடியார்களுடன் கீரிமலைக்குச் சென்று பார்த்தார். அங்கே மலையின் ஒரு பகுதியிற் சீவன்முக்த சீலராகிய சுவாமிகள் ஒருவர் வீற்றிருப்பக் கண்டார். குருவருளை நினைந்து நினைந்து வியப்புற்றுக் குழந்தைவேற் சுவாமிகள் கீரிமலைச் சுவாமிகளை வணங்கிப் பணிந்து அவர்தம பேரருளுக்குப் பெரிதும் பாத்திரமானார். இந்தக் கீரிமலைச் சுவாமிகளே பரமகுரு சுவாமிகள் என்பவர். பரமகுரு சுவாமிகளிடம் பழகுங் காலத்திற் குழந்தைவேற் சுவாமிகள் கீரிமலை, வண்ணார்பண்ணை என்ற இரு இடங்களிலுந் தொண்டு புரிய வேண்டியிருந்தது. அதற்காக மாறிமாறி இங்குமங்கும் போக்குவரவு புரியவேண்டியதாயிற்று. ஒருநாள் அவர் கீரிமலையிலிருந்து திரும்பும்போது பரமகுரு சுவாமிகள் அவரை நோக்கி, 'நீ நாளைக்கு வெள்ளெனவே இவ்விடம் வந்துவிடவேண்டும்' எனப் பணித்தார். அதனைக் கேட்டுக்கொண்டு வண்ணார் பண்ணைக்கு வந்த சுவாமிகள் மறுநாள் வெள்ளெனக் கீரிமலைக்குத் திரும்ப முடியாதிருந்தது, கடையிற் சுவாமிகளின் தொண்டு முடித்து அருள்விடை பெற்றுக்கொண்டு கீரிமலைக்குப்போய்ச்சேர நெடுநேரமாயிற்று. அவரைக்கண்ட பரமகுரு சுவாமிகள் சந்தோஷந் ததும்ப, 'வெள்ளென வரும்படியல்லவா உன்னிடஞ் சொல்லியிருந்தேன்; மறந்துவிட்டாயா?' என்றார். குழந்தைவேற் சுவாமிகள் வணங்கி எழுந்து 'சுவாமீ! சிவம் ஒன்று இரண்டா' என்ற வினாவாலேயே அவருடைய வினாவுக்குப் பதிலளித்தார் அதுகேட்டு மகிழ்ந்தருளிய பரமகுரு சுவாமிகள் அவரைத் தம்மருகில் உட்கார வைதது உபதேசம் புரிந்தருளினார். கடையிற் சுவாமிகளே பரமகுரு சுவாமிகளை இக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவிலிருந்து இங்கழைத்துக் குழந்தைவேற் சுவாமிக ளுக்கு உபதேசஞ் செய்வித்தருளினர் என்று அருளம் பல சுவாமிகள் தம் கையொப்பத்தோடு வெளியிட்ட வெளியீடொன்று கூறுகின்றது.

பரமகுருசுவாமிகள் சிலகாலம் கீரிமலையிலிருந்து பின் வேறிடத்திற்கு எழுந்தருளிவிட்டார்கள். அதன் மேற் குழந்தைவேற் சுவாமிகள் தம் முதற்பெருங் குரவராகிய கடையிற் சுவாமிகளுடனேயே இருந்து வருகின்றார். கடையிற் சுவாமிகள் வண்ணார்பண்ணை யில் இருந்தால் வண்ணார்பண்ணையிலும், மண்டை தீவிலிருந்தால் மண்டைதீவிலுங் குழந்தைவேற் சுவா மிகளுங் காணப்படுவார்.

அந்நாட்களில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களி லும், மண்டைதீவிலும் கடையிற் சுவாமிகளது அடி யார் வீடுகளில், விசேடமாக ஞாயிற்றுக்கிழமைகளி லும், சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து மற்றும் நாட்களிலும் குருபூசை நிகழ்வதுண்டு. அவ்விடங்க ளிற் கடையிற் சுவாமிகளுக்கு விசேட ஆராதனைச் சிறப்புக்கள் நிகழும். அதிற் கலந்துகொள்ளும் அன் பர்களும் அடியார்களும் தேவார திருவாசக பாரா யணமுங் குருதோத்திரமும் புரிவார்கள். பொதுமக் களும் இவற்றிற் பங்குபற்றிப் பயன்பெறுவார்கள். சுவாமிகளின் சீஷர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் குருபூசையிலுந் தவறாது பங்குபற்றுவார்கள். குழந் தைவேற் சுவாமிகள் அவர்களுள் தலைமைபெற்று விளங்குவார்.

ஒருநாள் மண்டைதீவிலே குருபூசை நிகழ ஏற்பா டாகியிருந்தது. அன்று குழந்தைவேற் சுவாமிகள் யாழ்ப்பாணத்திலிருந்து மண்டைதீவுக்குப் போய்ச் சேரக் காலதாமதமாயிற்று. வழக்கம்போல் வேளைக் குப் பூசையைத் தொடங்குவதற்குப் பலமுறை அன் பர்கள் முயன்றனர். உத்தரவாகவில்லை. கடையிற் சுவாமிகள் பூசையைத் தடுத்து வைத்துக்கொண்டிருந்

தார். சுமார் இரண்டு மணியளவில், 'சரி, இனித் தொடங்கலாம்' என உத்தரவு பிறந்தது. எல்லா ஆயத்தங்களோடும் பூசை தொடங்குந் தறுவாயிற் குழந்தைவேற் சுவாமிகளும் போய்ச் சேர்ந்தார். கடையிற் சுவாமிகள் 'வாடா குழந்தைவேலா வந்து பக்கத்திலே இரு' என்று அவரை அழைத்துத் தம் திருக்கையாற் பற்றித் தம் வலப்புறத்தில் இருத்தினார். 'இன்று ஏதோ விசேடம் நிகழப்போகிறதென்று எல்லோரும் பரிவோடு உற்று நோக்கிக்கொண் டிருந்தார்கள். பூசை ஆரம்பிக்கும்போது பூசகர் கடையிற் சுவாமிகளுக்குத் தீபாராதனை புரியத் தொடங்குதலும் 'இங்கே இவனுக்கும்' என்று சுவாமிகளின் கட்டளை பிறந்தது. பூசை முழுவதிலும் அன்று குழந்தைவேற் சுவாமிகளுக்குஞ் சமபங்காயிற்று. பூசை முடிவிற் கடையிற் சுவாமிகள் குழந்தைவேற் சுவாமிகளைப் பார்த்து, 'இனி நல்லாய் விளையாடடா' என்று ஆனந்தந் துளும்பக் கூறிக் குதூகலித்தார்கள். அடியார் கூட்டம் ஆனந்தமுற்றது. திருவாரூரில் தியாகராசப் பெருமான் 'வாழி மண்மேல் விளையாடுவாய்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அன்று அருளினர். அவ்வாக்கின் பயனை முன் உணராதிருந்தோரும் இந் நிகழ்ச்சியில் வைத்து இனிது உணரக்கூடியதாயிற்று. இந்நிகழ்ச்சியையே குழந்தைவேற் சுவாமிகள் குருத்துவம் பெற்ற நிகழ்ச்சியாக அன்பர்கள் பலருஞ் சொல்லிப் போற்றுவாராயினர்.

குழந்தைவேற் சுவாமிகளுக்குக் குருத்துவமளித்துச் சுமார் இரண்டு வருடங்களாயின. அவ்வெல்லையிற் சுவாமிகள் சமாதிகூடுங் காலம் ஆயிற்று. அந் நாட்களிற் கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலையடி என்னும் பகுதியில் தங்கியிருந்து வந்தார். குழந்தைவேற் சுவாமிகள் குருமூர்த்தியைப் பிரியாதிருந்து ஆராமையோடு பணிபுரிந்து வந்தார். சுவாமிகளின் ஆணையின்படியே சமாதிக்குரிய முன்னேற்பாடுகளையும் அவரே கவனித்து வந்தார், சமாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவத்தையும் தொடர்ந்து நிகழவேண்டிய பூஜா கைங்கரியங்களேயும் அன்பாதரவாக நிறைவேற்றி, சுவாமிகள்மேற் குருதோத்திரமும் பாடிப் போற்றிப் பெருவாழ்வுற்றிருந்தார். கடையிற்சுவாமிகள் சமாதி கூடியதன்மேல் அவருடைய மெய்யடியார் பலர் பற்றுக்கோடின்றிப் பரிதவிக்கும் நிலேயினராயினர். ஞானகுரவர் இருவர்பால் திருவருள் நிறைவுபெற்றுக் குருத்துவ நிலேயுமெய்திப் பூரணராய்த் திகழ்ந்த குழந்தைவேற் சுவாமிகளேயே அனேவருந் தஞ்சம் புகுந்தனர். 'குழந்தைவேலா தஞ்சம்வேறிலே யுனது சரணந்தானே' என அருளம்பல சுவாமிகள் பாடிய இப்பாடற்பகுதி அன்றைய அடியார் எல்லாரினதும் உள்ளத் துடிப்பை நன்கு பிரதிபலிக்கக்கூடியதாயிருக்கின்றது.

இந்நிகழ்ச்சிக்குப்பின் குழந்தைவேற் சுவாமிகள் தமது அடியார்களுடன் யாழ்ப்பாணத்தின் பலவேறிடங்களிலுஞ் சென்று தங்குவதுண்டு. சில இடங்களில் அவருடைய மெய்யடியார்கள் சிலரின் வேண்டுதலிஞல் இது நிகழும் சில இடங்களில் சுவாமிகள் தம்மருட்குறிப்பின் பிரகாரமே சென்று தங்குவார்கள். அங்ஙனந் தங்குமிடங்களிற் சுவாமிகளும் அடியார்களும் ஒருகுடும்பம்போலிருநது தாமே சமைத்துண்டு கலந்து மகிழ்தலுமுண்டு. இங்ஙனம் நிகழப்பெற்று வந்த இடங்களிலொன்று கீரிமலே கீரிமலேயில் தங்கியிருக்குங் காலங்களில் அங்குள்ள பரமகுரு சுவாமிகள் மடத்தில் தொடர்ந்து ஒருவருடம்வரை தங்கி அடியாரொழுக்கமுங் குருவழிபாடும் நிகழ்த்தினர். அவ்விடத்திலே கோயிலொன்று கட்டித் திருத்தம்பலேஸ்வரரைப் பிரதிஷ்டை செய்யவும் அவ்வருடத்தில் நிகழவிருந்த அத்தோதய தீர்த்த தினத்தில் சைவப்பெருமக்கள் அவ்வயலிலே தீர்த்தமாடுதற்கு ஏற்ற வசதிகளே ஏற்படுத்தவுந் திட்டமிட்டார்கள். தீர்த்த வைபவம் அவர்கள் திட்டமிட்டவாறே நடந்தேறியது. குறித்த ஆலயமமைத்தற்காக இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணன் கோயிலிருக்குமிடத்திற் கருகில் வேண்டிய அளவு நிலம் ஒழுங்குசெய்தார்கள். அக்கோயிற் றிருப்பணிபற்றிய பொறுப்பு வடிவேலு மேஸ்திரி, பாவிலுப்பிள்ளை என்ற அன்பர்களிடம் விடப்பட்டிருந்ததென அறியப்படுகின்றது. அத்திருப்பணி நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இக்காலப் பகுதியில் இவர்கள் கீரிமலைச் சிவன் கோயிலின் வடக்கு வீதியில் கோயிலொன்றமைத்து அதில் விஷ்ணுமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்து அதன் பூசைப் பொறுப்பைச் சிவன்கோயிலையரிடம் ஒப்படைததுள்ளார்கள். அச்சிவன்கோவில் திரும்ப ஒருமுறை திருப்பணி செய்யப்பெற்றமையால் அப்பொழுதேற்படவேண்டியிருந்த மாற்றங்களையொட்டி விஷ்ணு மூர்த்தியைக் கோயிலின் உட்பிரகாரத்திற்கு மாற்றி அம்மூர்த்தியிருந்த இடத்தில் துர்க்காதேவியைப் பிரதிஷ்டை செய்துள்ளது அக்கோயிலாதீனம்.

அந்நாளிற் பருத்தித்துறையில் வாழ்ந்துவந்த ஏரம்பமூர்த்தி யென்பவர் குழந்தைவேற் சுவாமிகளின் அடியார்களிலொருவர். அவருடைய வேண்டுதலின் பேரில் சுவாமிகளும் அடியார்களும் ஒருதடவை அவர் வீட்டுக்கு எழுந்தருளயிருந்தார்கள். அவ்விடத்தில் எல்லோரும் தொடர்பாகச் சில நாட்களுக்குத் தங்கியிருந்தார்கள். அந்நாட்களில் வேளைக்குவேளை அவ்விடத்திற் பூசை வழிபாடுகள் நடைபெறும். பூசை முடிவில் அடியார்கள் கூட்டமாக இருந்துகொள்வார்கள். அவர்களிலொருவர் ஞானவாசிட்டம் வாசிப்பார். சுவாமிகள் பொருள்விளக்கிக்கொண்டிருப்பார். மற்றவர்கள் கேட்டு மகிழ்ந்திருப்பார்கள். இத்திருக்கூட்டக் காட்சி அவ்விடத்திற் புதியவரொருவரை வசீகரித்த செய்தியொன்றை இனிக்காண்போம்.

அந்நாட்களில் ஏரம்பமூர்த்தியின் வீட்டில் யாரோ சுகவீனமாயிருந்தார். அவ்வூர்ப் பரிகாரிகளிலொருவர் பாவிலுப்பிள்ளை என்பவர். அவர் மூர்க்கம்—பாவிலுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை என எல்லோராலும் அழைக்கப்படுவர். அவரே ஏரம்பமூர்த்தியின் குடும்ப வைத்தியருமாவர். அங்கு சுகவீனமாயிருந்த ஆளைப் பார்ப்பதற்கென்று பாவிலுப்பிள்ளை ஒருநாள் வந்தபொழுது குழந்தைவேற்சுவாமிகளும் அடியார்களும் குழுமியிருக்கக் கண்டார். அவர்கள் இருந்த காட்சி பாவிலுப்பிள்ளையின் கண்ணையும் கருத்தையுங் கவர்ந்து விட்டது எனினும், தாம ஒரு கிறீஸ்தவர் என்பதனுறபோலும் நேரே சென்று அக்கூட்டத்திற் கலந்து கொள்ளக் கூசி ஒருபுறமாக ஒதுங்கிச் சென்று விட்டார். செல்லும்போது அவர் உள்ளம் தானே ஒரு நேர்த்தி செய்துகொண்டது. 'நான் வழிபடும யேசுநாதர் என் மேற் கிருபையுள்ளவராஞல் இந்தக் குழந்தைவேற் சுவாமிகள் மூலமாக என்னை ஆட்கொள்ளுவிக்க வேண்டும்' என்பதே அந்த நேர்த்திக்கடன். இரண்டொருநாள் அவர் அதே நினைவாகவே இருந்து வந்தார்.

ஒருநாள் ஞானவாசிட்ட வகுப்புத் தொடங்குமுன் சுவாமிகள் ஏரம்பமூர்த்தியை அழைத்து, 'இன்றைய வகுப்புக்குப் பாவிலுப்பிள்ளையையும் வரச் சொல்லலாமே' என்ருர். இது ஏன் என்பது அவருக்குப் புரியவில்லை. ஆயினும் ஆணைப்படியே பாவிலுப்பிள்ளைக்கு அறிவித்துவிட்டார். செய்தியைக் கேட்டதும் பாவிலுப்பிள்ளை ஆச்சரியமுற்ருர். 'நேர்த்திக் கடன் கையோடு பலித்ததே' என்று நினைத்து மகிழ்ச்சியுற்ருர்; காலந்தாழ்த்தாது வகுப்புக்கு வந்து சேர்ந்தார். அன்று நடைபெற்ற பாடத்திலும் அதற்குச் சுவாமிகள் கொடுத்த விளக்கத்திலும் பாவிலுப்பிள்ளைக்கு மேலும் ஈடுபாடுண்டாயிற்று. உணவு நேரத்தையுங் கவனிக்காத வகையில் அன்றைய பாடம் நீண்டுகொண்டுபோய் நெடுநேரமாயிற்று. ஒருகட்டத்தில் சுவாமிகள் தாமாகவே பாடத்தை நிறுத்திவிட்டு, 'என்ன இன்றைக்கு ஒருவரும் சாப்பிடவில்லையே' என்ருர்கள். அடியார்கள் அதுகேட்டு அவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் போக்கில் ஆகாரங் கொண்டுவருதற்கென்று சென்றார்கள். ஒருவருக்கும் அன்று ஒரு ஆகாரமும் அப்போதைக்குக் கிடைக்கக்கூடியதாயிருக்கவில்லை. எதிர்பாராதவிதமாக ஏரம்பமூர்த்தி வீட்டிலும் அன்று காலைச்சமையல் நடைபெறவில்லை. அடியார்களிலொருவர் மிகக் கஷ்டப்பட்டு எங்கேயோ போய்க் கொஞ்சப் பாணும் 'உவைன்' போத்தலொன்றுங் கொண்டுவந்தார். அந்தப்பாணையும் உவைனையும் எல்லோருஞ் சமமாகப் பகிர்ந்துண்டனர்.

உணவு முடிந்தபின் சுவாமிகள் பாவிலுப்பிள்ளையைப் பார்த்து 'சாப்பிட்டவர்கள் எல்லாமாக எத்தனை பேர் என்று எண்ணிச் சொல்லும்' என்றார். பாவிலுப்பிள்ளை எண்ணிப் பார்த்துவிட்டுப் 'பன்னிரண்டுபேர் சாமி' என்றார். சுவாமிகள் சிரித்துக்கொண்டு, 'எப்படி, நீர் மனதில் நினைத்ததும் இதுவுஞ் சரியாயிருக்கிறதா?' என்றார்.

பாவிலுப்பிள்ளை யேசுநாதருக்கு நேர்த்தி செய்திருந்தார். யேசுநாதரின் சீடர்கள் பன்னிருவர். 'உவைன்' அவர்கள் பருகிய பானம். இங்கும் பன்னிருவரும் உவைனும் அமைந்த பொருத்தம் அதற்கு நேர் ஒப்பாக அமைந்து பாவிலுப்பிள்ளையின் உள்ளத்தை வெளிப்படுத்திவிட்டது. அதனால் சுவாமிகள் அங்ஙனம் வினவினார்.

யேசுநாதரை மன்றாடிய பாவிலுப்பிள்ளைக்கு யேசுவோடு சம்பந்தப்பட்ட பன்னிரண்டும் உவைனும் என்ற அம்சங்களுடனேயே ஆண்டவனருள் கைகூடியிருக்கின்றது. அதுவும் அவர் விரும்பியவாறே குழந்தைவேற்சுவாமிகள் மூலமாக அது கைகூடியிருக்கின்றது. "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே—மாதொரு பாகனார்தாம வருவர்' என்ற உண்மை இச்செய்தியில நன்கு தொனிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும் 'உள்ளக் கருத்தை வள்ளலறியும்' என்பது பாவிலுப்பிள்ளை விஷயத்தில் உள்ளங்கை நெல்லிக்கனி ஆயிற்று. பாவிலுப்பிள்ளை பரவசமுற்றார். ஆனந்தந் தாங்காது அழுவுற்றார் சுவாமிகள் முன்னிலையில் வீழ்ந்தழுதுகொண்டார் அன்றே தம்மை ஆட்கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டார். அந்நாட்களிற் பாவிலுப்பிள்ளை தமமெண்ணப்படி நிரம்பக் குழந்தைவேற்சுவாமிகளிடம் முறைப்படி தீக்ஷையும் உபதேசமும பெற்றுக்கொண்டார்; சுவாமிகளுக்குச் சிறந்த ஒரு சீடராய் விளங்கினர். இயல்பாகவே பாவிலுப்பிள்ளை திருப்பணி நாட்டமுடையவராயிருந்தமையால் சுவாமிகள் பேரால் அமைந்த திருப்பணிகள் சில அவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

முன்பு கீரிமலையில் குழந்தைவேற் சுவாமிகளுக்கு உபதேச குருவாய் வாய்த்திருந்த பரமகுரு சுவாமிகள் கீரிமலையை விட்டுவிலகிப் பல்வேறடங்களிற் சஞ்சாரம் புரிந்துகொண்டு ஈற்றிற் பண்ணுகம என்ற இடத்திற் சென்று தங்கியிருந்தார். பண்ணுகம் பன்னகாமம் என்றும் மாத்தனை என்றும் வழங்கும். அவ்விடத்திலேயே அவரது சமாதி வைபவமும் நிகழவிருந்தது. குழந்தைவேற் சுவாமிகள் அதனைத் திருவருட் குறிப்பாலுணர்ந்து அவர் சமாதி கூடுதற்குச் சில தினங்களுக்கு முன்பாகவே இங்கிருந்து பன்னிரண்டு சீடர்களோடுஞ் சென்று பண்ணுகத்திற் றங்கி அவரை வழிபட்டுக்கொண்டிருந்தார். ஆயிரத்துத் தொளாயிரத்து நான்காம் ஆண்டு பங்குனி மாதத்துச் சதய நட்சத்திரநாளிலே சுவாமிகள் சமாதி கூடினார்கள். குழந்தைவேற் சுவாமிகள் நாற்பது நாட்கள் வரையில் அவ்விடத்தே தங்கியிருந்து பரமகுரு சுவாமிகளின் சமாதி சம்பந்தமான பூஜா கைங்கரியங்களிற் பங்குபற்றி வழிபாடாற்றியிருந்து அவர் மேற் குருதோத்திரமும் பாடிப் போற்றி யாழ்ப்பாணந் திரும்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேற் சுவாமிகள் தொடர்ந்து பலநாட்களுக்குத் தங்கியிருக்குமிடங்களில் முக்கியமானது வண்ணார்பண்ணை. சுவாமிகளது ஒன்றுவிட்ட சகோதரி முறையினரொருவர் வண்ணார்பண்ணையில் வசித்து வந்தார். அந்த அம்மையார் அடியார் வழிபாட்டில் இயல்பாகவே ஆராமையுள்ளவர். அவர் இல்லம் அமைதி நிலவும் இடமாயமைந்திருந்தது. வண்ணார் பண்ணையில் குழந்தைவேற் சுவாமிகள் தங்கியிருக்குமிடம் அவ்வில்லமேயாகும். நாற்றிசையிலிருந்தும் அன்பர்களும் அடியார்களும் அங்கு வந்து அடியார் பூசையிற் கலந்து மகிழ்ந்து செல்வார்கள். யாழ்ப்பாணத்திலே அடியார் பூசைச் செழிப்பும் அடியாரொழுக்க நெறிகளும் குழந்தைவேற்சுவாமிகள் தலைமையிற் சிறப்படைந்து வந்துள்ளன. வண்ணார்பண்ணையிற்கூடும் அடியார் கூட்டங்களிற் சீடாசாரம், சீவன்முத்தரியல்பு, அத்துவித முத்திநெறி முதலியவற்றைப் பற்றிய போதனைகள் குழந்தைவேற் சுவாமிகளால் நிகழ்த்தப்படும். ஞானவாசிட்டம் என்ற நூலில் ஒவ்வோர் பகுதி ஒவ்வொருநாளும் வாசிக்கப்படும். சுவாமிகளைத் தரிசிக்கச் செல்லுஞ் சீடர்கள் ஒவ்வொருவரும் எப்பொழுதும் ஏதானுமொவ்வோர் விசாரத்துடனேயே சென்றிருப்பார். ஐக்கியம் அத்துவிதம் முதலாகிய பல்வேறு விஷயங்களில் ஏதேனும் ஒவ்வொன்று பற்றி அன்று சுவாமிகளிடத்திற் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தனித்தனி ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட்டிருக்கும். சென்றவர்கள் எல்லோரும் அவ்விடத்தில் நடைபெறும் பூசை, பிரார்த்தனை, உபதேசம் என்பவற்றிற் கலந்து மெய்ம்மறந்திருப்பர். "ஞானவாசிட்டத்தை வாசியுங்கள்" என்று ஆணைபிறந்ததும் குறிக்கப்பட்ட ஒருவர் அதில் ஏதேனுமொரு பகுதியை எடுத்து வாசிப்பார். அன்பர்கள் தத்தமளவில் நினைத்திருந்த கேள்விகளுக்கெல்லாம் அவரவர்பாட்டிலே விடை விளங்கிவிடும். எல்லாம் முடிந்து புறப்பட்டு வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வந்த பின்னரே ஒவ்வொருவரும் அன்றன்று தாம் தாம் கேட்கக் கருதிவந்த விஷயங்களையும் அவை யவை தத்தமக்கு விளக்கமாகியவாற்றையும் ஒருவருக் கொருவர் கூறி வியப்படைவார்கள். ஒளியின் சந் நிதி மாத்திரையானே இருள் விலகிவிடுகின்றது. குருவின் சந்நிதி மாத்திரையானே சந்தேகங்கள் நீங்கி விடுகின்றன. தக்ஷிணு மூர்த்தியாகச் சிவபெருமான் கல்லாலவிருக்ஷ நிழலில் வீற்றிருக்கின்றார். சனகர் முதலாய முனிவர் நால்வர் ஆகமப் பொருள்பற்றித் தமக்குள்ள சந்தேகத்தை அவரிடங் கேட்டுத் தீர்த் துக்கொள்வதற்காக அவரிடம் வருகின்றார்கள். வந் தவர்கள் அவராணையின்படி அவர் முன்னிலையில் அமர்ந்திருக்கின்றார்கள். அவரவர் கொண்டிருந்த சந் தேகங்களெல்லாம் அவரவர் பாட்டிலே தீர்ந்து போகின்றன.

வண்ணார்பண்ணையிற் சுவாமிகளைச் சேவித்து வந் தவர்களி லொருவர் சபாபதியார் என்பவர். அக்காலத் தில் கேட்டோர் பரவசமடையும்வண்ணம் தேவார திருவாசகங்களைப் பாடுவதில் ஒப்புயர்வற்று விளங் கிய அன்பர்கள் சிலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந் தனர். தேவாரப் பண்ணுக்குப் பொன்னுக்கண்டுவும் திருவாசகத்துக்குச் சுப்பையாவும், திருத்தாண்டகத் திற்குச் சுப்புக்குட்டியம்மையாரும் பெயர்பெற்றவர் கள். குறித்த சபாபதியாரும் திருவாசகம் பாடுதலில் சுப்பையாவுக்கு ஒப்பான திறமையுடையவரா யிருந் தார். சபாபதியாரைப் பொதுவாக எல்லாருங் கணக் கர் என்று அழைப்பது வழக்கம்.

சபாபதியார் சுவாமிகளைச் சேவித்துவிட்டு வீடு திரும்புகையில் அவரை வழிமறித்து வாக்குவாதம் புரியச் சிலர் காத்திருப்பர். குருநெறி யொழுக்கம்பற் றித் தப்பபிப்பிராயங் கொண்டவர்களும், சந்தேகக் கண்ணர்களும், குருபாதசேவையின் பயனை யுணர்ந்து கொள்ளாதவர்களும் இவருள் இருப்பர். இவர்கள் சபாபதியாரை வாதுக்கு வலிந்திழுத்துத் தம் மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன போக்கிலெல்லாம் அவரோடு பேசுவார்கள். எப்படியாவது அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு வீடுபோய்ச் சேர்வது அவருக்குப் பரம சங்கடமாய் விடும்.

அத்தகையவருள் குறிப்பிடத்தக்கவர் அத்தெருவில் வசித்துவந்த இராமநாதர் — அருளம்பலமென்பவர். அவர் அக்காலத்தில் அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருந்தார். அவர் பொதுவில் 'கிளாக்கர்' என்று பலராலும் அழைக்கப்பட்டுவந்தார். கிளாக்கர் கணக்கரை மறித்து வாக்குவாதந் தொடங்கவே 'கணக்கர் என்னவாம்' என்று கேட்டுக்கொண்டு பலர் அவ்விடத்திற் கூடிவிடுவர். மற்றதெல்லா மிருக்கட்டும். மனிதனுக்கு மனிதன் பூசை செய்யலாமா? என்பதுதான் கிளாக்கரின் முக்கியமான கேள்வி. அதற்குப் பதிலாகக் கணக்கர் எவ்வளவு சொல்லியபொழுதும் கிளாக்கர் ஒத்துக்கொள்வதில்லை. கணக்கர் ஏதோ ஒருவாற்ருன் அவ்விடத்தைவிட்டு விலகிக்கொள்ள வேண்டியிருக்கும். 'இவர்களுக்கு என்றுதான் நல்லுணர்வு வாய்க்குமோ' என்று தம்மளவில் நொந்துகொண்டு சபாபதியார் வீடு செல்வர்.

வெளிக்கு எவ்வளவுதான் சபாபதியாரோடு வாதாடிய போதிலும் 'இதற்குள்ளே ஏதோ ஒருண்மையிருக்கத்தான் வேண்டும்' என்று அருளம்பலமவர்கள் உள்ளூர உணர்ந்தார்கள். அவர்தம் உள்ளுணர்வு நாளுக்குநாள் வலுப்பெற்று வருவதாயிற்று. குழந்தைவேற் சுவாமிகளையும், அவருடைய சீடர்களையும், அங்கு நடக்கும் பூஜா கைங்கரியங்களேயும் முன்பெல்லாம் சந்தேகக் கண்கொண்டு நோக்கிவந்த அருளம்பலமவர்கள் இப்போது உண்மைக் கண்கொண்டு நோக்கத் தொடங்கிவிட்டார். இருந்தாலும் நேரே சுவாமிகளிடஞ் செல்லத் தைரியம் ஏற்படவில்லை. சுவாமிகளிடஞ் செல்லாமல் சற்றுத் தூரமாக ஒட்டி மறைந்து நின்று நின்று அங்கு நடப்பனவற்றை அவதானித்தும் அநுபவித்தும் வருவாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேற் சுவாமிகளுக்கு அவ்விடத்தில் ஞாயிற்றுக்கிழமைதோறும் விசேடபூசை நடைபெறும். பூசைமுடிவில் மகேசுரபூசையும் நிகழும். இவைபெரும் பாலும் பகல்வேளையோடு முடிந்துபோகும். அடியார் கள் பலர் அவ்வளவிற் புறப்பட்டுப் போய்விடுவார் கள். சுவாமிகள் குறிப்பின்படி அடியார்கள் சிலர் இரவிலும் நெடுநேரந் தங்கியிருந்து திருமுறையோது வார்கள்; சித்தாந்த விசாரணை நடத்துவார்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கம்போலப் பகற்பூசனை கள் முடிவுற்றன. குறித்த சபாபதியாரும் மற்றுஞ் சிலரும் அன்றிரவு அங்கே தங்யிருந்தார்கள். சபா பதியார் பக்திரசந் ததும்பத் திருவாசகம் பாடிக் கொண்டிருந்தார். அவ்விடத்தில் இருந்தவர்கள் திரு வாசக இசையிற் சொக்கிப்போயிருந்தார்கள். கடை சியாகச் சபாபதியார் 'உடையாள் உன்தன் நடுவிருக் கும் ... ...' என்று உருக்கமாக எடுத்த எடுப்பு அன்று எல்லோரையும் உருக்கிவிட்டது. அப்பாடலில் 'அடி யேனுன்னடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரிய ய்' எனச் சபாபதியார் எச்சிலே பிடித்தபிடி அன்று புதி தாக ஒரு சீவனைப் பிடித்தேவிட்டது. பாடலை முறை யாகப் பாடி முடித்துவிட்டு விழுந்து கும்பிட்டெழுந்த சபாபதியார் ஏதோ அசுகைகண்டு திடீரெனப் பின் பக்கம் திரும்பினார்.

அன்று நிலாவேளை. சுவாமிகளும் அடியார்களும் அமர்ந்திருந்த இடம் வீட்டின் முன்விறாந்தை. முற் றத்திலே ஓர் ஆள் மறையக்கூடிய அளவுக்கு உயர மான கிடுகுவேலி, நிலத்துக்கும் கிடுகின் கீழ்நிரைக் கும் இடையே ஒரு சாண்ளவுக்குமேல் இடைவெளி. அந்த வெளியினூடே வெள்ளையாக ஏதோ அசையுஞ் சாடையிருந்தது. காற்கட்டுப் பக்கமாக வேட்டித் தலைப்பு அசைவதாகத் தெரிந்தது. சபாபதியார் நாலு அடி எட்டி வேலியோரஞ் சென்று எட்டிப் பார்த்தார். அதனைக் கடைக்கணித்த சுவாமிகள் 'அது என்ன கணக்கர்?' என்று வினவினார். சபாபதியார் குதூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்துடன் 'அது கிளாக்கர்' என்று பதிலளித்தார். சுவாமிகள் சிரித்துக்கொண்டே 'ஓகோ! கிளாக்கர் வந்துவிட்டாரா? நல்ல காரியம், ஒன்றுங் குறை வில்லை, அவரை இங்கே வரச்சொல்லும்' என்ருர்.

உத்தரவு பிறந்த மாத்திரத்தே அருளம்பலமவர்கள் சுவாமிகள் முன்வந்து கைகூம்ப உடல்பதறக் குறுவியர்வை கொள்ள நடுநடுங்கி நின்ருர். சுவாமிகள் இருந்தவாறே அவரைக் குனிவித்துத் தம் திருக் கையால் அவர் நெற்றியில் திருநீற்றுக் காப்பிட்டு அருள்புரிந்தார். தம்மை மறந்த நிலையில் அருளம்பலமவர்கள் சுவாமிகள்முன் சாஷ்டாங்கமாக விழுந்தார். கண்ணீர்ப் பெருக்கால் நிலம் நனைந்தது. உடலெங்கும் வியர்வைநீர் காலெடுத்துப் பரவிற்று. இந்நிகழ்ச்சியை ஆராமையொழுகப் பார்த்து அநுபவித்தார்கள் அடியார்களெல்லோரும்.

சற்று நேரத்திலே அருளம்பலமவர்கள் எழுந்து நின்று கும்பிட்டுருகினுர். ஏதோ சொல்ல வாயெடுத்தார். நாத்தழுதழுத்தது. தொண்டை விக்கி விக்கி, சுவாமி ... ... கணக்கருடைய பாட்டு ... ... அடியேனை ... ... இங்கே ... ... இழுத்துவிட்டது என்ருர், சுவாமிகள் புன்சிரிப்புடன் 'அப்படியா! நல்லது, இப்படி அமர்ந்திரும் என்ருர். அமர்ந்திருந்த அருளம்பலமவர்களோடு சுவாமிகள் அன்பொழுக அளவளாவினுர். அருள்! அருள்! என்று அடியார்கள் தமக்குள்ளே கூறிக் குதூகலித்தார்கள். சபாபதியார் பரிவொழுகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

குருமூர்த்தியினது இருக்கை அச்சூழல் முழுவதையுமே தூயதாக்கிவிடும்; சூழலிற் பெரும்பகுதியைக் கவர்ந்திழுத்துக்கொள்ளும்; பக்குவமுள்ள சீவன் புண்ணிய வசத்தால் அதன் செல்வாக்குக்குட்படும். எவ்வளவுதான் எதிர்மாருக நின்ருலும், எவ்வளவுதான் வலோற்காரமாக வாக்குவாதம் புரிந்தாலும் சிவபுண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணியப்பேறுள்ளவர்கள் பக்குவமுள்ளவர்களேயாவர். அத்தகையோர் நிகழ்த்தும் வாக்குவாதம் அவர்களிடத்திலே தெளிவுபிறத்தற் கேதுவாகும். ஏனையோர் புரியும் வாக்குவாதம் மேலும் மேலும் அவர்களின் அறியாமையைத் தழும்பேறப் பண்ணிக்கொண்டிருக்கும்.

சுவாமி விவேகானந்தரும் மாணவராய் இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்கச் சென்றபோது 'நீர் கடவுளைக் கண்டீரோ' என்றுதான் கேட்டார். இக்கால மாணவர்களும் ஆசிரியர்களிடம் அதே கேள்வியைத்தான் கேட்டு வருகின்றார்கள். விவேகானந்தர் கேட்ட கேள்வி அவரிடத்தில் மெய்ஞ்ஞானத் தெளிவினை ஏற்படுத்துஞ் சாதனமாயிற்று. இன்றைய நம் மாணவர்கேட்கும் அதேகேள்வி அவர்தம நம்பிக்கையீனத்தை உறுதிப்படுத்துஞ் சாதனமாகவேயமையக் காண்கின்றோம்.

வலோற்காரமாய் வலிந்து வாதாடி வந்த அருளம்பலமவர்கள் வாதாட வாதாட அவர்க்கு உள்ளத் தெளிவு பிறந்துகொண்டு வரலாயிற்று. உள்ளந் தெளியத் தெளிய உண்மைக்குக் கிட்டக்கிட்ட வரலாயினர். முதலில் எட்டிநின்று நோக்கிப் பின் ஒட்டிநின்று கண்டு இப்பொழுது கிட்டிவந் தணைந்துவிட்டார். இவரோடு கூடநின்று சபாபதியாரோடு வாதாடிய மற்றெவருக்கும் அவ்வாய்ப்புக் கிடைத்திலது. இந்நிகழ்ச்சிக்குப்பின் சபாபதியாருக்கு அவர்களுடைய தொல்லை இல்லையாயிற்று. அவர்களும் மெய்யுணர்ந்தவர்கள் போலச் சபாபதியாரை அணுகாது மரியாதையாக எட்டநின்றுகொண்டார்கள்.

கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருப்போலக் குழந்தைவேற் சுவாமிகள் அருளம்பலமவர்களுக்கு ஆறுதல் நிலையமாய் அமைந்துவிட்டார். அருளம்பலமவர்கள் முன்னெல்லாம் எவ்வளவு தீவிரமாக எதிர்த்துப்பேசினரோ, பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு தீவிரமாகச் சுவாமிகளின் அருட் குணங் களில்ஈடுபடத் தொடங்கிவிட்டார். அவர்தம்தீவிர பக்கு வத்தினுக்கேற்பச் சுவாமிகளும் அவரை ஆட்கொண் டருளினர். சுவாமிகள் தம்மை ஆட்கொண்ட வாற்றை அவர் ஒருகால் அன்பால் நினைந்து என்புருகப் பாடியபாடலொன்று தத்ரூபமாகச் சித்திரிக்கின்றது:

"அன்றொருநாள் ஆச்சிரமத் தடைந்த உண்மெய்
யடியவர்முன் னடிநாயேன் தன்னை முன்னு
நின்றிடவைத் தருள்விழிநோக் குறுத்தியோர் சொல்
நெஞ்சினிடை வைத்தியெனப் பணித்தீங் திட்டாய்
கன்றிடிக்கத் தாய்சுரக்கும் வழக்கைத் தள்ளிக்
கன்னெஞ்சற் சமுதமழை காட்டி விட்ட
தன்றிறமிங் காரறிவார் குழந்தை வேலா
தஞ்சம்வே றிலையுனது சரணங் தானே"

என்பது அப்பாடல்.

வண்ணார்பண்ணையிற் குழந்தைவேற் சுவாமிகள் தொடர்ந்து சிலகாலங் தங்கியிருந்தது அருளம் பலத்தை ஆட்கொள்ளத்தான் என்று பலரும் பேசிக் கொண்டார்கள், மேற்காணும் பாடலிலும், சுவாமி கள் தம்மையாட்கொண்ட எளிமையைத்தான் அரு ளம்பலமவர்கள் நினைந்துருகுகின்றார். கன்றானது முலையில் வாயை வைத்துக்கொண்டு பலதரமும் இடித் தலும் இடிக்க இடிக்கத் தாய்ப்பசு பால் சுரந்து கொடுத்தலும் உலகறிந்த வழக்கு. சீடாசாரமுணர்ந் தொழுகி ஒருவன் குருசங்கம வழிபாட்டிலீடுபட்டுப் பலகாலும் பணிசெய்தொழுகலும், அங்ஙனம் ஒழுக ஒழுக அவனுக்குக் குருவருள் சுரந்து தோன்றுதலும் குருசிஷ்ய பரம்பரையின் வழக்கு. இங்கு அவ்வழக் குக்கு மாருகத் தன்சிரமஞ் சிறிதுமில்லா திருக்கவே சுவாமிகள் தன்பாற் கருணை பொழிந்துவிட்ட தன் மையானது கன்றிடியாமலே தாய்ப்பசு பால் சுரந்த வாருயிற்று. தம்மைச் சுவாமிகள் ஆண்டருளிய சம் பவம் உலகறிந்த அவ்வழக்கையே புரட்டிவிட்டது என்று அருமைதோன்றப் பாராட்டுகின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாக ஆகக் குழந்தைவேற்சுவாமிகளின் பிரபாவம் அதிகரித்து வரலாயிற்று. யாழ்ப்பாணத்தின் பலவேறு பகுதிகளிற் குருபூசை வைபவங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தன. இக்குருபூசை வைபவங்களிற் பக்திசிரத்தையோடு பங்குபற்றி வந்தவர்களிற் பலர் இஷ்டசித்திகளைப் பெற்றுய்ந்தார்கள். பெருமை, சிறுமை; சாதிமத பேதங்களைப் பாராட்டாது பொதுசனங்களும் இக் குருபூசைகளிற் கலந்துகொண்டனர். பிராமணர்கள் கூட இவற்றிற் கலந்துகொண்டதுண்டு. ஆனால் அவர்களுக்குப் பிரத்தியேகமான சமையல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

குழந்தைவேற் சுவாமிகளின் அடியார்களில் நவாலியூர் இராமலிங்க உபாத்தியாயர், அவர்மகன் வைத்தியலிங்கம், வண்ணைச் சபாபதியார், தெல்லிப்பழைச் சின்னப்பு, குலத்துங்கர் என்போர், காங்கேசன் துறைக் கருணாநிதி அவர்களின் பெற்றோர், நல்லூர்ப் பொன்னம்பலம், வண்ணை அருளம்பலம் ஆதியோர் சிறப்புற்றுத் திகழ்ந்தனர். அவர்களுள் அருளம்பலமவர்கள் தத்துவ விசாரமும் ஞான விவேகமும் மிகுந்தவராய் மற்றையோரிலும் பார்க்கக் கூடுதலான அளவுக்கு முமுக்ஷுத்துவம் பெற்றவராய்த் திகழ்ந்து வந்தார்.

ஒருதடவை குழந்தைமேற்சுவாமிகளும் அடியார்களும் கீரிமலையிலே தங்கியிருந்தபோது அங்குள்ள சிருப்பர் மடத்திலே குருபூசை நிகழ ஏற்பாடாகியிருந்தது. அன்றைய பூசையின்போது தீபாராதனை, அர்ச்சனை யெல்லாம் முறைப்படி நடந்தேறின. முடிவில் குழந்தைவேற்சுவாமிகள் நெடுநேரமாகத் தியான சமாதியில் ஆழ்ந்திருந்தார். அவர் கைகளிரண்டும் உள்ளங்கை மேல்நோக்கிய நிலையில் அமைந்திருந்தன. அடியார்கள் எல்லாருஞ் சுவாமிகளின் தியான சமாதியின் அமைதியைக் கண்ணிமைக்காதபடி கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் வியக்கத்தகுந்த சம்பவமொன்று நடைபெற்றது.

அன்று சுவாமிகளின் முன்னிலையில் இருந்த அடியார்களிலொருவர் நல்லூர்ப் பொன்னம்பலமவர்கள். தாய் குழந்தையை உள்ளங்கைகளில் ஏந்தி வைத்திருப்பதுபோலக் குழந்தைவேற்சுவாமிகள் ஏந்திய தம் கைகளில் வண்ணை அருளம்பலமவர்களைத் தாங்கிக் கொண்டிருப்பதான காட்சியொன்றைப் பொன்னம்பலமவர்கள் கண்டார். ஆனந்த மிகுதியினாலே அதை மற்றவர்களுக்குங் காட்ட முயன்றார்- தியான சமாதியைக் குழப்பாத வகையில் ஒவ்வொருவரையும் தனித்தனி சுரண்டிச் சுரண்டி மெதுவாக அக்காட்சியைக் காட்டினார். அவர் கண்டவாறே எல்லாருங் கண்டார்கள். எல்லோருக்கும் பெரும் அதிசயம் விளைந்தது. அன்றைய அடியார் குழுவில் அருளம்பலமவர்கள் சமுகமா யிருக்கவில்லை. அந்நாளில் அவர் யாழ்ப்பாணத்திலுமில்லை; உத்தியோக விஷயமாக அவர் மட்டக்களப்பிலிருந்து வந்தார்.

அந்நிலையில், தமக்குப்பின் அருளம்பலமவர்களே குருவாய் விளங்குதற்குரியவரென்று குழந்தைவேற் சுவாமிகள் தாமாகவே தம் அடியார்க் குணர்த்திய அருளிச்செயல் அந்நிகழ்ச்சியென்பதை எல்லோரும் நன்கு தெளிந்துகொண்டார்கள். இதனையுற்றுணர்கையில் அடியார் உள்ளங்களிலே இருவகை யுணர்ச்சிகள் தடுமாறின. தம்முள் ஒருவரான அருளம்பலமவர்கள் குழந்தைவேற்சுவாமிகளின் வாரிசாக வரப் போகிறார் என்ற ஆனந்த உணர்ச்சி ஒன்று, தம் குருமூர்த்திகள் சமாதிகூடித் தம் முன்னிலையிலிருந்து விலகுங் காலம் சமீபித்துவிட்டதோ என்ற பரிவுணர்ச்சி மற்றது. இங்ஙனம் ஒவ்வொருவருக்கும் தத்தமளவிற் புலனாகிய இக்கருத்தினை ஊர்ஜிதப் படுத்திய நிகழ்ச்சியொன்று பின் சிலநாளில் நடைபெறுவதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேற் சுவாமிகளின் பாதபரிசத்தினுல் வளம்பெற்றிருந்த இடங்களுள் நாவற்குழிச் சாவாங் கோட்டை என்ற இடமும் ஒன்று. அவ்விடத்தில் முன்பு சாவகர் என்னும் வகுப்பினர் கோட்டை யமைத்திருக்கவேண்டும். அவ்வகையில் சாவகர் கோட்டை என ஏற்பட்டிருந்த பெயர் பிறகு சாவாங் கோட்டை எனத் திரிபுற்றது. சாவகச்சேரி என்ற ஊர் அதன் அண்மையி லுண்மையுங் கருதத்தக்கதாகும்.

அவ்விடத்திற்குச் சுவாமிகளும் அடியார்களும் பல தடவைகளிற் சென்று சென்று பூசை வழிபாடு, பிரார்த்தனை, அன்னதானம் ஆதியன நிகழ்த்தி வந் தார்கள். நாளடைவில் அவ்வயலிலுள்ளார் பலர் அவற்றிலே தாமும் ஈடுபாடுற்று அவ்விடத்திற் கொட் டில் வடிவில் மடமொன்றமைத்துச் சுற்றுடலிற் பயிர் கள் வைத்துச் சோலையாக்கிவிட்டார்கள். தாம் தாம் நாட்டிய பயிர்களில் அவரவர் விசேட கவனஞ் செலுத்தி வந்தனர்.

அவ்வூரன்பரொருவர் அவ்வளவிற் சில தென்னம் பிள்ளைகளை நட்டு வளர்த்து வந்தார். அவற்றி லொன்று விரைவாக வளர்ந்து தலைப்பாளை யீன்றுவிட் டது. பாளை தோன்றிய அன்றே அவ்வன்பர் தம் வீட்டிலிருந்து பட்டுப்பணிகள், பழம், பலகாரம், பண் டங்கள், தீபதூபாதிகள் எல்லாங் கொண்டு சுற்ற மித்திரர் சூழ மேளதாளங்களுடன் வந்து தம் பெற்ற பிள்ளைக்குச் செய்யக்கூடிய சிறப்பைவிட அதிகமாக அத்தென்னம்பிள்ளைக்குச் சிறப்புச் செய்துவைத்தார்.

தாம்தாம் உண்டாக்கும் பயிர் எதுவாயினும் அதன் தலைக்கதிரோ தலைப்பாளையோ காணும்பொழுது அதற்கு ஏதேனும் ஒரு பூசைசெய்து அதனைத் தமக் குத் தந்தருளிய இறைவன் கருணையை வரவேற்றுப் போற்றிக்கொள்வது அன்றைய சாதாரண வழக்கம். ஆனுல், இத்தென்னம்பிள்ளை விஷயத்தில் இவ்வளவு சிறப்பான பூசை உபசாரங்கள் நடைபெற்றது சாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணமான தென்னம்பிள்ளை என்பதற்காகவல்ல, அடியார்மடத்துத் தென்னம்பிள்ளை என்பதற்காகவே தான். இச்செய்தி, அம்மடத்தின்பாலும், அடியார் பணியிலும் அந்த அன்பருக்கிருந்த அளவிறந்த அபிமானத்தைத்தான் காட்டுகின்றது. குறித்த நிகழ்ச்சியைத் தாம் நேரிலிருந்து கண்டதாக ஒரு பெரியவர் கூறினார். அதைச் சொல்லும்போது அவர் முகத்திற் பொலிந்த மகிழ்ச்சியை எழுதிக் காட்டுவதெங்ஙனம்?

இங்ஙனஞ் சாவாங்கோட்டை மடத்தில் எல்லோருடைய அபிமானமுங் கரிசனையும் அதிகரிக்க அதிகரிக்க மடம் நன்றாய்ச் செழித்து வருவதாயிற்று. அடியார்களிற் கூடுதலான தொகையினர் அங்கே காணப்பட்டு வந்தார்கள். சுவாமிகளும் சிலகாலம் தொடர்பாக அங்கே தங்கியிருந்தார். குருபூசையும் அடிக்கடி அவ்விடத்தில் நடைபெற்று வரலாயிற்று.

சிலவேளைகளிற் குருபூசைக்கு வேண்டிய பொருள்கள் தாமாக வந்துசேரும். சிலவேளைகளிற் பொருள் வந்து சேராமலுமிருக்கும். பூசைக்கு ஆகவேண்டியவற்றைக் கவனித்தற்குரிய அடியார்கள் அவ்வேளைகளில் தமக்குட் சங்கடப்படுவார்கள். அது எப்படியோ சுவாமிகளுக்குத் தெரிந்துவிடும். உடனே அவர்களி லொருவரை அழைத்து, 'உள்ளே பெட்டியொன்றிருக்கும் எடுத்துவா' என்பார். அவர் போய்க் கொண்டுவந்ததும் 'பெட்டிக்குள்ளே என்ன கிடக்கிறது பார்' என்பார். கொண்டுவந்தவர் பார்த்துவிட்டு, இரும்புத்துண்டு, வெள்ளித்துண்டு, செம்புத்துண்டு என இப்படி ஏதுஞ் சொல்லுவார். 'இங்கே கொண்டுவா அதை' என்று கேட்டு வாங்கிக்கொள்வார் சுவாமிகள். தாம் மட்டும் அதனைத் தனியாகக் கொண்டு போய் ஏதேதோ செய்வார். பின் சிறிது நேரத்திற் கொண்டுவந்து அவர்கையிற் கொடுத்து, 'இந்தா இதைக் கொண்டுபோய் விற்று ஆகவேண்டியதை ஒழுங்குசெய்' என்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கடையிற் கொண்டுபோய் எந்த உரைகல்லில் உரைத்தாலும் அது தங்கமாகவே யிருக்கும். அது பெரியதுண்டா யிருந்தாலுஞ்சரி, சிறிய துண்டாயிருந்தாலுஞ் சரி, அன்றைய அதன் பெறுமதிப்பணம் அன்றைய பூசைச் செலவுக்கு மட்டுமட்டாகவே யிருக்கும். ஒரு சதமும் மிஞ்சுவதில்லை.

இவ்வகையிற் பவுண் பெற்றுக்கொண்டுபோய்ப் பூசைக்குப் பொருள்வாங்கும் பணியில் சுவாமிகளின் மகனுஞ் சிலவேளைகளில் ஈடுபட்டுள்ளார். ஒரு தடவை இவ்வாறு பூசைக்குப் பொருள்கள் வாங்கும் போது அன்றைக்குப் பவுண் விற்ற காசில் ஒரு இரண்டு சதம் எடுத்துப் பிரத்தியேகமாகத் தன் வேட்டித் தலைப்பில முடிந்து வைத்துக்கொண்டார். அன்று பின்னேரம் இவர் ஏதோ அவசியமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வேலணையிலுள்ள தமது வீட்டுக்குப் போகவேண்டியிருந்தது. ஊர்காவற்றுறையி லிருந்து வேலணைக்கரைக்குப் போய்ச் சேர்வதற்கு அன்றைய வள்ளக் கூலி இரண்டுசதம் அன்று தம்மிடம் வேறு பணமின்மையால் வள்ளக்கூலிக்கு உதவட்டுமென்று தான் அந்த இரண்டு சதத்தையும் முடிந்து வைத்திருந்தார்.

அன்று வாங்கவேண்டிய பொருள்களெல்லாம் வாங்கி வண்டிமூலம்சாவாங்கோட்டைக் கனுப்பிவிட்டு அவர் யாழ்ப்பாணத்திலிருந்து நேரே ஊர்காவற்றுறைக்குப் போய்ச்சேர்ந்தார். மைம்மற் பொழுதாகி வள்ளம் புறப்படும் நேரமாயிற்று. தம் முடிச்சை எடுத்துப் பக்குவமாக அவிழ்த்தார். ஏமாற்றமே ஏமாற்றம்! காசைக் காணவில்லை. இது அவர் வாயிலிருந்து நேரிற் கேட்டறிந்த செய்தி.

இச்செய்தியை அவர் சொல்லி முடிந்ததும், 'தொண்டர் பூசைக்குத் தந்தபொருள் தோணிக் கூலிக்குதவுமென்று நினைத்தீர்களா?' என்று கேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேன், நடுங்கிய குரலில் பதிலளித்த அவர் 'பின்னை யென்ன தம்பி, மடைத்தனஞ் செய்துவிட்டேன், சாஅய்'' என்கின்றபோது அவர் மூச்சுத் திணறுவது போன்றிருந்தது. 'சுவாமியும் பிறகு அப்படித்தான் சொன்னது, அந்தப் பொருளை வேறு தேவைக்குத் தொடவும் நினைக்கக்கூடாது. அது அருள், அதற்குத் துரோகம் பண்ணலாமா' என்று அவர் தொடர்ந்து பேசியபோது அவர் கண்கள் கலங்கின.

இப்படி உலோகங்களைத் தங்கமாக்குவது ஞானிகளுக்குக் கைவந்த சித்துக்களில் ஒன்று. மெய்ஞ் ஞானிகள் அச்சித்துக்களை ஓர் அருள் வெளிப்பாடாகவே செய்வார்கள். சிவப்பணி அடியார் பணிகளை முன்னிட்டுத்தான் அவை நடைபெறும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் மெய்யடியார். அவருக்குப் பொன் கொடுக்க வேண்டுவது ஆண்டவனருள். அடியார் தேவையை முன்னிட்டு ஆண்டவன் செய்துவைக்கும் அருட்பணி அது. அதுபற்றி, திருப்புகலூரிலே திருப்பணிக்கென வந்திருந்த செங்கட்டிகளெல்லாம் பொன்கட்டிகளாக் கப்பெற்று அவருக்கு உபகரிக்கப்பட்டன. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகவேதான் அது நடைபெற்றது. திருச்செந்தூரில் விபூதிச் சாமியார் என்றொரு ஞானியார் இருந்தார். அக்கோயிலின் கருங்கல் திருப்பணியை அவரே நடத்திவந்தார். பெயருக்கேற்ப விபூதியே அவருக்கெல்லாமாயிருக்கும். திருப்பணி வேலையாளர் வேலைமுடித்து வரும்போது அவர்களுக்குத் தனித்தனி விபூதி கொடுத்துவிடுவார். கோவில் எல்லையைத் தாண்டிச் செல்கின்றபோது அவ்விபூதி அவரவர்க்குச் சேரவேண்டிய கூலிக்காசாக மாறியிருக்கும். ஒரு சதங் கூடவும் இராது; குறையவும் இராது. திருமுது குன்றத்திற் கருங்கற்றிருப்பணி நடத்திய ஞானியாருமொருவர் இதுபோலவே செய்துவந்துள்ளார். அவர் கொடுப்பது விபூதியல்ல; அக்கோயிலின் தலவிருட்சமாகத் திகழும் வன்னிமரத்தின் இலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான செயல்கள் இரசவாதம் எனப்படும். மெய்ஞ்ஞானிகள் இதனைச் சிவப்பணிக்காகச் செய்ய வேண்டிய ஒரு அருட்குறிப்பு நிகழும் வேளைகளில் மட்டுமே செய்வார்கள். அதனை ஒரு பொருளாதார உபாயமாகக் கொண்டிருப்பதில்லை. அவ்வித்தையிலே திளைத்துப்போவதுமில்லை; அதுவே தொழிலாகக் கொள்வதானால் அவர்கள் உலகம் முழுவதையுமே வாங்கிவிடலாம். உலோகத்தை இரசவாதஞ் செய்து விற்று உலகத்தை வாங்குவதில் யாதுபயன்? அச் சார்பு அவர்கட்கில்லை. 'வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்' என்று பாடுகின்ற தாயுமான சுவாமிகள 'சீ! இதுவு மொரு வேலையா?' என்ற தம்முள்ளத்தையே நமக்குத் தெரிவிக்கின்றார்.

குருவின் உபகாரத்தினாலே ஆத்மீக நெறிப்பட்டுச் செல்கின்றவர் யாரேனும் இப்படியான சித்துக்கள் கைவரும் நிலையில் அவற்றில் திளைத்து விடுவது முண்டு. அதனால் அவர் இச்சித்துக்களைத் தமக்குப் பொருள் சேர்க்கும் வழியிற் பயன்படுத்த முயல்வது முண்டு. அவ்வகையில் முயல்வோர்க்கும் என்றும் அது பலிப்பதில்லை. ஆசைவசப்பட்ட மற்றுஞ் சிலர் அவர்களை நம்பி ஏமாற்றமடைந்து அவர்களைப் பழித் துரைக்கத் தொடங்குவர். தமக்குக் கிடைக்கவிருந்த ஆத்ம லாபத்தையு மிழந்து அயலார் பழிப்புக்கும் ஆளாகின்ற இத்தகையோரை உலகம் என்றுங் கண்டு வந்துள்ளது. அதனால், இரசவாதஞ் செய்வோர் என்று கேள்வியுற்ற மாத்திரத்தே எல்லாரையுஞ் சிலர் அவமதிப்பதுமுண்டு. குழந்தைவேற்சுவாமிகள் விஷயத்தில் இப்படிப் பிழைபடக் கருதியவர்களுக்கு அவர் மகனின் செய்தி ஒரு நல்ல பாடமாயிற்று.

சுவாமிகளினுடைய இந்த இரசவாதக் கலையால் விளைந்த பயன் இன்னுமொன்றுண்டு. மடத்திலிருந்து செல்லும் பவுணை வாங்கும் பொற்கொல்லர் பலர் அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுணருமை மூலமாகச் சுவாமிகளின் அருமையை உணரத் தலைப்பட்டுவிட்டார்கள். அவர்களிற் சிலரும் சுவாமிகளின் அடியார்கூட்டத்திற் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். சுவாமிகளுடன் சேர்ந்தால் தாமும் இரசவாதம் பயின்று தம் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் அவர்களிற் சிலர் கருதியிருத்தல் கூடும். ஆனால் பலன் எதிர்மாருயிற்று. சுவாமிகள் அவர்களையே இரசவாதஞ் செய்து அடியார்களாக்கிவிட்டார்.

இங்ஙனம் பலவகையிலும் பிரசித்தி பெற்றிருந்த அச்சாவாங்கோட்டை மடத்திலே வழக்கம்போல ஒரு நாள் குருபூசைக்கு ஏற்பாடாகியிருந்தது. அன்று அடியார்கள் எல்லாரும் வழக்கமான பூசை நேரத்திற்குச் சற்று முன்பாகவே வந்துவிட்டார்கள். அருளம்பலம் அவர்களும் அன்று அங்கிருந்தார். பூசைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் பகல் பன்னிரண்டு மணிக்கே பூர்த்தியாகிவிட்டன. சுவாமிகள் பூசைக்கெழுந்தருளுவார், பூசையைத் தொடங்கலாம் என்று அடியார்கள் ஆவலோடெதிர்பார்த்து நின்ருர்கள். சுவாமிகளோ பூசை நடக்கவேண்டிய இடத்துக்கு எழுந்தருளவில்லை. அங்கேதான் வளவுக்குள் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தார். பிற்பகல் இரண்டுமணி வரையில் அவர் உலாவிக்கொண்டேயிருக்கின்ருர். குறிப்பறியாது பேசக்கூடாதென்ற அச்சத்தினுல் அடியார்கள் அவரை அணுகிக் கேட்கவில்லை. அவ் வளவின் ஓரமாகவே புகையிரதப்பாதை செல்கின்றது. சரியாக இரண்டுமணியிருக்கும். புகையிரதப்பாதையின் சிலிப்பர்க்கட்டைகளின் வழியே அவசர அவசரமாக யாரோ நடந்துவருஞ் செருப்புச் சத்தஞ் 'சடக்' 'சடக்'கென்று கேட்டது. எல்லோரும் அத்திசையை நோக்கி நின்ருர்கள். பிறரெவருமல்லர்; நல்லூர்ப் பொன்னம்பலமவர்களே வந்துகொண்டிருந்தார். அவர் படலைக்குள் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேருமுன்னரே சுவாமிகள் 'வா வா பொன்னம்பலம். விரைவிற் காலை அலம்பிக்கொண்டு வா' என்ருர்.

உடனே சுவாமிகள் பூசைக்கெழுந்தருளினுர். அருளம்பலமவர்களையும் அழைத்துத் தம் பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டார். பொன்னம்பலமவர்களையே அன்று பூசைப்பணியாற்றும்படி பணித்தார். அருளம்பலமவர்களுக்கும் அன்று சமமாகப் பூசையாற்றும்படியும் தெரிவித்தார். எல்லாம் சுவாமிகளின் குறிப்பின்படியே நடந்தேறின. பூசை முடிவிற் சுவாமிகள் அருளம்பலமவர்களை ஆசீர்வதித்துச் சிறப்புச் செய்தார்.

அருமையொழுக இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அடியாருள்ளம் பூரித்தது. கீரிமலைச் சிறுப்பர் மடத்திலே அன்று தாம் கண்ட காட்சியின் பொருளை இன்று தாம் கண்கூடாகக் காணநேர்ந்ததனைப் பொன்னம்பலமவர்கள் எண்ணியெண்ணி வியந்தார். கீரிமலை மடத்துப் பூசையின்போது பொன்னம்பலமவர்களே அக்காட்சியைக் கண்டு மற்றையோர்க்கும் காட்டியமைக்கும் இன்று பொன்னம்பலமவர்களை எதிர்பார்த்துப் பூசை தாமதிக்கப்பட்டமைக்குமிடையேயிருந்த தொடர்பை ஊகித்துப் பார்த்து அடியார் மகிழ்ந்தார்கள்; பொன்னம்பலமவர்களை முன்வைத்தே அருளம்பலமவர்களுக்குக் குருத்துவமளிக்குமாறு விளைந்த அருளைப் போற்றினுர்கள். இங்ஙனம், அருளம்பலமவர்களே குழந்தைவேற் சுவாமிகளின் ஞான வாரிசாயினுர் என்பது ஊர்ஜிதமாயிற்று.

கீரிமலைக்குச் சென்றிருக்குங் காலங்களில் சுவாமிகள் சிலவேளைகளில் அடியார்களுடன் அங்கிருந்த மணல்வெளியொன்றிற் சென்று தங்குவர். அவ்வெளிப்பரப்பும் அயலிலலையுங் கடலின் தோற்றமும் அவர்தம் உள்ளத்தில் ஆனந்த மிகுதியை விளைவிக்கும். நிலாவேளைகளில் அவ்வானந்தச் செழிப்பு மிக அதிகமாகும். அங்கிலையில் அடியார்களிலும் சிலரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக் குழந்தைப்பிள்ளைகள் விளையாடுவது போலக் கண்ணைபிரித்துக் கோடுகீறி விளையாடிக் குதூகலிப்பர். அவர்கள் விளையாடிய அவ்விடமே பின் சுவாமிகளின் சமாதிக்கோயிலமையும் இடமுமாயிற்று.

தம் இறுதிக் காலத்திற் சுவாமிகள் வண்ணார் பண்ணையிற் சகோதரியார் வீடெனக் குறிக்கப்பட்ட அவ்வீட்டிலேயே தங்கியிருந்தார். 190௯-ம் ஆண்டுக்குச் சரியான கீலக வருடம் பங்குனி மாசம் 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யிரவு உத்தரட்டாதி நக்ஷத்திர வேளையிலே சுவாமிகள் சமாதிகூடும் பெருவாழ்வு பெற்றூர்கள் விதேககைவல்ய முத்தியடைந்தார்கள்.

# குழந்தைவேற் சுவாமிகளின் சமாதி

தமது சமாதிபற்றிய கருத்துக் குழந்தைவேற் சுவாமிகளால் ஏலவே தெரிவிக்கப்பட்டிருந்தது. சுவாமிகள் தாம் சமாதிகூடிய வருடமாகிய கீலக வருஷத் தைமாசத்தில் ஒருமுறை பருத்தித்துறைக்குப் போயிருந்தார். அவ்விடத்திலிருந்த அன்பர் பாவிலுப்பிள்ளையைச் சந்தித்துச் சமாதிபற்றிய முழுவிபரமுந் தெரிவித்திருந்தார்கள். சமாதிகூடவிருந்த தினம், கற்பதைலம் செய்யப்படவேண்டிய முறையெல்லாம் பாவிலுப்பிள்ளை கவனமாகக் கேட்டுவைத்திருந்தார். ஆதலினல் சமாதி வைத்தற்கு இன்றியமையாத பூர்வாங்க வேலைகளை அவர் ஓரளவில் நிறைவேற்றி வைத்திருந்தார்.

சுவாமிகள் சமாதிகூடிய தினத்தின் மறுநாள் அவர்தம் திருமேனி வண்ணார்பண்ணையிலிருந்து ஊர்வலமாகத் தாங்கிச் செல்லப்பட்டு முன் குறிப்பிட்ட அம்மணல் வெளியிற் குகைகட்டிச் சமாதி வைக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளது அடியார்கள் தம் நல்லூக்கத்தால் சமாதி வைக்கப்பெற்ற இடத்திலே ஆலயமொன்றமைத்து அதேயாண்டு வைகாசி மாதம் மூன்றாந் திகதி ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நக்ஷத்திரத்தில் முறைப்படி பாணலிங்கப் பிரதிஷ்டை செய்துள்ளனர். அவ்விடத்திலே நித்திய பூசையும், விசேட தினங்களில் விசேடபூசை அன்னதானமாதியனவுங் கிரமமாக நடைபெற்று வருகின்றன.

ஆரம்பத்திலே கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபமிரண்டும் சாந்துக் கட்டிடமாக நிறைவேற்றப்பட்டுப் பிரதிஷ்டை நடைபெற்றது. அதன்பின் முன்மண்டபங்களிரண்டும், சுற்றுமதிலும், மடைப் பள்ளியும், கிழக்குமதிலோடொட்டிப் பள்ளியறை சாதனைச்சாலை என்பனவும் காலகதியில் நிறைவேற்றப்பெற்றுள்ளன. இச்சமாதித் திருப்பணி சம்பந்தமான விபரங்கள் ருதி வருஷம் ஆடிமாசம் முதலாந்தேதியில் அருளம்பல சுவாமிகளும், நவாலி வேலாயுதர் இராமலிங்கமுஞ் சேர்ந்து வெளியிட்ட விளம்பரத்திலும் சௌமிய வருஷம் ஆனிமாசம் முதலாந் திகதி அருளம்பல சுவாமிகள் தனியாக வெளியிட்ட விளம்பரத்திலுங் காணப்படுகின்றன. அவ்விளம்பரங்களிரண்டும் இந்நூலில் அநுபந்தமாகச் சேர்க்கப்பெறும்.

பின் 1930-ம் ஆண்டளவில் சமாதிக் கோயிலின் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபமிரண்டுங் கற்றிருப்பணியாக நிறைவேறி மறுபடியுங் கும்பாபிஷேகமாயிற்று. இதனை முன்னிட்டுச் சுக்கில வருஷம் தைமாசம் 21-ந் திகதி (3-2-30) யில் நல்லூர்ப் பொன்னம்பலம் முதலியோர் விளம்பரமொன்று வெளியிட்டுள்ளார்கள். அங்கு பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள சுவாமியின் பெயர் யோகீஸ்வரர் என்றும், அம்பாளின் பெயர் யோகீஸ்வரி என்றும் அவ்விளம்பரந் தெரிவிக்கின்றது. பிறகு 15, 16, 17-3-1961-ல் இச்சமாதியின் பொன்விழாவை யொட்டிக் கும்பாபிஷேகமும் குருபூசையும் இனிது நிறைவேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதியின் பரிபாலனத்திற்கான நிரந்தர ஒழுங்குகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நித்திய நைமித்திகஞ் செவ்வனே நடைபெற்று வருகின்றன. முதலியார் வை. மகேசன் அவர்கள் கோயிலின் மனேஜராக (Managing Trustee)ப் பொறுப்பேற்றுள்ளார்.

குறித்த சமாதியின் பக்கத்திற் கிழக்குப் புறமாக அருளம்பல சுவாமிகளின் சமாதியுள்ளது. அதற்குச் சிறிது தூரத்தில் வடக்குப் புறமாகச் சுவாமிகளின் அடியார்கள் சிலரின் அஸ்திச் சமாதிகளுமுள்ளன.

சமாதிவளவில் திருப்பணிக்கு என்றும் இடமுண்டு. அதனை நிறைவேற்ற உதவவேண்டுவது சைவசிலர்கள் கடமையாகும்.

## குழந்தைவேற் சுவாமிகளின் பாடல்கள்

''அண்டர் போற்றவே கயிலை நின்றெழுந்
தாடித் தாண்டவந் தில்லை மன்றுளே
மண்ட லீபுரத் தவனின் றேவந்து
மருவி நந்தமை யடிமை யாக்கிப்பின்
தொண்டர் வாழ்த்திநின் சேவை பூண்டுயத்
தொன்ன கர்ப்பதி வண்கி ழக்கமர்
விண்டு வும்மல ரோனுங் காணொணு
விமல பொற்பதம் வாழி வாழியே''

உச்சா உச்சமான பெரியதொரு மலையுச்சி; அந்த உச்சியிலே அருமையான ஒரு ஊற்று; ஊற்றுத் தோன்றிய இடத்துக்கு நேராகக் கிழக்கேயுள்ளது ஒருபாறை; சற்று உட்கவிந்த அகலமான ஒரு பாறை அது. மேலே ஊறிய அருவி அப்பாறையிலே பொத்தென விழுகின்றது; விழுந்த வேகத்தில் தன்னிலே சுற்றிச் சுழல்கின்றது; பின், பாறையிலே இடங்கொள்ளாமற் பொங்கிவழிந்தோடுகின்றது; அடிவாரத்தை அடைந்துவிடுகின்றது; இனி அவ்வெள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே நிற்கின்ற மனிதனுக்கு அநுபவப் பொருளா கின்றது.

அந்த ஊற்றுவெள்ளம் அங்ஙனம் இறங்கி ஆற்று வெள்ளமாகக் கீழே வராதொழியின் மனிதன் அதனை அடையும் மார்க்கம் வேறில்லை. உயரமான மலையுச்சிக்குப் போய் ஊற்றுநீரைக் காண, கண்டநு பவிக்க ஆரால் இயலும்? இமயமலையுச்சிக்குப் போன வர் எத்தனைபேர்? கயிலைமலைச்செய்தி இமயமலைச் செய்தியைவிட வேறானது. இமயமலை பௌதிக மாமலை. கயிலைமலை தெய்விகமாமலை. இமயமலையி லிருந்து கங்கையின் ஊற்றுச் சுரக்கின்றது. கயிலை மலையிலிருந்து அருள்ஊற்றுச் சுரக்கின்றது.

இறைவன் அருள் எங்கும் பரந்துள்ளது; எல்லோ ரையுஞ் சூழ்ந்துள்ளது; சூழ்ந்திருந்தபோதிலும் காட் சிக் ககப்படாதது. கண்காட்சிக்குமட்டு மன்று—யான தக்காட்சிக்கு மட்டுமன்று—வேதக்காட்சிக்கு மட்டு மன்று—போதக்காட்சிக்குமே அகப்படாதது; போத மிறந்த நிலையிலே புலனுவது; உணர்விலமட்டும் புல னுவது; ஒருகால் உணர்ந்தவர்தாமும் மறித்துணர முடியாதது. இறைவனுக்கு உருவமென்பதே அருள். அவர் அங்கங்களனைத்தும் அருள், அடியும் அருள், முடியும் அருள்.

இத்தகைய இந்த அருளானது அத்தகைய அந்தக் கயிலைமலையிலே சுரந்தெழுகின்றது. இடைநிலப் பெரு வெளியாகிய தில்லையம்பலத்திலே பொத்தென விழு கின்றது. விழுந்த வேகத்திலே சுழன்று சுழன்றுடு கின்றது. அவ்விடத்திலே தேங்கி வழிந்து மண்டை தீவை அடைகின்றது. அங்கே ஒரு தேக்கமிட்டு வண் ணார்பண்ணையை நோக்கி வழிந் தொழுகுகின்றது. வண்கிழக்கிலே தங்கிநிற்கின்றது. முழுவதும் ஒரு ஆற்று வர்ணனை. 'ஆற்றன்ப வெள்ளமே' என்றல் லவா மாணிக்கவாசக சுவாமிகளும் அருள்வரவை வர் ணித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனாதீதமாகிய அந்த அருள் பக்குவான்மாக்களை நோக்கி இந்த இயல்பிலே இறங்கி வந்திருக்கின்றது. அதன் வருகையில்தான் எவ்வளவு வேகம்! எவ்வளவு விரைவு! கயிலை நின்றெழுந்து—தில்லைமன்றிலே தாண்டவமாடி — மண்டலீபுரத்திலே வந்து — வண்கிழக்கிலே அமர்கின்றது. எழுந்து — ஆடி — வந்து — வைகி — அமர் என்ற சொற்கோப்பு அந்த அருள் வரவினுடைய வேகத்தின் விரைவான ஓட்டத்திற்கு உறுதியான கட்டுக்கோப்பா யிருக்கின்றது. வேகத்துடன் செல்லுங் கடுகதிப் புகையிரதத்துக்கு உறுதியான இருப்புப்பாதை அமைந்ததுபோல. எவ்வளவு உறுதியான இரும்புப் பாதையாயினும் வண்டியினது வேகமிகுதியின் உதைப்பினாலே அதிர்ச்சியுற்றசைவதுபோ லிருக்கும். குறித்த சொற்கோப்பிலும் ஒவ்வோரிடத்திலும் செய்யுளோசையினது உதைப்பினால் அசைவுபிறத்தல் தொனிக்கின்றது. உற்றுச் செவிகொடுத்தால், அதனை உணரலாம்.

மலையுள் மலையான அந்தக் கயிலையிலிருந்து மடுவுள் மடுவான நம்இடத்தைநாடி அந்த அருள் வந்து சேர்ந்ததில்தான் எவ்வளவு எளிமை! அந்த எளிமை உணர்வில் எவ்வளவு இன்பம்!

கற்பனைக்கு அதீதமான அந்த அருளின் வரவை எப்படியோ தமது கற்பனைக்குள் அகப்படுத்தி அழகும் இனிமையுங் குழைத்து ஆர்வமுள்ளோரது உள்ளத்திரையிலே தடவி விடுகின்றது கவிஞன் கை. கவிதையுங் கனவேகத்தோடு உள்ளத்திலே பாய்கின்றது. கவிதையின் சந்த வேகமோ அருள்வரவாகிய பொருள் வேகமோ கவிஞனின் உள்ளவேகமோ எது மேல் என்று நினைக்க முடியாத வகையில் மூன்றும் ஒன்றுடனொன்று போட்டியிட்டுக்கொண்டு நிற்கின்றன.

மண்டைதீவு கவிதையில் மண்டைதீவாக இல்லை. மண்டலீபுரம் என்று ஒரு புதுத்தோற்றமாக அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரூபித்திருக்கின்றது. அச்சொரூபித்தல் கவிதையின் சந்த இன்பத்தைத் தட்டியெழுப்பித் தருகின்றது.

தொண்டு செய்வார்க்கு மட்டுமே இறைவனருளைப் பெறும் பாக்கியதை யுண்டு. மிண்டு செய்வார்க்கு அது கிடைப்பதில்லை 'மிண்டர்க்கு மிண்டலாற் பேசேன்' என்று உலகத்தவரை முன்னிட்டுக் கூறிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'தொண்டர்க்குத் தொண்டனுமாவேன்' என்று அருளை முன்னிட்டுக் கூறியருளுகின்றார்.

மகாவிஷ்ணு ஒருதடவை, 'நானே பெரியன். நானே அருளைக் காண்பவன்' என்று அகந்தையினால் மிண்டு பேசி அருளைத் தேடிப்பார்த்தார். பிரமனும் அங்ஙனமே அருளைத் தேடிப் பார்த்தான். இருவரும் வெகு நாள் அலைந்துலைந்து ஆற்றல் கெட்டதேயன்றி அருளைக் கண்டிலர். எவ்வளவோ காலமாக அலைந்துலைந்தும் பலனின்றி ஏமாந்தபோதிலுங்கூட இன்னுந்தான் அவர்களுக்குத் தொண்டுசெய்யும் மனப்பான்மை தோன்றியிருப்பதாகக் கேள்விப்பட்டதில்லை.

அறிவு மதத்தினாலே அருளைக் காணமுடியாதென்பதற்கு இந்தப் பிரமவிஷ்ணுக்களின் செய்தி தகுதியான ஒரு அளவுகோலாய்ப்போயிற்று. இது அன்றைக்கு மட்டுமன்று என்றைக்குமே பொருத்தமான ஒரு அளவுகோலாகும். விஷ்ணு உலகம் முழுவதையுமே அளந்துவிட்டார். விஷ்ணு சம்பந்தமான இச்செய்தி தொண்டினாலன்றி அருளைப் பெறமுடியாதென்ற உண்மையை முற்றாக அளந்து காட்டிவிடுகின்றது.

அழகின்மையை எதிரே வைத்துக்கொண்டு அதனோடு சார்த்தி அழகின் உயர்வைக் காட்டுமாறுபோல, அருமையை எதிரே வைத்துக்கொண்டு அதனோடு சார்த்தி எளிமையின் சிறப்பை உணர்த்துமாறுபோல இச்செய்யுளிற் கவிஞர் ஓர் உபாயத்தைக் கையாண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளர். அருளைப் பெறுவதிலுள்ள அருமையிலரு மையை எதிரே வைத்து அதனோடு சார்த்தி, தொண்டு செய்வதன் மூலம் அருளைப் பெறுவதிலுள்ள எளிமை யில் எளிமையை இனிதுணர்த்தி விடுகின்றார். "தொண்டர்சேவை பூண்டுய்ய வணங்கிழக்குமர் பத" மென்ற கவிஞர், அது எத்தகைய பதம் என்ற வினு வுக்கு விடையளிப்பவர்போல, "விண்டுவும் மலரோ னுங் காணுரு விமல பொற்பாதம்" என்பதனையும் அடுத்துக் கூறியதிலிருந்து மேற்கூறிய நயந் தொனிக் கின்றது. இங்கு பதம் என்றது அருளை.

இங்ஙனம் கற்பனைச் சிறப்பும் காட்சிச் சிறப்பும் நன்கு பொருந்த ஓசைநயமும பொருள் நயமும் ஒருங்கே நிறைந்து மலையில் நின்று வேகத்தோடு மடுவில் வீழ்ந்து நிறையும் அருவிபோலக் கவிஞனுள் ளத்திலிருந்து வேகத்தோடு படிப்பவருள்ளத்திற் பாய்ந்து நிரம்புகின்றது இக்கவிதை.

இக்கவிதையை அன்பரொருவர் படிக்கக்கேட்டு விசாரித்தபோது இது குழந்தைவேற் சுவாமிகளின் பாடல் என்பது தெரியவந்தது அத்தொடர்பில் அவர்தம் பாடல்கள் அடங்கிய சிறு நூலொன்று கைக்கெட்டியது. பரமகுரு சுவாமிகள் குருதோத்திரம் என்ற பகுதியில் இருபத்தாறும் கடையிற் சுவாமிகள் குருதோத்திரம் என்ற பகுதியில் நாற்பத்தொன்று மாக அறுபத்தேழு பாடல்கள் அந்நூலில் இருந்தன. இங்குக் குறிப்பிட்ட பாடல் கடையிற் சுவாமிகள் குரு தோத்திரப் பகுதியிலுள்ளது அப்பகுதியில் முதல் நாற்பது பாடல்களும் நால்வகைச் சந்தங்களில் முறையே 10, 9, 11, 10 ஆக அமைந்துள்ளன. நாற் பத்தோராவது பாடல் தனியான ஒரு சந்தத்தில் உள் ளது. பாடல்கள் அனைத்தும் சுவாமிகள் பெற்றிருந்த ஞானத்தெளிவை நன்கு புலப்படுத்துகின்றன.

முதற் பத்துப் பாடல்களும் கடையிற் சுவாமிக ளின் திருவுருவ வர்ணனை நிரம்பித் தியான சுலோகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக அமைந்துள்ளன. அப்பாடல்களில் எளிமையும் இனிமையும் நிரம்பவுண்டு. இப்பகுதி தேவாரப் பதி கங்கள் போலத் திருக்கடைக் காப்புடன் முடிவடை கின்றது. அடுதத இரு பகுதிகளும் திருவாசகப் பாடல்களின் சந்தத்திலே, திருவருளை வேண்டியிரங் கும் பொருளிலே அமைந்துள்ளன. நான்காவது பகுதி யைப் படிக்கும்போது திருவாதவூரடிகள் புராணத் திலுள்ள கலிவிருத்தங்களைப் படிக்கும்போதுணரப் படுஞ் சந்த உணர்வு பிறக்கின்றது. கடையிற்சுவா மிகளை வணங்கி மற்றவர்களும் இகபர இன்பங்களைப் பெறுமாறு அழைத்தல் இப்பகுதியின் பொருளாகும். சாக்ஷாத் சிவபெருமானுக்குரிய திருவருள் விலாசங்க ளும் நடனச்செயல்களும் பற்றிய கருத்துக்களும் பொதுவாகப் பாடல் முழுவதிலுஞ் செறிந்துள்ளன.

பரமகுரு சுவாமிகள் குருதோத்திரம் என்ற பகுதி 26 பாடல்களைக் கொண்டுள்ளது. முதற்பாடல் காப் புச் செய்யுளாயிருக்கின்றது. சீவபோதத்தைச் சிவ தொண்டிலே பாய்ச்சி (பாயச்செய்து) சுவாமிகள் தம்மை நெறிப்படுத்திய கருத்து இப்பாடலில் அழகாக அமைந்துள்ளது. அடுத்துவரும் ஒன்பது பாடல்களும் பரமகுரு சுவாமிகளைச் சாக்ஷாத் சுப்பிரமணியப் பெரு மானைகக் கண்டு உபாசிக்கும் பாவனையில் தோன்றும் அநுபவத்தின் விளைவுகளாக, ஆனந்தக் களிப்புப் பாடல்களாக, அமைந்துள்ளன. சுவாமிகள் கிடாரிப் பருப்பதத்தில் தங்கியிருந்த செய்தி இப்பகுதியிற் பாடல்தோறும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவாரப் பதிகம் போலவே இப்பகுதியும் திருக்கடைக் காப்புச் செய்யுளுடன் முடிவடைகின்றது. எஞ்சியபகுதி நால் வேறு சந்தங்களில் முறையே 10, 1, 4, 1 பாடல்களாக உள்ளது. அவையனைத்துஞ் சுவாமிகளின் திருவருட் பிரபாவங்களை எடுத்துக் கூறுதலைப் பொருளாகக் கொண்டவை.

பொதுவாகப் பார்க்குங்கால், சென்ற நூற்றாண் டுத் தமிழ்ப் பாடல்களிற் காணக்கூடிய கடினத்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல்களில் இல்லை. சிலேடை, யமகம் திரிபு போன்ற திருகல்களுமில்லை. சீர்பூத்த, ஏர்பூத்த, என்ருற்போலவரும் அனுவசியமான சொற்பிரயோகங்களுமில்லை. சரளமான நடையிலே சொல் முட்டுப்பாடின்றி எளிமை தவழக் கருத்தை வெளிப்படுத்துவன இப்பாடல்கள். இவ்வகைகளில், சென்ற நூற்ருண்டுத் தமிழ்ப்பாடல்களில் மிகமிக உயர்தரமானவை இப்பாடல்கள் எனலாம்.

பாடல்களின் முழுத்தன்மை இவற்றைப் பாடியருளிய சுவாமிகளின் ஞானப்பேற்றின் பூரணத்துவத்தை நன்குணர்த்துகின்றது. பாடல்களின் பொருட்சிறப்பு அவர்கள் பெற்றிருந்த பரானுபவச் சிறப்பைத் தெரிவிக்கின்றது. இப்பாடல்களிலிருந்து ஊகிக்கக்கூடிய அளவுக்குச் சுவாமிகளின் பரானுபவப் பேற்றை விளக்குதற்காதாரமான வரலாற்றுக் குறிப்புக்கள் கிடையாமற் போனமைக்காக வருந்தவேண்டி யிருக்கின்றது.

ஓசை வளமும் பொருள்வளமும் பக்திவளமும் எல்லாப் பாடல்களிலும் நிரம்ப உண்டு. 'ஒருபானை சோற்றுக்கு ஓரவிழ்ப்பத'மாக ஒரு பாடலை ஆரம்பத்திற் கவனித்தோம். ஏனையவற்றையும் அவ்வகையிற் கவனித்துப் படித்து இன்புறுவோமாக.

இப்பாடல்கள் குழந்தைவேற் சுவாமிகள் சமாதி கூடுதற்கு நான்கு வருடங்களுக்கு முந்தியே 1905-ம் ஆண்டிலே பிரசுரிக்கப்பெற்றுள்ளன. சுவாமிகளின் பிரதம சீடராகிய அருளம்பலமவர்கள் சுவாமிகளின் உத்தரவுப்படி இவற்றை வெளியிட்டுள்ளார்கள். இப்பாடல்கள் அடங்கிய அந்த அச்சுப் பிரதியில் சீடாசாரம், சீவன்முத்தரியல்பு என்ற வேறு பகுதிகளும் உள்ளன. அவற்றுள் சீடாசாரம் துறவு சுவாமிகளால் அருளிச்செய்யப்பெற்றது எனக் குறிக்கப்பட்டுள்ளது. சீவன்முத்தரியல்பு இயற்றிஞர் பெயர் குறிக்கப்படவில்லை. எல்லாவற்றையும் அடக்கி 'அத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித முத்திநெறி' என்று நூற்பெயரிடப்பட்டுள்ளது. பிரசுரிக்கப்பட்டு 55 வருடங்களுக்கு மேலாகின்றமையால் இந்நூற் பிரதிகள் அருகிவிட்டன. ஒன்றிரண்டு மட்டும் இப்போ எஞ்சியுள்ளன. ஆதலின் அவையனைத்தும் இந்நூலில் அநுபந்தமாகச் சேர்க்கப்பெறுகின்றன.

*சிவ! சிவ! சிவ!*

## அருளம்பல சுவாமிகள்

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணைப் பகுதியில் இராமநாதர் என்ற வேளாளர் ஒருவர் வசித்து வந்தார். அவர் மனைவியார் சின்னாச்சிப்பிள்ளை என்பவர். இருவருஞ் சமய ஒழுக்கத்திற் சிறந்துள்ளவர்கள். சின்னாச்சிப்பிள்ளை சிவபக்தி அடியார் பக்திகளில் விசேடம பெற்றிருந்தார். அடியார்களுக்கு அமுதூட்டி வணங்குவது அவர்க்குப் பிரியகரமான செயலாம. சிவஞான சுவாமிகளின் தாயாரைப்போன்று அவர் தம் வீட்டிற்கு வரும் அடியார்க்கெல்லாம் அன்பாதரவாக அமுதூட்டி மகிழ்வார். 'அண்ணலா ரடியார்தமை அமுது செய்வித்தலே மண்ணிற் பிறந்தார் பெறும் பயன்' என்ற உண்மை விளக்கம் அவர்பால் உறைந்திருந்தது.

அந்நாட்களில் அப்பகுதியிலே சஞ்சாரம்பண்ணி வந்த கடையிற் சுவாமிகளும் அவ்வீட்டுக்கு எழுந்தருளுவதுண்டு. ஒருநாள் கடையிறசுவாமிகள் அங்கு எழுந்தருளி யிருந்தபோது சின்னாச்சிப்பிள்ளை அவர்க்குச் சோறு குழைத்துக் கையிலே கொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது அவர்தம் இளைய மகனாகிய அருளம்பலம் சிலேயுடாத சிறு குழந்தையாயிருந்தார். கடையிற்சுவாமிகள் சாப்பிடும்போது சிறு குழந்தைச் சுபாவத்தினால் அவரும்போய்ப் பக்கத்தில் உட்கார்ந்து அவர் உண்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார். சுவாமிகள் அவருடைய இருக்கை நிலையைப் பார்த்து மெச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகள் அருளம்பலம்



தோறறம்:
1865 அட்சய ௵
ஒடுக்கம்: 1925-6-28

Arulambalam

குரோதன, ஆனித்திங்கள் அத்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித் தம் கையாலே அவருக்குத் தீற்றித் தீற்றிச் சாப்பிட்டார். அங்ஙனம், அறியாப் பருவத்திலேயே அவருக்குக் கடையிற் சுவாமிகளின் திருக்கண் ணேக்கமும் திருக்கைப் பரிசமும் ஏற்பட்டுவிட்டன.

அருளம்பலம் கி. பி. 1865க்குச் சரியான அக்ஷய வருடத்திலே பிறந்தார். குடும்பத்தில் இவரே கடைசிப் பிள்ளையாயிருந்தார். 'கடைக்குட்டி' என்று மிக அருமையாக வளர்க்கப்பெற்ருர். செல்லப்பிள்ளையாய் வளர்ந்தமைக்கேற்ப அஞ்சாமை, வீரதீரம் முதலிய பண்புகளோடு விளங்கி வந்தார்.

இப்பொழுது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிருக்குமிடத்திலே அந்நாளில் 'யாழ்ப்பாண அகடேமி' என்ற பெயரில் ஒரு பாடசாலை இருந்தது, அருளம்பலம் அப்பாடசாலையிலே ஆரம்பத்திலிருந்து கற்றுவந்தார். இயற்கை விவேகமும் முயற்சித் திறமையுமுடையவராய் அவர் விரைவிலே கற்றுத்தேறி அக்காலத்தில் நடைபெற்று வந்த சென்னை 'மற்றிக்குலேஷன்' பரீக்ஷையிற் சித்தியடைந்தார். இளம் வயதிலேயே அரசாங்க உத்தியோகமும் அவர்க்கு வாய்ப்பதாயிற்று.

அன்றைய ஆங்கில அரசாங்கத்தில் ஆங்கில அதிகாரிகளின்கீழ் அவர் உத்தியோகம் பார்த்தபோதிலும் தாம் தமிழராகவே நடந்துவந்தார். காற்சட்டை மேற்சட்டைகளுடன் தமிழ் நாகரிகச் சின்னமாகிய தலைப்பாகையும் அணிந்துகொண்டே அலுவலகத்திற்குச் செல்வார்.

அவர் உத்தியோகத்தை ஆரியக் கூத்தளவில் வைத்துக்கொண்டு எப்போதுங் காரியத்திலே கண்ணுயிருந்து வந்தார். உயிர், கடவுள் என்பனபற்றிய வாதப் பிரதிவாதங்களிற் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் நன்ருக ஈடுபட்டு வந்தார். ஆரம்பத்தில் 'கடவுள் இல்லை' என்ற வாதமே அவருக்கு உகப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதற்கு ஊக்கமளிக்கத்தக்கவகையில் அந்நாளிற் 'பகுத்தறிவுப் பிரசாரசங்கம்' என்ற ஒரு சங்கமும் இருந்தது. தாமும் அச்சங்கத்தில் ஒரு அங்கத்தவராகச் சேர்ந்து அச்சங்க வெளியீடுகளை ஊன்றிப் படித்துச் சிலகாலம் நிரீச்சுரவாதம் பேசிவந்தார்.

ஏனையர்போலப் பேச்சுக்காகப் பேசுவதின்றித் தாம் பேசும் ஒவ்வொன்றையும் மீட்டுத் தம்மிலே வைத்து ஆராயும் விவேகம் அவர்க்குப் பெரிதும் வாய்த்திருந்தது. அவ்வாய்ப்பினாலே தாம் உரையாடுவதிலிருந்த போலித்தன்மை அவர்க்குப் புலப்படக் கூடியதாயிற்று. அதன் பலனாகக் 'கடவுளுண்டு' என்ற நம்பிக்கை மிக வேகமாக உருவாயிற்று.

கடவுள், உயிர், மோக்ஷம், நரகம் என்பன இல்லாத பொருள்கள் என்னுங் கொள்கை நாத்திகம் எனப்படும். விவேகமற்றவர் நாத்திகம் பேசிப்பேசி நாத்தழும்பேறி அந்நிலையிலிருந்து மீளமுடியாமல் மாழ்கிப்போவர்' தன்னைத்தான் ஆராயும் விவேகமுடையவருக்கு நாத்திகமும சமயஞானத்தின் முதற் படியாயமைந்துவிடும். ஏனையோர் அதுவே முதற் படியுங் கடைசிப்படியுமாக நின்றுகொள்வர். ஆராய்ச்சி விவேகத்தினாலே நாத்திகத்தின் போலித் தன்மை புலனாகின்றபோது ஆத்திகந் தன்னிலே சொரூபித்து விடும்.

இவ்வகையிலே கடவுள், உயிர் என்பவற்றைப் பற்றிய உண்மைகளை அறியும் ஆவல் அவர்பால் தீவிரமாக மூள்வதாயிற்று. கடவுள் அருளைப் பெறுவதற்கு உபாயம் யாது? என்ற விசாரணை மிகவும் மும்முரமாக நடைபெற்று வந்தது. அந்நாளில் இந்தியாவில் ஒரு மகான் இருந்தார். குறிக்கப்பட்ட சில நியதிகளின்படி தியானஞ் செய்துகொண்டிருக்கும் அன்பர்களுக்கு அம்மகான் தாம் இருந்த இடத்திலிருந்தே, முன்னேற்பாட்டின்படி, குறிக்கப்பட்டுள்ள ஒரு நேரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தீக்ஷை செய்து வைப்பார். இவ்வகையில் ஒரு நேரத்தில் உலகின் பல பாகங்களிலுமுள்ள எத்தனையோ பேருக்கு இத்தீக்ஷை கிடைக்கும். இச்செய்தி அந்நாளில் மிகப் பிரசித்தமாயிருந்தது. அம்மகான் தலைமையில் 'சுத்ததர்ம மண்டலம்' என ஓர் சங்கமும் இருந்து வந்தது.

தமது விசாரணையின்போது இச்செய்தியை அறிய வந்த அருளம்பலமவர்கள் கடவுளருளைப் பெறுவதற்கு 'இது சிறந்த உபாயமாகும்' எனக்கருதி அச்சங்கத்தில் தாமும் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்துகொண்டார். சங்க வெளியீடுகளைப் போற்றிப் படித்து ஏனையோர்க்கும் அவற்றைப்பற்றி விமர்சனஞ் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அவ்வகையில் மிகப் பிரசித்தியடைந்து அச்சங்கத்தின் கிளைகளுளொன்றாகிய இலங்கைச் சாகையின் பிரதிநிதியாகவும இருந்து வந்தார். இருந்தும் அவர் கருதிய பலன் கைகூடியதில்லை.

அந்நாளில் யாழ்ப்பாணக் கச்சேரியே அவருடைய உத்தியோகத் தானமாயிருந்தது. அங்குள்ள 'மாகாணப்பதிவுப் பகுதி' என்ற பிரிவிற் பிரதம லிகிதராயிருந்து வந்தார். வண்ணார்பண்ணையி லிருந்த தம்முடைய வீட்டிலிருந்தே அவர் கச்சேரிக்குப் போய்வருவது வழக்கம். குழந்தைவேற் சுவாமிகள் வண்ணார் பண்ணையிலே தங்கியிருந்து அடியாரொழுக்கம் நடத்தி வந்ததும் அந்நாட்களிலேயாம்.

குழந்தைவேற் சுவாமிகளிடஞ் சென்றுவரும் அடியார்களைத் தினசரி சந்திக்கும் வாய்ப்பு வண்ணார் பண்ணையிலிருக்குங் காலங்களில் அருளம்பலமவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. சுவாமிகளைப்பற்றியும் அவரிடம் அடியார்கள் ஒழுகிவரும் முறைகளைப்பற்றியும் அவர்களிடந் தீர விசாரித்தறிந்தார். கடவுளுண்மையில் எவ்வளவோ நம்பிக்கை ஏற்பட்டிருந்தபோதிலும், அருளைப் பெறுவதில் அளவில்லாத தாகமுந் தவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பும் ஏற்பட்டிருந்தபோதிலும் மனிதனை மனிதன் பூசிப்பது என்ற விஷயம் அவருக்குப் புரியாத புதிராயிருந்தது. அருள் தானே மனித உருவில் குருவாய் வந்துள்ளது என்ற உண்மையில் அப்போது அவருடைய உள்ளம் பதியவில்லை அதனால், சுவாமிகளிடஞ் சென்று திரும்பும் அடியார்களிடத்தில் அது பற்றிக் காரசாரமாக விவாதிக்கத்துவங்தார். அச் சந்தர்ப்பங்களிற் சிலவேளைகளில் பெரும் ஆவேசங் கொண்டு மிக மூர்க்கத்தனமாயும் அவர் நடந்து கொண்டதுண்டு இத்தொடர்பில் பின்வருஞ் செய்தியொன்று சிலர்மூலம் அறியப்பட்டிருக்கின்றது.

குழந்தைவேற் சுவாமிகளிடம் கியதியாகச் சென்று வருவோருள் வண்ணார்பண்ணைச் சபாபதியாருமொருவர். சபாபதியார் சுவாமிகளிடம் வெகு பக்திசிரத்தை பூண்டொழுகுபவர். அவர் எப்போதும் அருளம்பலமவர்களின் வீட்டுப் படலையாலேயே தம் வீடு செல்வர். அநேகமாக எப்போதுமே சபாபதியாருடன் அவர் வாக்குவாதம் புரிவர்.

ஒருநாள் சபாபதியார் சுவாமிகளுக்குத் தொண்டு செய்துவிட்டுத் திரும்ப இரவு வெகுநேரமாயிற்று. அன்றும் அவர்வரவை எதிர்நோக்கியவண்ணம் அருளம்பலம் தம்வீட்டுப் படலையில் நின்றுகொண்டிருந்தார். எல்லாநாளுந் தாம் நடத்திவந்த வாக்குவாதங்கள் சம்பந்தமான எண்ணங்கள் எல்லாம் ஒன்று திரண்டு அன்று அவருடைய உள்ளத்திற் பேராவேசமாய்ப் பொங்கிக்கொண்டிருந்தன.

ஆவேசத்தோடு நின்ற அருளம்பலமவர்கள் சபாபதியார் வரவைக் கண்ட மாத்திரத்தே திடீரென அவரை மடியிற் பிடித்திழுத்து வீட்டுக்குள்ளே கொண்டுசென்றார்; கதவைப் பூட்டித் தாழிட்டார். சுவரில் மாட்டப்பட்டிருந்த கத்தியொன்றைக் கையிலெடுத்தார்; கத்தியை ஓங்கிக்கொண்டு எதிரேயிருந்த சுவர்க்கடிகாரத்தைச் சுட்டிக் காட்டி, ‘இதோ மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு அடிக்கப்போகின்றது. அடித்து முடிந்ததும உன்னைப் பிணமாக்கப் போகின்றேன். நீ வணங்கும் மனிதன் உண்மையிற் சுவாமியாக இருந்தால் உன்னைக் காப்பாற்ற இங்கே வருவானே பார்ப்போம்' என்று பெருங் கோபாவேசத்துடன் கர்ச்சித்தார். அங்கிலையில் உருத்திரமூர்த்தியாகக் காட்சியளித்தார் அருளம்பலம்.

சபாபதியாருக்கோ ஐம்புலனும் ஒடுங்கிப்போயின. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. பேசவும் நாவெழவில்லை. 'அகாலமாய் விட்டது இப்பொழுது வெளியே செல்ல வேண்டாம்' என்று சுவாமிகள் தன்னை எச்சரித்திருப்பவும் அவ்வெச்சரிக்கையை அசட்டைபண்ணிவிட்டு வெளியேறியமையாலன்றோ இச்சங்கடத்துள் மாட்டிக்கொண்டோம்' என எண்ணிப் பதறிக்கொண்டிருந்தார்.

மணி பன்னிரண்டு அடித்து இதோ முடியப்போகிறது என்னுந்தருணம்; 'அருளம்பலம்! அருளம்பலம்!! கதவைத் திற' என்று ஒருகுரல் வெளியிலிருந்து வந்தது. குரல் கேட்டதும் அருளம்பலத்தின் ஆவேசம் போனஇடந் தெரியவில்லை. கத்தி கையைவிட்டு நழுவியதே அவர்க்குத் தெரியவில்லை. ஓடிப்போய்க் கதவைத் திறந்தார். 'தவறிப்போன தன் கன்றைத் தேடித் தவித்துவந்த தாயைப்போல அன்புருவாய் அவ்விடத்தே நின்ற சுவாமிகளைக் கண்டார். மெய்ம் மறந்து அவர்முன் வீழ்ந்தார். சபாபதிப்பிள்ளைக்கு உடலெல்லாம் ஓடிக்குளிர்ந்தது. அவருஞ் சுவாமிகள் முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிப் புரண்டு புரண்டழுதார். ஆருமறியாத் தனிமையிலே அர்த்தயாமத்திலே நிகழ்ந்த இச்செய்தி சபாபதியார் வாயிலாகவே பிறராற்ய வந்ததென்று சொல்லுகிறுர்கள்.

இவ்வகையில் அருளம்பலமவர்களுக்குக் குழந்தைவேற் சுவாமிகளின் தொடர்பு ஏற்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் தாயும்பிள்ளையும் போலாயினர். மற்றைய அடியார்களைப்போல, அவர்களிலும் பார்க்க இன்னுங் கூடுதலான பரிவாக, அவர் சுவாமிகளுக்குத் தொண்டு பூண்டொழுகி ஆட்பட்டு விளங்கினார். தாமே சுவாமிகளின் ஞானவாரிசாகவும் ஆயினார். இதுபற்றிய விபரம் குழந்தைவேற் சுவாமிகளின் வரலாற்றிற் காணப்படும்.

இங்ஙனம் குழந்தைவேற் சுவாமிகளுக்கு ஆட்பட்டு வாழ்ந்துவரும்நாளில் அருளம்பலமவர்கள் உத்தியோக மாற்றங் காரணமாக மட்டக்களப்புக்குச் செல்ல நேர்ந்தது அங்கு காணிப்பதிவுகாரராய் உத்தியோகம் பார்த்துவந்தார். அந்நாளில் இவருடைய உத்தியோகப் பகுதிக்கு மேலதிகாரியா யிருந்தவர் சேர். பொன். அருணாசலமவர்கள். தன்மானமுள்ள தமிழர் இருவர் மேலதிகாரியாகவும் கீழுத்தியோகஸ்தராகவும் அமைந்த பொருத்தங் கவனிக்கத்தக்கது.

மட்டக்களப்பில் உத்தியோகம் பார்க்கையில் ஒரு தடவை இங்கு குழந்தைவேற் சுவாமிகள் சற்றுச் சுகவீனமடைந்திருப்பதாக அருளம்பலமவர்களுக்குச் செய்தி எட்டியது. அதனால் அவர் உடனடியாக வண்ணார்பண்ணைக்கு வர விரும்பித் தம் மேலதிகாரியாகிய அருணாசலமவர்களுக்குத் தந்தியனுப்பி லீவுகேட்டிருந்தார். லீவு மறுக்கப்பட்டு விட்டது. இவரோ மறுப்புத் தந்திக்குப் பதில் தந்தி அனுப்பிவிட்டு வண்ணார் பண்ணைக்கு வந்துவிட்டார். அதுகாரணமாகச் சேர் அருணாசலத்துக்கும் அருளம்பலம் அவர்களுக்கு மிடையிற் சிறிது மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தது.

பின், ஒருநாள் அருணாசலமவர்கள் முன்னறிவித்தலில்லாமலே அருளம்பலமவர்களின் அலுவலகத்தைச் சோதனைபுரிய வந்திருந்தார். அதுபற்றி இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது. ஒருவரையொருவர் கடிந்துகொள்ளும் நிலை உருவாயிற்று. அருளம்பலமவர்கள் திடீரென எழுந்து அலுவலகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறப்பை அவர்முன் வைத்து அன்றே தாம் வேலையி லிருந்து விலகுவதாகக் கூறிப் புறப்பட்டு விட்டார். அன்று வாடிவீட்டில் தங்கியிருந்த அருணாசலமவர் கள் சாயங்காலம் அருளம்பலமவர்களைத் தம்மிடம் வரவழைத்து ஏதோ ஒருவகையில் மனமாற்றம் விளை வித்து அவர் மறுபடியுந் திறப்பை யேற்குமாறு செய்து போயினர்.

அக்காலத்தில் மட்டக்களப்புப் பொதுமக்களின் கல்விநிலை மிக மந்தமாயிருந்தது. போதிய பாடசாலை கள் உருப்படவில்லை. இருந்த சில பாடசாலைகள் தாமும் கிறீஸ்தவ பாடசாலைகளாய் இருந்தன. அதனால், சைவத் தமிழ்க் கல்விக்கு நேர்ந்த குறைவை யுணர்ந்து அதனைத் தவிர்க்கும் வகையில் அருளம்பல மவர்கள் முயன்று வந்தார். மட்டக்களப்பில் அன் றைய செல்வராகத் திகழ்ந்த கே. வி. மார்க்கண்டு என்பவரின் உதவியைப் பெற்று மட்டக்களப்பு மாவட் டம் முழுவதிலும் பல்வேறு சைவப்பாடசாலைகளை நிறு வினர். அதன் பெறுபேருகக் கிறீஸ்தவ பாடசாலைக ளுக்குச் சென்றுவந்த பிள்ளைகளிற் பெரும்பாலோர் சைவப் பாடசாலைகளுக்குத் திரும்பினர். இவ்வகையில் தங்கள் பாடசாலைகள் வீழ்ச்சியடைவதைக் கண்ட பாதிரிமார் தம்முட் கூடி ஆலோசித்து அரசாங்கத் துக்கு மனுப்பண்ணினர்கள். அதன் பெறுபேருக அரசாங்கம் மேலதிகாரியாகிய அருணாசல மவர்களை யும் அறியாமலே அருளம்பலமவர்களைக் கொழும்புச் 'சுப்பிறீங்' கோட்டு முதலியாராக மாற்றிவிட்டது.

அச்செய்தி தம் செவிக்கெட்டியபோது அருணாசல மவர்கள் அம்மாற்றத்தை எதிர்த்து நின்ருர். தமது கீழுத்தியோகஸ்தரொருவரைத் தம்மையறியாமலே மாற்றியது அரசாங்க சேவைச் சட்ட ஒழுங்குக்கு முரணுகும் என்பதே அவர் கட்சி. நியாயத்தை மீறு தற்கியலாமல் அம்மாற்றத்தை அரசாங்கமே தவிர்த்து விட்டது. அருளம்பலமவர்கள் தொடர்ந்து மட்டக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பிலேயே இருக்கவிடப்பட்டார். அதனால் அவர் ஆரம்பித்த சைவக்கல்வி இயக்கம் தடையின்றி நடைபெறலாயிற்று.

மேற்குறித்த பகுதியிலிருந்து நாம் சில உண்மைகளை அறியக்கூடியவர்களாயிருக்கின்றோம். நியாயத்துக்கு வாதாடுவதில் அருணாசலமவர்கள் அபாரத் திறமை வாய்ந்தவர். அத்துடன் அவர்பாலிருந்த நேர்மையையுங் கண்டு அரசாங்கம் அவர் வாக்குக்கு மதிப்புக் கொடுத்து வந்துள்ளது. முன் அருளம்பலமவர்கள் பேரில் தமக்கு மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தபோதிலும் அதனை மறநதுவிட்டுத் தம் உரிமையையும் கடமையையும பாதுகாத்துத் தங்கீழுத்தியோகஸ்தருடைய மரியாதையையும் பாதுகாத்து வைத்தது அருணாசலத்தின் அருங்குணப் பண்பு. நம்நாட்டின் சைவ வளர்ச்சிக்குக் கிறீத்தவம் எப்போதும் முட்டுக்கட்டையாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் அருளம்பல சுவாமிகள் போன்ற நேர்மையுள்ளம் படைத்தவர்கள் சைவ இயக்கத்தில் ஈடுபட்டுவந்தபோது அம்முட்டுக்கட்டை விட்டுக்கொடுத்துத் தோல்விகண்டுள்ளது அருணாசலமவர்கள் போன்ற நேர்மையான மேலதிகாரிகள் இருப்பின் அரசாங்க சேவையிலுள்ளவர்களும் சமூக சேவையில் தாராளமாக ஈடுபடலாம், சித்தியுமடையலாம். ஆன்ம விளக்கம் பெற்றவர்கள் சமூக சேவையில் ஈடுபட்டால் அது இடையூறுகளை வென்று இனிது நிறைவேறும். இவையே அவ்வுண்மைகளாகும்.

இங்ஙனம் மட்டக்களப்பிலிருக்கும் நாட்களில் ஒரு தடவை அருளம்பலமவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது சாவாங்கோட்டையில் நிகழ்ந்த குருபூசையொன்றில் வைத்துக் குழந்தைவேற் சுவாமிகளால் அவர்க்குக் குருத்துவமளிக்கப்பெற்றது. அதன் பின் அருளம்பலசுவாமிகள் என்ற பெயர் வழக்கு நிலவலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவம் பெற்று மீளவும் மட்டக்களப்பிற் சென்றிருந்தார் அருளம்பலசுவாமிகள். அந்நாளில் மட்டக்களப்பிலுள்ளார் பலர் அவரிடந் தீக்ஷை பெற்றுள்ளனர். நவாலியூர் கார்த்திகேசர் என்பவர் தாம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்குச் சென்று அவரிடந் தீக்ஷை பெற்றதாகத் தெரிவித்துள்ளார். இங்ஙனம் மட்டக்களப்பிலிருக்கும் நாட்களில் தம்பால் வரும் அடியார்களைத் தலையளிப்பதிலும், தோத்திர பாராயண தியான சாதனை புரிவதிலும் சுவாமிகளின் நேரத்திற் பெரும்பகுதி செலவாயிற்று. சிலவேளைகளில் வெகுநேரங்கழித்தே அலுவலகத்திற்குச் செல்வார். இதுபற்றி அவருடைய அலுவலகக் காவலாளியொருவர் கூறியதாகச் சொல்லப்பட்டுவரும் ருசிகரமான சம்பவமொன்றுண்டு.

ஒருநாள், சனிக்கிழமை, சுவாமிகள் அலுவலகத்துக்குப் போகவில்லை. பிந்தியாவது வருவார் என்று அங்குள்ளவர்கள் எதிர்பார்த்தார்கள்; பிற்பகல் இரண்டுமணியாகி அலுவலகம் பூட்டப்படும் நேரமாயிற்று. காவலாளி கதவுகள் எல்லாவற்றையும் பூட்டிவிட்டு கட்டிடத்தை ஒருமுறை சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தான்; அலுவலக முன் கதவை யாரோ தள்ளித் திறக்க முயல்வதைக் கண்டான். அவனுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. அருளம்பல சுவாமிகளே கதவைத் தள்ள முயல்கின்றார். அவருடைய நிலைமையை அறிந்தவனாதலினால் காவலாளி மெள்ளச் சென்று விஷயத்தை விளங்கப்படுத்தினான். அதன்பிறகுதான் அன்று சனிக்கிழமை யென்பதும் அப்பொழுது நேரம் இரண்டுமணி யென்பதும் அவருக்குத் தெரியவந்தன.

அந்தவகையில், மேலும் உத்தியோகம் பார்ப்பது சாத்தியப்படாமையினாலே அவர் தமது 49-ஆம் வயசில் 1915-ஆம் ஆண்டில் தாமாகவே ஓய்வுபெற்றுக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அதன் மேல் அவருடைய கவனம் முழுவதும் குழந்தைவேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் சமாதித் திருப்பணியிலேயே பெரும்பாலுஞ் சென்றுகொண்டிருந்தது. இதற்கிடையிலுஞ் சிலதடவைகளில் பட்டக்களப்புக்குச் சென்று அங்கு தாம ஆரம்பித்துவைதத சமயப்பணிகளிற் கவனஞ் செலுத்தி வந்தார். அந்நாட்களிலேயே 'சுத்தாத்வைத அச்சியந்திரசாலை' என்னும் பெயரில் அச்சுக்கூடமொன்றை அங்கு நிறுவியுள்ளார். குழந்தைவேற் சுவாமிகள் பேரில் அவர் பாடிய 'அகராதிச் சரணமாலை' என்னும் நூல் அந்த அச்சுக்கூடத்திலேயே 1920-ல் பதிக்கப்பெற்றுள்ளது.

குழந்தைவேற் சுவாமிகள் சமாதிகூடியதன் பின் அடியார்கள் பலரும் இவரைக் குருவாக அடைந்து அருள் பெற்றனர். தமது குருசுவாமிகள் நடத்தியவாறே அருளம்பல சுவாமிகளும் அடியாரொழுக்கத்தைத் தளரவிடாது நடத்திக்கொண்டு வரலாயினர். குழந்தைவேற் சுவாமிசளின் சமாதிவழிபாடு, குருபூசை ஆதியனவற்றைச் சிறப்பாக நடத்தி வந்தார் இங்ஙனஞ் சீவன்முத்தராய்த் திகழ்ந்த அருளம்பல சுவாமிகள் 1925-ம் ஆண்டு ஆனிமாசத்து அத்த நக்ஷத்திர நாளிலே சமாதிகூடும் பெரும்பேறு பெற்றார். அவருடைய சமாதிக்கோயில் கீரிமலையிற் குழந்தைவேற் சுவாமிகளுடைய சமாதியின் பக்கத்தில் அமைந்துள்ளது. அதிலும் பூசைவழிபாடுகள் முறையாக நடைபெற்று வருகின்றன.

## அருளம்பல சுவாமிகளின் வசனமும் பாடல்களும்

'மரத்தினருமை பழத்திற்றெரியும்', "தக்கார் தகவிலரென்ப தவரவர் எச்சத்தாற் காணப்படும்" — இவ்விரண்டும் குழந்தைவேற் சுவாமிகளின் பாடற்சிறப்பின்மூலம் அவருடைய மேன்மையைக் குறிப்பிடுதற்கு அருளம்பலசுவாமிகள் கையாண்டுள்ள மேற்கோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். அருளம்பல சுவாமிகளுக்கும் இவை பொருந்து மெனலாம். சுவாமிகள் விட்டுச்சென்றவை (எச்சம்) யாக நமக்குக் கிடைப்பன அவர் எழுதியுள்ள வசனங் கள் சிலவும் பாடியுள்ள பாடல்கள் சிலவுமே.

அவர் எழுதியுள்ள வசனநடையை அவர்கள் விரிவாக எழுதி வெளியிட்டுள்ள குழந்தைவேற் சுவாமிகளின் சமாதி விளம்பரங்களிற் காணலாம். அவருடைய பாடல்கள் அகராதிச் சரணமாலை என்னும் பெயரில் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

ருதி வருடத்தில் ஒன்றும் சௌமிய வருடத்திலொன்றுமாக இருதடவை குழந்தைவேற் சுவாமிகளின் சமாதிபற்றிய விளம்பரங்கள் அருளம்பல சுவாமிகளால் எழுதப்பட்டுள்ளன. இலக்கண வழுவற்ற நல்ல தமிழ் வசனநடைக்குச் சிறந்த உதாரணமாக அமையக்கூடியவை அவருடைய வசனங்கள். சொற் செட்டிலும் பொருள் வளத்திலும் நாவலர் பெருமானின் உரைநடையைப் போலுள்ளவை. சொல் லும் பொருள் படிப்போருள்ளத்திலே உறுத்திச் செல் லுமாறு சொல்லும் வன்மை நாவலர் பெருமானுக்குக் கைவந்த ஒன்று. அவ்வன்மை அருளம்பல சுவாமிகளுக்குங் கைவந்துள்ளமையை அவர் எழுதிய வசன நடையில் நன்கு அவதானிக்கலாம்.

'கனவான்களே! பொருள்போகிற இடம் புண்ணியம். அதிலும் பரோபகாரத்தை முன்னிட்டுக் கொடுக்கும் பொருள் அதிவிசேட புண்ணியம். அதிலும்; காலாந்தரங்கள்தோறும் ஆங்காங்கு ஆன்மரக்ஷையின் பொருட்டு உருவத்திருமேனி கொண்டெழுந்தருளும் ஞானசாரிய மூர்த்தங்களை முன்னிட்டுக் கொடுக்கும் பொருள் உரைக்கடங்கா உத்தமோத்தம விசேட புண்ணியம்'.

குறித்த வசனப்பகுதி சுவாமிகள் எழுதிய விளம்பரங்களிரண்டில் ஒன்றில் உள்ளது. துறப்பணம் போல நின்று நின்று அறுத்து உறுத்திச் செல்லும் நடையழகு இப்பகுதியிற் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளம்பல சுவாமிகளின் பாடல்கள் 'அகராதிச் சரணமாலை' என்ற பெயரில் நூல்வடிவில் உள்ளன. அந்நூலில் முப்பது பாடல்கள் உண்டு. ஒவ்வோர் பாடலும் 'அ'வில் தொடங்கி, 'தஞ்சம் வேறிலை யுனது சரணந்தானே' என்று முடிதலால் அகராதிச் சரண மாலை யென்பது அந்நூலுக்குக் காரணப்பெயரா யமைந்துள்ளது. பாடல்களெல்லாம் எளிமையும் இனி மையும் வாய்ந்தவை; குழந்தைவேற் சுவாமிகளின் அருட்பெரு விலாசங்களைப் பொருளாகக் கொண் டவை. தியான அநுபவத்திலே தாம் பெற்றுள்ள தத் துவக்காட்சி யுண்மைகளையும் அப்பாடல்கள் ஆங் காங்கு வெளியிடுகின்றன.

இறைவனுடைய அருள் நடனமாகிய நடராசநர்த் தனத்தை ஐந்தெழுத்துண்மையிலே அடக்கிக் காட் டும் 25-ஆம் பாடலும், தேகத்தின் அமைப்புப் பகுதிக ளாகிய தத்துவக் கூறுகள் உயிரை மயக்கும் முறை யிற் புரியும் பல்வேறு சேட்டைகளை விளக்கும் 26-ம் பாடலும், ஆன்ம தரிசனமுஞ் சிவதரிசனமும் நிகழ் தற்கிடமாகிய அத்துவித அநுபவ நிலையில் ஆன்மா தற்றரும தருமியாய் நிற்குமாற்றை யுணர்த்தும் 29ஆம் பாடலும் அருளம்பலசுவாமிகள் தாம் பெற் றிருந்த சுத்தாத்துவித சித்தாந்தத் தெளிவை நன்கு புலப்படுத்துகின்றன.

'அன்றொருநாள் ஆச்சிரமத்து ......... என்று தொடங்கும் பாடல் பொருள் நயத்தாலும் உவமைச் சிறப்பாலும் மேம்பட்டது. அப்பாடலைப்பற்றி முன் குழந்தைவேற்சுவாமிகள் வரலாற்றில் அருளம்பல சுவாமிகள் ஆட்கொள்ளப்பெற்ற செய்தி கூறும் பகு தியிற் குறிப்பிட்டுள்ளோம்.

இப்பாடல்களும் இந்நூலில் அநுபந்தமாகச் சேர்க் கப்படும்.

சிவ! சிவ! சிவ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்திற் குருபரம்பரையின் செல்வாக்கு

இந்நூலிற் குறிப்பிடப்பட்டுள்ள குருசுவாமிகள் நால்வர். நால்வரும் சென்ற நூற்றுண்டின் நடுப்பகுதிக்கும் இந்நூற்றுண்டின் முற்பகுதிக்கு மிடையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்கள். இக்காலப் பகுதியில் இந்நாட்டில் வாழ்ந்துள்ள மக்கட் சமுதாயம் குருசுவாமிகளை எவ்வாறு வரவேற்றது? அவர்களால் எவ்வாறு பயன்பெற்றது? அவர்கள் வாழ்க்கையாற் சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கியமான மாறுதல்கள், சீர்திருத்தங்கள் யாவை? என்பவற்றை ஓரளவு புலப்படுத்துவதற்காக எழுதப்படுகின்றது இப்பகுதி.

எல்லாவகையான சட்டதிட்டங்களுக்கும் அப்பாற்பட்டிருப்பது சிவபெருமானின் இயல்பு. அதனுல் அவர் அநாதிமுத்தன் என்றும், அங்ஙனம் எல்லாவற்கும் அப்பாற்பட்டிருப்பதோடு ஞானமே தமக்கு வடிவமாகக் கொண்டிருப்பதனுல் அநாதிமுத்த சித்துரு என்றும் ஆகமங்களிற் போற்றப்பட்டுள்ளார். அவர் அநாதி முத்த சித்துரு என்பதை விளக்குவதற்குப் பல் வேறு ஏதுக்கள் உள. ஒருவராகிய சிவபெருமான் ஒன்ருெடொன் ருெவ்வா வேடங்கள் பலவற்றைத் தாங்குபவராயிருத்தல் அவ்வேதுக்களுள் ஒன்ருகும்.

மக்கள் முன்னே குருமூர்த்திகளாகத் தோன்றுபவரும் சிவபெருமானே என்பது அநுபவ சித்தமான உண்மை. ஒன்றில் அவர் தாமாக ஒரு திருமேனியைத் தோற்றுவித்துக்கொண்டு தோற்றுவார், அல்லது பக்குவ முதிர்ச்சியடைந்த மகான்களை இடமாகக்கொண்டு தோன்றுவார் என்பதும் அத்தகைய உண்மை. ஆகவே குருமூர்த்திகளின் வேடம் நம் நியாயித்தலுக்கு அப்பாற்பட்டது. அவ்வேடத்தில் நின்று அவர் புரியுஞ் செயல்களும் நம் நியாயித்தலுக்கு அப்பாற்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவை. அவற்றையிட்டு நியாயிக்கத் தொடங்குவோமாயின் நிச்சயம் தோல்வியே காண்போம்.

சென்ற நூற்ருண்டு நாவலர் பெருமான் வாழ்ந்திருந்த காலம். அன்று சமயக்கல்வி யாழ்ப்பாணத்திற் செழிப்புற்றிருந்தது. சித்தாந்த சாஸ்திர ஞானம் போதிய விளக்கம்பெற்றிருந்தது. ஆசார அநுட்டானங்கள் விசேட மதிப்புப் பெற்றிருந்தன. நாவலர் பெருமானில் அபிமானமுள்ளவர்களாய் அவரைப் பின்பற்றி வாழ்ந்தவர்களிடத்தில் சாஸ்திர அபிமானமும் சமயாசார ஒழுக்கமுந் ததும்பிக்கொண்டிருந்தன. அவர்களிற் பெரும்பாலோர் வண்ணார்பண்ணையிலே வசித்து வந்தார்கள். அதே வண்ணார்பண்ணையில் வந்துசேர்ந்தார் கடையிற் சுவாமிகள்.

அன்றைய வண்ணார்பண்ணையிருந்த சீருக்கேற்ப ஒரு குருமூர்த்தி அங்கு தோன்றுவதாயின் அவர் நல்ல வேதாகம ஞானபூஷணமாய்த் தோன்றுபவராயிருந்திருக்கலாம். ஆசார அநுஷ்டானச் செல்வரா யிருந்திருக்கலாம். காவி உருத்திராக்கம விபூதி சடை முடியாதியவற்ருேடு கூடிய திருவேடப் பொலிவுடையவராயிருந்திருக்கலாம். இப்படி யாருங் கருதுவது பிழையாகாது.

அன்று அங்கு வந்து சேர்ந்த கடையிற்சுவாமிகளோ மேற்கூறியவற்றுள் ஒன்றேனும் உண்டு என்று, பார்த்தவர்கள் யாரேனும் சொல்லமுடியாத அளவுக்கு விகாரமான தோற்றமுடையவர். விகாரமான தோற்றத்துடன் விபரீதமான செயல்களுமுடையவர். அவர் குளிப்பு முழுக்கே யற்றவராயிருந்தார். அழுக்குத் துணியே தரிப்பவராயிருந்தார். மது மாமிசங்களையே அதிகமாக உட்கொள்பவராயிருந்தார். ஆபாசமான வார்த்தைகளையும் பேசுபவராயிருந்தார்.

வேடமுஞ் செயலும் இப்படி விகாரமும் விபரீதமுமாயிருக்கையில் ஆசார அநுட்டான சீலராயிருப்பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவாக்கில் அவரைக் குருவாக ஏற்றுக்கொள்ள எவ்வளவோ தயங்கியிருப்பார்கள், மறுத்திருப்பார் கள், அவரைப்பற்றி விபரீதமாகப் பேசியிருப்பார்கள் என்றெல்லாஞ் சொல்லுவதற்கு நாம் கூசத் தேவை யில்லை. இது சம்பந்தமாக ஒரு கதை சொல்லப்படு கின்றது.

அக்கால வித்துவானொருவர் வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் வீதியிலே வழக்கமாக இராமாயண விரிவுரை நிகழ்த்திக்கொண்டிருப்பார். பலரும் வந்து அமர்ந்திருந்து கேட்பது வழக்கம். ஒருநாள் விரி வுரை நடந்துகொண் டிருக்கும்போது பலர் சேர்ந்து ஒரு கும்பலாக வந்து அமர்ந்தார்கள். அவர்களைக் கண்ட மாத்திரத்தே வித்துவான் விரிவுரையை நிறுத்தி விட்டார்; சால்வைத்துண்டை எடுத்துதறித் தோளிற் போட்டுக்கொண்டு வெளியேறியும் விட்டார். கார ணம் வேறெதுவுமில்லை. வந்தவர்கள் கடையிற்சுவா மிகளின் சமாதிக்குப் போய்விட்டு வந்தவர்கள். சற்று நேரத்துக்குமுன் சமாதிக்கோயிலின் மணி கேட்டது. அதிலிருந்து, வித்துவானுக்கு அது தெரிந்து விட்டது.

கடையிற்சுவாமிகளை அங்கீகரிப்பதில் அன்றைய கல்வியாளருக்கிருந்த சங்கடம் எவ்வளவென்பதை அநுமானிக்கக் குறித்த செய்தி போதுமானது. சாஸ் திர ஞான அபிமானத்துக்கும் சைவசித்தாந்தத்தின் அகண்ட இயல்புக்குமிடையே யுள்ள முரண்பாடு இது. இத்தகைய முரண்பாடு என்றுமே இருந்து வந்துள் ளது. சைவசித்தாந்த நெறியின் அளவுபடாத் தன் மையை விளக்குதற்குக் காலாகாலங்களில் நிகழ்ந்து வரும் ஒரு பெரிய திருவிளையாடல் இதுவாகும்.

வெளித்தோற்றமுஞ் செயலும் எப்படியிருந்த போதிலும் கடையிற்சுவாமிகள் உண்மை நிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான ஒரு அருட்பிழம்பு; முறுகி விளைந்த சிவபோகம். அநுபவப் பேறுடையார் அதனையுணரத் தவறிவிடவில்லை. அன்றைய சமுதாயத்திற் கல்வியாளர்களைவிடப் பொதுமக்களிற் பெரும்பாலார் சுவாமிகளை வரவேற்றுப் போற்றினர். தங்களுடைய இக பர நல்வாழ்வுகளுக்குச் சுவாமிகள் துணையாயிருப்பதை உணர்ந்தனர். வழிபட்டுப் பயன்பெற்றனர். பொதுமக்கள் இங்ஙனம் பெருமளவிற் சுவாமிகளையடைந்து பலன் பெறுவதைக் கண்டு கல்வியாளரிற் பெரும்பாலாரும் தம்நிலையை மாற்றிக்கொண்டார்கள்.

அக்காலச் சமுதாயத்திலே பேய், பில்லி, சூனியம், மருத்திடுபோன்ற வித்தைகள் இப்போ உள்ள அளவைவிடப் பலமடங்கு அதிகமாயிருந்தன. மாந்திரீகம், வைத்தியம் போல்வனவற்ருல் அவை தீர்வது மிகக் கஷ்டம். அத்தகையோரெல்லாங் கடையிற் சுவாமிகளைத் தஞ்சமடைந்து அவை தீரப்பெற்று உய்வடைந்தனர். தீராநோய்கள் பல தீரப்பெற்ற வரலாற்றைச் சுவாமிகளைப்பற்றிய செய்திகள் பலவற்றிலிருந்து அறிகிருேம். அன்றியும் சுவாமிகள் பேரிற் குழந்தைவேற்சுவாமிகள் பாடிய செய்யுளொன்று இக் கருத்தை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

''வீறுபடு பில்லிமுதல் வெஞ்சினப் பசாசம்
வேறுசெய் மருந்துவிசர் கொண்டுதிரி பித்தம்
நீறுபட வேண்டுமெனில் நீவிர்வந்து செய்மின்
கூறுகடைச் சாமிகுரு பூசையினை யன்றே''.

இங்ஙனம் இத்தேவைகளை யொட்டியும், இயல்பான ஆன்மவிசாரங் காரணமாகவும் வேளைக்குவேளை அன்பர்கள் சுவாமிகளிருக்குமிடந் தேடிச்சென்று பூசைசெய்து வழிபட்டு வந்தார்கள். இந்த வகையிற் சுவாமிகளை அணுகிப் பழகி அன்பு செய்து வந்தவர்கள் நாளாவட்டத்தில் அவருடைய பரானுபவச் செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்திலும் அநுபூதியுணர்விலும் தம்மாலியன்ற அளவு பங்குபெற்றிருப்பார்கள் என்பது சொல்லவேண்டிய தில்லை.

சுவாமிகளுக்கு வழிபாடாற்றும் முறையில் தொடங்கிய பூசை நிகழ்ச்சியானது நாளடைவிற் பெருமளவில் நடைபெறுங் குருபூசையாயிற்று. கடையிற்சுவாமிகள் காலத்திலும் பார்க்கக் குழந்தைவேற் சுவாமிகள் காலத்தில் இக்குருபூசை நிகழ்ச்சிகள் மிகப் பிரபல்யமுற்றன. இக்குருபூசைகளினுல் மக்கட் சமுதாயம் நன்கு பண்பட்டு வந்ததென்றே கூற வேண்டும்.

பொதுவில் யாழ்ப்பாணஞ் சாதி மரபுத் தடிப்புமிகுந்த இடமென்பர். அந்நாளில் இப்போதுள்ளதிலும் பார்க்க அது மிக அதிகமாயிருந்திருக்கும். ஒருவரோடொருவர் உடனிருத்தல், உடனுண்டல் என்ற விஷயங்களில் எவ்வளவோ நுணுக்கம் பார்ப்பவர்கள் மிக அதிகமாயிருந்திருப்பார்கள். குறித்த குருபூசை நிகழ்ச்சிகள் அந்நிலையை ஓரளவுக்கு மாற்றி விட்டன.

சாதிமரபுப் பேதம் பாராட்டாது, பெருமை சிறுமை பாராது, குலங் கோத்திரங்களைக் கவனியாது அன்பர்கள் அடியார்கள் என்ற முறையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ளவர்கள் ஆங்காங்கு ஒன்றித்துக் கூடுந்தன்மையால் சமுதாய வாழ்வில் உண்மையான ஒரு திருப்பம் ஏற்பட்டதென்று துணிந்து கூறலாம். குழந்தைவேற் சுவாமிகளது அடியார் திருக்கூட்டத்திற் பிராமணர், பொற்கொல்லர் என்றிங்ஙனம் பல்வேறினத்தவரும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றெக்காரணமும் நோக்காது உயிரின் பெருமைக்காக ஒருவர் மற்றவரை நேசிக்கும் ஆன்மநேயம் அடியார் கூட்டங்களில் மட்டுமே காணத்தக்கது. பரஸ்பர உறவும் வஞ்சகமில்லாத உள்ளக் கலப்பும் அக்கூட்டத்திலேயே ஏற்படுவன. இவ்வகையில், குறிப்பிடத்தக்க அளவுக்கு அந்நாளைய மக்களின் உள்ளப்பண்பாடுஞ் சீருற்றதென்றே கொள்ளல் வேண்டும்.

சாதாரண வாழ்க்கைத் தேவையையொட்டிய மற்றைய அலுவல்களை இயன்றமட்டுங் குறைத்துக் கொண்டு ஆன்மலாபம் ஒன்றையே முன்னிட்டு இவ்வடியார்கூட்ட நிகழ்ச்சிகளிற் பெரும்பாலோர் தமது நேரத்தைச் செலவிட்டு வந்தனா. அக்கூட்டங்களிற் பெரும்பாலும் ஞானவாசிட்டம் வாசிக்கப்பட்டு வந்தது. குழந்தைவேற்சுவாமிகள் அவ்வவ்விடங்களில் தாமும் உடனிருந்து வாசிப்பதைக் கேட்டு மற்றையோர்க்கு அவற்றின் நுட்பங்களை விளக்கி வந்துள்ளார். அதனல் தத்துவஞான விளக்கமில்லாதார், விளக்கம் பெறுவதற்கும், அவற்றிற் சந்தேகமுடையோர் சந்தேகங்களைத் தெரிந்துகொள்வதற்குமாக அக்கூட்டங்களிற் சென்று பங்குபற்றினர். இச்சூழ்நிலை அக்காலத் தத்துவஞான வளர்ச்சிக்கு அரணாயிற்று. அன்றியும் அக்காலத்தில் மும்முரமாய் நடைபெற்றுவந்த சுவிசேஷ போதனையிற் பெருந்தொகையானோர் எடுபட்டுப் போய்விடாவண்ணங் காத்து வைப்பதற்கும் அச்சூழ்நிலை பெருமளவில் உதவுவதாயிற்று.

ஒருரிலிருந்து அடியார்கள் பலர் கூட்டமாகப் புறப்பட்டுச் சென்று மற்றோரூரிலே தங்கி அவ்விடத்திலுள்ள மக்களோடு கலந்து மகிழ்ந்த செய்திகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேற் சுவாமிகள் தலைமையிற் பலதடவை நிகழ்ந்துள்ளன, சில சமயங்களிற் பயண வண்டி ஒழுங்குசெய்து போதிய அளவு பொருள்களுமேற்றிக் கொண்டு ஊர்விட்டூர் சென்று அவர்கள் தங்கிச் சமைத்துண்டு தமது ஆன்மநேயக் கலப்பை அதிகரிக்கச் செய்துள்ளார்கள். இத்தகைய செய்திகள் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற பழந்தமிழ்ப் பண்பாட்டிற்குப் புதுமெருகு கொடுத்துக்கொண்டு வந்தன.

குரு என்ற ஒரு முதல்வனைத் தலைவனுகக்கொண்டு எல்லாவகையிலும் அவரைப் பின்பற்றித் தம்மை யடக்கி யொழுகுஞ் சீரிய ஒழுக்கநெறி இவர்களாலேயே சமுதாயத்தில் இடம்பெறுவதாயிற்று. அன்பு, அடக்கம் பொறுமை முதலிய உயர்குணப் பண்புகளும் தூய்மை, எளிமை, ஆசாரம் முதலிய நல்வாழ்க்கைப் பண்புகளும் இவ்வடியார் கூட்டங்களாற் சமூகம்பெற்ற பேறுகளாகும்.

கடையிற்சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பலசுவாமிகள் மூவரும் பெரும்பாலுஞ் சஞ்சாரஞ் செய்த இடமும் தொடர்பாக நெடுநாட்களுக்குத் தங்கியிருந்த இடமும் வண்ணார்பண்ணையாகும். அப் பிரதேசததிற் சிவன்கோவிலடியிலிருந்து சிவலிங்கப் புளியடி வரையுள்ள பகுதியிற் சைவவாழ்வுக்கான நற் பண்புகள் இன்றுந் திகழக் காண்கிறோம். நாவலர் பள்ளிக்கூடம், இந்துக்கல்லூரி, நாவலர் மணிமண்டபம்; சிவதொண்டன் நிலயம் என்ற சிறந்த சைவ ஸ்தாபனங்கள் நான்கும் அப்பகுதியிலேயே உள்ளன. இப்பகுதியில் வாழ்வோரிடத்துப் பொதுவாகத் தூய்மை, எளிமை. ஆசாரம் முதலிய சைவப்பண்புகள் சிறந்திருந்து வந்துள்ளதாகவும் அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே குறித்த சுவாமிகளின் வாழ்வு இன்னுமொரு வகையிலே முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. ஆங்கிலக் கல்வியின் செல்வாக்குச் சமூகத்திலே நிரம்ப இடம்பிடித்துக் கொண்டிருந்தகாலம் அது. ஆங்கிலக் கல்வி நிலையங்கள் தமிழ் விஷயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டிருந்தன. சமயம் அவ்விஸ்தாபனங்களினால் வேண்டுமட்டும் புறக்கணிக்கப்பட்டு வந்தது. கல்லூரி மாணவர்கள் தமிழ் படித்தோரையும் சைவச் சால்புள்ளோரையும் அலட்சிய மனப்பான்மையுடன் நோக்கும் வகையிற் பயிற்றப்பட்டு வந்தார்கள். கல்லூரிகளிலே உள்ளுக்குள்ளாக நாஸ்திகந் தலைதூக்கிக்கொண்டிருந்தது. கல்லூரிக்கு வெளியிலும் அது தன் செல்வாக்கைக் காட்ட முயலாமல் இருந்துவிடவில்லை.

இங்கிலையில் ஒழுங்கை தெருக்கள் வீடுவாசல்களிலே சுவாமிகளும் அடியார்களும் உலாவிக்கொண்டிருந்தமையால் நாஸ்திகந் தன் சொரூபத்தை வெளியிற் காட்டமுடியாதிருந்தது. குழந்தைவேற் சுவாமிகளும் அடியார்களுந் தெருவழியே போய்க்கொண்டிருக்கையில் தாமும் தம் சகபாடி மாணவர்களுமாகக் கல்லூரி வளவுக்குள்ளே நின்றுகொண்டு 'இதோ கள்வர் கூட்டம் போகிறது' என்று கூச்சலிட்டுப் பரிகாசம் பண்ணியதாக அந்நாளில் மாணவராயிருந்து தற்போது வயோதிகமுற்றிருக்கும அன்பரொருவர் கூறக் கேட்டதுண்டு. அவ்வடியார்களிலொருவர் தம் தகப்பனார் என்பதையும் அவரே சற்றுத் தயக்கத்துடன் கூறினார். அன்றைய தம் அறியாமையை நினைந்து பச்சாத்தாபமுறும் அவ்வன்பர் அதனால் மேலும் அபசாரந் தொடராமைப்பொருட்டுத் தொடக்கத்தில் மூன்று முறையும் முடிவில் மூன்று முறையும் 'முருகா என்று கூறிக்கொண்டே இதனை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளும் தொண்டர்களும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் எழுந்தருளுவதனாலும், சில சமயங்களிற் கூட்டமாய் எழுந்தருளுவதனாலும் அவ்வவ் வீடுகளிற் கூடுதலான அளவுக்குச் சைவசாந்நித்தியம் ஏற்பட வாய்ப்புண்டாயிற்று. அங்ஙனமேற்பட்ட சைவசாந்நித்திய விளக்கம் சந்ததி சந்ததியாக அவ்வக் குடும்பங்களில் தோன்றுவோரிடம் அமையக்கூடியதாயிற்று. சாதாரணமாக, வாழ்க்கைச் செழிப்புஞ் செல்வச் செழிப்புங் கூட அச்சந்ததிகளிடத்தே விளக்கமுற்றிருத்தல் கண்கூடு.

கடையிற் சுவாமிகளின் உச்சிட்டத்தைப் பெற்று நோய் திரப்பெற்றவர் எண்ணிறந்தோர். அவருடைய உச்சிட்டம் தம் குழந்தை வயசிலே தம்பாற் புகப்பெற்று அதனால் அன்று தொடக்கம் தாமாகவே பிரசித்திபெற்ற சோதிடராகவும், வைத்தியராகவும், மாந்திரீகராகவும் விளங்கிய ஓரன்பரை நாடறியும். அவ்வாறே உச்சிட்டம் பெற்று அதனாற் சிறந்த மிருக வைத்தியராய்த் திகழ்ந்ததுமன்றித் தம் உச்சிட்டத்தையே மருந்தாக உதவி மிருகநோய் தீர்க்குந் திறமையும் பெற்றிருந்த அன்பருமொருவர் பிரசித்தி பெற்றுள்ளவர். இவ்வகையிலே நம் கேள்விக்கெட்டாத நிகழ்ச்சிகள் இன்னுமெத்தனையோ யாரறிவார்? இவையெல்லாஞ் சுவாமிகள் வரவால் யாழ்ப்பாணச் சமுதாயம் பெற்ற பயன்களாம்.

குருமூர்த்திகளை நம்பினவர் வாழ்ந்தார்கள். நம் பாதவர்கள் வாழும் வாய்ப்பை இழந்தார்கள். இதுவே இதற்கு முடிவுரையாகக் கொள்க.

*சிவ! சிவ! சிவ!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலவந்த அண்ணல்

ஆசிரியர் திரு. க. சரவணபவன்

ஆதியும் அந்தமும் அறிகிலாச் சோதியன்
அனைத்துமாய் அலவுமாய் ஆகிய முதலோன்
மன்றமும் மயானமும் ஒன்றென வாடிய
மாபெருங் கூத்தன் மாசிலாச் சீரோன்
அன்பருக் கன்பனும் ஆகிய வதனுல்
சிறியது பெரியது சிந்தையிற் கொள்ளா
தீழத் தன்னின் யாழ்நக ருய்ய
அன்றோர் திருநாள் அகத்திடை யுன்னி
எடுக்குங் கருமம் இனிதுற முடிப்பின்
ஏற்ற கோலத் தவசியம் எண்ணித்
திருவிளையாடல் தினந் தினஞ் செய்வோன்
மானிட வேடந் தாங்கியோ மற்றக்
கரிய தளதனைக் கரியுடை யாக்கிக்
கங்கா நதிநீர் கருணையாய் மாற
இளம்பிறை நகையாய் இலங்கிடச் செய்து
கண்ணிமை யெனவே காத்திடுங் கருணை
குடையாய்க் கக்கம் அதனிடை கூட
முப்புரந் தீயெழ முறுவல் செய்கோலத்
தழகு கெம்பீரம் அழகொடு நடைதொனி
ஆமிவை மூன்றிலும் அணிபெறக் காட்டிக்
கொம்போ டகந்தை கூடவே தேய்ந்திட
அன்றவன் தேடியும் அறியொணு மலர்ப்பதம்
மண்ணிடை தோய மனிதனே யாகி;
தில்லை சேர்ந்த தென்னுட கன்று,
திரையெறி கடலிற் றென்பால் விளங்கும்
யாழ்நகர்க் கோட்டை கப்பாற் கடலிடை
திகழுந் தீவாம் மண்ணைடமா நகரில்
அண்டரு மறியா வரும்பெரும் பொற்பதம்
சுந்தரர்க் காகத் தூதுசெல் துணைப்பதம்
வைத்தனன் காணே யெங் கோன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தனன் காலை வைத்தது வைத்தலும்
நாற்றிசை நின்றும் ஊற்றென வன்பர்
வந்தன ரவன்பால் வழிபட வென்றே.
சூழ்ந்தனர் அவனைச் சுற்றிலு மடியார்;
ஆடினர் பாடினர் அன்பது மிகவே.
அடியார் குழுவில் அன்பில் முதிர்ந்தோர்
ஐயனை நிழல்போ லகலா திருந்தனர்.
இன்னு மொருவித குழுவினர் இருந்தனர்
அவரே நீரில் நுரையினை யனையோர்.
கண்ணிருந் தாலும் காணாத் திறத்திவர்
பரிகசித் தனரே பழிப்பிது புதிதோ.
இவ்வா றிருந்த வெங்கோன் நாள்செல
மண்டை மாநகர் மத்தியாய்க் கொண்டு
அயலே யமைந்த தீவுக ளெங்கும்
அணித்தா யிருக்கும் யாழ்நக ரதற்கும்.
இடையிடை சென்று வந்தன ரந்நாள்.
எங்கு சென்றாலும் அங்கெலா மன்பர்.
ஏது சொன்னாலும் அஃதிலோர் சக்தி.
இது நிற்க—
பல்லிடஞ் செல்லினும் பகவான் திருப்பதம்
ஓரிடஞ் சிறப்பாய் உகந்தே நாடும்.
அதுவே யாழ்நகர்ச் சனமே தினமும்
பெருகக் கூடும் பெரிய கடையாம்.
இவ்விட மெங்கள் செவ்வியோ னென்றுங்
காட்சிதந் தெங்குங் காணாச் சித்துகள்
காட்டுந் தன்மையாற் கடையிற் சுவாமியென்
றன்றுளோ ரவரை யழைத்தனர் போலும்.
பேரிலாப் பெம்மான் பேர்பெறுந் தலமிதில்
இந்நாட் டானும் எடுத்தடி வைக்கக்
காலே கூசும் கைதொழ வுன்னும்.
இன்றிது வென்றால் அன்றெது வாமோ!
இனிச் சொல்லி லப்பால்—
எங்கோன் சீடர் எண்ணி லடங்கார்
அற்புதந் தாமும் அதுபோ லாமே.
அற்புதம் நாடி யவரோ செல்லார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதம் ஆகும் அவசியங் கண்டே
அற்புதம் அவைகுணம் அறிவான் சிலவே
சொல்லுதும் பலசொலச் சொற் கிடமேது.

## முதலாம் அற்புதம்

பெரிய கடையின் அயலே யொருபெண்
வாழ்ந்தன ளந்நாள் வனிதையிவள் பெயர்
பொன்னம் மாளெனும் பொற்பெய ராமே.
இப்பெய ரிவட்கு ஏற்றது மாமே
ஏனோ வென்னில் அதுபின் தெரியும்.
எங்கோ னிடத்து இவள்தம் பக்தி
எல்லை யற்றே யிருந்தது வெனலாம்.
காரிகை யிவள்போல் கணவனும் அன்பனும்.
இடையிடை சுவாமி இவளகத் தமுது
சீட ரோடுஞ் செய்வது வழக்கம்.
இந்நா ளிவையே எந்திழை யாட்குப்
பொன்னு ளாகிப் பொலிவுசெய் தொளிரும்.
அவளன்பொ டின்பம் அவையொரு தன்மை.
அமுதூட்டு முனனும் அதுவூட்டு போதும்
அமுதாய பின்னுமாய் அவளின்ப மூன்று
விதமாக நின்று விம்மியே பொங்கும்
முகத்தோடு பார்வை பேச்சோடு செய்கை
அகத்தோடு புறமும் அனைத்திலு மொன்றாய்
அவளன்பு பாய்ந்து அங்கங்கு நின்று
ஒவ்வோ ரிடத்தும் ஒவ்வொரு தன்மையாய்த்
தாண்டவம் புரியுந் தரஞ் சொல்லலாமோ!
இவளோர் நாள்—
ஐயனோ டடியார் அவர்க்கமு தூட்டப்
பொருளே யின்றிப் புருடன் கலங்க
"இதற்கேன் கலக்கம் ஈதிங் கிருக்கே"
என்றிது கூறி ஏற்றேன் தலைநாள்
வேத விதிப்படி வேதியர் முன்னே
அக்கினி சாட்சியாய் அன்பொடு பூட்டிய
மங்கல நாணை மலர்ந்த முகத்தொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிழ்த்தே யதனைக் கட்டிய கைகளிற்
கொடுத்தன ளம்மா! கொழுநனு மேற்றான்!
அப்பால்—
போசன முண்டதும் போயெம் மாசான்
ஆசன மொன்றில் அமர்ந்தே பின்னர்
அடியரை யெல்லாம் விடைகொடுத் தனுப்பி
அப்பா லாங்கு அம்மையை யழைத்துக்
கதிரொளி துறந்த கழுத்தினைக் காட்டி
எங்கே யென்னுங் கருத்தே யமையக்
கையினை மடித்துக் கேட்டனன் றானே.
அம்மையா ரதற்கு வாய்திறந் தெந்தப்
பதிலுமே கொடாது பச்சைக் குழந்தையின்
பால்முகம் போன்ற முகந்தனில் மட்டும்
அன்பு ததும்ப அங்கந் துவள
நின்றன ளாங்கு நிலந்தனைப் பார்த்தே.
பேச்சில் நிலையொடு பழகிய பெம்மான்
ஆய்ச்சியின் நிலையை அறிதலும் அரிதோ.
பேசா தாய பேச்சின் கருத்தை
இலேசா யறிந்தனன் எம்முடை நாதன்.
அறிதலு மையன் அம்மையை நோக்கிப்
பிறிதோர் பேச்சும் பேசா தறுக்கித்
"தகுமோ விச்செயல் தையலாய்"? என்றான்.
என்றலும் எங்கள் பெண்களின் தெய்வம்
சற்றே பதறித் தலையே நிமிரக்
கைக ளிரண்டுங் கடிதே குவியக்
கண்கள் நீரை முத்தாய்க் கலுழ
நாதள தளத்துக் குரலும் நடுங்க
"ஈதுக் குதவா விதனை யெனக்கு
ஏனோ?" என்றாள் எழுதருங் குணத்தாள்.
இவ்வுரை கேட்டலும் எம்முடை ஐயன்
வெவ்விய புலன்களின் வேகங் கெடுத்தே
சற்றே யாயினுஞ் சலனம தின்றி
நிற்பவ னாயினும் நிகரில் பக்தியை
நேரே காண்டலும் நெஞ்சு துணுக்குற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்சில போது ஒன்றுமே பேசான்
கண்களை மூடிக் கற்சிலை யானான்.
இவ்வா றையன் இருந்திட வவன்முன்
செவ்விய குணத்துச் செல்வியும் வணங்கி
இருவருஞ் சிலைபோல் இருந்தவக் காட்சி
அரியதோர் காட்சியென் றறையவும் வேண்டுமோ?
அன்பர் தமக்கிது அழியாக் காட்சியே.
சில்போ திவ்வண் சென்றபின் ஐயன்
மெல்லென விழித்து மென்கொடி நோக்கி
உள்ளத் திருந்தெழும் ஒருதனிக் குரலில்
“அம்மே! உன்செயல் அரிதினும் அரிதே;
இம்மை மறுமைக் கிதுவே போதும்.
போயினி நீயுன் பொன்கொடு கையால்
பழையதோர் இரும்பு பெற்றுவா” என்றான்.
போயின ளம்மையும் போயோர் வண்டித்
துலாவொடு நுகத்தைத் தொடுக்கும் பழைய
இரும்பைக் கொடுவந் திவர்கைக் கொடுத்தாள்.
நாக படமதை நாதன் பெற்று
அருளொடு நோக்கி அதிலெதோ செய்து
அவளிடந் திருப்பிக் கொடுத்தே யப்பால்
“இதனையோர் பெட்டியில் இறுகப் பூட்டிவை.
மூன்றுநாட் டிறவேல் அதன்பின் முழுகிக்
கர்ப்பூர தீபங் காட்டித் திறவென
அம்மையும் வணங்கி விடைபெற் றகன்றாள்.
குருவாக் குலகிற் கூடிய தொன்றெனச்
சிரமேற் கொள்ளுஞ் செல்வியுங் கணவனும்
சொற்படி செய்து சொல்லிய பெட்டியில்
உற்றது கண்டே உவகையி லாழ்ந்தனர்.
பழைய விரும்பு பளிச்செனு மொளியொடு
விழிமுன் பொன்னாய் விளங்கிற் றங்கே.
பொன்னைக் கையாற் றீண்டுமுன் புனிதர்
“என்னவுன் கருணை!” யென்றே யிருவரும்
மன்னவன் பாதம் மனத்திடை யுன்னிக்
கண்மழை பொழியக் கதறினின் றனரே.
அப்பாற் கூறில் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக் கன்பு அளித்த பொன்னிது
முன்னொரு முதலாய் வாணிகம் புகுந்து,
நாட்செலப் பெருகி நற்குடி உயர்த்தி,
தருமம் வளர்த்துச் சந்ததி மினுக்கி,
இன்று மவர்கிளை எச்சிறப் போடும்
நன்றே வாழ்ந்திட நின்றுத விற்றே.
பெரியோ ராசியைப் பெற்றவ ருய்வரே.

## இரண்டாம் அற்புதம்

அன்பர் ஒருவர் அந்நா ளோர்பகல்
சுவாமியைக் காணத் தூரத் திருந்து
கால்நடை யாகக் களியொடு வரும்வழி
தூரஞ் சுருக்கும் நோக்கொடு குறுக்குப்
பாதை யொன்றினைப் பற்றினர் புதிதாய்.
பற்றிய வழியெதிர் பாரா வண்ணஞ்
சிக்கலில் அவரைச் செலுத்திய தன்று.
காலமோ கோடை, கடும்பகல் நேரம்,
பூமியோ புதைமணல், புதைப்பதோ டன்றி
அடிநிலம் படுமுன் அள்ளுமே சுடுமணல்.
சுடுமணல் தன்னிற் துடிதுடித் தன்பர்
குருவின் நாமம் பன்முறை கூவி
அவர்திருப் பாதம் அகத்திடை யழுத்தி
உள்ளங் காலில் உண்மிக வுருக
நெருப்பில் நின்று நெடுநடம புரிந்தார்.
இஃதிங்காக —
ஆங்கு வீட்டில் ஐயன் சயனித்
திருந்தான் உண்ட இளைப்பே நீங்க.
சயனித் திருந்தோன் சட்டென் றெழுந்து
"ஏ!ஏ! குடையை எடுஎடு" என்றான்.
அயலே நின்ற அடியார் சிலருடன்
துடிதுடித் தோடிச் சொல்லிய குடையை
ஈற்றில் ஒருவரே எடுத்துவந் தார்காண்.
கொணர்ந்தவர் குருவின் கட்டளைப் படியே
குடைவிரித் தவர்பதம் நிழல்செய் வார்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்தே வைத்துக் கைகுவித் தொதுங்கினர்.
ஒதுங்கிய விவரும் உடன்னின் றோருங்
கூப்பிய கையொடு கூட்டமாய் நின்றிட
பரப்பிய குடைமலர்ப் பாதங் காத்திட
நெடுமால் சயனம் நிகர்த்திட ஐயனும்
படுத்தே தூங்கினன் பாங்கினர் திகைக்கவே.
சிறுபோ திங்ஙன் சென்றதும் விழித்து
"இனிஎடு குடையை" என்றவர் கூறலும்
ஒருபேச் சின்றி யோடிவந் தெடுத்தனர்.
எடுத்ததே யன்றி என்னிது என்றிலர்.
இங்ஙன் நாழிகை இரண்டொன் றேக
அங்ஙன் தோற்றினர் மண்ணிடை வெந்தவர்.
அவர்தம் முடலில் அணுவள வேனும்
நிகழ்ந்த நிகழ்ச்சிக் குறிப்பொன் றில்லை.
காலும் முகமுங் கண்டதா ரென்று
சொல்வதே போலத் தோற்ற மளித்தன.
கண்ணில் விந்தையும் பரபரப்பான
போக்கும் மாத்திரம் புதிதா யிருந்தன.
வந்தவர் குருவை வீறுடன் வணங்கி
வழக்க முறைக்கு மாறாய்த் தோத்திரம்
மிகைபடச் செய்து ஒருபடி யாறினர்.
ஏனை யாங்கு இருந்த அடியவர்
இவர்போக் கன்று புதிதா யிருந்தமை
கண்டே யிதற்குக் காரண மறிவான்
அன்பரை அழைத்து ஒருபுறஞ் சேர்த்து
உசாவினர் உசாவ உரைத்தனர் அன்பரும்,
நாம்முன் செப்பிய மண்ணிடை நாடகம்
முழுவதும் மொழிந்து மேலே நிகழ்ந்தன
வெல்லாங் கூறினர் எம்முடை யன்பர்,
தாங்க முடியா வேதனை தன்னால்
ஓங்கு குரலில் ஓல மிட்டே
குருவின் பாதங் குழைந்தே நினைப்ப
விந்தை யாக வெயில்நில வாயும்
வெந்து வெதுப்பும் மண்நீ ராயுங்
குளிர்ந்தன வென்றும காலிற் கொப்புளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே மறைந்து ஒழிந்தது வென்றுங்
கண்ணீர் மல்கக் கதையை முடித்தார்.
ஈதுகேட்ட வேனைய வன்பர்
"சரிசரி காரியம் இப்போ தன்றோ
விளங்கிற்" றென்றே வீறுடன் துள்ளித்
தத்தம் பாட்டிற் றாண்டவம் புரிந்தனர்.
வந்தவர் திகைத்து வாயினிற் கையுடன்
அழுகையும் மறந்து அவர்களைப் பார்த்தார்.
பார்த்தவர் நல்ல தருணம் பார்த்து
"'இப்பொழு தன்றோ விளங்கிற்' றென்றீர்
விஷயம் வேறும் உண்டோ?" என்றார்.
எனலும் அவர்கள் இளைப்புச்சற் றாறிக்
குடையின் காதை கூறினர் அவர்க்கே.
கூறலும் புதியவர் கோவென் றலறி
மண்ணில் வீழ்ந்து மயங்கிக் கிடந்து
எழுந்ததும் "ஐய! இதுவோ செய்து
எனைநீ காத்தாய்?" என்றனர் அம்ம!
இக்கதை நோக்கில் எங்கள் நாதன்
அன்பர்க் கன்பனும் ஆனே போல
அடியா ரின்னல் தனதே யாக
உடனதை நீக்கும் உயர்ந்த பண்பொடு
எல்லா மறிதல் எதுவு மாற்றல்
ஆகிய வல்லமை யாள னென்பது
ஊகித் தறியும் உண்மையே யன்றோ?

## மூன்றாம் அற்புதம்

வேறு மற்புதம் விரிவினை யஞ்சிச்
சுருங்கக் கூறிற் சொல்லுதுங் கேளீர்.
மண்டை நகரில் மலடாயிருந்த
பெண்ணொருத்தி பிரார்த்தனை செய்யக்
கோழி முட்டை மூன்றினைக் கொடுத்து
"இம்மூ வேந்தரைப் பெறுநீ" யென்றான்.
பின்னவள் மைந்தர் மூவரைப் பெற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் அற்புதம்

திருநெல் வேலியில் ஒருநா ளோர்பெண்
தன்னைய் மாறத் தாழ்ந்தருள் வேண்டினள்.
அவள்கை யொன்று அழுகுபுண் பிடித்து
அதனொடு வாதமுஞ் சேர மடங்கிக்
கையோ வென்று ஐயுறக் கிடந்தது.
அதனைப் பார்த்து ஐயன் தன்வாய்
அமுதத் திவலை யதிலுறச் செய்தான்.
அதுவே மருந்தென அவளு மகன்றாள்.
அன்றே நோயும் அகன்றது காணீர்.
இவ்விதம் இவர்செய் அற்புதம் பற்பல.
கூறிற் பெருகும் ஆதலின் விடுதும்.

## சைவத் தொண்டு

யாழ்நகர் தவப்பயன் திரண்டோ ருருவாங்
கடையிற் பெரியோன் காலங் கூறில்
தமிழொடு சைவந் தளராது வளர்த்த
நாவலர் பெருந்தகை நன்னுளதுவே.
நாவலர் பெருமான் சைவங் காத்தார்;
நம்முடை காதனும் அதனையே செய்தார்.
நாவலர் தொண்டு ஆற்றிய நாளில்
வேறோர் தொண்டும் வேண்டுமோ வென்னின்
ஈசன் வழித்திறன் இத்தால் விளங்கும்.
இருவரு மொன்றையே யியற்றின ராயினும்
வழிக ளிரண்டும் வெவ்வே றாமே.
வேறுபா டிதுவே பூரண வளர்வின்
காரண மாக நின்றது காணே.
நாவலர் பெருமான் நான்மறை கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிப்படி நின்று வழியுங் காட்டி
ஏனையோர் தமையும் எள்ளள வேனும்
விதிமுறை நின்று விலகா வண்ணம்
உன்னத மாக உயர்வழி நடாத்திச்
சைவங் காத்தனர் சுருங்கச் சொல்லில்.
வேறவர் தொண்டு விரித்துக் கூறல்
அவசிய மின்றே அவையுல கறியும்.
ஐயன் முறையோ இவ்வித மன்று:
அவர்முறை முறையில் அடங்கா தெனலாம்,
ஆசைப் பேயை யடக்கிய வாசான்,
அலையும் மனசை நிறுத்திய வண்ணல்,
வேதப் பொருளை விழுங்கிய விமலன்,
மோன வெளியில் அமர்ந்த மூர்த்தி,
இவர்தாம் —
விதியே கடந்த வெளியிடை நின்று,
பக்தி சனத்திடை பரவச் செய்து,
புறத்தினும் அகமே பெரிதெனக் காட்டி,
பக்குவ புருடரைப் பார்த்திருந் தேற்று,
அவரவர்க் கேற்ப அவர்வழி வகுத்து,
முத்தி வழியும் முடிவிற் காட்டி,
குருசிட மார்க்கங் குன்றாது நாட்டி,
அத்துடன் —
முத்தரும் பித்தர்போல் திரிவ ராமென்றும்,
செத்தாரைப் போலத் திரியெடா வென்றும்,
பேரின்பவீடு தூரமோ வென்றும்,
கூறு மிவைபோற் கொள்கைகள் பலவும்
நாட்டிடை நன்கே ஊன்றிடச் செய்து
சைவம் வளர்த்தனர் சத்திய மிதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடியார் பரம்பரை

பெரியோர் வாழ்வின் பெரும்பயன் உலகில்
இரியா தென்றும் எழில்பெற நிற்கும்.
அண்ணலும் அன்று ஆல்போற் பரந்து
அதன்விழு தன்ன அடியார் பலரின்
பரம்பரை யிங்கு பரவச் செய்தனன்,
பரம்பரை யெல்லாம் பகரிற் பெருகும்.
அறிய விரும்பின் ஆராய்ந்தறிக.
ஒன்றே யொன்று உதாரணந் தருவன்.
நன்னெடுங் காலம் நம்மவர் மத்தியில்
ஞானச் சோதியாய் நற்குரு நாதனாய்
சைவக் குன்றின் தணியாத் தீபமாய்
விளங்கியே யீற்றில் விந்தையே யாக
இவர்புக ழனைத்தும் இயம்புமிந் நூலை
இயற்றி முடித்த வின்று தானே —
அதாவது தேதி ஆங்கில முறைப்படி
நூற்றாண் டிருபதில், வருடம் அறுபது
தன்னொடு நான்கில், மாதம் மூன்றில்.
நாளே யிருபது அதனொடு நான்காந்
திகதி யாய செவ்வா யின்றே,
சோதி மறைந்த தோவென மறைந்து
இறைவன் திருவடி யெய்திய குரவோன்
யோகர் சுவாமிகள், இந்நூற் றலைவன்
கடையிற் பெரியோன் கைசே ரடியன்
செல்லப்ப சுவாமியின் சீடரே யாவர்.
இன்று மறைந்தவர் இறைபதஞ் சேர்க.
எமது வணக்கம் இவர்பதஞ் சேர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகச் சின்னங்கள்

கடையிற் சுவாமிகள் வண்கிழக் கடங்கினர்.
நீராவிப் பிள்ளையார் கோயிற் கணித்தாய்ச்
சுவாமிகள் கோயிலுந் துலங்குதல் காணீர்.
வேறோர் தலமும் வீட்டி னுருவாய்
அமைந்துள தன்பர் தரிசனைக் கென்றே.
அத்தலம் மண்டை நகரில் உளதாம்.
அந்நா ளாங்கு சுவாமிகள் அதிகந்
தங்கிய வீடே தலமது காண்க.
ஆங்கோர் சிறிய குடிசை யிலேயவன்
படுத்த கட்டிலும் படமும் பிறவும்
சேமமே யாக வின்றும் அன்பர்
பேணி வைத்துப் பிரார்த்தனை செய்வர்.
அவ்வயல் மக்கள் ஐயன் தம்மொடு
இன்று மிருப்பவர் போல மதித்து
அவர்கதை பேசில் அழுதே விம்மும்
அன்புடை யோராய் அமைந் துள்ளாரே.
எல்லோ ரிடத்தும் இதுகாண் பரிதே
அவன்றாள் வணங்க அவனருள் வேண்டும்;
அன்பு செய்யவும் அதுவரல் வேண்டுமே.

## தோத்திரம்

சிவனவன் திருமுடி யதனிடை யெழுந்தே
சிறிப் பாய்ந்து சேணின் றிழிந்து
மலையில் விழுந்து மண்ணெலாஞ் சிதற
உருண்டு புரண்டு ஓடிக் குதித்துக்
குலமலை குலுங்கக் குவலயஞ் சேர்ந்தே
மண்ணிடை வந்ததும் மக்களைக் கண்டதும்
மக்களுக்காக மதம் மிக வடங்கி
அவர்மீ தன்பு ஆர்த்தே யோங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்க்கே தன்னை யர்ப்பணஞ் செய்யும்
கங்கையே போலக் கடையிலெம் நாதா!
நீயுநின் தேசம் நீங்கியே வந்து
காற்றையுங் கடலையுங் கட்டவே வல்லதும்
நூற்றொரு நினைவாய் நொடிநொடி நம்மை
ஆட்டியே யலைக்கும் அநுமான் மனத்தை
மடக்கித் துலங்கில் மாட்டிட வல்லதும்
ஆகிய நின்திறல் அனைத்தையு மெமக்காய்
அடக்கி யொடுக்கி அருளே யுருவாய்
எம்மிடை வாழ்ந்து எமக்கா யுன்னைத்
தியாகஞ் செய்தனை சிவனே யனையாய்!
ஐயநின் பாதம் அடைக்கலம் போற்றி!
துய்யனே போற்றி! சுகிர்தனே போற்றி!
அற்புதா போற்றி! அழகனே போற்றி!
சொற்பதங் காணாச் சுருதியாய் போற்றி!
சாதி பேதங் கடந்தாய் போற்றி!
நாத வெளியில் நின்றாய் போற்றி!
பந்த பாசம் அறுப்பாய் போற்றி!
முந்தை வினையும் முடிப்பாய் போற்றி!
அன்பர் உளத்து அரசே போற்றி!
துன்பம் அகற்றுந் துணையே போற்றி!
அன்பே போற்றி! அருளே போற்றி!
பொன்போ லுன்னடி போற்றி சரணம்!
அத்தா சரணம்! அரியாய் சரணம்!
முத்தி தந்தருள் முனிவா சரணம்!
கல்லா மனத்தைக் கரைப்பாய் சரணம்!
சொல்லா வின்பஞ் சுரப்பாய் சரணம்!
பொன்னைப் பொருளென மதியாய் சரணம்!
உன்னை யொறுத்தெமை வளர்ப்பாய் சரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

400 சட்ட வரம்பினைத் தகர்பாய் சரணம்!
நட்டம் நடுத்தெரு பயில்வாய் சரண்ம்!
ஞான பீடம் நயந்தாய் சரணம்!
மோன முடிவுங் கண்டாய் சரணம்!
அத்தனைப் போலும் பித்தனே சரணம்!
405 பித்தனைப் போலும் அத்தனே சரணம்!
எந்தாய் சரணம்! எமையாள் சரணம்!
குருவே சரணம்! குருவே சரணம்!
408 சரணம்! சரணம்! சற்குரு சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

# சிடாசாரம்.

காப்பு.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணாடு.

நூல்

முத்திக்கேது.

தந்தைதாயுமெய்த் தகைவுடை யுறவுஞ்
சாலுங்கல்வியுந் தருமுயிர்த் துணையுஞ்
சிந்தையாருநற்சீலமும் வலியுந்
திருவுமின்பமுஞ் சிதைவிலாவறிவு
முந்தையாமுளத்து வகையுமுயிரு
மூலமுத்தியு மொழிவருஞ்சமைவு
மெந்தையாகிவந்தேழையேனையுமா
ளிறைவனார்கழ லாகுமென் றனக்கே. (1)

வேறு

தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானு
மந்தமிலாவின்பமக்காவானு — மெந்தமுயிர்
தானாகுவானுஞ் சரணாகுவானுமருட்
கோனாகுவானுங் குரு. (2

முத்திசித்திக்குமேது
மொழிவர்கள் சிலர்வெவ்வேறே
சித்தமற்றானமென்றுந்
தீவினைசிதைந்தாலென்று
மொத்தநல்யோகாலென்று
முரியஞானத்தாலென்று
மித்திறமனைத்தாலாகா
விறைதிருவருளாலாமே. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஞான மந்திரங்கள்
யோகங்களுபாயமெல்லா
மெஞ்ஞான விட்டைக்காணும்
வேதனஞ் செய்யமாட்டா
தெஞ்ஞானக் கடைக்கண்வைத்த
தேசிகன் சித்தமத்தி
லஞ்ஞானம் பறிந்தபோதே
*மமுதவீடதுவுந் தோன்றும். (4)

ஆர்த்ததுபிறவியென்று
மஞ்ஞானபாசமத்தைக்
கூர்த்தமெய்ஞ்ஞானவாளைக்
கொண்டுசேதிக்கவேண்டு
மேத்திமெய்ஞ்ஞானவாளை
யேயவனருட்கண்ணுளே
பார்த்தபின் னில்லைபெத்தம்
பருதிமுன் னிருள்போலன்றே. (5)

விடத்தினுண் மூர்ச்சித்தானை
விடம்வல்லார் பார்க்கத்திரு
மடர்த்தல்லாரெல்லாம்பார்த்து
மதுதிராவாறுபோல
விடதகினையுடையஞான
விறைவனாற்பார்க்கினல்லாற்
சடத்துவமாமையார்செய்
சடக்குடைப்பிறப்பறுதே. (6)

வேறு

சுருதியுமிருதியுஞ் சொன்னவாறுகின்
றிருமையும்கித்தமென் றேதும்விட்டுநற்
குருவினைவழிபடிற் கோதிலாவவ
னருளிடுமழிவற நின்றவப்பொருள். (7)

---

* அமலவீடென்று பாடமோதுவாருமுளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

எண்ணிலாக்கல்வியாலு
　　மிலங்கியகேள்வியாலுந்
திண்ணிதாமதியினாலுந்
　　தெளிபவாராதீர
நண்ணியஞானிதானே
　　நயந்தருள்செய்யின்ஞானக்
கண்ணினாற்காணலாகுங்
　　கரத்திலாமலகம்போல, (8)

பருவிடங்கடியுண்டானே
　　பாவிப்பான்கருடன்றன்னைப்
பெருகியபித்தன்றானே
　　பிழிந்துமாமருந்துகொள்வா
னிருமையுமறியாமூடர்க்
　　கியலுமோவிறையிற்கூடக்
குருபரன்கூட்டிற்கூடுங்
　　கூடாதேற்கூடாதென்றான் (9)

கட்டுண்டகள்வன்றானே
　　கட்டினைவிட்டுக்கொள்வான்
விட்டவேதனையைத்தீர்த்து
　　விதிப்பவர்வேறேவேண்டு
மட்டமாசித்தியோகா
　　லறிவினாலறியலாமோ
தட்டறப்பாசந்தீர்க்கத்
　　தற்பரன்குருவேவேண்டும். (10)

வேறு

உருவன்றியேநின்றுருவம்புணர்க்குங்
கருவன்றியேநின்றுதான்கருவாகு
மருவன்றியேநின்றமாயப்பிரானைக்
குருவன்றியாவார்க்குங்கூடவொண்ணாதே. (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பூசையால்விரதந்தன்னாற்
புண்ணியதீர்த்தந்தன்னா
லாசறுதருமந்தன்னு
லளவறுவேள்விதன்னாற்
பாசபந்தங்கள்பொன்று
பாரிடைநம்போல்வந்த
தேசிகனருளுஞான
தீக்கையாற்பொன்றுமன்றே. (12)

வேறு

அறியாதனவெல்லாமாங்காங்கறிவித்துப்
பிறியாதனவெல்லாம்பேசி — நெறியாரும்
பக்குவத்தின்மெஞ்ஞானப்பாலருத்துவிக்குமொரு
சற்குருவைப்போலுமுண்டோதாய். (13)

முத்திசாதனம்.

வேறு

தேசிகன்பதநற்சேவையின்வலியுந்
திகழ்பதத்தளவிலாவன்பு
மாசினன்முத்தியதில்விருப்பதுவு
மமலவாரணத்தினில்விருப்பு
நாசமாமிந்தவுடலினில்வெறுப்பு
நசையறவிடயத்திலுவர்ப்பு
மீசனெப்பொருளுமென்னுநற்றுணிவு
மிவையெழின்முத்திசாதனமே. (14)

திகழுநற்குரவன்றிருவுளம்பார்த்துச்
செய்யுமேவற்சிறப்பதுவு
மகிழுநற்குரவன்மருவுநற்பதியே
மன்னிநீங்காதவாதனையும்
புகழுநற்றமரும் பொன்முதற்பொருளும்
பொருந்துநோயெனமதித்திடலுஞ்
தகவுடைச் சமமவுஞ் சாந்தியுமுத்தி
சாதனமென்பர்தக்கோரே. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகவித்துலகாள் திருவிகழ்ந்திறைவன்
மொய்கழல் சூடுகற்றிருவும்
படிதனக்கேவல் செய்பதமிசழ்ந்து
பரமனுக் கேவல்செய்பதமு
மடையுநற்சுவைகளனைத்தையு
மிகழ்ந்திங் கமலநற்சேடமாருதனு
மிடையறத் திகழுமுத்திசாதனமென்
றிசைத்திடு மெலையிலாரணமே. (16)

துரிசினற்பாரம்பரியமாமுறையிற்
றுகளறவழிவிலாத்துணிவும்
பரிவுறக்குரவன்பாதமே நோக்கிப்
பழுதறப் புகழுபண்பதுவு
மரியநற்குரவனருளுறப் பொருளோ
டின்பம்வீடென்னு மாண்மையதுந்
தெரிவுறத்திகழுமுத்திசாதனமாய்ச்
செப்புவர்தெய்வ ஞானிகளே. (17)

வேறு

நேசநெஞ்சினூற்றனக்கதுநினைவல
வாயினுநெறியென்றே
தேசிகன் றிருவுள்ளமே செய்குவான்
செனித்திடுங்குலத்துக்கு
மாசதாகினுமாச்சிரமத்திலே
வழுவினுமுலகெல்லா
மேசிவீடினு மறம்புகழ்தனம்பிற
விழப்பினுமிட ரேனும். (18)

என்றனக்கிதுவாய்த்தவாறறிகிலே
னெம்பிரான்கழற்கேவ
றன்றனக்குநானரிதுதகுவதோ
தமியனேற் கென்றென்று
சென்றுறப்பெருமார்வமுமச்சமுஞ்
செறிதரவடிமைக்க
ணின்றியற்றியதேவலினியல்பென
நிகழ்மறைசொலுமைந்தா. (19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம்பெறநீராடாமுன்னீராட
னின்றிடவிருத்தருன்கிடத்த
லுறங்குமுன்னுறங்கலுண்ணுமுன்னுண்ட
லுரையெனவுரையாமலுரைத்த
லறம்பழியெவற்குங்கூறுதலருளா
ததுசெய்தலருளியபணியை
மறந்தனனெனன்றல்குருவலாற் றெய்வ
மதித்தல்செய்பவன்மகனல்லன். (20)

வேறு

அருளறமங்கறைந்திடுதலறமலா துரைத்த
லறைபொழுதிலிடைபுரைத்தலகங்காரித்தங்குரைத்தல்
பொருளறிவுதானுரைத்தல் பொருளல்லா துரைத்தல்
புன்கோட்டிகொண்டுரைத்தல் பொடிவனவங் குரைத்த
லிருளுறுமச்செவிசொல்லலேவலிசைத்திடுத
லிடமறியாதிறையருளிச் செயவுரைத்தல்வினவல்
தெருளுறுநற்குருகீர்த்தியல் லதுபாடிடுதல்
தேசிகன்றன் சன்னதியிற் றீரவிடுமிவையே. (21)

வேறு

வெஞ்சொலுங்கடுஞ்சொலும் விரைந்த சொல்லதும்
வஞ்சமும்பழுதுடன்மாறுகூறலும்
பஞ்சிடுமுலகியல் பயனில் வாசகந்
தஞ்சநாயகன்றன்முன்ற விரவேண்டுமால். (22)

வேறு

ஆதனஞ்சயனம்வாகனமிதியடி
யத்திரங்குடையொடாபரண
மீதுவண்டயிலங்குளியெயாடுபூச்சந்
தனமுதன்மேவியங்கிடுத
லோதுபல்லுருஞ்சலொண்பதம்விளக்க
லுரைத்தவெற்றிலைதினலிவைதா
மாதிநன்குரவனரியசன்னிதியி
லடியவரறவிடுந் தொழிலே. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் முன்பசங்கிதமாகவந்திடுத
விட்டவேடத்திேனேடணைதல்
கறைபுறுஞ்சாயையிறைவன்மேற்படுதல்
கடவுளினிழறன்மேற்படுத
லுறைதருதலத்தின்மேலிருந்திடுத
லுளமுகமுகுளமாயிருத்த
லறைதருமமலனரியசன்னிதியி
லடியவரறவிடுந்தொழிலே. (24)

வேறு

போற்றுகைதவிர்தனுதன்
பொருளினைப்புசித்தலீதல்
தூற்றுதரோடந்தன்னைச்
சொன்னவைமறுத்தல்பொய்கள்
சாற்றுதல்குலமுங்கல்வி
தனத்தபிமானம்பண்ணன்
மாற்றுதல்கொடுத்தறன்னை
மற்றிவைகுருவோடாகா. (25)

வேறு

நீரிடத்தினுநிசியிருளிடத்தினு
நெறிகளிற்பயமுறுமிடத்தஞ்
சீரருட்குரவன்முன்புசேவிப்பார்
றிகழ்ந்தமற்றுளநெறியவற்றிற்
பேரருட்குரவன்பின்புசேவிப்பார்
பிறிதொருசிந்தையற்றிறைவ
ஞர்திருக்கழலிற்சாயைபோன்முன்பின
னுய்விடாரன்பினுத்தமரே. (26)

வேறு

தன்னுளத்தெழுதீங்குதனுயகன்
முன்னுரைத்தினிமேனமுனையரவகை
சொன்னவப்பரிசேசுடவேண்டலா
லன்னவப்பதிவிட்டகல்வானலன். (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

தனமாக்காயமுயிர்மூன்றுந்
தலைவற்கீந்தங்கிவைகெடினு
மனவாக்காயகன்மத்தால்
வணக்கங்கெடாதமனத்தராய்
நினைவாக்காயமஷ்டாங்க
பஞ்சாங்கஞ்சேர்கிட்டாங்க
மெனநால்வணக்கஞ்சிராங்கமுட
னிறையாற்பிறவியறுவோர்க்கே, (28)

சென்றபோதிறைவன் றிருவடித்தலத்தே
சிறந்தபஞ்சாங்கவட்டாங்க
மொன்றவேவணங்கியோப்பிலானருளை
யுளமதுநிறையவேபருகிப்
பின்னரப்பரிசேவிடைகொளும்பொழுதும்
வணங்குகபெரியவன்முகப்பே
நின்றுநெக்குருகித்தன்றன்வாயாரத்
துதிப்பதுநீதியன்பருக்கே. (29)

குரவனுர்தீர்த்துமொழிவனவெல்லாங்
குருதரமாகவோதிடுக
தெரியுமாறரியஞானகோசத்தைத்
தெரிந்திடினெடுத்தவிழ்த்திறைமு
னரியவாதனத்தில்வைத்திறையருட்டாள்
வணங்கியங்கதன்பயன்கேட்டாங்
குரியகோசத்தைக்கட்டிநாயகன்மு
ளொப்பறவணங்குதலொழுக்கே. (30)

எப்படிக்கிழாமவர்களேயெனினு
மிறையுளத்தடைத்தவர்தம்மை
யப்பரம்பரமனென்றுளத்துணர்க
வயன்முதன்மூவரேயெனினு
மெய்ப்படவிறைவன்றிருவுளமிலதேன்
மீண்டுபாராதுகைவிடுக
செப்பிடவிறைவன்றிருவருணிறைந்த
சீடராசாரமன்கிதுவே, (31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரிசிறைவன்றிருவுளம்பிழையா
திலங்கியவேவலின்வலியா
லெப்பரிசுள்ளசித்திகள்வலிக
ளிசைந்திடாநிற்குமங்கவர்பா
லப்பரிசெல்லாச்சித்தியும்வந்தா
லகந்தையும்வியப்புமேவாமே
தப்பறவெனையாடம்பிரானேவற்
றன்மையென்றருளினைப்பணிவாம். (32)

சாற்றியபரிசிற்றவறுதலேவன்
மறுத்தலாம்பிழையதுசாற்றி
னுற்றவங்கதனைத்தீர்த்திடற்குபாய
மாய்ந்திடத்தொன்றினுவில்லைச்
சேற்றினைச்சேற்றாற்கழுவலாயிடுமோ
தெளிந்தநீர்கொண்டலாவதுபோ
லாற்றியவிறைவனருட்டருநீரா
லப்பிழைச்சேறுநீக்கிடுவான், (33)

வேற்றுளகுற்றமியாவையுந்தீர்க்கும்
விமலமாமிறையருளென்று
லாற்றவங்குற்றபிழையைநீக்குவது
மவனருளன்றிவேறுண்டோ
போற்றியங்கவன்றன்பொன்னடிபொருந்திப்
புனிதபாதோதகமாடி
யாற்றவங்கமலனருளினில்முழுகி
லக்கணந்தீருமப்பிழையே. (34)

அறைந்தவ்ப்பரிசுப்பிழையினைநீக்கா
தவனெறிநிரயம்வீழ்ந்தழியும்
பிறந்திடிற்பிரமவரக்கனும்பெரும்பாம்
பாமெனப்பெருமறைபேசுஞ்
சிறந்தனபிழைதீர்வளவுமங்கவன்றன்
றெரிசனம்பரிசனந்தருமோ
மறந்துமற்றணுகார்மாதவத்தடியா
ரணுகில்வன்பாதகமன்றே. (35)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

தேசிகன் றிருவுள்ளமுண்டாகவச்
 சிவந்திகழ்ந்திடுகின்ற
ணீசனிங்கருள்செய்யவாநிருக்கிற
 விடமிவன் றிருமேனி
மாசதொன் றிவனளவிலேசெயிலெரி
 வாய்நரகினிற்பூத
நாசமெய்வளவவ்வளவுஞ்செல
 கண்ணுகன்னெறிநண்ணுன். (36)

வேறு

பெருந்தவமில்லான் றன்னைப்
 பேணியமடந்தையுள்ளத்
திருந்தவைமுடிந்ததென்று
 விகபரந்தெரிந்தஞானப்
பெருந்தவக்குருவைத்தெய்வ
 மென்றுமெய்பேணவல்லார்க்
கரும்பொருளியாதுமில்லை
 யிருமையுமகவிடத்தே. (37)

வேறு

குரவனேகுறியேதுமிலாச்சிவ
னூரியசத்தியேயொப்பிலாவம்பிகை
கருதுமைந்தரேகந்தர்விநாயகர்
பெருகுசுற்றமும்பேணுமபத்தரே. (38)

வேறு

சற்குருப்பரசிவன்ரு
 னைபினும்வாசிசாற்றிற்
சற்குருசிவன்கோபித்தாற்
 சமிப்பிக்குஞ்சிவனெலன்றுஞ்
சற்குருகோபந்தன்னைச்
 சமிப்பிக்கவொண்ணுதத்தாற்
சற்குருநாதன்பாதந்
 தப்பிடான்முத்தனன்றே. (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

அருவெனுமமலன்றானருளிலனெனினுஞ்சார்
குருபரனருளுண்டேயெனிலொருகுறையுண்டோ
திருவடிதரவந்தார்திருவுளமிலரென்று
லொருவருமிலர்கண்டீருறுதுயர்களைகின்றார். (40)

வேறு

குருபரனேபரமசிவன்பரேசன்றானே
குருவரனுமாகினுமேயொருகாலத்தி
னிருமலமாம்பரமசிவன்முனிவுற்றானு
நிகரில்தயாநிதியானகுரவன்காப்ப
னருள்வடிவேதிருவுருவாயெழுந்துநின்ற
வாசிரியனென்றேனுமுனிவுற்றானேற்
றிரிவிதமாமூலசத்துமம்மானணைத்
தியக்கமெலாந்தீர்த்தெவருங்காப்பதில்லை. (41)

தந்தைமுதற்பெந்துவெலாமனந்ததேகந்
தருவதலாலனுசிவபந்தந்தீர்க்கார்
சிந்தையினலாய்ந்திடிலப்பெந்துவெல்லாஞ்
சிறுமைதருஞ்சத்துருவேயாகாநிற்ப
ரந்தமிலாவருள்வடிவாங்குருவோவென்று
லகண்டபரஞானத்தையருளானல்கித்
தொந்தமதாமனுசிபவபந்தமெல்லாந்
துப்பறவேநன்றாகத்துடைத்துக்காப்பன். (42)

வேறு

இந்தவிடும்பையுடப்புறுமேது
தந்தையெனப்புகழ்கின்றிலர்தக்கோ
ரந்தமிலாதவகண்டமுநம்முட்
டந்தவர்தந்தையெனச்சமைவுற்றார். (43)

வேறு

குருபாதம்பூசிநாளுங்
குருநாமஞ்செபியெப்போதுங்
குருபாதந்தியானம்பண்ணு
குருகீர்த்திதோத்திரஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாத நினைக்கத்திருங்
குருத்தோடமல்லாத் தோடங்
குருபாதந் தன்மேலுண்டோ
குருவின்பேர் சிவனுமன்றே. (44)

வேறு

வருபிறப்பறவேவேண்டிநான் மறைபி
றென்னுமம்புயத்தினைமலர்த்தற்
கிரவியாய்நெஞ்சிற்சிசைந்தசற்குருவை
யாதொருவழியினுலிறைஞ்சி
யருள்சுரந்திடுதற்காவதேசெய்வா
னருமறைமுடிவெலாமறையும்
பொருளைநேராகவுமக்கெனக்கீசன்
புவன்றவப்படியிலேபுகன்றேன். (45)

வேறு

ஆசிரியன்முன்பாக வகண்டார்த்தத்தை
யடைவாகவறிவுற்ற மாணுனந்தத்
தேசிகனைத்திரவியமே முதவிருத்துந்
திடமானலோபத்தாற் பூசியானேல்
மோசனமேயிலாதவனுய்க் கும்பியாக
முதலியதில்வீழ்ந்திடுவ னுதலாலே
தேசிகனையாவிபொரு ளாக்கையாலே
தினந்தினமும் பூசிக்கவேண்டுமாணுன். (46)

வேறு

தேசிகருமாணவர்கள் செய்தியுணர்ந்திடவே
சிறியோரைப்பெரியோர்செய்தொழிலதனிற்செறித்து
மேசிலராம்பெரியோரை யீனமாந்தொழிற்கே
யிசைத்துமடித்தும்வைது மிவ்வாறுசெயவுங்
கூசியிடாதிட்டபணிசெய்து குருபத்தி
குறைவிலராய்நம்பினராய்த் துரோகமேயின்றி
மாசிலராய் மனவாக்குக்காயத்தாற் குருவின்
வாக்கியபாலனஞ்செய்யு மதிமானுமாயே (47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

குருபானுக்கவனெஞ்சகக்போலனுகூலத்தலுய்க்
கரசரணாதியிணைவல்செய்தேகினங்கட்கிமைபோ
லுரியமனைமுதலியாவையுங்காத்துண்மையாயொருதற்
பரயிவனேயெனக்காண்பான் சற்சீடன் பகர்ந்திடினே. (48)

தேசிகன்பாற்பற்பலதீக்குணங்கள்செறியினுநம்
பாசப்பிராந்திக்கிவைதோற்றியவிறைபாலிலையென்
ருசரூபத்தியினோர்ந்தெவ்விதத்துமவனருளைத்
தேசங்குலவவளர்ப்போன்சற்சீடன்றெரிந்திடினே. (49)

விடையேறியீசன்வரின்மூடருமவன்வேண்டியதைப்
படிமீதளிப்பர்குருவேசிவமெனப்பாவனைமுற்
றுடையார்கடத்தமுடலாவியீந்திறையுண்மைபெறத்
தடையாதுளவிங்குளதேலபக்குவர்தாமவரே. (50)

வேறு

உடற்குயிர்போற்கட்கிமைபோலாசினாலொலாத்து
விடற்புலிதீப்பாம்பினில்வீழ்வார்க்காஞ் — சுடர்ச்சுடினும்
வாழைக்காகாவேதிமட்கலத்திற்காகாவா
றேழைக்காகாதிங்கிது. (51)

வேறு

ஆசான்மொழியானாற்பொருளா
லன்றிப்பெறவுமரிதாகுந்
தேசார்குருநூன்மாணாக்கன்
சிறக்கவிம்மூவருங்கூடிற்
பாசாதீதப்பரமெய்தும்
பண்ணுணீங்காவிக்கூட்ட
மேசாவுணர்வைத்தரும்பகற்போ
தெல்லாத்தொழிலுந்தருவதுபோல். (52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பூதகாரியங்களெல்லாம்
பொய்ம்மைமெய்ப்பூதநாத
ஞதலாற்புவனத்தாசை
யந்தரத்தாசையற்ப
மோதனுவகைச்சம்பத்து
முயர்முத்திவிருப்புமிந்தச்
சாதனநான்குந்தானே
சீடர்க்குச்சடலமென்ப. (53)

வேறு

நரனலனிவனமையாளவந்திடும்
பரசிவனெனத்தினம்பணியத்தக்கவ
னிருவினையாழியையெளிதினீந்துவான
திருமலிமுத்தியைச்சேருந்திண்ணியன். (54)

வேறு

கடப்பருங்கடல்கடத்துங்
கருணையாரியன்முனிந்தே
யடித்துதைத்தருவருத்திட்
டக்கிரமஞ்செய்தானு
முடற்பிணியகற்றவல்ல
வுத்தமனிவனேயென்று
திடப்படுசிரத்தையுள்ளோன்
சீடனென்றுரைக்கும்வேதம். (55)

மன்னர்முன்காலன்முன்னு
மகிழ்ச்சியைப்பிரிக்கவந்த
தன்னிகர்நோயின்முன்னுந்
தானடங்கிடுவார்போல
மின்னமர்கயிலைநீத்து
மெய்யுடையார்போல்வந்த
கொன்னமர்குரவன்முன்ன
ரடங்குவான்சூலமாணக்கன். (56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவிலான்பெற்றஞானங்
        குமரியைக்குமரிகூடி
மருவியவின்பமொக்கு
        மண்ணிடை நடபோல்வந்த
குருவினுற்பெற்றஞானங்
        குமரியைக்குமரன்கூடி
மருவியவின்பமொக்கு
        மென்பர்நன்மதியுளோரே. (57)

முந்துநூனுழைப்புமின்றி
        மூத்தர்பாலிணக்குமின்றிச்
சுந்தரக்குரவன்பாதத்
        தொழும்புகள் சிறிதுமின்றி
யந்தமில்ஞானம்வேண்டு
        மவாவெலாங்கொழுனறகொன்று
சந்ததிவேண்டிநோற்குந்
        தன்மையோடொக்குமன்றே. (58)

வேறு

முன்புறுவானிரவெல்லா
        முப்போதும்பணிந்தெழுவான்
பின்புறுவான்பகலெல்லாம்
        பெட்புறுவானெப்போதுங்
கொண்புணைந்தவுரைகொள்ளான்
        குறிக்கொள்வான்றிருமொழியை
யன்புடையமாறைக்கற்
        களவில்குறியுண்டாமால். (59)

வேறு

நானார்கொல்லோவென்றனக்கு
        நாதனார்கொல்லோவெனக்கிங்
கானப்பிறப்புமிறப்புமிவ
        ணடைந்ததென்கொலோவென்று
தானேதனக்கிவ்விசாரங்க
        டலைப்பட்டிடலுந்தேசிகனைத்
தேனூரளிபோற்றேடியெலாந்
        தேடுமவனேசற்சீடன், (60)

வேறு

பிதிர்க்கடம்பூசையாவும்பேசிடிற்பாசதன்மம்
புதுப்பொழிற்றடாகமாதிபுகல்பசுதன்மமாகு
முதுக்குறையறிஞர்பூசைமுப்புரதகனன்பூசை
அதிக்கருமாசான்பூசைசொலிற்சிவதருமமன்றே (61)

வேறு

எங்காவிருப்பினுமிறப்பதுநிச்சயம்
பொன்னாட்டிலிந்திரனாயினும்பொன்றுவ
னன்னாட்கழியுமுன் ஞானத்தினாலே
தன்னையறிவதுசற்குருபாதமே. (62)

சித்தஞ்சிவத்தொடொருக்கிச்சிவமான
முத்தன்சிவமெனமொழிந்திடுமாகமஞ்
சத்தியஞ்சீவன்சங்கரனென்றே
குற்றமினான்மறைகூறும்வகுத்தே. (63)

வேறு

ஆதலாற்குருபிரானதிகமென்றுநால்
வேதமுமுறையிடும்விவேகியானவன்
போதொடுநீரொடும்போற்றிநாடொறுங்
காதலாற்குருபதங்கைவிடானரோ, (64)

வேறு

மானுமழுவுங்கரந்துமானிடன்போல்வந்தாரைப்
பூநீருங்கொண்டடிக்கீழ்ப்போற்றாதார் — கானகத்துள்
வேடராய்நாடோறும்வெம்பசியினாலலைந்து
பீடினரகம்புகுவார்பின். (65)

வாக்கிலியாய்க்கண்ணிலியாய்மத்தராய்ப்போகாமற்
றேற்குமறிவோடுசென்மித்தும் — பாக்கொண்டு
பாடார்குருபதத்தைப்பாரார்பலநினைப்பும்
வீடார்சும்மாவருமோ வீடு. (66)

பாடல் முற்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசனம்

ஸ்திரீயானவள், தன்னாயகனோடு கூடி வாழ்ந்துகொண்டிருந்தால் அவனுக்குப் பணிவிடை செய்யவேண்டுமே யென்றும், தனித்திருந்தாற் சுகமேயிருக்கலாமே யென்றும் நினைத்து, அந்த நாயகனுக்கு மனவருத்த முண்டாகும்படியாக, அவனை விட்டு நீங்கியிருந்தால், அவள் இம்மையிற் சுகமுமிழந்து, மறுமையிலே நரகமுமனுபவிப்பது திண்ணம். அதுபோலச் சீடனானவன் ஞானாசாரியரிடத்துக்குப் போய், அவரிடத்திற் சில சாஸ்திரங்களை யப்பியாசித் தறிந்துகொண்டபின், இனி யிவரிடத்திலே யிருந்தால், இவருக்குப் பணிவிடை செய்துகொண் டிருக்க வேண்டுமென்றும், அதனாலே தன்னுடைய சிரவணாதி யனுசந்தானத்திற்கு விரோதம் வருமென்றும், இவரிடத்திலிருந்தால், தேகத்துக் கொத்துக்கொள்ளாதென்றும், இவை முதலான காரியங்களை நினைத்து, அந்த ஞானாசாரியருக்கு மனதிற் றுவேஷ முண்டாகும்படியாக, அவரை விட்டு நீங்கியிருக்கிறவனுக்கு இம்மையிற் றுன்பமும், மறுமையில் நரகமுமுண்டாகும். இனி, கற்புடைய ஸ்திரீயானவள், அறியாமையைப் பொருந்தியிருந்தும், ஆத்மசொரூபத்தைத் தெரியாமல், அனாத்மாவே தானென்று அபிமானித்துக்கொண்டிருக்கிற தனது நாயகனைத் தெய்வமாகப் பாவித்து, அவன் அடித்தல், வைதல் முதலியன செய்தபோதினும், அவனிடத்திற் றுவேஷமின்றிப் பிரியமுடையவளாய்த் தேகமுள்ளபரியந்தம் அவனை விட்டு நீங்காமற் றிரிவித கரணங்களாலும் பணிவிடை செய்துகொண்டிருத்தலால், அவளுக்கு இம்மையிற் சுகமும் மறுமையிற் சுவர்க்காதி பதவிகளுமுண்டாகின்றன. அதுபோல, உத்தம விவேகியான முமுட்சுவானவன், ஞானாசாரியரைச் சத்தியஞான அனந்தானந்த பரமசிவமென்று வேதாதிகள் சொன்னபிரகாரம் நம்பி, அவர் அடித்தல் முதலான காரியங்களைச் செய்தபோதிலும், செய்யத்தகாத திருத்தங்களைச் செய்த போதிலும், வெறுப்படைந்து அவரை விட்டு நீங்காது, மிகுந்த பிரியத்தோடும், தன்னுடைய தேகமுள்ள பரியந்தம் திரிகரணங்களாலும் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை செய்துநின்று, அந்தக் குருசுவாமிகளது கிருபையால், தத்துவ ஞானத்தைப் பெற்று மோக்ஷமடைய வேண்டுமென்று வேதாகம புராணாதிகள் கூறுகின்றன. ஆதலால், தற்காலத்துள்ள முமுட்சுக்களும், இதிற் சொன்ன பிரகாரம், ஞானாசாரியரைப் பரமசிவமாகப் பாவித்து, தேகமுள்ளவரையும் அவரைவிட்டு நீங்காது திரிகரணங்களுமொத்து அவரது ஏவற்பணி விடைகளைச் செய்து நின்று, அவர்கிருபையா லுண்டாகாநின்ற தத்துவ ஞானத்தினால் நித்தியானந்த பரமுத்தியை யடைய வேண்டியது.

சீடாசாரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்,

---

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஏது சொரூபங் காரிய மவதிபல லக்ஷணம்.

காமத்துக்கு—

ஏது:—அஞ்ஞானம்; சொரூபம்:—அக்கினியில் நெய் விட்டால் விர்த்தி யடைகிறதுபோல நமக்கிருக்கின்ற போகமெல்லா முத்தரோத்தரமாய் விருத்தியடைய வேண்டுமென்றும், நமக்கிருக்கின்ற ஐஸ்வரியமெல்லாம் மாறாமலிருக்க வேண்டுமென்றும், ஸ்திரீ முதலான விடயங்கள் மென்மேலும் வேண்டுமென்றும், நானாவிதமாய்ச் சிந்தித்தல்; காரியம்:—அந்தவிடயத்திலுண்டான பிரியத்தை நானாவிதமாய்ச் சிந்தித்துத் தானிருந்தவிடத்தைவிட்டு லோகாலோகங்களுக்குப் போய் நரகாசுரன் முதலான பேர்களைப்போல இஷ்டமான வஸ்துக்களைச் சம்பாதித்தல். அவதி:—அத்தியந்த நிராசையுதயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரோதத்துக்கு

ஏது:—ஆசை; சொரூபம்:—ஆசையான விடயத்தில் விக்கினம் பண்ணினவனிடத்திற் கோபமுண்டாய் வியாக்கிரரூபமாய் நோக்கிக் கடினமான வசனஞ் சொல்லுதல்; காரியம்:—தன்னாற் செயிக்கப்படுமானால் பகாசூரன் முதலான பேர்களைப்போல அடிமுதலான காரியங்களைச் செய்தல்; தன்னால் செயிக்கக்கூடாதிருந்தா லுள்ளேயிருந்து கொண்டு பொருமியழுதல்; அவதி:—அத்தியந்தஞ் சாந்தமாயிருக்கின்ற பொறுமையுதயம். (உ)

லோபத்துக்கு—

ஏது:—மோகம்; சொரூபம்:—தேனீயுங் கவரிமாவும் போலத் தான் சம்பாதித்த செல்வ முதலான வஸ்துக்களிற் றேகமுள்ளளவு மொருவருக்கு மொன்றுங் கொடுக்கலாகாதென்று சிந்தித்தல்; காரியம்:—தான் சம்பாதித்த பதார்த்தங்களில் ஊரின் நடுவேயிருக்கின்ற நச்சுமாமரம் போலவுந் துரியோதனன் முதலான பேர்களைப் போலவு மொருவருக்கு மொன்றுங் கொடாமல் வைத்துக்கொள்ளுதல்; அவதி:—அத்தியந்தமுதாரத்துவம்.

இந்த மூன்றுக்கும் பலமேதென்றால்:—இகலோக பரலோக நிந்தையும் இப்போது தேகமுதலான வஸ்துநாசத்திறைற் றுன்பமும் பின்னாலே செனன மரண சமுசாரமும் அனுபவித்தல். (௩)

நிராசைக்கு—

ஏது:—நிட்காமமாய்ச் செய்கின்ற சற்கரும புண்ணிய பரிபாகம்; சொரூபம்:—ஸ்திரீ முதலான விடயங்களிலுள்ள குணதோஷங்களை விசாரித்து அவைகளிலுள்ள ஆசையை விட்டுவிடுதல்; காரியம்:—ஆசைவிட்ட பதார்த்தங்களிற் றதீசிமகாரிஷி முதலான பேர்களைப்போலச் சரீர முதலான வஸ்துக்களைத்தானுங் கேட்ட பேர்களுக்குக் கொடுத்துவிடுதல்; அவதி:— அத்தியந்தங் காமத்துக்கு நாசம். (௪)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமைக்கு—

ஏது:—நிராசை; சொரூபம்:—தன் வேலைக்காரன் முதலான பேர்கள் அடி முதலான காரியங்களைச் செய்தபோதிலும் வினைப்பிரகாரம் வருமென்கிற விவேகத்தினாற் பொறுத்துக்கொள்ளுதல்; காரியம்:—தனக்கபசாரம் பண்ணின பேர்களுக்குப் பூமியைப் போலவுந் தர்மபுத்திரர் முதலான பேர்களைப்போலவு முபகாரம் பண்ணுதல்; அவதி:—அத்தியந்தங் குரோதத்துக்கு நாசம். (ரு)

உதாரத்துக்கு—

ஏது:—குணகுணங்களைப் பகுத்துப் பார்க்கின்ற விவேகம்; சொரூபம்:—ஊரின் நடுவே நிறைந்திருக்கின்ற நல்ல சலமுள்ள தடாகமும் நன்றாய்ப் பழுத்து நிழலுடைத்தாயிருக்கின்ற மாமரமும் போலச் சகல சனங்களுக்கு முபகாரமாயிருத்தல்; காரியம்:—வேர்முதற் கொழுந்துவரைக்கு முயிர்களுக்கு மருந்திற்குபகாரமாயிருக்கின்ற மரம்போலவுஞ் சிபிச்சக்கரவர்த்தியைப் போலவுங் கேட்ட பேர்களுக் கெல்லாங் கேட்ட வஸ்துக்களைக் கொடுத்தல்; அவதி:—அத்தியந்தம் லோபத்திற்கு நாசம்.

இந்தமூன்றுக்கும் பலமேதென்றால்:—இகலோக பரலோக கீர்த்தி; இப்போது துக்கமற்றுச் சுகமாயிருந்து கொண்டு ஞானசாதனஞ் சம்பாதித்து மோக்ஷமடைதல்; இந்த ஞானசாதனஞ் சம்பாதிக்குங் காலத்திற் றேகமிறந்தாற் சுவர்க்காதி லோகத்திலுள்ள சுகமனுபவித்தல். (சு)

நித்தியாநித்தியவஸ்து விவேகத்துக்கு—

ஏது:—சித்தசுத்தி; சொரூபம்:—பிரமமாத்ரம் சத்தியம், அன்னியமாயிருக்கின்ற சீவேசுர சகத்தெல்லா மசத்தியமென்று சாத்திரத்தினால் நிச்சயித்தல்; காரியம்:—அதைத்தானே சதா காலமும் நானுவிதமாய்ச் சிந்தித்தல்; அவதி:—பிரமமாத்திரஞ் சத்தியம்: அன்னியமாயிருக்கின்ற சீவேசுரசகத்தெல்லா மநித்தியமென்றிருக்கின்ற நிச்சயமானது ஒன்றினாலும் போகாமல் நன்றாய்த் திடமாயிருத்தல். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகமுத்தரார்த்த பலபோக விராகத்துக்கு—

ஏது:—இகலோக பரலோகங்களி லுள்ள ஸ்திரீ முதலான விடங்களில் அசுத்த துக்க அநித்தியத்துவ முதலான தன்மைகளை விசாரித்து வெறுப்பு வருதல்; சொரூபம்:—அந்த விடயங்களை நாய்தின்று கக்கின அசனம் போலவுங் காலாக்கினி நரக முதலானவை போலவுங் கண்டு விட்டுவிடுதல்; காரியம்:—விட்டவிடயத்திலொருபோதுந் திரும்ப ஆசைவராமலிருத்தல்; அவதி:—தேகந் தொடக்கமாகப் பிரமலோக பரியந்தமாயிருக்கின்ற இகலோக பரலோகங்களிலிருக்கின்ற சகல போகங்களிலும் ஆசையில்லாமற் றிரணம்போல உபேட்சையாயிருத்தல். (அ)

சமாதிசட்கசம்பந்திக்கு—

ஏது:—இயமநியமாதி; சொரூபம்:— விடயத்திலே பிரவிர்த்திமற்றிருக்கிற சித்தநிரோதம்; காரியம்:— ஒன்றிலேயும் பிரவிர்த்தி யற்றபடியினலே விவகாரக்ஷயம்; அவதி:— பிரவிர்த்தியற்றபடியினலே, சுழுத்தியிற்போலத் தேகமுதலான விடயங்களை மறந்திருத்தல். (கூ)

முமுட்சுத்துவத்துக்கு—

ஏது:—சாதுசங்கமம்; சொரூபம்:—தலைரோமத்திலே நெருப்புப் பற்றிக்கொண்டவனைப்போலப் பின்னையொன்றிலேயு மாசையில்லாமல் மோக்ஷமாத்திரத்திலே தீவிரமாக ஆசையுண்டாதல்; காரியம்:— சற்குருவைத் தேடியடைதல்:—அவதி:— சகல கருமங்களையுந் தியாகம்பண்ணுதல்.

இந்தச் சாதனங்கள் நாலுக்கும் பலமேதென்றால்:— இந்த நாலு மொருமித்துக்கூடாமல் வேறுவேறாய்ப் பிரிந்திருந்தாற் சுவர்க்காதியாயிருக்கின்ற புண்ணியலோகப் பிராப்தியே பலம்; நாலுமொருமித்துக் கூடினல் இங்கே தானே ஆத்மவிசாரபலம். (கo)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தத்துக்கு—

ஏது:—கருமசாஸ்திரானுட்டானம்; சொரூபம்:— திருசியமாய்த் தோன்றுகின்ற சிந்தனை; காரியம்:—திருசியத்தினிடத்தில் வாசனையோடு நானுவிதமாய்ச் சத்தியமாயழுந்துகின்ற சிந்தனை; அவதி:— சகலதிருசியமுமில்லையென்கின்ற வத்தியந்த அபாவஞானம; பலம்:—சமுசார துன்பம். (கக)

மோக்ஷத்துக்கு—

ஏது:—ஞானசாஸ்திரானுட்டானம்; சொரூபம்:—திருசியசிந்தனையில்லாமலிருத்தல்; காரியம்:—திருசிய சிந்தனையானது வாசனையோடு அத்தியந்தமொன்று மில்லாமலிருத்தல்; அவதி:—சின்மாத்திரமாய் விளங்குதல்; பலம்:—பிரமானந்தம். (கஉ)

ஞானத்துக்கு —

ஏது:—சிரவணமனனநிதித்தியாசனம்; சொரூபம்:—சுவானுபவத்தினலே தேகாதிப்பிரபஞ்சமநித்தியமென்றுந் தானுகின்ற வகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரமமே சத்தியமென்றும் வேறுபட்டிருத்தல்; காரியம்:—மித்தையான தேகாதிசகத்திலே சத்தியபுத்தி வராமலும் ஆத்மாவிடத்திலே தானென்றுறைத்த சத்தியபுத்தி வாங்காமலுமிருத்தல்; அவதி:—அஞ்ஞான காலத்திற் சந்தேக விபரீதமறத் தேகமே தானென்றிருந்தாற்போல ஞானகாலத்திலே தேகோகமென்கின்ற புத்தியை வாதிக்காநின்ற சிவோகமென்கின்ற உறைப்புத்திடம்; பலம்:—அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரமான மோக்ஷம். (கங)

அஞ்ஞானத்துக்கு—

ஏது:—நிரோது; சொரூபம்:—ஒன்பது விதத்தினுலும் நிரூபிக்கப்படாமலிருத்தல்; காரியம்:—சீவேசுரசகத்தாய்த் தோன்றுதல்; அவதி:—ஞானேதயம்; பலம்:—நிஷ்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசம்பாவனைக்கு—

ஏது:—சிரத்தையுடன் வேதாந்த சிரவணஞ் செய்யாமை; சொரூபம்:—ஆத்தசொரூப சிந்தனையை மறைத்தல்; காரியம்: - சிவேசுரசகத்துச் சிந்தனையைத் தோற்றுவித்தல்; அவதி:—அவதி பரியந்தமுண்டான சிரவணம்; பலம்:—தாபத்திரயத் துன்பப்படுதல். (கரு)

சமுசயபாவனைக்கு—

ஏது:— விசாரமில்லாமலிருத்தல்; சொரூபம்:— தான் கர்த்தாவோ சாட்சியோ, சாட்சியென்றாலுங் கர்த்தத்துவ போக்தத்துவாதி யுண்டோ வில்லையோ, கர்த்தத்துவாதியில்லாவிட்டாலும் அவருக்குப் பூரணத்துவமுண்டோ வில்லையோ, பூரணத்துவமுண்டானாலும் அவரையறியக் கூடுமோ கூடாதோ, அவரை யறிந்தாலும் மோக்ஷம் வருமோ வராதோ வென்று இவை முதலாய் வருகின்ற சித்தவிருத்திகள்; காரியம்:—முன்சொன்ன சித்தவிர்த்திகள் திரும்பத் திரும்பப் பலவிதமாயுண்டாதல்; அவதி:—தீர்க்க காலவிசாரம்; பலம்:—இகலோக பரலோக போகங்க ளிரண்டுமற்றுத் துன்பமடைதல். (கசு)

விபரீதபாவனைக்கு—

ஏது:— ஆத்மத் தியானஞ் செய்யாதிருத்தல்; சொரூபம்:—தேகமே தானென்றும் பிரபஞ்சம் சத்தியமென்றும் இவைமுதலாய் வருகின்ற விர்த்திகள்; காரியம்:—நான் பிராமணனாதி. வருணத்தவனென்றும் - நான் பிரமச்சாரி முதலான ஆச்சிரமத்தவனென்றும் - நான் காத்தியாயனர் முதலான குலத்தவனென்றும் – நான் கிருஷி முதலான தொழில் பண்ணுகிறவனென்றும் – நான் யாகாதிகள் பண்ணினேன் - நான் அன்னாதிகள் புசித்தேன் - நான் கடாதிகளை யறிந்தேனென்றும் - இவை முதலாக வருகின்ற விருத்திகள்; அவதி:—நாமரூபப் பிரவிருத்தியில்லாமலிருக்கின்ற தானாகிற ஆத்மத்தியானம்; பலம்:—சனன மரண சமுசார துக்கத்திலடிபடுதல். (கஎ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரவணத்துக்கு—

ஏது:—மூன்று சாதனமும் வந்து அதிதீவிரமாயிருக்கிற முமுட்சுத்துவம்; சொரூபம்:—வேதாந்தத்திற்கிதரமான சாஸ்திரங்களைச் சிரவணம் பண்ணாது அத்வைதாத்மாவா யிருக்கின்ற சொரூபத்தை ஆறு லிங்கத்தினுலுஞ் சதா சிரவணம்பண்ணி ஆன்மாவுண்டென் றறிதல்; காரியம்:—ஆத்மா இல்லையென்கின்ற அசத்தாவரணம் நசிதல்; அவதி:— நட்டமாய்ப்போன அசத்தாவரணந் திரும்ப வராமலிருக்கின்ற பரியந்தஞ் சிரவணம் பண்ணுதல்; பலம்:—திடமாயிருக்கின்ற பரோக்ஷ ஞானம்.

மனனத்துக்கு—

ஏது:—அவதிபரியந்தம் சிரவணம்பண்ணியுண்டாயிருக்கின்ற நித்தியா நித்திய வஸ்துவிவேகம்; சொரூபம்:—சூட்சுமமான புத்தியினலே யேகாக்கிரமாயிருந்துகொண்டு பஞ்சகோசத்தில் அத்வைத ஆன்ம தத்துவத்தை விசாரித்துத் தானென்றறிதல்; காரியம்:-"ஆத்மாவிருந்தாற் ரேற்றுதோ? தோற்றுதபடியால், இல்லை" யென்கின்ற அபாவனுவரண நஷ்டமாதல்; அவதி:—நஷ்டமான அபாவனுவரணந் திரும்ப வராமலிருக்கின்றபரியந்தம் விசாரம்பண்ணுதல்; பலம்:—அபரோக்ஷஞானம்.(கக)

நிதித்தியாசனத்துக்கு—

ஏது:—சாதனசதுட்டயத்துடனேகூடி அவதி பரியந்தம் நன்றாயனுட்டிக்கப்பட்ட சிரவண மனனங்கள்; சொரூபம்:—அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரமமே நான், நானே அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரமமென்று பிரியத்துடனே விச்சின்னமின்றித் தைலதாரைபோலச் சுசாதிக விருத்தியோடே, சந்ததந் தியானம பண்ணுதல்; காரியம்:—உள்ளிலும் புறம்பிலுஞ் சத்தாதி விடயங்கள் தோற்றுமற் றியானமாத்திரமாயிருத்தல்; அவதி:—தியானமுந் தியானிக்கப்படுகின்றவனு மிழந்து சுத்தசைதன்யமனதாய்ப் பாலிற்கலந்த சலம்போல அகண்ட பரிபூரண சச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதானந்தப் பிரமத்தில் ஏகரசமாய்க் கலந்திருத்தல்; பலம்:—அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரமான ஞானம். (உ0)

வாசனைக்கு—

ஏது:—பகிர்முக நாட்டமாகிய விடயசன்னிதி; சொரூபம்:—மதுபானம் பண்ணினவன் தனது சுபாவந் தெரியாமலதனது சுபாவமாயிருத்தல்போல வநாதிகாலந் தொட்டு இருதயத்தில் வசித்துக்கொண்டிராநின்ற அசுத்த வாசனையாகிய காமாதி விருத்திகளால் முன்பின்னென்றையும் விசாரித்துப்பாராமல் அந்தந்த விஷயாகாரத்தை அடைந்திருத்தல்; காரியம்;- முன்சொன்ன அசுத்தவாசனையாகிய காமாதிவிருத்திகள் பலவிதமா யுண்டாய அமிர்தமாயு மணுவுக்கணுவாயும் அத்வைதமாயு மகண்டானந்தமாயு மிருக்கின்ற தனதாத்மசுபாவந் தோன்றாமலிருத்தல்; அவதி:—மனோலயம்; பலம்:—சுக துக்காதியு மதனால் விக்ஷேபம் இல்லாததாயும் விமலமாயும் விஞ்ஞானமாயும் விமுத்தமாயும் விபுவாயு மிருக்கின்ற பிரமசொரூபமென்கின்ற தத்துவஞான நிவிர்த்தியு மதனாற் சனன மரண சமுசாரமு முண்டாதல். (உக)

வாசனாக்ஷயத்துக்கு—

ஏது:—அகமுகநாட்டமாகிய விடயசன்னிதித் தியாகம் சொரூபம்;— சமர்த்தனானவன் றனக்குப் பகையாளனிடத்தி லுண்டான குற்றத்தை நன்றாய் விசாரித்தறிகின்றதுபோலக் காமாதி யசுத்தவாசனைகளுள்ளே தன்னிடத்தி லின்ன வின்ன அசுத்தவாசனைக ளிருக்கின்றனவென்று நன்றாய்ப் பகுத்தறிந்துகொண்டு, வியாதியுடைத்தானவன், தன்னிடத்தி லின்னவின்ன வியாதிகளிருக்கின்றன வென்றறிந்து அவைகளுக்குத் தகுந்த அவுடதங்களைப் புசித்தல்போல, மைத்திரியாதி சுத்தவாசனைகளுள்ளே அவையவைக்குத் தகுந்த சுத்தவாசனைகளைச் சிரத்தையோடு தினந்தோறும் நன்றாயப்பியாசித்தல்; காரியம்:— முன் புசித்த அவுடதத்தால் ரோகம் நாளுக்குநாட் சாந்த

D

மா யாரோக்கியமுண்டாதல்போலக் காமாதி யசுத்த வாசனைகள் நாளுக்குநாட் சாந்தமாய் மைத்திரியாதி சுத்த வாசனைகள் விர்த்தியடைதல்; அவ்தி:—முன் சாந்தமான காமாதி யசுத்தவாசனைகள் திரும்பவுண்டாகாம விருத்தல்; பலம்:—சித்தோபசாந்தமும், அதனால் அமலமாயுமக்கிரிய மாயு மப்பிரமேயமாயு மசங்கமாயு மிருக்கின்ற பிரம சொரூபமென்கின்ற தத்துவஞானரக்ஷையு மதனாற் சனன மரண சமுசார துன்ப நீக்கமும் வருதல். (உஉ)

மனத்துக்கு—

ஏது:—பகிர்முகநாட்டத்தாலுண்டாகிற காமாதி வாசனைகள்; சொரூபம்:—மெழுகு சல முதலான வஸ்துக்கள் போல அநேக விர்த்திகள் பரிணமிக்கின்றதற்கேதுவாயுந் திரிகுணாத் மகமாயும் யானெனதென் றபிமானமுடைத்தாயு மிருந்துகொண்டு தீபச்சுவாலைபோல அதைப்பண்ண வேண்டு மிதைவிடவேண்டுமென்றும, அதைப் புசிக்க வேண்டு மிதை நீக்கவேண்டுமென்றும், அதைப் பார்க்க வேண்டு மிதைப் பார்க்கவேண்டாமென்றும், இவைமுதலா யுண்டாகாநின்றவிர்த்திகள்; காரியம்:—முன் சொன்ன விர்த்திகள் க்ஷணே க்ஷணே நானாவிதமாயுண்டாகி நித்த சித்த புத்த முத்த சத்திய பரமானந்த சொரூபந் தானென்று தோன்றாமலிருத்தல்; அவதி:—வாசனா க்ஷயம்; பலம்:—வாசனாவிர்த்திகளினாற் சத்தாயுஞ் சர்வசமயமாயுஞ் சர்வ சாக்ஷியாயுஞ் சர்வாத்மகமாயு மிருக்கின்ற பிரம சொரூபமென்கின்ற தத்துவஞான நிவிர்த்தியு மதனாற் சனனமரண சமுசார துன்பமு மனுபவித்தல். (உரு)

மனோலயத்துக்கு—

ஏது:—அகமுகநாட்டத்தா லுண்டாகின்ற காமாதி வாசனாக்ஷயம்; சொரூபம்: மிகுந்த சிரத்தையுடனே சத்தியமுமான அனந்தானந்த பிரமசொரூபமே நான். நானே யந்தச் சத்தியஞான அனந்தானந்த பிரமசொரூபமென்று பிரியத்துடனே விச்சின்னமின்றித் தைலதாரை போலச் சுசாதீக விர்த்தியுடனே கூடிக்கொண்டு சந்ததந்தியானம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுதல்; காரியம்:—வாசனுக்ஷயத்தினற் றமதவிராசத விர்த்திகள் கெட்டுப் பாலிற் கலந்த சலம்போல நிர்க்குண மாயும் நின்மலமாயும் நிர்விகாரமாயும் நிர்விகற்பமாயும் நித்தியானந்தமாயு மிருக்கின்ற தனதாத்ம சொரூபத்தில் சுத்த சாத்விக விர்த்தி மாத்திரமாய் லயித்திருத்தல்; அவதி:-முன் சாந்தமான தாமதவிராசதவிர்த்திகள் திரும்ப வுண்டாகாம லிருத்தல்; பலம்:—வாசனுக்ஷயத்தில் சுத்த மாய்ச் சுபாவமாய்ச் சுகமாயிருக்கின்ற பிரமசொரூபமே நான், நானே சுத்தமாய்ச் சுபாவமாய்ச் சுகமாயிருக்கின்ற பிரம சொரூபமென்கின்ற தத்துவஞானரக்ஷையாய், அத ஞற் சனனமரண சமுசார துன்பநீங்கிப் பிரமானந்த மனுபவித்தல். (உச)

ஏது சொரூபங் காரிய மவதிபல லக்ஷணம்
முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# அஷ்டப்பிரமாணத்தின் திஷ்டாந்த தாஷ்டாந்த உரை

உற்றெதிரேகாண்டல்பிரத் தியக்ஷமனுமான மோங்கு புகைகண்டுநெருப் புண்டெனவே யுணர்தன் - மற்றுவமை மரைபசுப்போ லெனல்சத்தம் பெரியோர் வாய்ச்சொலருத் தாபத்தி மதத்தவுடலதனு - லற்றவுபவாசியொளித் துண் பானென்றுணர்த லபாவமுன்பி னிடையொருகா லத்து மிலையெனறு - னற்றியவிம்மரத்தினிற்பே யுண்டெனலைதீக நாட்டுதலே சம்பவம்ப்ர மாணமெட்டாகவிலும்".

(உற்றெறிரேகாண்டல் பிரத்தியக்ஷம்) - என்றது:-கட்டையைப் பிரத்தியக்ஷமாய்ப் பொருந்திக் காண்பதே பிரத்தியக்ஷப் பிரமாணம். இது விபரீதப் பிரத்தியக்ஷம், சந்தேகப்பிரத்தியக்ஷம், யதார்த்தப் பிரத்தியக்ஷமென மூன்று வகைப்படும். (க) கட்டையைக் கள்ளனென்றே நிச்சயிப்பது விபரீதப் பிரத்தியக்ஷம்; (உ) கட்டையைக் கண்டு கள்ளனோ தறியோவென்று சந்தேகிப்பது சந்தேகப் பிரத்தியக்ஷம்; (ன) கட்டையைக் கட்டையென்றறிவதே யதார்த்தப்பிரத்தியக்ஷம். இதுவே பிரத்தியக்ஷப் பிரமாணத் திஷ்டாந்தம், இதற்குத் தாஷ்டாந்த மென்னவென்றால்:—சராசராத்மகப் பிரபஞ்சங்களைப் பிரத்தியக்ஷமா யறியாநின்ற அறிவாகிய பிரமசொருபந் தானென்றறிவதே பிரத்தியக்ஷப் பிரமாணம். இது விபரீதப் பிரத்தியக்ஷம், சந்தேகப் பிரத்தியக்ஷம், யதார்த்தப் பிரத்தியக்ஷமென மூன்று வகைப்படும். (க) ஆசாரியர் சீடனைப் பார்த்து நீயே அறிவாகிய பிரம சொரூபமென்றனுக்கிரகம்பண்ண அப்போது சீடன், நானே யறிவாகிய பிரமசொரூபமானால் பிரத்தியக்ஷ மாகவல்லவோ விளங்கவேண்டும்; அப்படி யறிவாகிற பிரமசொரூபம் பிரத்தியக்ஷமாய் விளங்காமற் றேகமல்லவோ பிரத்தியக்ஷமாய் விளங்குகின்றது என்பதே விபரீதப் பிரத்தியக்ஷம்: (உ) அப்போது ஆசாரியர் தேகமே பிரதியக்ஷமாய் விளங்கினாற் சொப்பனத்தி லுன்சரீரமிவ்விடத்திற் சுகமாய் மெத்தையிற் படுத்திருக்கவும் நானாவித தேசத்தி னானாவித சரீரமெடுத்துக்கொண்டு துக்கப்படுவது யாரென்று கேட்க, அப்போது சீடனானவன் சுவாமி வேறென்றுபோலத் தோற்றுகின்றது, ஆனால் அது தேகந்தானோ அறிவுதானோ என்பது நிச்சயிக்கக்கூடாமலிருக்கின்றது எனல் சந்தேகப் பிரத்தியக்ஷம்; (ன) அப்போது ஆசாரியர் அறிவாகிய பிரமசொரூபஞ் சுழுத்தியிலொன்றுமறியாத வஞ்ஞான விருட்டிலே நானென்றுமறியேன், சுகமாய் நித்திரைபண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணினேனென்று அறிகிறபடியினாலேயும் சாக்கிரத்திற் றேகத்துக்குள்ளே சோமசூரியாக்கினியாதி பிரகாசங்களில்லாமலிருக்கவும் மனோராச்சியத்திற் றோன்றுகின்ற நாமரூபங்களை விளக்குவித்து அறிகிறபடியினாலேயுந் தேகத்துக்கு வெளியி னுனுவிதகடபடாதி வியாபாரங்களையறிகிறபடியினாலேயுந் தேக மிவைகளொன்றையுமறியாத படியினாலேயுந் தேகநீயல்ல என்றும், இப்படிப் பிரத்தியக்ஷமாய் விளங்காநின்ற அவத்தாத்திரயசாக்ஷியாய் நிற்கின்ற அறிவாகிய பிரமசொரூபமே நீயென்றும் அனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் அறிவாகிய பிரமசொரூபந் தானென்றறிந்ததே யதார்த்தப்பிரத்தியக்ஷம். இதுவே பிரத்தியக்ஷப் பிரமாணம்.

**அனுமானம்—**

(அனுமானமோங்கு புகைகண்டு நெருப்புண்டெனவே யுணர்தல்)-என்றது —விர்த்தியடையாநின்ற புகையைக் கண்டு அக்கினியுண்டென்றறிவதே யனுமானப்பிரமாணம். இது, பிரதிக்கினை, ஏது, திஷ்டாந்தம் என்று மூன்று விதத்தா லறியப்படும். (க) பருவதத்திலக்கினி யுண்டென்பது பிரதிக்கினை. (உ) அதிலக்கினி யுண்டென்பதற்கு ஏதுவென்னவென்று கேட்க, புகையைக்கண்டு அக்கினி யுண்டென்று சொன்னேனென்பதே ஏது. (ந.) புகையுண்டானவிடத்தி லக்கினியுண்டென்பதற்குத் திஷ்டாந்தமென்னவென்று கேட்க, மடைப்பள்ளியிற் புகையைக் கண்டு அக்கினியைக் கண்டேனென்பதே திஷ்டாந்தம். இதுவே அனுமானப் பிரமாணத் திஷ்டாந்தம். இதற்குத் தாஷ்டாந்தமென்னவென்றால், சகலத்தையும் விளக்குவித்தறிகின்றபடியால் பஞ்சகோசத்திலறிவாகிய பிரமசொரூபமுண்டென் றறிவதே யனுமானப் பிரமாணம். இது பிரதிக்கினை. ஏது, திஷ்டாந்தமென மூன்றுவிதத்தா லறியப்படும். (க) ஆசாரியர் சீடனைப் பார்த்துப் பஞ்சகோசத்திலறிவாகிய பிரமசொரூபமுண்டென் றனுக்கிரகம் பண்ணுவதே, பிரதிக்கினை. (உ) அப்போது சீடன் பஞ்சகோசத்திலறிவாகிய பிரம சொரூபமுண்டென்பதற்கு ஏது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவென்று கேட்க, ஆசாரியர் தேகேந்திரியாதிகளையு மவைகளின் தொழில்களையு மறிவதே யேதுவென்றனுக் கிரகம்பண்ண, (ரு) அப்போது சீடனிவைகளை யறிகிற தற்கு அறிவாகிய பிரமசொரூபமுண்டென்பதற்குத் திஷ்டாந்தமென்னவென்று கேட்க, ஆசாரியர் சுழுத்தி மூர்ச்சையாதி காலங்களிலே சகல கரணங்களுமிறந்திருக்கவும் விர்த்தி வந்தவுடனே யொன்றுமறியாத அஞ்ஞானத் தையு மதிற்பிரதிவிம்பித்த ஆனந்த முதலானவைகளையு மறிந்து சொல்லுகிறதே திஷ்டாந்தமென் றனுக்கிரகம் பண்ண, இவ்வாறு சீடன் நானேயறிவாகிய பிரமசொரூப மென் றறிந்ததே யனுமானப்பிரமாணம்,

## உவமானம்—

(மற்றுவமை மரைபசுப்போலெனல்) என்றது:— பசுவைப்போலிருக்கும் மரையென்பது உவமானப் பிரமாணம். இத்திருஷ்டாந்தத்திற்குத் தாஷ்டாந்த மென்னவென்றால், ஆசாரியர் சீடனைப் பார்த்துச் சரா சராத்மகப் பிரபஞ்சங்களுக் கெல்லா மிடமாயும் சகலத்தி லும் பொருந்தியும் பொருந்தாமலிருக்கின்ற பூதாகாசத் தைப்போலச் சிதாகாச சொரூபமாயிருக்கின்ற பிரமம் சகல அண்டங்களுக்கெல்லா மிடமாயுஞ் சகலத்திலும் பொருந்தியும் பொருந்தாமலிருக்கின்றது, அந்தச் சிதா காச சொரூபமாகிய பிரமமே நீயென்றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் சிதாகாச சொரூபமாகிய பிரமந்தா னென்றறிந்ததே யுவமானப்பிரமாணம்.

## ஆகமம்

(சத்தம் பெரியோர் வாய்ச்சொல்) என்றது:— சுவர்க் கத்திலே அமுதாதி போகங்க ளிருக்கின்றன, யாகாதிகிருத் துக்கள் செய்தாலந்தப் போகங்களை யடையலாமென்று மேலோர்கள் சொல்ல அந்த வார்த்தையை நிச்சயமாகக் கேட்டு அந்தப்படி யாகாதி கிருத்துக்கள் செய்து அமு தாதி போகங்களையடைவதே யாகமப் பிரமாணம். இத் திஷ்டாந்தத்திற்குத் தாஷ்டாந்தமென்னவென்றால், ஆசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியர் சீடனைப் பார்த்துத் தேகத்திற் சர்வசாட்சியாகிய சச்சிதானந்த சொரூபமிருக்கிறது, தேகேந்திரியாதிசகங் களை நேதிபண்ணியந்தர் முகமாய் நாடினு லந்தச் சர்வ சாட்சியாகிய சச்சிதானந்த சொரூபத்தையடையலாமென் றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் 'துவம்' பத 'தத்' பதங்களை விசாரஞ்செய்து தேகேந்திரியாதிசகங்களை நேதி பண்ணி யந்தர்முகமாய் நாடி அகண்டாகாரவிர்த்தியினலே தன்னைச் சர்வசாக்ஷியாகிய சச்சிதானந்த சொரூபமா மறிந்ததே யாகமப்பிரமாணம்.

## அருத்தாபத்தி

(அருத்தாபத்தி மதத்தவுடலைதனு லற்றவுபவாசி யொளித் துண்பா னென்றுணர்தல்) என்றது:— நித்தியவுபவாசி யென்கிறவனுடைய தேகபீனத்தைக் கண்டு, இவன் நித் தியவுபவாசியானுற் றேகமிளைத்தல்லவோ இருக்கவேண் டும், அப்படியிளையாமற் பெருத்திருக்கின்றபடியினு லிவ னிராக்காலத்தி லொளித்துப் புசிப்பானென்பதே அருத்தாபத்திப்பிரமாணம். இத்திஷ்டாந்தத்திற்குத் தாஷ் டாந்த மென்னவென்றால், ஆசாரியர் தேகமே யாத்மா வென்றிருக்கின்ற சீடனிடத்தேசச்சிதானந்தலக்ஷணத்தை யுடைய பிரமசொரூபத்துக்கன்னியமான அசத்துச் சடந் துக்கத்தைக்கண்டு, தேகமே யாத்மாவானுற் சச்சிதானந்த லக்ஷணமாயல்லவோவிருக்கவேண்டும். அப்படியிராமற் காலத்தினுற் கெட்டுப்போகின்றபடியினு லசத்தாயும், சுழுத்தி மூர்ச்சைகளிலொன்றையுமறியாதபடியினுற் சடமா யும், தேகந்தோற்றுகின்ற சாக்கிர சொப்பனங்களிற் கிலேசப்படுகின்றபடியினுற் றுக்கமாயு மிருக்கிறபடியினுற் சரீரத்திரயங்களு மாத்மாவல்ல; பூருவத்திற் செய்திராநின்ற புண்ணியாதிகளினு லிப்போது செல்வவானுதியா யிருக் கின்றேமென்றும், இப்போது செய்யாநின்ற புண்ணி யாதிகளினு லினிமேற் சுவர்க்க முதலான போகங்களை யடைவோமென்றும், இப்போது மிருக்கிறேமென்றும், இப்படித் திரிகாலத்திலு மிருக்கிறவனுபவமிருக்கிறபடியி னுற் சத்தாயும், சுழுத்தி மூர்ச்சை முதலானவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறிகிறவனுபவ மிருக்கின்றபடியினுற் சித்தாயும், தேகந் தோற்ருமலிருக்கின்ற சுழுத்தி சமாதிகளிற் சுகானுபவ மிருக்கின்றபடியினு லானந்தமாயு மிருக்கின்றபடியினுற் சச்சிதானந்த லக்ஷணமுடைய பிரமசொரூபமே நீயென்ற னுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் சச்சிதானந்த லக்ஷணமுடைய பிரமசொரூபந் தானென்றறிந்ததே யருத்தாபத்திப் பிரமாணம். இதைத் திட்டவருத்தாபத்தி யென்று சொல்லுவார்கள். இனிக் கேள்வியருத்தாபத்தி யெனவும் ஓர் பிரமாணமுண்டு. அதாவது:—ஒரு புருடனை வன் தரித்திரத்தினுல்வருத்தப்பட்டுக்கொண்டிருந்து தனக்கு இஷ்டனுனவனிடத்திற்போய் இந்தத்தரித்திரதுன்பம் நீங்கு தற்கு வழியேதென்று கேட்க, அப்போது அவன் சிந்து தேசத்திலே ஒரு கிருகத்திலே இருக்கிற கிருகவாசியாகிய தேவதத்தனிடத்திற்போனுற் றுன்பம நீங்கும் என்று சொல்ல, அவ்வாறு அவனும் அந்தக் கிருகவாசியாகிய தேவதத்தனைத் தேடிப்போய்க் கண்டு, இந்தக் கிருகவாசி யாகிய தேவதத்தன் இவன்ருனேவென்று தனக்கிஷ்ட னுனவனைக் கேட்க, அவன், இவன் குழந்தையானபடியி னுலும், ஒன்றுந் தெரியாதவனுனபடியினுலும், வியாதிக் காரனுனபடியினுலும் இவன் கிருகவாசியாகிய தேவதத்த னல்லவென்று சொல்ல, அந்தச் சத்தத்தினுலே, பெரியவ னுயும் எல்லாமறிந்தவனுயும், வியாதியில்லாதவனுயும் வேறே கிருகவாசியாகிய தேவதத்தன் இருக்கிருனென் றறிந்து, அவனிடத்திற் போய்த் தரித்திர துன்பம் நீங் கிச் சுகமடைவதே கேள்வியருத்தாபத்தி. இத்திஷ்டாந் தத்திற்குத் தாஷ்டாந்த மென்னவென்ருல், சாதன சதுட் டயமுள்ள ஒரு சீடனுனவன் தாபத்திரய துன்பத்தினுலே வருத்தமடைந்து ஒரு மகாத்மாவிடத்திற் போய்த் தாபத் திரயதுன்பநீங்கிச் சுகம் வருதற்கு உபாயமேதென்று கேட்க, அப்போது அவர், தேகத்தினிடத்திலே யிருக்கிற ஆன்மசொரூபத்தை யறிந்தால் தாபத்திரய துன்பம் நீங் கிச் சுகம்வருமென் றனுக்கிரகம்பண்ண, அவனுமவ்வாறு தேகத்திரயங்களை விசாரித்துத் தள்ளிச் சீவனைக்கண்டு இந்தச் சீவன்ருனே ஆன்மாவென்று ஆசாரியரைக் கேட்க, அப்போது ஆசாரியரிந்தச்சீவன் அசத்துச் சடந் துக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானபடியினல் இவன் ஆத்மாவல்லவென் றனுக்கிரகம் பண்ண, அந்தச் சத்தத்தினுலே சீடன் சச்சிதானந்தமாய் ஆன்மா வேறேயுண்டென்றறிந்து அவரே தானய்ப் பிரமா னந்தத்தை யடைந்து துக்கநிவிர்த்தியானதே கேள்வி யருத்தாபத்தி.

அபாவம்

(அபாவமுன்பிடை யொருகாலத்துமிலை யென்றான்) என்றது:—ஒரு கடத்தைப் பார்த்து இந்தக்கடமுண்டாகிற தற்கு முன் மண்ணைத்தவிர வேறில்லாதபடியினு லிந்தக் கடம் முன்னில்லையென்றும், இந்தக்கட முடைந்ததின் பிறகு மண்ணைத்தவிர வேறில்லாதபடியினு லிந்தக் கடம் பின்னுமில்லையென்றும், இப்போது கடந்தோன்றுகின்ற காலத்தும் விசாரித்துப் பார்க்கும்போது மண்ணைத் தவிர வேறில்லாதபடியினு லிந்தக்கட மிடையிலுமில்லையென்றும், இப்படித் திரிகாலத்திலும் மண்ணைத்தவிர வேறே கடமில் லாதபடியினுற் சசவிஷாணககனர விந்தம்போ லிந்தக்கட மொருக்காலுமில்லையென்றறிவதே யபாவப் பிரமாணம். இத்திஷ்டாந்தத்திற்குத் தாஷ்டாந்தமென்னவென்றால், ஆசாரியர் சீடனைப்பார்த்து இந்தச் சீவேசுர சகத்தாகிய மாயை, சிருட்டிக்குமுன் பிரமசொருபத்தைத்தவிர வேறிரண்டாம் வஸ்து வில்லாதபடியினு லிந்தமாயை முன் னில்லையென்றும், அத்தியந்தப் பிரளயத்துக்குப் பின் பிரமசொருபத்தைத் தவிர வேறிரண்டாம் வஸ்துவில்லாத படியினுலிந்தமாயை பின்னுமில்லையென்றும், இப்போது அத்தியாரோபமாய்ச் சிருட்டி தோன்றுகின்ற காலத்தும் அபவாதமாய் விசாரித்துப் பார்க்கும்போது பிரம சொரு பத்தைத் தவிர வேறிண்டாம்வஸ்துவில்லாதபடியினு லிந்த மாயை யிப்போது மில்லையென்று மிப்படித் திரிகாலத்தி லும் பிரமசொருபத்தைத் தவிர வேறிரண்டாம்வஸ்து வில் லாதபடியினுற் சசவிஷாணககனரவிந்தம்போ லிந்தச் சீவேசுர சகத்தாகிய மாயை யொருகாலத்து மில்லையென் றனுக்கிரகம்பண்ண, அவ்வாறு சீடன் பிரமசொருபமே யெப்போது மிருக்கின்றது, நானேயந்தப் பிரமசொருப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றும் இந்தச் சிவேசுரசகத்தாகிய மாயை யொருக் காலு மில்லையென்று மறிவதே யபாவப் பிரமாணம்.

### ஐதீகம்

(நற்றிய விம்மரத்தினிற் பேயுண்டென லைதீகம்) என்றது:—நல்ல இடத்திலிருக்கின்றவொரு வட விருக்ஷத்தி லொருபுருடனுனவன் இலையும் பறித்து விறகுமொடித் திறங்கும்போது தனக்கு ஆப்தனுனவன் வந்து, "அடா பைத்தியகாரா! இந்த விருட்சத்தில் மகாஎட்சசு இருக்கிறதே' என்று சொல்ல அந்த வசனத்தைக் கேட்ட மாத்திரத்தே பந்தப்பசாசுபிடித்து மனத்திற் பயமுஞ் சரீரத்தி னடுக்கமுமுண்டா யிலையையும் விறகையு மெறிந்துவிட்டு மரத்தினின்றுங் கீழே விழுந்ததே ஐதீகப் பிரமாணம். இத்திஷ்டாந்தத்திற்குத் தாஷ்டாந்தமென்ன வென்றால், ஆசாரியர் தேகமேதானென்று கொண்டு அதிற் சுகமிருக்கிறதாகப் பிரபஞ்ச வியாபாரம் பண்ணிக்கொண் டிருக்கின்ற சீடனைப் பார்த்துத் தேகநீயல்ல, தேகத்தினிடத் திற் சச்சிதானந்த சொருபமாகிய வாத்மாவிருக்கிறார், அவரே நீயென்றனுக்கிரகம்பண்ண, அந்த வசனத்தைச் சீடன் சத்தியமாய்க் கேட்டுச் சச்சிதானந்த சொருபமாகிய வாத்மாவே தானுய்க் கவலைகெட்டுத் திருப்தியடைந்து தேகாதிப் பிரபஞ்சத்தை விட்டதே ஐதீகப் பிரமாணம்.

### சம்பவம்

(நாட்டுதலே சம்பவம்) என்றது:—ஆயிரத்துக்குள் ஒன்று பத்து நூறு ஐஞ்ஞூறு எல்லாமிருக்கும்; இருந்தாலும் ஆயிரத்தைத் தவிர வேறில்லை யென்றறிவதே சம்பவப் பிரமாணம். இத்திஷ்டாந்தத்திற்குத் தாஷ்டாந்தமென்னவென்றால், ஆசாரியர் சீடனைப்பார்த்துப் பிரம சொருபியாகிய வுன்னிடத்திற் சராசராத்மகப் பிரபஞ்சங்களெல்லா மிருக்கும்; இருந்தாலும் பிரமசொருபமாகிய வுன்னைத் தவிர வேறல்லவென்றனுக்கிரகம் பண்ண, அவ்வாறு சீடன் சர்வாத்மக சொருபமாகிய பிரமசொருபந் தானென்றறிந்ததே சம்பவப் பிரமாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பிரமாணமெட்டாகவிலும்) என்றது:—இவ்வாறு ஆத்மாவை யறிதற்குப் பிரமாணங்கள் எட்டாக வேதங் கூறியது - என்றவாறு.

அஷ்டப்பிரமாணத்தின்
திஷ்டாந்த தாஷ்டாந்தஉரை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

---

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

## சீவன்முத்தரியல்பு.

ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
வானிகர் பிரம வித்து வரன்வரி யான்வ ரிட்ட
னைவர் நாம மீதா மவர்களிற் பிரம வித்தின்
ருனமு மற்றை மூவர் தாரதம் மியமுஞ் சொல்வேன். (1)

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா னுலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வர் தீர்ந்த நிலைவிடாச் சீவன் முத்தர். (2)

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்ருர்
தாமரை யிலைத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடி வாழ்வர்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டா
ருமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர். (3)

பேதகன் மத்தால் வந்த பிராரத்வ நாநா வாகு
மாதலால் விவகா ரங்க ளவரவர்க் கான வாகும்
மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்ப ரையம் புகுந்துண்பர் சீவன் முத்தர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
னின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்தும்
பொன்றினசவம்வாழ்ந்தாலும்புதுமையாயொன்றும்பாரார்
நன்றுதீ தென்னார் சாக்ஷி நடுவான சீவன் முத்தர். (5)

பின்னைமூ வரிவி ரண்டு பேர்களுஞ் சமாதி யோகந்
தன்னையுற் றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானு
யுன்னுவோன் வரன்வேற் றோரா லுணர்பவன் வரியா னொரு
மன்னியர் தம்மாற் றன்னு லறியாதோன் வரிட்ட னுமே. (6)

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னுலு முத்தி
சரியாகும் பாடு பட்ட சமாதிக்கும் பலனே தென்றாற்
பெரிதான திட்ட துக்கம் பிரமவித் தனுப விப்பன்
வரியாலும் வரனு மற்றை வரிட்டனுஞ் சுகமாய் வாழ்வர். (7)

பிரமஞா னிகளுங் கன்மப் பேதையர் போல வாழ்ந்தாற்
றிரமுறு மஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியே தென்னிற்
பரவுமா காய மொன்றிற் பற்றாது மற்றை நாலும்
விரவின தோடுங் கூடும் விதமிரு வோரு மாவார். (8)

சீவன்முத் தரைச்சே வித்தோர் சிவனய னெடுமா லான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்து சன்ம
பாவன மானு ரென்று பலமுறை முழங்கு மிப்பான்
மேவருஞ் சீவன் முத்தர் விதேகமுத் தியுநீ கேளாய். (9)

பஞ்சினை யூழித் தீப்போற் பலசன்ம விவித வித்தாஞ்
சஞ்சித மெல்லா ஞானத் தழல்சுட்டு வெண்ணீ றாக்குங்
கிஞ்சிலா காமி யந்தான் கிட்டாமல் விட்டுப் போகும்
விஞ்சின பிராரத் வத்தின் வினையனு பவித்துத் தீரும். (10)

பொறுமையாற் பிராரத் வத்தைப் புசிக்குநாட்செய்தகன்மம்
மறுமையிற் றொடர்ந்தி டாமன் மாண்டுபோம் வழியே தென்
சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வ [னிற்
ரறிபவ ரறிந்து பூசித் தறமெலாம் பறித்துண் பாரே. (11)

அரியமெய்ஞ் ஞானத் தீயா லவித்தையா முடனீ றாமே
பெரியதூ லமுங்கா லத்தாற் பிணமாகி விழுமங் நேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரியகுக் குமச ரீர முலையிரும் புண்ட நீர்போற்
றரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தி லிறந்து போமே.(12)

கடமெனு முபாதி போனற் ககனமொன் றானற் போல
வுடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன் முத்த
ரடிமுடி நடுவு மின்றி யகம்புற மின்றி நின்ற
படிதிகழ் விதேக முத்திப் பதமமைந் திருப்ப ரென்றும். (13)

வேறு

ஏகமாய் மனமிறந்தாற் சீவன் முத்த
ரிருக்குமட்டும் பிராரத்வ மெதினு லுண்பார்
போகமா னதுபுசித்துத் தொலைப்ப தன்றே
புசித்தாலு மனந்தானும் போன தன்றே
சோகமா மனமிறந்தாற் போக மில்லைத்
தோன்றுமெனின் முத்தரென்று சொலக்கூ டாதே
மோகமா மிதுதெளியக் குருவே நன்று
மொழிந்தருள வேண்டுமென்றான் முழுது மானேன்.

மனநாசஞ் சொரூபமென்று மரூப மென்றும்
வகுத்துரைப்பா ரிருவகையாய் வருமி வற்றில்
வினவாத சீவன்முத்த ரிடத்தி லொன்றும்
விதேகமுத்த ரிடத்திலென்றும் மேவு மைந்தா
தனதான சத்துவமாய் மனஞ்சே டித்துத்
தாமதம்ரா சதநசித்தல் சொரூப நாச
மனகாசத் துவந்தானு மிலிங்க தேக
மடங்கும்போ தடங்குவதே யரூப நாசம். (15)

சுத்தமாஞ் சத்துவமே யுண்மை யாகுந் [போம்
துகளிருள்போ னன்மனமென் சொல்லும் போம்
வர்த்தமா னத்தில்வந்த வுணவை யுண்பார்
வருவதும்போ வதுநினைந்து மகிழார் வாடார்
கர்த்தரா மகந்தைவிட்ட கர்த்த ராகிக்
கரணவிருத் திகளவத்தை காண்பா ராகி
முத்தரா யிருக்கலுமாம் புசிப்புங் கூடு
முட்டிலையென் றறிந்துசங்கை மோகிப் பாயே. (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகார வேளையெல்லாஞ் சமாதி யென்றால்
விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டா
லவதான நழுவுமன்றோ வென்று யாகி
லதற்கொருதிட் டாந்தங்கே ளாசை கொண்டு
நவமாகப் பரபுருடன் றன்னைக் கூடி
நயந்துசுக மனுபவித்த நாரி நெஞ்சந்
தவமான மனைத்தொழில்கள் செய்யும் போதுந்
தழுவியனு பவித்தசுகந் தனைவி டாதே. (17)

தேகத்த னலனாகி யகர்த்த னாகிச்
சிவனின்றிப் பிரமமாய்த் தெளிந்த மூத்தன்
போகத்தை யுண்பனென்றாற் கர்த்தா வாமே
பூரணமா மகர்த்தனுக்குப் போக முண்டோ
சோகத்தை மறுத்தருளுங் குருவே யிந்தத்
துகளறுக்க வேண்டுமென் று சொன்ன யாகின்
மாகர்த்தன் மாபோகி மாத்தி யாகி
வகைமூன்று யவரிருக்கும் மகிமை கேளாய். (18)

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச்
சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு மாபோற்
செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்கு மென்முன்
சடமான வுலகமெல்லாஞ் சேட்டை செய்யு
மெய்கலந்த விந்திரிய விகார ரூப
விவகார விருத்திக்கும் விருத்தி தானு
மெய்கலந்த சமாதிக்குஞ் சாக்ஷி யேகான்
வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன்.

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த
மபத்தியம்பத் தியமெனவூ ணய்ந்தி டாமற்
பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற்
போகங்கள் புசிப்பவன்மா போகி யாகுஞ்
சிறிதுவவி துகடனதன் னியங்க ணன்மை
தீமைகள்சே ரினும்படிகச் செயல்போற் சித்தம்
வெறிதிருக்கு மவனேமாத் தியாகி யாவன்
விரதமிம்மூன் றுள்ளவரே வீடுள் ளோரே. (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

ஐயா கேளீர் தத்துவ ஞானியு மஞ்ஞா னிகள்போலச் [மோ
செய்யா நின்றேன் கண்டே னுண்டேன் சென்றே னெனலா
பொய்யாம் விபரீ தங்க ளவர்க்குப் போயின தென்றீரே
மெய்யாம் பிரம விகா ர மிதன்றே வெளியா யுரையீரே. (21)

ஓய்ந்த கனுவிற் கண்ட பழங்கதை யோதுவன் வாதனையா
லாய்ந்தறி வுற்றவ னப்படிச் செப்புவ னுபா சனுமாகான்
மாய்ந்தத னுடல்வே மளவும் விண்ணவன் மனித னெனப்படுவான்
வீய்ந்த சிதாபா சன்போ மளவும் விவகா ரந்தொடரும். (22)

உத்தம குருவே யாரு டருமா யொருதொழி லற்றவருட்
சித்தம டங்குதி யானுதி கள்சிலர் செய்குவ தென்னென்று
வித்தல மருவும் பிராரத் வப்பிறி வெப்படி யப்படியே
முத்தரும் வெகுவித மாகுவ ரென்பது முன்னே சொன்னேனே. (23)

நல்லவ னேகே ளுலகுப காரம் ஞானிகள் விவகார
மல்லது வேறொரு பெறுபே றும்மிலை யதனுற் பிணியுமிலை
வல்லசி ருட்டி முதற்பல தொழிலால் வருபுண ணியபாவ
மெல்லவ ருக்கும னுக்கிர கஞ்செயு மீசன டைந்திலனே.(24)

ஈசனு மாயரு வாயுரு வாகி யெழுந்தரு ளுங்குருவே
யீசனு ஞானியு மொப்பென் றீரே யெப்படி யொப்பென்று
லீசனு ஞானியு மமதை யகந்தை யிகந்ததி னுலொப்பா
மீசனு மாம்பல சீவரு மாமுல கெல்லா மிவனுமே. (25)

எல்லாச் சீவரு மிவனு மென்றீ ரிவன்தான் முத்தியடைந்
தெல்லாச் சீவரு முத்தி பெறும விருப்பா னேனையா
எல்லாச் சீவரும் வெவ்வே றுனு விவனெல் லாமலனே [ரே.
யெல்லாப் பொருளுமு ரைத்தருள் குருவே யிதைநீர் மொழியீ

அகமெனு மான்மாப் பூரண மேக மநேகவி தஞ்சீவ
னகமெனு மந்தக் கரணவு பாதிக ளளவிலை யாதலினுற்
சகமுழு துங்குளிர் சந்திர னேகஞ் சலசந் திரர்பலவாஞ்
சகமதி லேரி குளஞ்சிறு குழிசால் சட்டிகு டம்பலவால். (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டி குடங்களி னென்றுந சிந்திட வதனுட் சலசந்த்ர
னெட்டு முதற்சந் திரனொடு கூடு மொழிந்தவை கூடாவே
கட்டுமு பாதிந சிந்திடு சீவன் காரண வான்மாவிற்
கிட்டு மயிக்ய முபாதி கெடாதவர் கேவல மாகாரே. (28)

சீவன்முத்தரியல்பு முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

உ
கணபதிதுணை.
திருச்சிற்றம்பலம்,
ஸ்ரீ பரமகுருசுவாமிகள்பேரிற்
சிஷ்யர் சொல்லிய
# குருஸ்தோத்திரம்.

கள்ளமெனுங் கசடகத்தோர் கண்டறியக் கூடாத
கறைக்கண் டன்நல்
லுள்ளமெனுங் கோயிலின்க ணுவப்புறவீற் றிருந்தருளு
மூமையாள் பங்கன்
றெள்ளமுதாஞ் சிவபோதத் தீங்கருப்பஞ் சாறதனைச்
சிவதொண் டென்னும்
பள்ளமனத் திடைப்பாய்ச்சும் பரமகுரு பங்கயத்தாள்
பணிந்து வாழ்வாம். (1)

வேறு

கூவிய சேவலி னானுங் — குரு
வாகிய கோலத்தி னானுந்
தூவிய மஞ்ஞையி னானுந் — துணை
யாகிய பாதத்தி னானு
மாவினை யாட்கொள்ளு வானு — மயி
லேறிய வத்தத்தி னானும்
பாவினை மீட்கவல் லானுங் — கிடாரிப்
பருப்பத மேயபி ரானே. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூல முதற்பொரு ளானும் — மூத
வீறு நடுவுமி லானுங்
காலத்தை யுங்கணிப் பானுங் — கறை
யற்றவு ளத்தினு ளானுந்
தூலத்தைப் பற்றுவீண் மாலைத் — துடைத்
தோட்ட வருடரு வானுங்
கோலம யிலூ ரு வானுங் — கிடாரிக்
குன்றத்தின் மேயபி ரானே. (3)

மண்டல மீரேழு லாவி — மயின்
மீதிவர்ந் தேவரு வானுங்
கண்டவர் கொண்டாடு வானுங் — கலி
தீரக் கருணைசெய் வானும்
வெண்டலை கொண்டடி யார்க்கு — வியன்
மந்திரத் தின்பொரு ளோதி
யண்டர்கள் போற்றநின் றானுங் — கிடாரி
யசலத்தின் மேயபி ரானே. (4)

பூதவி னப்படை யானும் — புலித்
தோலசைத் தான்சேயி னானுங்
கீத வினப்பிரி யன்னுங் — கிளர்
ஞான வுருப்பொலி வானும்
போத நிறையறி வானும் — பொழில்
பொய்கை விளையாடு வானும்
வேத கலைப்பொரு ளானுங் — கிடாரி
வெற்பினில் மேயபி ரானே. (5)

திருப்பரங் குன்றத்தி னானுந் — தினந்
தேடுவா ரின்னறீர்ப் பானும்
விருப்பு வெறுப்பைவெல் வானும் — வினை
தீர்த்து வெளிக்காட்டு வானும்
பருப்பதந் தோருட லானுங் — பணி
பூண்டவர்க் கின்னமு தானு
மருட்பத மீந்தருள் வானுங் — கிடாரி
யசலத்தின் மேயபி ரானே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனைச் சிறையில்வைத் தானும் — விண்
ணவரைச் சிறைநீக்கி னானும்
நயனத்தி னுள்ளொளி யானும் — நர
வடிவத்தி னேடுதிப் பானும்
பயனைத் தருதல்செய் வானும் — பவ
பந்தத்தை நீக்கவந் தானும்
மயலைத் துடைக்கவல் லானுங் — கிடாரி
மலையினின் மேயபிரானே. (7)

ஆறு வரையினின் ரூடு — மதற்
கப்பாலுக் கப்பாலு மோடுங்
கூறு முகமாறு காட்டுங் — குரு
வாகி மயலைக்கீழ் வீட்டு
மேறு கொடியையமே னட்டு — மிணை
யில்லாப்பே ரின்பையு மூட்டு
மாறு முகமுடை யானே — கிடாரி
யசலத்தின் மேய பிரானே. (8)

பாலக் குழந்தையு மாகிப் — பதி
ஞானக்கு ரவனு மாகிக்
கோலக்கு மரவே ளாகிக் — குல
வேடக்கு மரியைக் கூடி
மூலக் கனலெழ மூட்டி — முழு
சீதக் களங்கனை யாட்டிப்
பாலைத் தரவேவல் லானுங் — கிடாரிப்
பருப்பத மேயபி ரானே. (9)

வானத்தி னோர்தவத் தோரும் — வழி
தேடுபல் தொண்டரு மேத்தும்
ஞானச் சுடர்வடி வானை — நவை
நீக்கு மருள்விழி யானை
மோன வெறுவெளி யானை — முனி
வோரும்மு மூதுண ரானை
ஞானத்தி னேத்தவல் லாரே — வரு
நமனையும் வெல்லவல் லாரே. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

உன்னற் கரிதா யுரைக்கரிதா
யுணர்வுக் குணர்வா யொப்பிலதாய்க்
கன்னற் சுவையிற் கதிப்புளதாய்க்
கருதற் கரிதாய்க் காண்பதற்கு
முன்னர்ப் பிரம னரிக்கரிதாய்
முனிவர் முதலோர் முழுதறியா
வன்னக் கமல மலரடிக்கீழ்
வைத்திட் டெனையாள் வான்பொருளே. (11)

பொருளே பெரிய புகலிடமே
புனிதா மிக்க புகழுடையோய்
மருளே கொண்டு புல்லறிவான்
மயங்கித் தியங்கி மாதர்மய
லிருளாங் கொடிய மோகமதி
லிடருற் றுழலு மெளியேற்கிற்
கருளா யரசே பரமகுரு
அன்ப ருளத்தா யாரமுதே. (12)

ஆரா வமுதே யருட்கடலே
யடியே னடிக்கீ ழமர்ந்துறையத்
தாரா விடினுன் றண்ணளிதான்
றமியே னுய்வ தெவ்வாறே
பேராற் பெரியோய் நின்கழலே
பிரியாச் சிந்தை யுடையேனைப்
பாரா தொழிந்தாற் பரமகுரு
பாரா ரெனைத்தான் பழியாரோ. (13)

பழிசேர் நட்லைப் மார்மீதிற்
பற்று மனத்தின் பற்றறுக்க
விழியா லுதவி நாயேனுன்
விமல வடிக்கீழ் வைகவொரு
மொழியா முரையா மொழியதனை
மொழிந்தே குறியாற் பரமகுரு
அழியா முதலே யாலமர்ந்த
வத்தா வெனைத்தா ளாளாயோ. (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளா யரசே யடியேனை
    யலக்கண் செயுமிம் மாயிடியும்
வாளா பவமும் வருத்தாதே
    வைப்பாய் மோன வைப்பினிலே
மீளா வடிமை யாக்கியெனை
    மிகவும் பொல்லா மகரேனும்
வாளா வழிய விடவிரும்பும்
    மாதா வுண்டோ வையகத்தே. (15)

உண்டோ வொருவ ருனையன்றி
    யுயிருக் குயிரா யுலகனைத்துங்
கொண்டே விரிந்து கரந்துறையுங்
    கோவே யடியார் குறைதவிர்க்கக்
கண்டே வந்து னடிநிழற்கீழ்க்
    கருணை யமுதி லொருதிவலை
யுண்டாற் பிறவி யொழிந்திடுமென்
    றுன்சீ ரடியை நேடுவனே. (16)

நேடு பிரம னரிகாணு
    நிமலா நினைவி லெழுஞ்சுடரே
யாடு கழலா யருமறைக்கு
    மறிதற் கரியா யன்பர்புகழ்
பாடு கழலாய் பரமகுரு
    பாவி யேன்றன் பற்றொழிக்கக்
கூடு கழலா யென்கருத்துக்
    கூடும் வண்ணங் குறைதவிர்ப்பாய். (17)

குறையே தவிர்ப்பா யென்றிரந்து
    கூறு மடியேன் மனுவினுக்கிங்
கறையாய் விடையொன் றருட்குருவே
    யன்றே யெனையாட் கொண்டிலையோ
முறையோ முறையோ வென்றரற்ற
    முன்னா ளமரர் குறைதவிர்த்த
விறைவா நெடுநா ளிரக்குமிந்த
    வெளியேற் கினித்தா னிரங்காயோ. (18

இரங்கி யருள்வா யென்றென்றே
　　யெண்ணி மனசு புண்ணாகிக்
கரங்கள் குவித்திட் டுன்னடியர்
　　கழற்கீழ்ப் பணியுங் கடையேற்கு
வரங்க ளளிக்கக் கைகலந்நின்று
　　மகிழ்ந்தே மாதி னுடனிதயாம்
பரங்க ணடஞ்செ யம்புயப்பொற்
　　பதந்தந் தருள்வாய் பரஞ்சுடரே. (19)

சுடரே தூண்டா மணிவிளக்கே
　　சூரியா தீதப் பழம்பொருளே
குடரோ டெலும்பு தோலாமிக்
　　கூண்டி லடியே னுழல்காறு
மிடரே தவிர்த்திட் டாறுதலி
　　விருத்திக் காலங் கழித்ததற்பின்
விடவே பந்தம் வெறுவெளியாம்
　　வீட்டிற் கலந்தாள் மெய்க்குருவே. (20)

வேறு

குற்றமே களைந்து குணமெனக் களித்த
　　கோதிலா ஞானசற் குருவே
பற்றினே னுன்றன் பங்கயப் பதத்திற்
　　பற்றமற் றனைத்துமே பொய்யென்
றுற்றதை யுரைத்தே யுறுதுணை யாமென்
　　றுன்கழ லடைக்கலம் புகுந்தேன்
கொற்றவா கருணை கூர்ந்தெனை யாண்டு
　　கொள்வதுன் கடமைய தன்றே. (21)

வேறு

சிறியவ ரஞ்ஞானத்தாற் செய்பவ மெல்லாஞ்சி தைந்து
னறிவரு மறிவா னந்த வருட்பெருங் கருணை தன்னா
லறிவினை யூட்டி யஙஞேர் பக்குவத் தடைவேயாளுங்
குறிகுண மின்றி நின்ற குருமணிக் கொழுந்தே போற்றி. (22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினுக் கரிய ஞான வகண்டசிற் சொரூபா போற்றி
செறிதரு தோற்ற மெங்குஞ் சிதாகாச மானாய் போற்றி
சிறியனேன் சிறுமை நீங்கச் சிறந்தெழுந் தருளி நல்ல
வறிவினுக் கறிவாந் தன்மை யனுக்கிர சித்தாய் போற்றி. (23)

ஒன்றோடொன் றெவ்வாத் தோற்றத் தோங்காரத் தொனியேபோற்றி
யன்றெனை நகலக் குன்றி லழைத்தருள் புரிந்தாய் போற்றி
குன்றுதொ ருடு மோன குருபரா போற்றி போற்றி
யின்றிவ ணடைந்த பத்தர்க் கினிதருள் புரிவாய் போற்றி. (24)

விருப்பொடு வெறுப்பொன் றின்றி விளையாடு தொழில்க ளேந்து
னருட்பெருங் கருணை யாமென் றனுக்கிர சித்தாய் போற்றி
விருப்பொடு வெறுப்பு நீக்க வேண்டுநின் றொண்டர்க் கேற்ற
திருத்தகு மெய்ம்மை ஞானச் செம்பத மருள்வாய் போற்றி. (25)

வேறு

கல்லாலின் புடையமர்ந்த கண்ணுதலா ரெமக்கி ரங்கிப்
பல்லோருங் கண்டுவக்கப் பரமகுரு வாய்ப்பொருளைச்
சொல்லாமற் சொல்லியெமைச் சும்மாவி ருக்கவைத்த
வல்லாள தேசிகன்றன் வார்கழல்கள் வாழியவே. (26)

பரமகுருசுவாமிகள் குருதோத்திரம் முற்றுப்பெற்றது.

---

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ கடையிற்சுவாமிகள்

பேரிற்

சிஷ்யர் சொல்லிய

## குருதோத்திரம்.

எண்டோள் களும்வீசி யெழில்சேர் நடமாடிக்
கண்டோர் கலிநீக்குங் கடையிற் குருதாளை
வண்டோ லிடுசோலை வண்ணைப் பதிமேவித்
தொண்டாம் புணையேறித் தொடர்ந்தாட் படுவீரே. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவே யமறைநான்கு ளறமே முதலாகி
யிடையே யுரைபொருளு மின்பென் பதுமூன்றுங்
கடையே மொழிவீடு கருதுங் கழல்கடையான்
விடையூர்தி யென்றேத்தி விரைந்தாட் படுவீரே. (2)

குஞ்சிச் சடையானைக் குவிவெண் குடையானைக்
கொஞ்சிக் களிப்பானைக் கோண்விற் படையானை
யஞ்சிப் பணிவார்த மகத்துட் படிவானை
நெஞ்சிற் றிடமாக நினைந்தாட் படுவீரே. (3)

பெரிய கடைநாதன் பித்தன் றிருக்கோலம்
கரிய வர்ணச்சிலை கரித்தோ லனசால்வை
துரியா தீதப்பொட்டுத் துலங்கு நடைமெட்டுச்
சரியா யறிந்தேத்தித் தழைத்தாட் படுவீரே. (4)

கொன்றை மலர்கங்கை குளிர்வெண் பிறைதாங்கி
மன்று ணடிப்பானை மறைபோற் றிடுவானை
யென்றும் பணிவார்த மிடர்நீங் கிடுமென்றே
நன்றே துதித்தேத்தி நயந்தாட் படுவீரே. (5)

ஞாலத் திடைமேவி நடனச் செயல்காட்டிச்
சூலப் படையேந்திச் சுடுவெண் பொடிபூசி
வாலப் பெடையோடு வண்கீழ் கழனுட்டு
மூல முதலானை மொழிந்தாட் படுவீரே. (6)

இறப்பி லிறைவன்று ளிருக்கு மிடமான
சிறப்புள் கிடச்சிந்தை சிற்றம் பலமென்றே
மறைப்பைத் திறந்தென்று மயறீ ரெரிமூட்டப்
பிறப்பில் பெருமானைப் பிடித்தாட் படுவீரே. (7)

மூலக் கனல்மூட்டி முதல்வன் றனையேத்திக்
காலன் றனைவீட்டிக் கழலீந் தருளென்றே
பால னுருக்கொண்டு பகைதீர்த் தெமையாளுங்
கோலந் தனையென்றுங் குறித்தாட் படுவீரே. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணக்குன் றனையெந்தை கூர்வாட் படைகொண்ட
கணக்கில் புகழ்பாடிக் கணக்கே டுடைபாடிப்
பிணக்கில் பொருள்பாடிப் பிறைசேர் சடைபாடிப்
பணப்பாம் பணிபாடிப் பணிந்தாட் படுவீரே. (9)

வண்டு துவளஞ்சார் வண்ணைப் பதிதேடித்
தொண்டன் மொழிமாலை தொடர்ந்தேத் திடவல்லார்
சண்டன் பகைவென்றே தலைவன் துணைகொண்டங்
கண்டந் தனிலாள்வா ரரசென் பதுசரதம். (10)

வேறு

மயக்கமே திளைக்கும் மனமெனும் பெரிய
மறிதிரை வேலையுண் மயங்கித்
தியக்கமுற் றலையுஞ் சிறியனா யேற்குன்
சிற்றடிச் சுவட்டினைத் தெளித்துப்
பயக்குமெய்த் தொண்டின் பரிசினைப் பயிற்றிப்
பவக்கடல் கடக்கவே யுன்ற
னியக்கமா மருளின் றிவலையொன் றளியா
யிறைவனே யேகநா யகனே. (11)

இருவினைப் பயனுற் பிறந்திறந் துழலு
மிடைவிடா வேதனைக் கிடமாங்
கருவழி மனத்தைக் கட்டறத் துறந்துன்
கடைவெளிக் கழலிணை யடையக்
குருவழித் தொடருங் குழாத்திடை யிருந்தே
குறையினைக் கழித்திட வெந்த
னிருளிணை யறுத்தாட் கொண்டருள் புரியா
யிறைவனே யேகநா யகனே. (12)

நீதமே பிறழ்ந்து நெறியலா செய்யு
நீசனே னின்னுடை யிரண்டு
பாதமே புணையாய்ப் பற்றினேன் பாவப்
பரவையை நீந்திட வெண்ணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதமே யுருவாய்க் கொண்டசற் குருவே
பூரண நின்னரு ளமிர்தா
லேதமே களைந்தாட் கொண்டருள் புரியா
யிறைவனே யேகநா யகனே. (13)

கள்ளமே பொய்யே கபடவெஞ் சினமே
காமமே லோபமே யாதி
யுள்ளமே காணி யாட்சியாக் கொண்ட
துன்னருட் கபாத்திர னென்றே
தெள்ளமு தனைய திருவருட் பெறவே
தேவரீர் திருவுள மிசைந்தே
யுள்ளுறை களைந்தாட் கொண்டருள் புரியா
யொருவனே யேகநா யகனே. (14)

யாதொரு பற்று மின்றியே நின்னை
யேயடை யுபாயமொன் றறியேன்
றீதொரு கணமே யாயினு மகலாச்
சிந்தையேன் றேவரீர் திருத்தாட்
போதினை மறவா நெறியளித் தருளாய்
புண்ணியா பொறையுடைப் பொருளே
யாதுமின் சித்த மடியனுன் றஞ்ச
மீசனே யேகநா யகனே. (15)

தேகமே யழியு மினின்விரைந் தென்ப
திண்ணமே தொடர்புடை யோர்கள்
சாகவே காணின் மனஞ்சலிப் பெய்திச்
சகத்திடை வாழ்வினை வெறுக்கும்
போகவே கணங்கண் மறந்துமென் மேலும்
புகுந்திடும் புந்தியை யடிமை
யாகவே தடுத்தாட் கொண்டருள் புரியா
யாதியே யேகநா யகனே. (16)

உன்னையே யென்றும் வணங்கிடப் போற்ற
வொருவர மின்றெனக் கருளாய்
மின்னையே மேகத் தனுவினை நிகர்க்கு
மேதினி வாழ்வுக ளனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னலே விளைப்ப வாதலிற் கணமு
மின்பமொன் றிலையெனத் தேர்ந்தே
னென்னலர் தமக்கு மின்னருள் சுரக்கு
மோங்கலே யேகநா யகனே. (17

வேதமே முதலாய் விரிந்தபல் கலையும்
விளம்புதற் கரியபே ரின்ப
வோதமா யொளியா யுருவிலா வெளியா
யுணர்விலுக் கதீதமெய்ஞ் ஞான
போதமா யகண்டா காரமாய் நிறைந்த
பூரண நின்கழ லுயேற்
கிதலே நீதமென வரிசைந் தருளா
யிறைவனே யேகநா யகனே. (18)

கணத்தினிற் றோன்றி மாய்ந்திடு மிந்தக்
கடநிலை யன்றென வோரேன்
மணப்பொடி பூசு மாதரா ராசை
மயல்விழி வலையினுட் பட்ட
பிணக்கனே னெனினுங் கடைக்கணித் தருளிப்
பிஞ்ஞகா நின்பத சேவைக்
கிணக்கியாண் டருள்வ தெந்தநா ளறியே
னிறைவனே யேகநா யகனே. (19)

வேறு

பண்ணி னேடுனைப் பாட வேயறி
யாத பாவியாய்ப் பாரிலே திரிந்
தெண்ணி னேடெழுத் தின்ன முமறி
யாத நாயினே னிடரு ளாயினேன்
விண்ணி னோர்தொழ விடம ருந்திநல்
லமுத ளித்தனை சிறைமப மீட்டனை
யண்ண லேயது கண்டி ரந்தன
னல்ல றீர்த்தடி தந்தி ரட்சியாய். (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ நின்றிருப் பாத பூசைசெய்
சேய்க்கி ரங்கியே நமனை வீட்டினை
ஒவ லாவது கண்டு நின்கழல்
குறுகு மென்பிழை குணம தாக்கியே
பாவி யான்சொலப் பணிபிட் டென்மிடி
பருதி முன்னெதிர் பனியென் றேகிடத்
தாவி யென்சிர மீதி னின்னடி
தகுந்த குந்தகுந் தந்தி ரட்சியாய். (21)

தீர்த்து நோய்பதஞ் சேர்க்குந் தேசிகா
திகழுஞ் செஞ்சடைச் செக்கர் மேனியா
காத்த னின்கடன் கைவி டேலெனைக்
கடைக்க ணோக்கிலுட் கவலை நீக்கிடாய்
நீத்த கங்கர நித்த மென்மன
நெக்கு நெக்கிவ ணினைவு கொண்டுயச்
சாத்தியென்சிர மீதி னின்னடி
தகுந்த குந்தகுந் தந்திரட்சியாய். (22)

தந்தை தாயினு மிக்கவன்புடன்
தரணி மீதினில் வந்தகோலநி
னந்த மின்றிய பேரருட்கிணை
யாது மொன்றில வடியனுய்ந்திடச்
சிந்தை யாகுலந் தீரமாற்றியே
தேவ நின்கழற் சேவடிப்புணை
தந்தி ரங்கிடத் தகுந்தகுந்தகுந்
தமிய னேற்குநீ தந்திரட்சியாய். (23)

அன்றெ னாவியும் பொருளுமாக்கையு
மைய யாவுங்கொண் டடிமையாக்கினு
மொன்று மென்வலி யிலாதநாயினே
னுனது பேரரு ளாட்டமேயெலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று நின்செயல் பார்க்குமேழையே
னின்ன லின்னமு மறிந்திலாய்கொலோ
கன்றுக் காவுளங் கசிவதேயெனக்
கருணை கொண்டடி தந்திரட்சியாய். (24)

பொய்ம்மை நீக்கியே மெய்ம்மைதந்திடப்
போத மேயுரு வாகவந்திடு
மைய நின்கழற் சேவ டிப்புணை
யலாது வேறிலே யடியன்றஞ்சமே
செய்யு மாறறியாத நாயினேன்
சிந்தை யாகுலந் தீர்ப்பதென்றுகொ
லுய்யு மாறுன தருள்புரிந்திடா
யுரை யிறந்ததோர் ஞானபானுவே. (25)

வஞ்ச நெஞ்சின னாயி னுமன
மாசி லாவடி யாரை வைதிடு
மஞ்சு தீவினைப் பதக ராகியே
யஞ்செ ழுத்தறி யாத நீசர்பான்
மிஞ்சு மன்புடை விழல னாயினு
மிகுதி யுங்கெட விடவு நீதியோ
தஞ்ச மென்றுனைச் சரண டைந்தனன்
றந்தை யாகுநீ தந்தி டாய்பதம். (26)

மங்கை பங்கனே போற்றி போற்றிமான்
மழுக்க ரத்தனே போற்றி போற்றிவெண்
டிங்கள் சூடிய தேவ தேவநின்
றிருவ டிப்புணை போற்றி போற்றியங்
கங்கை மென்சடைக் கால காலநின்
கமல பொற்பதம் போற்றி போற்றிவண்
டங்கு தாண்மலர் போற்றி போற்றிநின்
றூண்ட வக்கழல் போற்றி போற்றியே. (27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவு போக்கிலா மௌன வைப்பினோர்
வழியைக் காட்டவே யொழிவெ னுங்கடைப்
பெரிய பேரகின் பேர ருட்கிணை
பிறிதி யாதுள பேச வல்லமோ
நெருந லின்றெதிர் நாளு நின்னடி
நெஞ்சி லேபதி நீச னுய்ந்திடப்
பரம சற்குரு வாக வந்தவா
பாவி யேற்கருள் பத்ம பாதமே. (28)

அண்டர் போற்றவே கயிலை நின்றெழுந்
தாடித் தாண்டவந் தில்லை மன்றுளே
மண்ட லீபுரத் தவணின் றேவந்து
மருவி நந்தமை யடிமை யாக்கிப்பின்
றொண்டர் வாழ்த்திநின் சேவை பூண்டுயத்
தொன்ன கர்ப்பதி வண்கி ழக்கமர்
விண்டு வும்மல ரோனுங் காணொணு
விமல பொற்பதம் வாழி வாழியே. (29)

வேத மேமுத லாக மத்துடன்
விளங்கு தொல்புகழ்ப் புராண காவிய
நீத மானபல் கலையு மந்தணர்
நீறு மஞ்செழுத் தோது தொண்டர்நின்
பாத பூசைசெய் பத்தர் வாழ்கவிப்
பத்தன் சொல்தமிழ்ப் பத்தி யாய்கித
மோத வல்லரும் வாழ்க வாழ்கவிவ்
வுலகு மும்பரும் வாழ்க வாழ்கவே. (30)

வேறு

மங்கையுமை பங்கன்மழு மான்மறி கரத்தோன்
சங்கர சிவாயகுரு சாம்பசிவ மூர்த்தி
கங்குல்பக லற்றவெளி காட்டுகுரு வள்ளல்
செங்கமலச் சேவடிநுஞ் சிந்தைநினைந் துய்மின். (31)

மன்னுகலை வேதமுத லாகம புராணஞ்
சொன்னநெறி தன்னிலும தீதநெறி காட்டித்
தென்னைவளர் வண்ணைநகர் தன்னிலடி நாட்ட
வுன்னியவுன் பேரருளுக் கென்னசெய்கைம் மாறே. (32)

பித்தனென வேயுலகர் பேசிட நடித்தா
யத்தகைமை யன்பரன்றி யாரறிய வல்லார்
சித்தமய நீர்த்துனது சேவடியெஞ் ஞான்றும்
பத்திசெய வேயருளும் பாக்கியமி தன்றோ. (33)

கங்கைமதி கொன்றையணி கண்ணுதலி னன்றன்
பங்கயப்பொற் பாதமலர் சிந்தைபணி செய்து
செங்கைகுவித் தாடித்தினந் தேடுமடி யாரை
மங்குபிணி வன்பிறவி வந்துநலி யாதே. (34)

வித்தின்முளை யென்னும்வினை வேரறுத்தெஞ் ஞான்றும்
முத்திநெறி காட்டநல முத்தனென நேர்ந்தே
யத்தனெமை யாண்டருளு மண்ணறிருப் பாதம்
பத்திசெயு மன்பர்பவப் பற்றறுத றிண்ணம். (35)

சோதிமயந் தன்னிலதி சூக்குமவி லாச
னுதிநடு வந்தமில னுதிசிவ போதன்
பாதிமதி சூடிபரை பாகனருள் கொண்டே
கோதில்குரு வாகியெமைக் கொண்டடிகள் போற்றி. (36)

அத்துவித பாவனையெம் மண்ணலடி காட்டப்
பத்திமுறை யென்றெமையும் பத்திசெய வைத்த
சுத்தகடை மூத்தபர சித்தனென வந்த
வுத்தமனை நித்தமுள முற்றுநினை வீரே. (37)

அம்பரசி தம்பரப ரம்பர நடஞ்செய்
செம்பொன்மணி மன்றிதெனச் சிந்தைகுழைந் தேத்தி
கம்பலைகண் ணீர்சொரியக் கைகுவித்துப் பாட
வெம்பிறவி யும்பிணியும் வெந்துபொடி நீறும். (38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுசெயும் பில்லிமுதல் வெஞ்சினப்பி சாசம்
வேறுசெய் மருந்துவிசர் கொண்டுதிரி பித்தம்
நீறுபட வேண்டுமெனி னீவிர்வந்து செய்மின்
கூறுகடைச் சாமிகுரு பூசையினை யன்றே. (39)

தாதையெனத் தண்ணருள்பொ ழிந்திடர்த டிந்தே
நீதிநெறி யுய்த்தெமது பாசமது நீயக்
கோதில்விழி காட்டுகடைச் சாமிகுரு வள்ளல்
பாதமலர் சிந்தையிற்ப தித்தினிது வாழ்வாம். (40)

வேறு

பொய்த்திய சமயநெறி புகலு மூடப்
புல்லறி வின்வழி செல்வோர் பவமே நீங்கார்
மெய்ச்சோதி வடிவழகன் கடையிற் சாமி
மேலவர்கோன் விடையூர்தி விமல நாதன்
உய்த்தேற வழிகாட்டு மும்பர் நாத
னுமைபாக னீரேழு லோக மீதுந்
தெய்த்தோமென் றுநிரு நடனங் காண்பார்
தீநரக விடர்சேரார் திண்ணந் தானே.

கடையிற்சுவாமிகள் குருதோத்திரம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

கடையிற் சுவாமிகள் குருபூசைத் தினத்தன்று மண்டைதீவு அன்பர்களால் வழக்கமாகப் படிக்கப்பட்டு வரும்

# பாடல்களிற் சில

இவை அல்லூர்

## அமிர்தலிங்கம் என்பவரிடமிருந்து

பெற்றுக்கொள்ளப்பட்டவை.

காப்பு (கட்டளைக் கலித்துறை)

கயமுகத் தானையெங் கந்தற்கு மூத்த கணபதியை
வயமருப் பானல் வரையிடைப் பாரத மாக்கினனை
சயமுற யாவரும் சாற்றித் துதித்திடுந் தத்துவனை
நயமுற வாழ்த்துதும் நாங்கடை யான்பா நவில்வதற்கே.

நூல்

அத்தனை ஞானி யருந்தவத் தோனைநல் லருளுருவாஞ்
சித்தனைப் போற்றித் துதிக்குநின் குற்செனம மறற்றிடவசம்
சத்திய மாயினி மேல்மன மேசகப் பற்றுவிட்டுக்
கைத்தல நற்பணி செய்திடு வாய்கடை நாதனுக்கே. 1

ஈசனை நாடியிங் கெங்கெங்கு மோடி யிளைத்தநெஞ்சே
பாசம் விடாமுன் பரானந்தம் வந்துனைப் பற்றிடுமோ
நேச முடன்கடை நாதனுள் ளந்தனில் நித்தியமும்
ஈச னிருக்கு மியல்பினை நீயறிந் தேத்துகவே. 2

(அறுசீர்க் கழிநெடிலடி - ஆசிரிய விருத்தம்)

நிலமிசைக் குரம்பை தன்னை நிலையென உணர்வை யாகில்
பலமுறு துன்பம் வந்து பண்புடன் சூழ்ந்து கொள்ளும்
நலமுடன் சாற்றக் கேளாய் நவையொரு சிறிது மின்றி
மலமறு கடையில் நாதன் மலரடி வணங்கி நில்லே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்மண் பொன்னி வற்றில் மருவிய ஆசை விட்டுத்
தீதகல் கடையி னூனந் தினந்தொறுந் துதிப்பையாகில்
பாதக மகன்று புண்யம் பலித்து நீ வீடு சேர்வாய்
போதமெய்ஞ் ஞானமுண்டாம பூரண மாக நம்பே. 4

பொய்யினை மெய்யென் றெண்ணிப் புலன்வழி யலைந்திடாமல்
உய்வகை யடைய வேண்டில் உறுதியாய்க் கடையினுதன்
* செய்கையைப் பற்றி நின்று சேவைசெய் திடுவையாகில்
மெய்வழி யிதுவே யாகும் மேன்மை பெற்றுய்யலாமே. 5

* செய்கை — அருளிச்செயல்கள்.

தரவு கொச்சகம்

விண்ணவர்க ளுய்யும்வகை விடமுண்ட கண்டன்
மண்ணவர்க டந்துயரம் மாற்றுமவ வகை யுன்னி
அண்ணல்கடை நாதனென வு மருளுருவங் கொண்டு
மண்டை நகர் தன்னில்வரு மண்ணனடி போற்றி. 6

கட்டளைக் கலித்துறை

ஏற்றிடு வாயிக் கவிதைகள் யாவையும் இன்செவிக்கே
போற்றிடு வார்தமை யாண்டிடு வாயென் றன் புன்மையெலாம்
மாற்றிடு வாயென் பிறவிப் பிணிக்கொரு மாமருந்தே
வீற்றிருப் பாய்கடைச் சூழலில் நாளும் விளங்குறவே. 7

கற்றாற் பயனென்ன கேட்டாற் பயனென்ன காலனுறிற்
சற்று கிலுநில் லிங்குள தோசக மாயையிலே
சுற்று திருமன மேசுகா னந்த நிலைவிரும்பி
நிற்பா யெனிற்கடை நாத னுதவுவன் நற்கதியே. 8

அறுசீர்க் கழிநெடிலடி – ஆசிரிய விருத்தம்

இன்புடன் வெற்றெ லும்பை இறுகிடக் கவ்வு நாய்போல்
துன்புடை வாழ்க்கை தன்னைச் சுகமென மதிக்குநெஞ்சே
அன்புடன் கடையி னுனுக் கநு தினம் பூசை செய்தால்
வன்புறு துயரம் நீங்கி வாழுல காள லாமே. 9

ஞான மாகிய நூல்பல வோதியும் ஞானியர் தம்மோடும்
மோன மாகிய மெய்ப்பொரு ளுணர்கிலை முழுமனத் தகத்தூடே
ஈனமாகிய லௌகிக வாசனை யின்னமு மகலாய் நீ
கானு லாவிய மற்கடம் போன்றனை கடையவர் கழல்போற்றே. 10

உ

ஸ்ரீ குரவே நம

# ஆரம்பம் கரணசுத்தி

## 1. திடஜன்னியம்

ஆனை முகனே யருட்குரு வாகி
மானிடர்க் காக மானிடங் கொண்ட
குழந்தை வேலெனும் பழம்பெய ரப்பன்
விழைந்தருள் புரிந்த விதந்தனை யடியேன்
பேசவா யில்லை யாயினும் பேசா
வாசகத் தாலே பேசிய குறிப்புக்
காலமெய் தியதாற் கட்டளைப் படியே
மாலற வின்று வழுத்துது முறையே
முத்தி யின்பமோ செத்தவர்க் குரிமை
செத்தவ ரார்மனஞ் செத்தவ ராதலின்
ஆக்கை மானிட மடைந்த புண்ணிய
மாக்க ளெவர்க்கும் வழியடி யுரிமை
இன்ப நுகர்ச்சி யிருவர் சேர்க்கையி
லென்பதி யார்க்கு மங்கையி னெல்லி
குறியிரண் டழியச் செறிமன மழியி
னறிவிரண் டழிய வகமெவ னுறுமோ—ஆயின்
அன்பா லான்மா வனுக விசனை
யன்பா லவனு மாதரித் தனையப்
பேரின் பந்தான் பிறப்பது சத்திய
மாரிவ் விசனென் றுய்ந்து பார்க்கி
லென்னு ளுயிர்ப்பா யென்னு ளிருப்ப
னென்னினு மினிய விச னேயென
ஆளுடை யரசி னருள்வாக் குளதா
னுளுமு னிதயம் நண்ணி வாழ்பவ
னவனே நீயா மவனதை யறிவன்
அவன்நீ யென்பதை யறியநீ நினையாய்
அவல மதியா உலக்கிய மறியாய்
கவலைப் பட்டாய் குடும்பம முற்றாய்
அவதியைக் கண்டான் அகத்துறை கள்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவநிலை பாரான் றரமது பாரான்
மானைக் காட்டி மான்பிடிப் பார்போல்
ஊனைத் தாங்கி யுன்னை யாட்கொள
மேதினி வருதிரு மேனியை யடைந்தும்
வாதனை யேன்பய மேதினி யுனக்குன்
நாதனைச் சேர நாள்நட்சத் திரமோ
காதலைக் காட்டக் கணந்தரி யாதுனைக்
கட்டி யணைத்துக் கலந்து சுகந்தரு
மிட்டசித் திகளெலா மின்றே பெறலாஞ்
சத்திய மிதற்குச் சம்சய மில்லை
நித்திய சுகபரி சுத்தவாழ் விந்த
உடலுடன் பெறலாம் விநயம் நாணம்
திடமன முறவே செயலரி தில்லை
யன்பை மேற்கொ ளவனுரு வுன்னுரு
வென்பதை நீநம் பென்ற சொற்றுணையாக்
கொண்டிடு கொண்டிடக் கண்டவித் தேகமும்
பண்டை மனமுந் தொண்டுனக் காகு
மிந்நிலை சாத்திய மெய்தற் பொருட்டா
யின்னே யுனக்கோ ரிதோப தேசம்
பண்ணுவ மிந்தோர் பரமரா சியமாம்
சொன்ன சொற்படியே தொகுத்திடு சாதனம்—எனில்
உயிர்ப்பென வுன்னு ளொழித்துறை யிசனும்
வெயிற்படு வங்கத் திரதமே றுவபோ
லுள்ளும் புறம்பு மொக்கக் கலந்து
கொள்ளுத ரிண்ணங் குருப்பிரா னுனை
யெல்லா முடைமையும் எல்லா மறிதலும
எல்லா வலிமையு மெங்கணு நிறைவு
நினக்கே யுரிமை நீயே சிவமாம
நினதே நின்மல நித்தியா னந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமகுருசாமி

சேர், பொன். அருணாசலம் அவர்கள் வெளியிட்ட சுவடி ஒன்றில் குறிப்பிட்ட பத்தி.

One of the wisest and best men I have known was one who in his youth had been a cooly on a coffee plantation in Ceylon. He was moved to take to the woods, and for three years dwelt alone in the forests between Matale and Trincomalee, cut off from all human society, living in the contemplation of nature and in meditation, water and wild fruits his sustenance. He was discovered by some way-farers, chased and captured, and brought into the town where they kept and tended him till by degrees he returned to the ways of human society. His was a sweet personality. Rich and poor, men, women and children alike, felt instinctively drawn to him and found peace and comfort. He had been all but illiterate in his youth, but after his experience in the forest was able to hold learned discussions with pundits and was heard by them with reverence. He lived all his life a mystic and unwearied in good deeds. He seemed to be one who had succeeded in breaking the barrier I spoke of in unlocking the gate and letting the great ocean waters in. Paramaguru Swami passed away in 1904. A shrine much frequented by worshippers marks the place of his interment at Alu vihare, near Matale.

From Studies and Translations
by
SIR P. ARUNACHALAM.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குரு வணக்கம்

அருவமாய் நின்றாய் போற்றி
யடியரேம் பொருட்டா லிங்ங
னுருவமாய் வந்து நம்மை
யுவப்புட னுண்டாய் போற்றி
யுருவமா மதனை நீதோ
ருருவினைக் கொண்டாய் போற்றி
யருவுரு கருவை மேவு
மருங்கிரி யமர்வாய் போற்றி.

(அடிமை: வே. இ.)

---

உ

ஓம்

ஸ்ரீபரம குருவே நம:

ஸ்ரீ குழந்தைவேற் சுவாமிகள் பேரில்

அவரது சீடன்

ஸ்ரீ. இ. அருளம்பல சுவாமி அவர்கள் பாடிய

# அகராதிச் சரணமாலை

காப்பு

புழைக்கரம் பேழைத்தொந்தி
புகர்முகம படைத்ததெய்வ
மழைக்குமுன் னடியார்க்கஞ்ச
லளிதரிறு மாதிமூர்த்தி
பிழைப்படு மடியேனின்னல்
பெரும்பவ மொழித்துமென்மேற்
றழைத்திடக் கருணைகாட்டுந்
தயாபரக் கணேசன்காப்பே.

நூல்

அப்பனே சட்கோணத் துச்சிமேய
வறிவுருவே தன்னுருவா யமர்ந்தமூர்த்தி
செப்பரிய சிவஞானச் செல்வரான
திருக்கடையிற் சாமிகள் மெய்ச்சீடராலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொப்பரிய வருட்குருவா மடியனேனை
யுய்விப்பான் றடுத்தாண்டா யுணர்விலேன்செய்
தப்பிதமெல்லாம் பொறுப்பாய் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 1.

அஞ்சினேன் பவக்கடலுக் கஞ்சினேன்மா
னப்பனே யந்தகனுக் கஞ்சினேன்யான்
வஞ்சியர்கண் மயக்கினுக்கு மஞ்சினேன்யான்
வம்புசெயு மனக்குரங்குக் கஞ்சினேன்யா
னெஞ்சுகலக்கிடு மிடிநோய்க் கஞ்சினேன்யா
னிர்ப்பயந் தந்திரக்ஷிப்பாய் நிமலாநின்பா
தஞ்சிரமேலே வகித்தேன் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே 2.

அருடருவா யேழையெனக் கிரங்கியுன்ற
னம்புயப்பொற் பதமலரென் சிரத்திற்சூட்டி
மருளற மெய்ஞ்ஞானப்பாற் றிவலையூட்டி
மயங்காதே மைந்தாவென் றெருக்காலுன்பொற்
றிருவாயான் மொழியாயோ சீவன்முத்தா
செழுந்திருமா லயற்குமறி யொண்ணாத்தேவே
தரம்பாரா தெனையாண்டாய் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 3

அற்றூர்க்கு மலர்ந்தார்க்கு மருள்செய்மூர்த்தி
யப்பனே நீயல்லா தவனிமீதில்
மற்றுரு முண்டென்றோர் கணப்போதேனும்
மனத்திடை நினைத்தாலும் நிரயத்துன்ப
முற்றுவா வென்றனந்த காலந்துய்த்த
லுண்மையிதற் கையமிலை யுடைய வென்னைத்
தற்காத்தல் கடனுனக்கே குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 4.

அச்சமெலாந் தவிர்த்தாள வல்லசித்தா
வகங்காரன் மாயையுடன் கூடியென்னை
வைச்சாட்டுங் குரங்காட்ட மெல்லாங்கண்டும்
மனதார வொன்றறியார் போலேநீதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையிலா நெஞ்சினர்போ லிருந்தல்நான்செய்
பாவமெனினீ விழிக்க நீருகாதோ
தற்செயலற் றிருக்கவருள் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 5

அய்யா வென்னகக்கிடக்கை யாவும்நீயே
யறிந்திருந்துஞ் சோதனைக் கிங்கெனையாளாக்க
மெய்யாவுன் றிருவுளத்கே நினைவுகொண்டால்
வெறும்புலைநாய்க் கடையேற்கும் மீட்சியுண்டோ
கையிரண்டுஞ் சிரமிசைக்கொண் டையாவுன்பொற்
கழலிணைக்கே யபயமெனக் கதறிவீழ்ந்தேன்
றையலிடப் பாகனருள் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 6

அடிமைசெயப் புகுந்திடுத னினக்காளாகி
யாரியனே யற்பமதோ வந்தோமெத்தக்
கடினமிதை யறியாதா ரற்பம்பண்ணிக்
கருத்தழிந்து மோசத்திற காளாய்விட்டார்
செடிமையுளப் பாதகனே னெற்குமந்தத்
தீக்கதிவந் தடையாமே பணிசெய்குற்றந்
தடைகளெலாந் தடுத்தாள்வாய் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 7

அந்திவணன் றந்தமுதற் பிள்ளையான
வானைமுக னயலமலா மமையப்பெற்ற
சுந்தரனே யோங்காரச் சொரூபத்தானே
தூயவனே மாயவனே தொண்டனேனிங்
கெந்தவகைப் பணிசெய்தாற் றிருவுள்ளத்துக்
கேற்குமதே தென்றறியா வென்னைக்காக்குந்
தந்திரமுந் நின்பொறுப்பே குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 8

அரசே யிப்பாழுலகிற் பிறந்துநாயே
னருந்துயர்ப்பட் டலமந்தேனினி யென்னாலே
யொருசிறிதும் படமுடியா தையாபோது
மோயாத கவலையிதற் கோய்வுகாட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபரனே யெம்மிடிவல் பிணிநோயெல்லாங்
குவலயத்தோர் திகைக்கவொரு நொடியிற்போக்கிச்
சரணமலர்த் தாதளிப்பாய் குழந்தைவேலா
தஞ்சமவே றிலையுனது சரணந்தானே. 9

அரும்பதமே தரம்பாரா தெளிதில்யார்க்கு
மளித்தருளும் பெருங்கருணைக் கடலேயெந்த
னிரும்புமனங் கசிந்துருகிக் கண்ணீராகி
யெழிலாரு நின்னடியா ரடிப்போதெல்லாம்
பெரும்புனலாய் முழுக்காட்டப் பெற்றவன்றே
பெறற்கரிய பேறுபெற்றே னவேனித்தைத்
தரும்பரிசிற் றமதமேன் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 10

அலைகடலிற் றுயில்வோனு மயனுந்தேடி
யடிமுடியைக் காணுதன் றயர்த்தாரென்று
கலையுணர்ந்தோ ருருமைகுறித் தெடுத்துச்சொன்னார்
கல்லாலா கல்லாத நாயினேற்காய்
வலியவருட் டிருவடிவங் கொண்டிண்டெய்தி
மலரடிதந் தாண்டெளியை யானதற்குத்
தலையவனே பலியெனைக்கொள் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 11

அயனாய்நின் றண்டமெலாம் படைப்பாய்நீயே
யரியாய்நின் றண்டமெலாங் காப்பாய்நீயே
ஜயவீர சத்தியிடப் பாகங்கொண்டிச்
சராசரமெல் லாமரனு யழிப்பாய்நீயே
மயலாருஞ் சீவர்களுள் வழியேநின்று
மகேசுரனு யவ்வவற்றை மறைப்பாய்நீயே
தயையிவாய் சதாசிவமாய்க் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 12

அருமறையா கமமுதலா வெடுத்துச்சொன்ன
வனந்தவித சாஸ்திரங்க ளெல்லாமென்னுண்
மருவியுள தத்துவங்க டொண்ணூற்றுறின்
வகையுரைத்த வன்றியிலை வாய்மையிதென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருருமறைபோற் பன்முறையும் விரித்துச்சொல்லி
யுன்முகநோக் காலெனவையுந் தேர்வாயென்று
தருமுறைதந் தருள்புரிந்தாய் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 13

அறுகோணத் திடைநடுவே பதியாய்நின் றிங்
கானந்தத் தாண்டவஞ்செ யமலாவுந்தன்
சிறுபாதப் பெருவிரலாற் றெறிக்கப்பாயுஞ்
சிவரக்ஷா மிர்தமதைச் சிரத்தாற்கொண்டிங்
கறுபகைவென் றீரிருவ ருறவைப்பற்றி
யகண்டார்த்தம் பெறத்தருண மிதைக்கைவிட்டுத்
தறுகணரென் செயநினைவோ குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 14

அத்தமுட னல்வாழ்விங் களிப்பாயென்பா
ரருமிடிவல் வினைநோய்க டீர்ப்பாயென்பார்
புத்திரநற் பாக்கியங்க ளீவாயென்பார்
பூவுலகிற் பெரியனென்ற பேர்தாவென்பார்
இத்திறங்க ளீதல்விட லுன்றன் சித்த
மெளியேற்கிங் கெவ்வகைக்கே டுறினுமஞ்சாச்
சத்தியொன்றே தந்தருள்வாய் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 15

அறியாமை யறிவென்னு முபயந்தாண்டி
யானந்தந் தானேயா யமர்ந்தமூர்த்தி
யறியாமைக் கடலுள்ளே நாயேனாழ்ந்திங்
கருந்துயர்ப்பட் டழியும்போ தஞ்சேலென்று
குறியாத குறிகாட்டித் தடுத்தாட்கொண்ட
குணமலையே யென்கருத்தைக் கூட்டிவைக்கத்
தருவாய்வே றேதையா குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 16

அண்டவிரி வேததுவே பிண்டத்துள்ளு
மவ்வறிவே பரப்பிரம மாகுமென்றாய்
பிண்டமதி லொன்றானே பிரமமென்றாய்
பேசுமது தானேநீ யானுமென்றாய்

கண்டதோ ரிவ்வாண்மாப் பிரமமென்ருய்
கண்ணுதலே பரோக்ஷமதாய்த் தேர்ந்தேனையா
தண்டதா வபரோக்ஷங் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 17

அத்தாவீ ததிசயமிங் கேதுசொல்வே
னளில்லாக் காலத்தே வைத்துப்பார்த்த
செத்தாவிப் பிரதிமையைப் போலுண்மீண்டு
சேர்ந்தபினு மதையேத்துஞ் சிதடரைப்போற்
சுத்தாசுத் தங்கடந்த சோதிதானே
தூயகுரு மூர்த்திகளாய் வந்தபின்னுஞ்
சத்தாகச் சிலைபணிவார் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 18

அஞ்சலென்றுன் மெய்யடியார் தம்மைக்காத்திங்
கருட்கண்ணு லெவ்வினையு மகலவோட்டிக்
கஞ்சமலர்த் தாளிணையிந் துடலோடாவி
கருதுபொரு ளிவையனைத்தும் பதிலாயேற்றுக்
கொஞ்சமெனு மிஞ்சவிடா தொன்றியாக்கிக்
கூடஸ்தம் பிரம்மாக்குங் குருவேயுன்பா
தஞ்சரணல் லாதறியேன் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 19

அன்றொருநா ளாச்சிரமத் தடைந்தவுன்மெய்
யடியவர்முன் னடிநாயேன் றன்னைமுன்னு
நின்றிடவைத் தருள்விழிநோக் குறுத்தியோர்சொன்
னெஞ்சினிடை வைத்தியெனப் பணிந்தீந்திட்டாய்
கன்றிடிக்கத் தாய்சுரக்கும் வழக்கைத்தள்ளிக்
கன்னெஞ்சற் கமுதமழை காட்டிவிட்ட
தன்றிறமிங் காரறிவார் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 20

அறிவினுக்குள் ளேயுலகம் புறத்தேயின்லை
யஞ்ஞானம் பொய்யுலகைச் சத்தாக்காட்டுங்
குறிதனைக்கொண் டுணர்வினைவை நிறுத்திப்பார்த்தாற்
கொடுங்கையு மாத்திரமுந் தோன்றக்காண்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறிமகனே யென்றுரைத்தா யறிவினர்க
ளதுநன்றிங் கிதுதீதென் றுன்னியுன்னித்
தருநினைவிங் கெவனறுப்பார் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 21

அருந்தவத்தோர் நால்வர்பெருந் தவத்தையுன்னி
யாலநிழற் கீழிருந்தன் றறங்கைக்காட்டாற்
பொருந்தவுரைத் திட்டகதை மெய்யேயானாற்
பொல்லாமைக் களஞ்சியமாம் போலிப்பக்தர்
பெருந்தவத்தோர் பேரடித்தென் பெறப்போகின்
பெற்றதையும் பறிகொடுத்துப் பேயராகித் [றார்
தரங்குலைவ தல்லாமற் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 22

அருள்வழியின் றாழடுக்கும் புசிப்பையுண்ணு
தகங்கார மேலிட்டா லலைந்தநாய்போ
லருகலைக்கப் பெண்வேண்டும் படுக்கமெத்தை
யறுசுவையூ ணுணவேண்டு மாடைவேண்டும்
பொருள்பூமி மிகவேண்டும் வேண்டுமென்னும்
புலைக்கடோ யேற்குமுள மிரங்குவாயோ
சருவமுமொன் றாயிலங்குங் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 23

அழிப்பவனு மளிப்பவனு மடுத்தார்க்குன்னை
யளிப்பவனு மாணவப்பேய் பிடியுண்டாரை
மழிப்பவனு மருண்மூகிழ்வா லிரங்கிப்பின்னு
மங்மைகையி லளிப்பவனு முயிர்கடோறு
மொழிப்பவனும் பக்குவருக் குணர்த்தவேண்டி
யுருவருளாற் றரிப்பவனு மடியாருய்யத்
தழைப்பவனு நீயன்றோ குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 24

அகங்கார முயலகனு நகாரந்தன்னை
யழுந்தமிதித் தோரடியான் மகாரமாயை
யிகழ்ந்தெடுத்த திருவடியா லுதைத்துத்தள்ளி
யேத்தரிய சிகாரவுருத் தாங்கியென்றும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தருளாம் வகாரவெளிக் குள்ளேநின்று
மயக்கமற வுனைமறவா யகாரான்மாவாஞ்
சகங்காண நடம்புரியுங் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 25

அன்னமயந் தன்னைவிட லாகாதென்ன
வதனுள்ளே பிராணமய மச்சங்காட்ட
என்னைவிட மனோமயம்வே றுண்டோவென்ன
விதைக்கடந்த விஞ்ஞானந் தான்தானென்னச்
சொன்னசுகந் தனனதென்றா னந்தஞ்சொல்லச்
சூழ்ச்சியறி யாதுழன்றிங் கழியுமாறென்
றன்னைவிடே லென்குருவே குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 26

அகமெனுமென் மனவெளிக்கப் பாலேநின்
றாடுகின்ற திருக்கூத்தை நினதாக்காணும்
வகைதெரியா தெச்செயலு மெனதாக்கொள்ளும்
வஞ்சகத்தாற் காமியென்றுங் கோபியென்று
மிகமதிலே லோபியென்றும் மோகியென்று
மெதிரறியா மதனெனுமாற் சரியனென்றுஞ்
சகடநிகர்த் தேயுழன்றேன் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 27

அருவினைகள் கடவிழித்த விழிபின்னெந்த
னகமுதலெல் லாமுனக்கே யுரிமையென்று
பொருதிழுத்துக் கொண்டதொரு புதுமைதன்னைப்
பூவுலகுள் ளோரறிந்தாற் பழியாமென்றோ
வுருவொழித்தா யித்தனைக்குந் தகுமோவிந்த
வொழிகடைநாய் தரமலவீ துன்பொற்கிர்பை
தருவிளையாட் டேயுணர்ந்தேன் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 28

அறிவறிவா லறிவறிய வவதிகண்ட
அறிவருளா லருளுருக்கொண் டறிவைக்காட்ட
அறிவறிந்தங் கறிவழிந்தவ் வறிவுளொன்றா
யத்துவிதத் துற்றறியு மானந்தத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதையுந் தான்விடுத்தே யறிவாய்நிற்கு
மங்கிலேயே தங்கிலையென் றறியக்காட்டத்
தறியெனவிங் குற்றதனிக் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 29

அற்புதனே நின்னடிக்கே யோலமோல
மருட்குருவே நின்னடிக்கே யோலமோலம்
பொற்றிருவர் ணச்சடையா யோலமோலம
புகலறுகோ ணத்திருமே னியனேயோலங்
கற்பகச்சின் மயக்களிறே யோலமோலங்
கடைநாதன் றருமொருகண் மணியேயோலந்
தற்பதத்துச் சியிலாடுங் குழந்தைவேலா
தஞ்சம்வே றிலையுனது சரணந்தானே. 30

வாழி

வாழிய சகங்க ளெல்லாம்
வாழிய சீவ கோடி
வாழிய பரமே யென்றும்
வாழியிம் மூன்று மொன்று
மூழிதொ றுயிர்த்து நின்ற
வுண்மையாஞ் சாட்சி வாழி
வாழியீ துணர்ந்து விட்டோர்
வாழிமெய் யடிய ரெல்லாம்.

---

## இழந்த மணிகளில் எஞ்சிய தொன்று

பின் வரும் பாடல் குழந்தைவேற்சுவாமிகள் பேரில் அவரது சீடர் ஒருவராற் பாடப்பெற்றது. இது திருப்புகழ் உருவில் அமைந்துள்ளது. பாடியவர் கல்வியங்காட்டை யடுத்த வடநல்லூர் வாசியாம் திரு. சி. பொன்னம்பலமாவர். இவர் தம் குருநாதர் பேரிற் பாடிய பாக்கள் பல. அவை அவர் இறந்தபின்பு பேணுவாரின்றி மறைந்துபோயின. இப் பாடல் ஒன்றுமாத்

திரம் அகப்பட்டது. இது ஒரு பதிகத்தின் முதலாம் பாட்டாகும் என அறிகிறோம். இப்பாட்டைக்கொண்டு மறைந்துபோன மற்றைய பாக்கள் எப்படிப்பட்டவை என்பதை ஊகித்துணரலாம்.

நகுலகிரீ மேவு தலமதனில் நாளும்
        நடனமிடு மோன நடராஜன்
    நவிலுமொரு கோடி கொடுவினைகள் மாள
        நயனவெளி காணு மருளோடு
மிகுமகிழ வன்பர் தமைமருவி வந்து
        மழுமானு நீத்தொர் மனுவாகி
    வழியடிமை கொண்டு வரமருள் குழந்தை
        வேலனெனு நாம முடையோனாய்
தகுசித்தி முத்தி தரவல்ல நல்ல
        கடைநாத னின்ற குருநாதா
    நமதாசை பாசம் மலமாயை கன்மம்
        நலியாத வண்ண மருள்வாயே
வெகுகோடி சென்ம முனைநான் மறந்து
        வினைகோடி தேடி யலைவேனை
    வினைமோக மாய்த்துன் னிருதாள்கள் தந்து
        பரமோக்ஷ மீயும் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ குருவேசும

# ஸ்ரீ இ. அருளம்பலசுவாமிகள் பேரில்
## அவரது சீடன் நவாலியூர்
## இ. வைத்திலிங்கம் அவர்களால்
பாடப்பெற்றது

ஆரண மாகம மாய கலைகளு மம்புயனும்
நாரண வானவர் நாடரி யானம் பவமொழிதற்
காரண மேனிய னுயெழு கண்ணுத லான்கடவுட்
பூரண னுமரு ளம்பல வெந்தையைப் போற்றுவமே. 1

போற்றுமடியர்மனத்தினுட்போன்று சிற்பொற்பொதுவிற்
றேற்று முறையிற் றெழுமினடிக் குப மரு ளம்பலவன்
மாற்று வரும்பொன் மலர்ப்பதஞ் சிந்தையுண் மன்னிடுமேற்
கூற்று வருந்தகைத் தோமுனை நாளுதை கோளமறந்தே. 2

மறந்தே மறந்துன் றனையிது காறுமை மருள்வினையாற்
பிறந்தே யிறந்து கிடந்தே யினிப்பிற வாவகைமேற்
சிறந்தே தரவருஞ் சீரரு ளம்பல தேசிகனே
இறந்தே படுமுன் னெளியேங் களுக்கரு ளீகுவையே. 3

ஈந்த பினவரம தென்றலும் யாமெனு மாறுமுண்டோ
ஓய்ந்த சிறுபம் பரம்போ லுன்னுளுறுவதலாற்
காய்ந்த நுதல்விழிக் காருணி யங்கொடு முப்புரத்தோர்
சாய்ந்த முறையுமுண் டேயரு ளம்பல சற்குருவே. 4

குருவே யடியேங் குவலய முய்யக் குணங்கடந்த
அருவே முதலாம் வடிவுக்கப்பாலான அவ்வுருவைக்
கருவே யழிதரக் காட்டியருள்க கருணைமய
வுருவே யருளம் பலவொரு வாயாங்களுன் பரமே. 5

உனக்கே பரமுனை யல்லா லொருதுணை மற்றறியோ
முனக்கே யெமையாண் டருளத்திருவுள முண்டெனிலோ
மனக்கே டெமையெண் செயுமிவ ணெம் மரு ளம்பலவா
எனக்கே யுனக்கே யெனும்பகுப் பிலலா தருளிலறையே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையே யுமையவள் நாயக னேயெமக் கின்பந்தருங்
கறையே தருமிடற் றண்ணு கருணைக்குரு மணியெங்
குறையே தவிர்த்தா றுதலுற வீடரு ளம்பலவா
மறையே முதலிய காணுவொருநின் மலரடியே. 7

அடியே மறியா மையினுன் னடிபிழைத் தாற்பிழைகள்
பொடியே படவுன் கருணைகொ டத்தனை யுந்தவிர்ப்பாய்
கொடியேந் தரத்தகு கைம்மாறிலையருட் குஞ்சரமே
அடியே நிதியே யருளம் பலவெம தாண்டவனே. 8

ஆண்டவ வாதி முதல்வ வெமதைய நிற்கடிமை
பூண்டன மாமோவருளம் பலம்புகுந் தாடுகின்ற
தாண்டவ வன்பவ நோயது வந்தெமை யின்னமுந்தான்
தீண்டவற் றேவுன் திருவுள மேதோ தெரிகிலமே. 9

தெரிக்கு முயிர்பொருட் சார்பொழிக் கும்வகை தேறுகிலோ
மரிக்கும பிரமருக் கும்மறி யாவருட் டேசிகனே
விரிக்குங் கதிரதுபோ லுதித் தெம்மிரு ளோடவெழுந்
தெரிக்கு மருளம பலவா வெழிற்சிவ சூரியனே. 10

சூரியன் சோமன் சுடராதி யெட்டுரு வானவிறை
யோரியல் பாயென்று மன்பருள ளங்கொளு மொப்பிலிசிற்
பேரியல் நாத னருளம் பலப்பெரி யோனவன்றன்
சீரியல் பாதஞ் சிறப்ப தடியேஞ் சிரங்களுக்கே. 11

சிரம்பணிந் தேத்திட நாயடியேஞ் சிந்தை சீரருளிற்
கரைந்துக ரைந்துரு கக்கண் புனலெழக் காலிணையிற்
கரம்மலர் தூய்த்தொழ நாவுன் றன்நாமங் கழறிடவும்
வரந்தரு வாயரு ளம்பல வாவெம் மகவடிவே. 12

வடிவொன் றிலாவடி வானவ னெங்கள் மயலொழிய
முடிவொன் றிலாமுதல் தன்னடிப்போதெம் முடிதருவா
னடியொன் றுகாண்குறி னஞ்சு வதனுக்கிங் கென்னுளநா
மடியொன் றியுய்ந்திட வந்தானருளம் பலவையனே. 13

ஐயமுன் பின்னடு வில்லா வதீத வருளுருவாம்
மெய்யசிவம மாயாமயக் குழல் மித்தைச் சழக்கருக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ய பொய் யாம்மன மற்றிடத் தேயிருக் கும்புனித
மெய்ய மெய்ஞ்ஞான குருவரு ளம்பல மேலவனே. 14

மேலவ விப்புவிக் கப்பா லுறுமொரு மெய்ப்பொருளே
யாலமுண் டேயரு ளம்பலத் தாட லுகந்தருளுங்
கோலமெய்யன்பர்க்கெளியாய் குணமொன் றிலோமெனினுங்
காலங் கடந்த சிதீசா வடியரைக் காத்தருளே. 15

அருளே யொருவடி வாயெழுந் தன்ப ரகத்துறையும்
மருளே கெடுத்தடி யேமையு மாண்டருண் மாதவநின்
னருளே முழுகி யெமையாம் மறக்கு நிலையருளாய்
இருளே யிலாவொளி யேயரு ளம்பல வெம்மிறையே. 16

இறைவா நெறியொன் றருளி யிளம்பிறை யோயினிமேற்
பிறவா நெறியும் பெறுமாறி யாமுன் றன் பேரருளால்
மறவா நினையா வரந்தா வருளம் பலமணிபா
உறவா வருமசுத் தாபாச வாசனை தானொழித்தே. 17

ஒழித்தேமருண்மயக்கெல்லாமுன் றன் றிருவொண்பதத்தில்
விழித்தே யிமைப்பொழு தேனும் வைகோம் விமலாவரனே
அழித்தே யெமதா ணவத்தை யப்பாவரு ளம்பலநீ
கிழித்தே யெழுமனங் கீழ்ப்பட வேயரு ளீகுவையே. 18

வையமும் வானமு மற்றுள போகங் களுமுரித்தன்
றையவுன் பாதவம் போருக மேயல தம்பிகையாங்
தையற் கரையுரு வீந்தரு ளம்பலத் தாண்டவனே
மையலெல் லாமறத் தாராய் மனோலய மாமதுவே. 19

ஆவது மாய்வது மாயிவ் வகிலமெல் லாமயர
வோவது மாயவற் றுக்கங் கொருகா ரணவுசிதா
சாவது மீண்டு பிறப்பது மெங்களைச் சார்தருமோ
ஓவது வான்பொரு ளீயரு ளம்பல வுத்தமனே. 20

உத்தம பக்குவத் தோரல தும்பரு மோருகிலார்
சுத்தம னத்தா லுனையாந் தொழுவது முண்டுகொலோ
அத்தவு னத்த மெமக்கப யங்கொடுத் தாலழியா
நித்தவுன் பாத மடைவோ மருளம் பலநிதியே. 21

I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியே யருணிம லாதில்லை மேவிய நிர்த்தசுக
கதியே யடியார் கருத்தூ டுலாவுங் கனவெளியே
பதியே பசுமலப் பற்றறுத் தாளும் பரகுருநன்
மதியே யெமக்கரு ளம்பல வாநின் னடைக்கலமே. 22

அடைக்கலமென் றுன்பதமடைந்தோமெமையாண்டருளன்
றடைக்கலம் வந்த சுரரையஞ் சேலென் றருளுமையா
னெலகடக்காண்டெமன்வந்தா லு மஞ்சோமுன் பாலருளுண்
டடைக்கலங் காண வருளம் பலவொளிர் சிற்பரனே. 23

பரமா புவனம் படைப்பதுங் காப்பதும் பின்துடைத்துக்
கரமா றுவதுங் கருதிற் றிருவிளை யாடலன்றே
நரமா வடிவோ டெழுந்தரு ளம்பல நற்குரவா
திரமா யுபசாந் தமுநாம் பெறக்கொள் திருவுளமே. 24

திருவந்த சேவடி யாயுன் திருவரு ளாலடியேங்
கருவந்த வேலை கடந்துன் கழலிணை சேர்தரநீ
உருவந்த செம்மைக் கையாவெம் முயிரினை யேயளித்தோங்
குருவந்த மேனி யருளம் பலவினி யென்குறையே. 25

குறையொன் றறநின் றடிதொழு கோமுன் குறிப்பறியோம்
அறையொன் றிரண்டென் றிலா வகண்டாகார பூரணமாய்
மறையொன் றறநின்ற மாமுத லோயெமையே யெடுத்து
நிறையொன் றருளம் பலவநின் பாதங்கள் தந்தருளே. 26

தந்தம் வினைவழிச் சாருயிர் தந்தமென் பார்தரணி
சொந்த மெனச்சுழல் வாரெம னேலை தொடர்ந்திடிலோ
எந்த மதென்றிடற் கேதுண் டருளம் பலவிறைவா
தொந்தங் கெடுத்துன் னடிகட் கெமைத்தொண்டு
கொண்டருளே. 27

கொள்ளுஞ் சகல மொடுகே வலவல் லிருள்களை நாந்
தள்ளும் படிக்குந் தருசுத்தஞ் சார்ந்துன் திருவடிகள்
கொள்ளும் படிக்குங் கருணைகொள் வாயரு ளம்பலவா
விள்ளும் படித்தன் றி நின்ற விண்ணுறை வெறுவெளியே. 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியா யெமது மனவெளி யூடு விரவியபே
ரொளியா யொரானந் தவெள்ளம தாயொப் பருதிருத்தண்
ணளியாம் பதமுடை யாயரு ளம்பல சற்குரவோய்
வெளியா முனதின்ப வீட்டிற் கலந்தாண் டருளுவையே. 29

அருவா நமவம லாநம வாதீ நம வெமையாள்
உருவா நமவுமை பாகா நமவரு ளம்பலநற்
குரவா நமகுண மேநம கோவே நமவடியார்
திருவா நமவெந் திறலே நமநம வாரணமே. 30

## குருதோத்திரம்

அருமறையயனு மாலிலை துயிலு
மப்பனு மறியொணா மேலா
மொருதனிமுதல்வன் றிருவருள் சுரந்திங்
கோதரு மறைமுடிப் பொருளைத்
தெருளுற வடியர்க் கருளுவானுற்ற
தேசிக வடிவமே தாங்கும்
குருபரனருளம் பலவனற் சரணங்
கொண்டுளக் குறையெலா மொழிப்பாம்.

குருவாழ்க — குருவே துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிழை திருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 40 | இன்ப அவஸ்தைகளை | துன்ப அவஸ்தைகளை |
| 75 | வருகின்ருர் குழந்தைலேலர் | வருகின்ருர் குழந்தைவேலர். |
| 80 | திகழ்தேல் | திகழ்ந்தேல். |
| 88 | மாத்தனே | மாத்தளை. |
| 89 | பிரள்த்தனே | பிரார்த்தனை: |
| 96 | வைத்திய லிங்கம், வண்ணைச் சபாபதியார் | வைத்தியலிங்கம், கார்த்திகேசு, வண்ணைச் சபாபதியார். |
| 96 | சின்னப்பு என்போர் | சின்னப்பு சின்னத்தம்பி [என்போர், |
| 107 | கிழக்கே | கீழே |
| 137 | கோட்டை | கோட்டைக் |
| 139 | தரங் | தரஞ் |
| 140 | எமம | எம்ம |
| 140 | கொழுனனு | கொழுநனு |
| 141 | கண்கனே | கண்களை |
| 141 | திவ்வண் | திவ்வணஞ் |
| 141 | மென் கோடி | மென் கொடி |
| 141 | பொன் கொடு | பொன் தரு |
| 141 | லண்டித | லண்டித் |
| 141 | விருமபு | விரும்பு |
| 141 | பாதம | பாதம் |
| 149 | அனைத்தைவு | அனைத்தையும் |
| 150 | தகர்பாய் | தகர்ப்பாய் |
| 150 | சரண்ம் | சரணம் |
| 151 | 1904-ம் யாண்டு மாத்தளை | 1904-ம் யாண்டு பங்குனித் திங்கள் சதயநாள் மாத்தளை |
| 36 | பலமுறை | பல மறை |
| 37 | ரிடத்திலென்றும் | ரிடத்திலொன்றும் |
| 39 | வரு புண் ணிய பாவ | வரு புண்ணிய பாவ |
| 43 | மென்யேற்கிற் | மெளியேற்கிங் |
| 43 | மார்மீதிற் | பார்மீதிற் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 45 | தவிர்ட்திட் | தவிர்த்திட் |
| 48 | நெறியலா | நெறியல |
| 49 | தமிழ்ப் | தமிழ் |
| 55 | சிங்தையிற் பழித்தினிது | சிங்தையிற்ப தித்தினிது |
| 58 | நெல்லி | னெல்லி |
| 5ઠ | வாழ்பவன் | வாழ்பவ |
| 58 | உலக்கிய | லிலக்கிய |
| 59 | குடும்பய | கடும்பய |
| 59 | குருப் பிரா | குரு பிரா |
| 60 | குருவினைக் | குருவினை |
| 62 | யுடையாயென்னைத் | யுடையாயின்னே |
| 62 | தற்காத்தல் | எற்காத்தல் |
| 63 | யோங்காரச் | யோங்கார |
| 64 | சீவர்களுள் | சீவர்களுழ் |
| 66 | பணிந்தீந்திட்டாய் | பணித்தீந்திட்டாய் |
| 67 | மங்மைகையி | மம்மைகையி |
| 70 | பாசம | பாச |
| 71 | குப மரு | கும் மரு |
| 71 | கோள மறங்தே | கோள் மறந்தே |
| 71 | காறுமை | காறு |
| 71 | வடிவுக்கப்பாலான | வடிவுக்கப்பாலுள |
| 71 | வாயாங்கனுன் | வாநமருன் |
| 72 | சுடராதி யெட்டுரு | சுடர் முத லெட்டுரு |
| 74 | டுலாவுங் | டுலவுங் |
| 74 | ங்லெகடக்காண்டெமன் | படைக்கலங்கொண்டெமன் |

---

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org